
162




" இந்தியாவே ! உன் மக்களே
உனக்கு இரட்சணியம் ".

—13-ம் சிங்கராயர்.

# சேலம்

●

# மேற்றிராசன

# சரித்திரச் சுருக்கம்.

Q6,2J16
N58
108815

*Imprimatur :*

† V. S. SELVANATHER,

BISHOP OF SALEM.

# சேலம் மேற்றிராசன
# சரித்திரச் சுருக்கம்

★

ஆக்கியோன் :

சங். M. S. ஜோசப், B. A., B. T.

★



ஜெயராக்கினி அச்சகம்
சேலம்—2.
1958

# முகவுரை

சேலம் மாவட்டத்தின் பல இடங்களில் சுவிசேஷ ஒளி பரவின வரலாற்றை சங். சிங்கராயர் (Fr. L. Depigny) ஏற்கனவே முன்னோடி பத்திரிகையில் சிறு கட்டுரைகளாக வரைந்திருக்கிறார். அவரிடம் பிரெஞ்சு மொழியிலிருந்த மேற்றிராசன சரித்திரக் குறிப்புகளை காண நேர்ந்ததிலிருந்து அவற்றையெல்லாம் தொகுத்து புத்தகமாகத் தமிழில் பிரசுரித்தால் மக்களுக்கு பெரிதும் பயன்படுமென்று அவரிடம் கேட்டிருந்தோம். மேலும் 1955-ம் ஆண்டில் சேலம் மேற்றிராசன வெள்ளி விழா கொண்டாடினபோது விழாவின் ஞாபகார்த்தமாக, குருக்களுக்கும் விசுவாசிகளுக்கும் உதவும் வகையில் ஒரு மேற்றிராசன சரித்திர ஏடு உருவாகும்படி விழைந்தோம். அதன் விளைவுதான் இப்பொழுது வெளிவரும் இந்த சேலம் மேற்றிராசன சரித்திரச் சுருக்கம்.

இந்நூல் சங். சிங்கராயருடைய உதவி, யோசனையால் அழகான நல்ல தமிழ் நடையில் எழுத முன் வந்தவர் சங். M. S. ஜோசப் சுவாமி ஆவர். பள்ளி ஆசிரிய அலுவல்களுக்கிடையே கிடைத்த சொற்ப அவகாசங்களை பயன்படுத்திக்கொண்டு அவர் இந்த நூலை எழுதித் தந்ததற்கு நாம் அவரை மிகவும் பாராட்டுகிறோம். சரித்திர குறிப்புக்கள் தந்துதவின சங். சிங்கராயருக்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இறுதியாக இந்த நூலை பெரியவர்களும், மாணவர்களும் வாங்கி வாசித்து, சேலம் மாவட்டத்தில் இன்னும் அதிகமாய் விசுவாச வெளிச்சம் பரவ ஆர்வமுடன் அப்போஸ்தல தொண்டு புரிவார்களானால், அதுவே ஆசிரியர்கள் முயற்சிக்கு தகுந்த கைம்மாறாகும். இவ்வருளை ஆண்டவர் ஈயுமாறு மன்றாடுகிறோம்.

சேலம்
21–11–1958

✠ V. S. செல்வநாதர்,
சேலம் மேற்றிராணியார்.

## BIBLIOGRAPHY


1. Lettres Edifiantes — 4 Vol.
2. Besse, S. J. : La Mission du Madurai. Trichinopoly – 1939
3. Ferroli, S. J. : The Jesuits in Malabar – 2 Vol. Bangalore – 1939
4. —do— The Jesuits in Mysore. Kozhikode – 1955
5. Launay, M.E.P. : Les Missions de l'Inde – 4 Vol.
6. —do— Memorial de la Societe des Missions Etrangeres –2 Vol.
7. Dubois, M.E.P. : Moeurs,Institutions et Ceremonies des Peuples de l'Inde - 2 vol.
8. Hull, S. J. : Bombay Mission History. Bombay, Examiner Press.
9. Heras, S.J. : The Aravidu Dynasty of Vijayanagara. Madras – 1927
10. C. K. Srinivasan: The Maratha Rule in Carnatic. Annamalainagar - 1945
11. Salem Dt. Gazetteer — 2 Vol.
12. Trichinopoly Gazetteer.

# பொருளடக்கம்


பொருள் பக்கம்

முன்னுரை ... 1

## I. சேலத்தில் சேசுசபைக் குருக்கள்

முதல் அத்தியாயம்
மதுரை சேசுசபைக் குருக்கள் ... 4

இரண்டாம் அத்தியாயம்
மைசூர் சேசுசபைக் குருக்கள் ... 21

மூன்றும் அத்தியாயம்
சேலம் முழுவதற்கும் மைசூர் மிஷன் ... 33

## II. இராயப்பர் சபை

முதல் அத்தியாயம்
புத்துயிர் பெற்ற மிஷன் ... 77

இரண்டாம் அத்தியாயம்
அப்போஸ்தொலிக்கு
விக்காரியேட்டுகளின் முன்னேற்றம் ... 89

மூன்றும் அத்தியாயம்
பெரிய பஞ்சம் ... 137

நான்காம் அத்தியாயம்
நான்கு மேற்றிராசனங்கள் ... 153

## III. சேலம் மேற்றிராசன நியமனம்

முதல் அத்தியாயம்
மிக. வந். ஹென்றி புரூனியர் ஆண்டவர் ... 173

இரண்டாம் அத்தியாயம்
மிக. வந். வெண்மணி செல்வநாத ஆண்டவர் 178

# சேலம் மேற்றிராசன சரித்திரச் சுருக்கம்.

## முன்னுரை

சேலம் மேற்றிராசனம் 1930-ஆம் ஆண்டு மே திங்கள் 26-ஆம் நாள் பதினேராம் பத்திநாதருடைய கட்டளையால் நிருவப்பட்டது. அதனுடைய தற்காலிக ஆட்சி பீடமும் மேற்றிராசனக் கோவிலும் சேலம் நகரத்தில் உள்ளன. சேலம் மாவட்ட முழுவதும் அதன் பரப்பு ஆகும். சென்னை இராச்சியத்திலுள்ள இந்த மேற்றிராசனம் மூன்று அண்டை மேற்றிராசனங்களின் பகுதிகளின் தொகுப்பினுல் உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய 11,000 கிறீஸ்துவர்கள்கொண்ட ஆறு பங்குகள் (சேலம், அக்கிராகரம், ஏற்காடு, செட்டியப்பட்டி, கோவிலூர், எலத்தகிரி) பாண்டிச்சேரி அதி மேற்றிராசனத்திலிருந்தும், 4,500 கிறீஸ்துவர்கள் உள்ள நான்கு பங்குகள் (ஆத்தூர், காக்காவேரி, கோனேரிப்பட்டி, தோளூர் பட்டியின் ஒரு பகுதி) கும்பகோண மேற்றிராசனத்திலிருந்தும், 1,500 கிறீஸ்துவர்கள் கொண்ட மத்திகிரிப் பங்கு (முந்திய மைசூர் மேற்றிராசனம்) பெங்களூர் அதிமேற்றிராசனத்திலிருந்தும் எடுத்து ஆளப்பட்டன. பின்னர் 1943-இல் பரிசுத்த பன்னிரண்டாம் பத்திநாதருடைய கட்டளையால் மேட்டூர் தாலுகாவின் ஒரு பகுதியாகிய காவேரியின் மேற்குப் பக்கத்திலுள்ள 2,000 கிறீஸ்துவர்களைக் கொண்ட இரண்டு பங்குகள் (மேட்டூர், சவேரியார்பாளையம்) சேலம் மேற்றிராசனத்துடன் சேர்க்கப்பட்டன.

### சேலம் மேற்றிராசன எல்லைகள்

| | |
|---|---|
| வட கிழக்கு : | வேலூர் மேற்றிராசனமும், சித்தூர், வட ஆற்காடு மாவட்டங்களும். |
| கிழக்கு : | புதுச்சேரி அதி மேற்றிராசனமும், வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களும். |
| தென் கிழக்கு : | கும்பகோண மேற்றிராசனமும், திருச்சிராப்பள்ளி மாவட்டமும். |

தென் மேற்கு : கோயம்பத்தூர் மேற்றிராசனமும், திருச்சி மாவட்டமும்.

மேற்கு : நீலகிரி, மைசூர் மேற்றிராசனமும், கோயம்பத்தூர் மாவட்டமும்.


வட மேற்கும் வடக்கும் : பங்களூர் அதி மேற்றிராசனமும், மைசூர் இராச்சியமும்.

## குருக்கள்

சேலம் மாவட்ட பகுதிகளிலே உழைத்து வந்த குருக்கள் சேலம் மேற்றிராசனமான பின் தத்தம் சொந்த மேற்றிராசனங்களுக்குச் சென்றனர். சேலம் மேற்றிராசனம் பாரீஸ் அந்நிய வேத போதக சபைக்குக் கொடுக்கப்பட்டது. கும்பகோண மேற்றிராசனத்தில் உழைத்த பாரீஸ் அந்நிய வேத போதக சபைக் குருக்கள் எல்லோரும் (24 குருக்கள்), தாங்கள் தோற்றுவித்த சுதேசி குருக்களுக்குக் கும்பகோண மேற்றிராசனத்தைக் கையளித்து, சேலம் மேற்றிராசனத்துக்கு வந்தனர். சேலம் மேற்றிராசனத்தின் முதல் மேற்றிராணியார் மிக வந். ஹென்றி புருனியர் ஆண்டவர் ஆவர். அவர் பிரெஞ்சு தேசத்தினர். அவர் **1930**-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **14**-ஆம் நாள் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டார். அவர் நோயின் காரணமாக **1947**-இல் தம் பதவியிலிருந்து விலகிக் கொண்டு, தனகரா மேற்றிராணியார் என்ற பட்டப் பெயரோடு, அப்போஸ்தொலிக்கு நிருவாகியாக இருந்தார். அவருக்குப் பின் ஒரு தமிழர், மிக வந் வெண்மணி செல்வநாத ஆண்டவர் அவர்கள் **D. D., D. C. L.,** ஆட்சி பீடமேறினர். அவர் சேலத்தில் **1949**-ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாள் அபிஷேகம் செய்யப்பட்டார்.


## சேலம் மேற்றிராசன சரித்திரப் பிரிவுகள்

சரித்திரக் கண்ணோடு சேலம் மேற்றிராசனத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். 1) பாலகாட்—ஒசூர் தாலுகா. 2) பாலகாட்டின் தெற்கு, பாரமகால்—பன்னிரு கோட்டைகள் உள்ள நாடு.



ஆக்கியோன்:

சங். M. S. ஜோசப் அடிகள்


இயேசுசபையினரின் கீழ்: சேலம்.
1623–1687–1784
நிரந்தர வாசம்.
விசாரணைகள்.
கோட்டைகள்.
வேதபோதக எல்லை.
மேற்றிராசன எல்லை.
SCALE : 1" = 25 மைல்கள்.
கர்நாடக மிஷன்
மாஸ்தி
பாலகாட்
பாரமஹால்
செங்கம்
காவேரி
தர்மபுரி
தொள்ளயார்
பூதப்பாடி
கெட்டி முதலியார்
சேலம் நாயக்கன்
மோரூர் நாயக்கன்
சேர்ந்தமங்கலம் நாயகன்
துறையூர் நாயக்கன்

1. **மாமங்கலம்** 1624
சேர்ந்தமங்கலம் 1627

2. **நாவல்பட்டி** 1653—56

3. **கொங்குபட்டி** 1656—70

4. **சம்பள்ளி** 1656—1666

5. **அணைகரைப்பாளையம்** 1657

6. **சோளபாடி** 1666—74
தொல்லேயா 1666

7. **பெண்ணுகரம்** 1664—83
மதியம்பட்டி 1670
மணலி திட்டு 1670
எலெயநகர் 1666

8. **கப்பிளுகத்தி** 1670—1750
மாரண்டஹள்ளி 1670
தாசிரிபள்ளி 1670—1710
மாரண்டவல்லி 1670—74
ஆலம்பாடி 1670—74
கொங்குருபட்டி 1670
ககல்நத்தா 1670
காவேரிபட்டினம் அருகில் }
பாரூர் அருகில் } வெளி விசாரணை
மருதேரி 1670—1784
கடகத்தூர் 1670
கொளகத்தூர் 1670
நீர்குண்டி 1710க்கு முன்
மடம் 1670—1716
**வெள்ளாண்டிவலசை** 1670
வாணியம்பாடி 1670
குங்குந்தி 1674

9. **காக்காவேரி** 1690—1784
திருப்பத்தூர் 1700க்கு முன்
அனெக்கல் 1700

10. **வெள்ளையன்கவுண்டன்பட்டி** 1704
கருந்தி 1710க்கு முன்
செந்தாரப்பட்டி 1717
கோவிலூர்-திருப்பத்தூர் 1717
சேலம் சேரிகள் 1733
ஜித்தனஹல்லி 1740

**களங்காணி** 1747—84

11. **லாலயம்** 1747—84
மோஹனூர் 1750 ?
கோட்டைப்பாளையம் 1750 ?
கம்மனெல்லூர் 1750 ?
மோட்டூர்-எலத்திரி 1750-84
திகலஹள்ளி 1750—84
எடப்பள்ளி 1760 ?
செட்டிப்பட்டி 1670 ?
சவேரியூர் 1658

12. **கோனூர்** 1674
மல்லயகுண்டம் 1670
ஆத்தூர் 1768
கிருஷ்ணகிரி 1768
சூலகிரி 1768

---


**குறிப்பு:** பக்கத்திலுள்ள படத்திலுள்ள எண்களையே இப்பெயர் வரிசையிலுள்ள எண்கள் குறிக்கின்றன. பெரிய எழுத்துக்களைக் கொண்ட பெயர்கள் நிரந்தர வாசஸ்தலங்களைக் குறிப்பிடுகின்றன.



சங். தே நோபிலி



சங். தூபுவா



வந். போன்ஞன்

3) பொன்னையாற்றின் தெற்கு—தர்மபுரி நாடு. 4) தாலகாட்—கொங்கு நாட்டின் ஒரு பகுதி.

## பதினேழாவது நூற்றாண்டில் அரசியல் சூழ்நிலை

1640 இல் இருந்து 1674 வரை மைசூர் மன்னன் தாலகாட் அல்லது கொங்கு நாடு என்னும் நிலப்பரப்பை மதுரை நாயக்கரிடமிருந்து கைப்பற்றினான். 1640 முதல் 1687 வரை மைசூர் சென்னபட்டண நாயக்கரிடமிருந்து ராய்க்கோட்டை, தர்மபுரி, பாலகாட் முதலியனவற்றைப் பெற்றான். 1640 இல் இருந்து 1765 வரை பீஜபூர், மராட்டியர், கடப்பை நவாபு முதலியோர் பாரமகாலை முறையே ஆண்டனர். இறுதியில் பாரமகாலை கடப்பை நவாபுவினிடமிருந்து ஹைதர் ஆலி வாங்கினான். 1790 இலும் 1799 இலும் ஆங்கிலேயர்கள் சேல மாவட்ட முழுவதையும் கைப்பற்றினர். அக்காலமுதல் இந்தியர்கள் ஆங்கிலேயர்களிடமிருந்து 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 இல் சுதந்திரம் அடைந்தது வரை ஒன்றரை நூற்றாண்டுகளாக அமைதி நிலவியது. சுதந்திர இந்தியாவில் அரசியல் சட்டப்படி மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

## மேற்றிராசன சரிதம்

சேலம் மேற்றிராசன சரிதம் மலபார் மாகாணத்தைச் சேர்ந்த மதுரைப் போர்த்துக்கீசிய சேசுசபைக் குருக்கள் 1623 இல் தமிழர்களுக்கு சுவிசேஷத்தைப் போதித்த போது ஆரம்பமானது. 30 வருடங்களுக்குப்பின் 1653 இல் கோவா மாகாணத்தைச் சேர்ந்த மைசூர் இத்தாலிய சேசுசபைக் குருக்கள் முதலில் கன்னடியர்களுக்கும், பின்னர் தமிழர்களுக்கும் வேதம் போதித்தனர். இவ்விரு மிஷன்களும் மராட்டிய சாம்போஜியின் படையெடுப்பால் 1682 இல் அழிக்கப்பட்டன. மீண்டும் 1687 இல் மைசூர் சேசுசபைக் குருக்களால் மைசூர் மிஷன் புதுப்பிக்கப்பட்டது, ஆனால் அது இரண்டாம் முறை திப்பு சுல்தானால் 1785 இல் அழிக்கப்பட்டது. பின் மோன்சிஞ்ஞோர் ஷம்பனூவாவின் வேண்டு கோட்படி மைசூர் (சேலம் மாவட்ட முழுவதும் இதில் உட்பட்டது) பாரீஸ் அந்நிய வேதபோதக சபைக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குருக்களின் போதாக் குறைவினல் அந்த மிஷனுக்குப் புத்துயிர் அளிக்க 33 ஆண்டுகள் ஆயின. 1833 இல் இருந்து 1886 வரையில் எழுந்த பெரிய பஞ்சத்தின் போது அநேகர் மனந்திரும்பினர், மிஷன் பல பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. 1880 இல் இருந்து 1930 வரை ஏற்பட்ட பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும், அநேகர் நாடு விட்டோடினர். மிஷன் வளர்ச்சியுருமல் நின்றது. 1899 இல் புதிதாக உருவாக்கப்பட்ட கும்பகோண மேற்றிராசனத்துக்கு சேலம் மாவட்டத்திலிருந்து மூன்று பங்குகள் (ஆத்தூர், கோனேரிப்பட்டி, தொளுர்பட்டியில் ஒரு பகுதி) கொடுக்கப்பட்டன. 1930 இல் சேலம் மேற்றிராசனம் நிருமாணிக்கப்பட்டு சேலம் மாவட்ட முழுவதும் மேற்றிராணியார் கைக்கு வந்த பின்னர்தான் மனந்திருப்புதல், பிறர்சிநேகத் தொண்டுகள், சுதேசி குருக்களை ஏற்படுத்துதல் முதலிய வேலைகள் மேற்றிராணியாருடைய இடைவிடாத தூண்டுதலால் ஏற்பட்டன. 1949 இல் சேலம் மேற்றிராசனம் சுதேசி மேற்றிராணியாருக்கு மாற்றப்பட்டது. எனவே, இந்நூலில் மூன்று பாகங்களைக் காணலாம்:— 1) சேசுசபைக் குருக்கள் காலம். 2) பாரீஸ் அந்நிய வேத போதக சபையின் காலம். 3) மேற்றிராசன காலம்.

---

# முதல் பாகம்:
# சேலத்தில் சேசுசபைக் குருக்கள்

## முதல் அத்தியாயம்:
## மதுரை சேசுசபைக் குருக்கள்

### ஆரம்பம்.

1595 ஆம் ஆண்டு கடற்கரைப் பட்டணங்களிலேயே உழைத்துவந்த சேசுசபைக் குருக்கள் உள் நாட்டிற்குவந்தனர். ஒரு புறத்தில் போர்த்துக்கீசியரோடும், மற்ருெரு புறத்தில் சந்திரகிரியில் வதிந்த நாயக்கரோடும், அவருடைய ஜிஞ்ஜி, மதுரை அரசபிரதி

நிதிகளோடும் அநேகமாக அரசியல் தொடர்பு வைத்துக்கொள்ள நாட்டிற்குள் வந்தனர். மதுரை நகரின் சுற்றுப்புறங்களில் வியாபாரத்தினிமித்தம் வந்த போர்த்துக்கீசிய, இந்தோ-போர்த்துக்கீசிய பரத கத்தோலிக்கர்களை முதல் சேசுசபைக் குரு சங். பர்னுந்தெஸ் சுவாமியார் பராமரித்துவந்தார். அவர் ஒரு பள்ளிக்கூடமும், ஒரு மருத்துவ விடுதியும் வைத்திருந்தார். பத்து வருடங்களுக்குப்பின் அவர் நான்கு பேர்களைமட்டும் மனந்திருப்பினர்.- **1606** இல் அவருக்கு உதவி குருவாக சங். ராபர்ட் தெ நோபிலி சுவாமியார் அனுப்பப்பட்டார். சங். பர்னுந்தஸ் சுவாமியார் தாழ்ந்த இந்து சமுகத்தினரைக்கூட மனந்திருப்ப முடியாமைக்கு அவருடைய வாழ்க்கை முறை இந்து மக்களால் துவேஷிக்கப்பட்டதே காரணம் என்று சங். நோபிலி சுவாமியார் அறிந்துகொண்டார்.

சங். பெர்னுந்தஸ் சுவாமியார் கடற்கரையோரங்களிலுள்ள ஐரோப்பியர்களைப் போலவே நடையுடை பாவனை கொண்டவராயிருந்தார். கருப்பு அங்கி தரித்திருந்தார். அவர் பரங்கி எனவும், மாட்டிறைச்சி உண்பவர் எனவும், சமூக மாமூல்களைக் கடைபிடிக்காதவர் என்றும் வெறுக்கப்பட்டார். எனவே சங். நோபிலி சுவாமியார் இந்தியர்களோடு ஒரு இந்தியனாக வாழத் துணிபுகொண்டார். முதலில் இந்து மேன்குலத்தாரை மனந்திருப்பினல் தாழ்ந்த குலத்தார் அவர்களைப் பின்பற்றுவர் என்று முடிவு செய்துகொண்டார். பிராமண சந்நியாசிகளைப் போல வெள்ளை வேஷ்டி தரித்தார்; தலைமுடி களைந்தார்; நெற்றியில் நீறு பூசினர்; காதுகளில் பெரிய வளையங்கள் மாட்டினர்; மார்பில் பூநூல் அணிந்தார்; கையில் ஆறு அடி நீளமுள்ள மூங்கில் தடி வைத்திருந்தார்; மற்ருெரு கையில் ஒரு செம்பில் நீர் வைத்திருந்தார்; கால்களில் பாதக்குறடுகள் தொடுத்திருந்தார்; மான் தோலில் உட்காருவார். எல்லாப் பொருட்களின் தத்துவத்தைப் போதிப்பவரானதால் தத்துவ போதகர் என்ற நாமம் பூண்டார். அரச குலத்தில் உதித்த ரோமானிய சந்நியாசி என்று கூறிக்கொண்டார். உண்மையிலேயே அவர் ரோமாபுரியில் அரச கோத்திரத்தில் உதித்தவர், தன்னுடைய நண்பர் ஒருவர் உதவியால் மதுரை நகரிலேயே ஒரு வீடு அமைத்துக்கொண்டார். அவர் தமிழ், தெலுங்கு, வடமொழி வல்லுநர். அவருடைய தனி

வாசம், தவவாழ்க்கை, இலக்கிய ஞானம், மத அறிவு முதலியவை மதுரையிலுள்ள பல்கலைக் கழக அறிஞரின் கவனத்தைக் கவர்ந்தன. பிரபுக்களும் பிராமணர்களும் அவரைக்கண்டு அளவளாவ வந்தனர் சிலர் அவருடைய சீடர்களாயினர். சிலர் மத அறிவு அடைந்தனர். சிலர் விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றனர்.

## இன்னல்கள்

**1610** ஆம் ஆண்டு மைலாப்பூர் மேற்றிராசனம், கொச்சி மேற்றிராசனம், கொடுங்கலூர் மேற்றிராசனம் முதலியவற்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. மிக வந். சேசுசபை பிரான்சிஸ் ரோஸ் அதிமேற்றிராணியாருடைய ஆளுகைக்கு மதுரை உட்பட்டது. அவர் சங். தெ. நோபிலி சுவாமியாரின் புதிய முறைகளைத் தீர்க்க ஆராய்ந்து அறிந்து அவைகளை அங்கீகரித்தார். ஆனால் கடற்கரை யோரங்களிலிருந்த சந்நியாச சபைக் குருக்கள், மேற்றிராசன குருக்கள், சங். தெ. நோபிலி சுவாமியாரின் நவீன முறையை எதிர்த்தனர்; விவாதித்தனர்; குறை கூறினர். சேசுசபைக் குருக்களில் கூடச் சிலர் அவரது முறையைத் தாக்கிப் பேசினர். புதுக்கிறீஸ்துவர்களில் சிலர் அவதூறு கூறினர். இதனால் அவர் தம்முடைய வேத போதக தொழிலைச் சில ஆண்டுகள் நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. பின் கோவாவுக்குத் தம் நிலையை எடுத்துக்கூற வரவழைக்கப்பட்டார். அங்கு அவருடைய முறை சரியென ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதே சமயத்தில் அவருடைய முறை ரோமைக்குத் தெரிவிக்கப்பட்டது. சங். தெ. நோபிலி சுவாமியார் மதுரைக்குத் திரும்பிய பின்னர், தம்முடைய ஆடம்பர முறைகளையும், பணச் செலவுள்ள அவசியமில்லாத சில ஆச்சாரங்களையும் கைவிட்டார். அவருடைய இந்த சோதனை காலம் நீடித்ததாலும், அவர் மனந்திருப்பிய சிலர் விசுவாசத்தை மறுதலித்ததாலும், அவருடைய மனது அதிக வேதனையை அடைந்தது. அதே சமயத்தில் அவரது சிறு மந்தையில் ஒரு பகுதி மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி நாயக்கர் அரண்மனைக்கு வந்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் தாம் நெடுநாட்களாகக் கருதியிருந்த நாட்டின் தூரப்பகுதிகளில் சுவிசேஷத்தைப் போதிக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடிவு செய்தார். முதலில்

1871–1881 ஆம் ஆண்டுக்கணக்குகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது சேலம் மாவட்டத்தில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை 11% குறைந்துவிட்டது. ஆனால் சேலத்திலிருந்த எல்லா மக்களின் தொகையில் 25% குறைந்து போயிற்று. பஞ்சத்தில் இறந்தவர்களில் மற்றவர்களைவிட தீண்டப்படாதோர், கிராமப் பணியாட்கள், சாணார், வன்னியர், மலையாளிகள், காடுகளில் வசித்தவர்கள் மிக அதிகமாயிருந்தனர்.

ஞானஸ்நானக் கணக்கின்படி 1884இல் சேலம் மாவட்டத்தில் பழைய கிறீஸ்துவர்களும் புதுக்கிறீஸ்துவர்களும் சேர்ந்து 22812 பேர்கள் இருந்தனர். புதுக்கிறீஸ்துவர்களில் ஏறக்குறைய 8000 பேர்கள் ஆறுபங்குகளில் இருந்தனர். எடப்பாடி–காக்காவேரியில் 2850க்கு மேலும், ஆத்தூர்–கோனேரிப்பட்டியில் 3500க்கு மேலும் கோவிலூரில் ஏறக்குறைய 1000பேர்களும், மேட்டூரில் 400 பேர்களும் இருந்தனர். ஆனால் இப்பெரிய தொகையினரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தப் போதுமான குருமார்கள் இல்லை. எனவே அபரிமிதமாகக் கிடைத்த அறுவடையில் ஒருபெரிய பாகம் அழிந்து போயிற்று. பஞ்சத்துக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு அநேகர் விசுவாசத்தை இழந்தது மிகவும் வருந்தத்தக்கது.

**எடப்பாடி :** சங். தெய்சதெர் ஒரு புதிய செபக்கூடத்தைக் கட்டினார். ஆனால் ரெட்டியூரில் நான்கு அல்லது ஆறு குடும்பங்களைத்தவிர மற்ற நான்கு ஞானஸ்நான ஆயத்தங்களில் ஒரு கிறீஸ்துவனும் கிடையாது.

**செட்டிப்பட்டி :** எடப்பாடி 46 ஆண்டுகளாக சேலம் மாவட்ட கிறீஸ்துவர்களுக்குத் தலைமைபீடமாக விளங்கி இருந்த போதிலும், அங்கு அதிகமான கிறீஸ்துவர்கள் இருந்த போதிலும், செட்டிப்பட்டியில் ஒரு கன்னியர்மடமும், அனாதைகள் விடுதியும் கட்டப்பட்டபின்,செட்டிப்பட்டி பங்கு குருவானவரின் தலைமை இருப்பிடமானது. செட்டிப்பட்டி பங்கு குருமார்கள்: சங். பயோல்சல்லாசுநாதர் (1883—1888): இவர் கன்னியர் மடமும் கோவிலும் கட்டினார். சங். தானியேல் (1889—1899): சடையம்பாளையத்திலி

ருந்த பழைய செபக்கூடம் நெருப்பில் எரிந்த பின்னர், இவர் ஒரு நிலத்தை வாங்கி, புதிய கோவிலுக்கு அஸ்திவாரமிட்டார். பதினறு பெண் வண்ணர்கள் தேவத்திரவிய அனுமானங்களைப் பெறுவதை நிறுத்திக்கொண்டனர். புதுக் கிறீஸ்துவர்களான சில சக்கிலிகள் கடன்பட்டு நசிந்து, ரெட்டியூரை விட்டு வெளியேறினர். வெள் ளாண்டி வலசையில் முதலியார் இனத்தைச் சேர்ந்த நெசவாளிகள் ஒருவர் பின் ஒருவராகப் புதுச்சேரிக்குச் சென்றனர். 1894—95 இல் மீண்டும் ஒரு பஞ்சம் வந்தது. 1892இல் செட்டிப்பட்டியில் காலரா தோன்றினது. ஆனல் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 8ஆம் தேதியில் தேர் எடுப்பதாக வாக்குறுதி எடுத்தபின்னர் காலரா திடீரென நின்றுவிட்டது. சங். தானியேல் சுவாமியார் செட்டிப்பட்டிக் கோவில் காம்பவுண்டுக்குள் மூன்று கிணறுகள் வெட்டினர். மரத்தினல் பீடத்தின்மேல் தானே அழகிய மாடங் கள் அமைத்தார். அவரே வெண்கலத்தை உருக்கி மணிகள் செய்தார். ஆனல் அவருக்கு மலேரியா கண்டதால் புதுச்சேரிக்கு அழைத்துக்கொள்ளப்பட்டார். சங். வான்னே சுவாமியார் (1889) ரெட்டியூரில் சாணர், வன்னியர் இவர்களில் சிலரை மனந்திருப்பி னர். ஆனல் சில மாதங்களுக்குள் அவரும் நோய்வாய்பட்டு புதுச்சேரிக்கு அழைத்துக்கொள்ளப்பட்டார். சங். ஒவே (1896–98) நாகமாரையில் புதுக் கிறீஸ்துவர்களால் நிராகரிக்கப்பட்ட கோவிலின் கூரையை எடுத்து வந்து சடையம்பாளையம் கோவிலுக்குக் கூரை வேய்ந்தார். சங். போன்னஃபோன் அந்தோணி நாதர் (1899–1903).

**சேலம்:** சங். பிரிசார்டு சுவாமியார் இறந்த பின் சங். போத்தேயும், சங். தெய்சதெரும் சேலம் விசாரணையை நிருவகித் தனர். சங். போத்தே சுவாமியார் பாலர் சபையில் சேர்க்கப்பட்ட 300 அனதைகளில் 25% இறந்துவிட்டனர் எனத் தெரிந்துகொண் டார். சங். பெர்த்தோ ஜான்மேரி (1879-88) அரிசிப்பாளையத்தி லிருந்த நெசவாளிப் புதுக் கிறீஸ்துவர்களுக்கு கோவில் கட்டினர். செவ்வாய்பேட்டையில் இப்பொழுது கோவிலின் வடக்கே எடப்பாடி சின்னப்பன்பட்டி முதலிய இடங்களிலிருந்துவந்து குடியேறினவர் கள் இருக்கின்ற இடத்தை வாங்கினர். வளர்ந்துவந்த சூரமங்கலம்

ரெயில்வே காலனியை விசாரித்தார். நகராண்மைக் கழக உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங். போஸ்கே, சங். கராஸ், சங். பிளேயுஸ்ட் முதலியவர்கள் அவருக்கு உதவி குருமார்களாக இருந் தனர். 1882 இல் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கை கலப்பு ஏற்பட்டபோது, சில கிறீஸ்துவர்கள் கோவிலுக்குக் காவல்புரிந்தனர். சிலர் சேலத்தைவிட்டு ஓடிவிட்டனர். கன்னியர்களும், அனாதை களும் செட்டிப்பட்டி, அக்கிரகாரம் மடங்களுக்கு அனுப்பப்பட்டனர். பஞ்சமப்புதுக் கிறீஸ்துவர்களுக்கு உபதேசிமார்களாக இருந்த இரு வரும் அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்க உதவி செய்ய வில்லை. பின்னர் சங். போஸ்கே பங்கு குருவானார். அவருக்கு சங். வெல்ட்டர் சுவாமியார் உதவி குருவானவராக இருந்தார். 1889 இல் வந். காந்தி ஆண்டவர் சேலத்திற்கு விசாரணை செய்ய வந்தார். பிறகு சங். நிக்கோலாஸ் (1892–93) பங்கு குருவானார், அவருடைய உதவி குருவானவர் சங். புரூயெர். சங். தூரியெர் (1893–95) பங்குகுரு; அவரது உதவி சுவாமியார் சங். ஜெர்மா னுஸ், சங். சீக்முல்லர் (1895–1902) சங். புருயெர் (1902–03) சங். ஜுர்னு (1903–04) சங். கொல்லின் (1905–07) இவர் காலத் திலும் வந். காந்தி ஆண்டவர்களின் விசாரணை நடந்தது.

**ஏற்காடு:** ஏற்காடில் இருந்த சிறிய பிரெஞ்சு கத்தோலிக்க சமுதாயம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறுகிவிட்டது. தோட்டங் களில் அதிகச் செலவு, குறைந்த விளைச்சல் இவைகளே அதன் முக் கிய காரணங்கள். எனவே அவர்கள் தங்கள் தோட்டங்களை விற்றுவிட்டனர். அதற்கு மாறாக இந்தியர்களின் கூட்டம் வளர்ந்து கொண்டே சென்றது. 383 கிறீஸ்துவர்கள் இருந்த ஏற்காட்டுப் பங்கில் 1900த்துக்குள் 1000 பேர்களுக்குமேல் இருந்தனர். 1866 இல் இருந்து 98 வரை மூன்று குருவானவர்கள் இப்பங்கைக் கண் காணித்தனர். சங். கோடே (1866–1883) இவர் புதுச்சேரி விக் கார் அப்போஸ்தொலிக்கின் ஆலோசகராக இருந்தார். பின்னர் அவர் பால்மிடீஸில் ஓய்வு பெற்றுக்கொண்டார். பால்மிடீஸ் 1900க்கு முன்பே ஏற்காடு பங்கின் விசாரணையாக ஞானஸ்நானம் மெய்விவாகம் முதலிய தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்

றும் உரிமை பெற்றிருந்தது, சங். கோடே சுவாமியாருக்குப்பின் சங். வக்காந்த் (1883–98) ஏற்காடு பங்கு குருவானுர். 1895 இல் குளுனி கன்னியர் ஐரோப்பிய சிறுமிகளுக்கு ஒரு போர்டிங்கும், பங்கு சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு ஆரம்பப்பள்ளியும், பின்னர் ஒரு அனுதை மடமும் ஏற்படுத்தினர். 1898 இல் சங். வக்காந்த் சுவாமியார் லாங்லிப்பேட்டையில் அர்ச். அந்தோணியார் பேரால் ஒரு கோவில் கட்டினுர். சங். வெல்ட்டர் சுவாமியாரின் மேற்பார்வையில் கோவிலும் அறை வீடும் விரிவுபடுத்தப்பட்டு மிஷனரிகள் இளைப் பாற்றிக்காக வந்து தங்கிப்போக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன் பின்னர் சங். ரெனெவியெர் (1898–1900) பங்கு குருவான வர் ஆனுர்.

ஆத்தூர் 1884 இல் கங்கவள்ளியைச் சேர்த்து ஆத்தூர் பங்கில் 5000 கிறீஸ்துவர்கள் இருந்தனர், அவர்களில் 3800 பேர்கள் புதுக்கிறீஸ்துவர்கள். சங். காந்திசுவாமியாரோடு (1879–80) சங். பியர், சங். வெர்தியே (1869–70) சங். பிரிக்கோ சங். ஃபோர், சங். சிஸ்ஸே முதலியவர்கள் உழைத்தனர். ஆத்தூர் சங். சிஸ்ஸே சுவாமியாரின் விசாரணையின் போது பங்கு ஆனது. பின்னர் சங். லாசர் (தேவசகாயம்) (1881–94). சங். பால் (சின்னப்பநாதர்) (1894–1900) ஆத்தூர் பங்கு குருக்களாக இருந்தனர். சங். எர்னெஸ்ட் சிஸ்ஸே புதுக்கிறீஸ்துவர்களை விசுவாசத்தில் நிலை நிற்கச் செய்யவும், அவர்களை புரோட்டஸ்டாண்டாரிடமிருந்து காப்பாற்றவும் பெரிதும் பாடுபட்டார். அவர்களுக்கு கோவில், அறைவீடு, வாழ்க்கைக்குவேண்டிய வசதிகள் முதலியனவற்றை அமைத்துக்கொடுத்தார். இந்துவாக இருந்து மெய்மறையில் சேர்ந்து உத்தம குரு ஆகி சிறந்த பணியாற்றின சங். லாசர் சுவாமியார் புதுக் கிறீஸ்துவர்களைப் பஞ்ச காலத்தில் காப்பாற்றும் பொருட்டு அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவினுர். அவர் ஞானுேபதேசம் சொல்லிக் கொடுக்கும்போது அவர்கள் மீண்டும் மீண்டும் கடன் கேட்டுக்கொண்டே இருந்தனர். இறுதியாக எவ்விதப் பலனும் கிட்டவில்லை, மணிவிழுந்தான், தேவியாக் குறிச்சி, துலுக்கனூர், அரகாலூர், தேவனூர், பெரியேரி, ஊனத்தூர், சித்தேரி

முதலிய கிராமங்கள் ஒன்றன் பின் ஒன்றாக கத்தோலிக்கு மதத்தைக் கைவிட்டன. ஆனால், மீண்டும் சில குடும்பங்கள் கோனேரிப்பட்டியில் சேர்ந்துகொண்டன. பதிதர்கள் தங்கள் மாயவலையை விரித்து மாய்க்கப் பார்த்த புங்கவாடி, சொக்கநாதபுரம், மிக்கேல் பொளியூர் முதலியன விசுவாசத்தில் உறுதியாக இருந்தன. கிறீஸ்துவ உடையார்கள் கோவில் நிலங்களை உழுதுண்டு வாழ்ந்தனர்; அவர்களில் சிலர் அக்கிரகாரத்துக்குத் திரும்பிப் போயினர். சங். லாசர் சுவாமியார் ஏற்படுத்தின ஒரு சிறு குடியேற்றத்துக்கு லாசர் பேட்டை என்று இன்னும் பெயர் வழங்கி வருகிறது. ஆத்தூர் விசாரணைக்குத் தலைவாசலோடு உட்பட்ட நாரியப்பனூர் ஒரு யாத்திரைத் தலமானதால் அவ்விசாரணைப் பங்கு குருவான சங். பவுல் சுவாமியார் யாவருக்கும் நன்கு அறிமுகமானவர்.

**கோனேரிப்பட்டி:** கோனேரிப்பட்டி விசாரணையை ஆரம்பித்த சங். காந்தி சுவாமியார் விரகானூர், கடம்பூர், தம்மம்பட்டி, நாகம்பட்டி, நாரைக்கிணறு, மாத்துருட்டு, கீரிப்பட்டி முதலிய கிராமங்கள் கத்தோலிக்கு மதத்தைப் புறக்கணித்து விட்டதை பொறுக்கமுடியாத வருத்தத்தோடு கண்டார். நுட்டப்பூர், கீழ் புதூர் வாசிகள் பட்டிருந்த கடனை சங். காந்தி, சங். தெய்சதெர் சுவாமிமார்கள் தீர்த்து, அவர்களைப் புரோட்டஸ்டாண்டார்களின் பிடியிலிருந்து விடுவித்தனர். மிகச் சிறிய குத்தகைக்கு ஏழைகள் உழுதுவந்த நிலங்களை வாங்கினர். மிகச் சிலர்மட்டும் தங்கள் நிலங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டனர். ஆனால் வரிகள் கொடுத்தல், கிணறுகளை ஆழமாக்குதல் முதலிய செலவுகள் கோவிலைச் சார்ந்திருந்தது. 1883இல் சங். காந்தி சுவாமியார் புதுச்சேரி அதிமேற்றிராசனத்துக்கு உதவி மேற்றிராணியாராகத் தேர்ந்தெடுக்கப்படும்போது, கோனேரிப்பட்டி ஒரு பெரிய கிராமமாக வளர்ந்துவிட்டது. அது ஒரு நிரந்திர ஞானஸ்நான ஆயத்தமாக இருந்ததால் புரோட்டஸ்டாண்டார்கள் அதைத் தங்கள் மதத்திற்கு இழுக்கும் முயற்சியில் தோல்வியுற்றனர். சங். காந்தி சுவாமியாருக்குப் பின் வந்த சங். தெய்சதெர் (மிக்கேல் நாதர்) (1883—1903) தனக்கு முன்னிருந்த பங்கு குருவானவரின் வேலையைத் தொடர்ந்து செய்தார். ஏற்கனவே போடப்பட்டிருந்த அஸ்திவாரத்தில் சலேத்

மாதாவுக்கு ஒரு அழகிய ஆலயமும் விமானமும் எழுப்பினர். அவருக்கு சங். ரோக் உதவி குருவானவராக இருந்தார். கங்க வள்ளியிலிருந்த இந்துக்களும், முகமதியர்களும் கிறீஸ்துவர்கள் 1889ஆம் ஆண்டு லூர்துமாதா திருவிழா தேர் ஊர்வலத்தைத் தடுக்க அரசாங்க உத்தரவு பெற்றுக்கொண்ட போது, சங். தெய் சதெர் சுவாமியார் அந்தத் தடை உத்தரவை ரத்து செய்ய அனுமதி பெற்று, 50 பியூன்கள் பாதுகாப்பில் 120 தம்பூறுகளையும் தாரை களையும் கொண்டு வெகு விமரிசையுடன் விழா கொண்டாடினர். அடுத்த ஆண்டும் அதே விதமான எதிர்ப்பை சமாளித்து விழா கொண்டாடினர்.

**காக்காவேரி:** சங். பிரிக்கோ (சூசைநாதர்) 50 ஆண்டு களாக (1879—1929) பஞ்ச காலத்தில் மனந்திரும்பின 5000 புதுக்கிறீஸ்துவர்களைக் கண்காணித்தார். 1886 வரை 1500 பேர் கள் மீண்டும் இந்து மதத்தில் சேர்ந்துகொண்டனர். அவ்வாறு விசுவாசத்தை இழந்தவர்கள் காக்காவேரி—இராசீபுரம் பள்ளர்கள், புதுப்பாளையம் உடையார்களில் அநேகர், ஒட்டர்கள், பஞ்சமர்களில் அநேகர். அவர் எழுதினதிலிருந்து 1892இல் 1000 புதுக்கிறீஸ்து வர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தனர் என்று தெரிகிறது. ஜாதிக் கட்டுப்பாடு செய்யப்பட்ட உப்பிலியர் மதியம்பட்டியிலும் கோனே ரிப்பட்டியிலும் தங்கினர். சங். பிரிக்கோ சுவாமியார் விட்டுக் கொடுக்காத மனத்தினர். சேந்தமங்கலம், நாமக்கல், பட்டணம் மதியம்பட்டி முதலிய இடங்களில் கோவில் நிலங்களுக்காகப் போராடினர். மதியம்பட்டியில் சங். பிரிசார்டு சுவாமியார் போட்ட அஸ்திவாரத்தில் அர்ச். மரிய மதலேனுள் போரால் 1882இல் ஒரு கோவில் கட்டி முடித்தார். ஒடுவன்குறிச்சியில் 1888இல் கிறீஸ்து வர்களின் சகாய மாதாவுக்கு ஒரு கோவில் கட்டத்துவக்கினர். புதுப்பாளையத்தில் மோக்ஷ இராக்கினி மாதாக்கோவிலும், இராசீ புரத்தில் லூர்துமாதாக் கோவிலும், 1883—84இல் பட்டணத் தில் அர்ச். இராயப்பர் சின்னப்பர் கோவிலும், 1885இல் காக்கா வேரியில் பங்கு சுவாமியார் அறைவீடும், கொசவம்பட்டியில் அர்ச். சவேரியார் கோவிலும், 1896இல் சேந்தமங்கலத்தில் ஆரோக்கிய

மாதாக் கோவிலும், 1898இல் காவேரிக் கோவிலைப் பழுதுபார்த்து இன்னுமொரு மணிகட்டியும் அரிய பல வேலைகளைச் செய்தார். கட்டிட வேலைகளுக்குத் தேவையான பணத்தை சங். வான்னே சுவாமியார் பெல்ஜியத்திலிருந்து பெற்றுக்கொடுத்தார். கிறீஸ்துவர்களுக்கும் இந்துக்களுக்கும் மாமுண்டி அந்தணர்களுக்கும் எதிராக நடந்த வியாச்சியத்தில் சங், பிரிக்கோ சுவாமியாரே வெற்றி பெற்றார். பஞ்சமர்களுக்கு உபதேசியாராக 30 ஆண்டுகள் அயராது உழைத்த அந்தோணியை நாம் மறக்கமுடியாது.

**கோவிலூர்—தர்மபுரி:** பஞ்சத்துக்குப் பின் ஞானஸ்நானக் கணக்குப் புத்தகத்திலிருந்து 1884இல் கோவிலூரில் 1000 புதுக் கிறீஸ்துவர்கள் இருந்தனர் என்று தெரிகிறது. சங். தீரியோன் சுவாமியார் கோவிலூரில் இருந்தபோது சென்னைக் கவர்னர் அங்கு வந்து 200 அனாதைகள் பஞ்சத்துக்கு பின்னும் அரசாங்க செலவில் கண்காணிக்கப்படுவதைக் கண்டு பெருமூச்சு விட்டார். சங். திரியோனுக்குப்பின் சங். குரோபோர்ன் பங்கு குருவானார் (1886—87). அவருடைய உதவி குருவானவர் சங். மிக்கேல் சுவாமியார். சங். பிரகாசம் சுவாமியார் பங்கு குரு (1887—1891); அவருடைய உதவி குரு சங். மரி ஆரோக்கியம் சுவாமியார். பிறகு சங். ஜெர்மானுஸ் (1891—94); அவர் மறுபடியும் (1894—96) பங்கு குருவாக இருந்தார். சங். சுர்ரெல் (1896—1902); அவருடைய உதவி குரு சங். ஸ்தனிஸ்லாஸ், சங். சுர்ரெல் சுவாமியார் கோவிலூர் கோவிலைப் பெரிதாக்க எண்ணி செங்கல் தயாரித்து வைத்தார். பின் அவருடைய உதவிகுரு சங். ஸ்தனிஸ்லாஸ் பங்கு குருவானார், (1902—1903),

**கடகத்தூர்:** கடகத்தூர் சங், ரபோயேல் சுவாமியாரின் காலத்தில் 1897இல் பங்கு ஆனது. எலத்தகிரிப் பகுதியில் இருந்த கிராமங்கள் இதன் விசாரணைகள். ஆனால் மூன்று ஆண்டுகளுக்குப் பின் கடகத்தூர் கோவிலூர் விசாரணையில் சேர்க்கப்பட்டது.

**எலத்தகிரி:** எலத்தகிரி 1900இல் 800 கிறீஸ்துவர்களைக் கொண்ட பங்கு ஆனது.

**மத்திகிரிப்பங்கு:** 1900 வரை 42 கிறீஸ்துவர்களைக் கொண்ட பிலிகுண்டு விசாரணை முதலில் மைசூர், பின்னர் கோவிலூர் நிர்வாகத்தில் இருந்தது. எடப்பள்ளி, கனிநாயக்கன்ஹல்லி, எளயூர் முதலிய சிறு விசாரணைகள் 1890க்கு முன்னரே மறைந்துவிட்டன; ஆனால் ஒன்னல்வாடி, சென்னுத்தூர் முதலிய இடங்களில் கிறீஸ்துவர்கள் அதிகரித்தனர். மத்திகிரியில் வந், க்ளெய்னர் ஆண்டவர் சங். குஆரென் சுவாமியார் கட்டின அறைவீட்டை மந்தரித்தார். சங். குஆரென் சுவாமியார் அங்கிருந்த எளிய செபக்கூடத்திற்கு மணி வாங்கி வைத்தார். சங். ஓசுவெக் கிறீஸ்து பாளையம் கோவிலைக் கட்டினர். அங்கு வந்த குருமார்கள்: சங். மோன்னியே (1878), சங். மரியநாதர், சங். தெய்சியே (1880) சங். நோரோனு (1882), சங். குஆரென் (1890—91), சங். ஓசுவெக் (1891—99), அவருடைய உதவி குருமார்கள்: சங். குதென் சங். ஃபிலெர்ரு.

**மேட்டூர்:** சங். பெரூய் ஃபிரடெரிக் சுவாமியார் மேட்டூர் பங்கை சங். லெபீவ்ரு மரகதப்பருக்கு 1881இல் ஒப்படைத்தார். அவருக்குப் பின் சங். சிபுவே (1886—89). அவருக்கு உதவியாக இருந்தவர் சங். ரிச்சார்டு. பிறகு சங். லெஃபிரான்சுவா (1889—1904). பஞ்சத்திற்குப் பிறகு செம்புலிச்சாம்பட்டி, சிகிரிப்பட்டி முதலிய கிராமங்களிலிருந்து சில புதுக்கிறீஸ்துவர்கள் மேட்டூரில் தங்கினர். நாகமாரை, நாயம்பாடி புதுக்கிறீஸ்துவர்கள் பூமனூர் சவேரியார்பாளையத்தில் குடியேறினர். 1884இல் கொல்லகோலுக்குக் கிழக்கில் இருந்த பகுதி மேட்டூரிலிருந்து மைசூர் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டது. மேட்டூரில் 477 கிறீஸ்துவர்கள் இருந்தனர். 1889—99 வரை கிறீஸ்துவர்களுக்குள்ளே மிகுந்த சண்டை சச்சரவுகள் இருந்தன. அவையெல்லாம் சங். லெஃபிரான்சுவா சுவாமியார் வந்தபின் சரிபடுத்தப்பட்டன. 1893இல் நாகலூர் பங்கு மேட்டூரிலிருந்து பிரிக்கப்பட்டது. சின்னப்பள்ளத்திலிருந்த அனுதைகள் விடுதியை மேட்டூர் 1895 வரை நிருவகித்து வந்தது. 1892இல் மேட்டூர் பங்கில் 1612 கிறீஸ்துவர்கள் இருந்தனர்.

கல்விக்காக இக்காலத்தில் செய்த சேவை என்னவென்ருல்

1882இல் செவ்வாய்ப்பேட்டையில் ஆண்களுக்கென தனிப்பள்ளிக் கூடம் கட்டப்படவில்லை. செட்டிப்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, கோவிலூர், அக்கிரகாரம் இந்நான்கு கன்னியர் மடங்களில் சிறுமிகளுக்காக ஆரம்பப்பள்ளிகளும் அனாதைகள் விடுதிகளும் இருந்தன. 1885 இல் கோவிலூர் மடத்தில் பஞ்சமச் சிறுமிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அக்கிரகாரம் மடத்தின் ஆரம்பப் பள்ளியில் முதல் மூன்று வகுப்புகளில் 42 பிள்ளைகள் கல்வி பயின்றனர். ஆண்கள்-பள்ளிகளைப்பற்றிய விவரம் ஒன்றும் தெரியாது. ஆனால் அரசாங்கம் அங்கீகாரம் செய்யாத பள்ளிகளுக்கு மிஷன் உதவி புரியாது என்பது அக்காலத்தில் குருமார்கள் அறிந்திருந்த விஷயம்.

---

# நான்காம் அத்தியாயம்.

## நான்கு மேற்றிராசனங்கள்: 1899—1930.

### கும்பகோணம் மேற்றிராசனமாக ஆக்கப்படல்: 1899.

வந் காந்தி ஆண்டவர், தனக்கு முன்னிருந்த வந். போன்னுன், வந். லவுவென்னுன். ஆண்டவர்களைப்போல, தனது பெரிய அதிமேற்றிராசனத்தைப் பிரித்துக் தரும்படி பரிசுத்த பாப்பானவரைக் கேட்டுக்கொண்டார். சேலத்தை மேற்றிராசனமாக்கும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது. 1899 இல் பாப்பரசரின் வேதபோதக நிர்வாக சங்கம் கும்பகோணத்தை மேற்றிராசன மாக்குவதற்கு ஒப்புக் கொண்டது. வெள்ளாற்றின் தெற்கு பாகம், காவிரி, வெட்டாற்றின் வடக்கு பாகம், காவிரி புகைவண்டி நிலையம் அரியானூர் புகைவண்டி நிலையம் இவற்றின் கிழக்கு பாகம் இவை முதலியன கும்பகோண மேற்றிராசனத்தின் எல்லைக் கோடுகளாக நிர்ணயிக்கப்பட்டன. 4333 கிறீஸ்துவர்கள் இருந்த கோனேரிப்பட்டி, காக்காவேரி பங்குகள் முழுமையும், மோஹனூர், பேட்டைப்பாளையம், கருப்பன்பட்டி முதலிய விசாரணைகளைக்கொண்ட தோளூர்பட்டிப் பங்கின் மேற்கு பாகமும் சேலமாவட்டத்திலிருந்து கும்பகோண மேற்றிராசனத்துக்குக் கொடுக்கப்பட்டன. வந். காந்தி ஆண்டவர்

800 கிறீஸ்துவர்களைக்கொண்ட ஆத்தூர் பங்கை தன்னுடைய மேற்றிராசனத்திலேயே நிறுத்திக்கொண்டார். ஆனால் அவர் இறந்த பின் 1910 இல் ஆத்தூர் பங்கும் கும்பகோண மேற்றிராசனத்தோடு சேர்க்கப்பட்டது.

1899—1930 வரை முப்பது வருடங்களாக ஒரே காலத்தில் நான்கு வெவ்வேறு மேற்றிராணியார்கள் சேலம் மாவட்டத்தைப் பிரித்து ஆண்டனர். மத்திகிரியைத்தவிர சேலம் மாவட்டத்திலிருந்த பங்கு குருமார்களின் அறைவீடுகள் கும்பகோண நகரத்திலிருந்து நூறுமைல்களுக்கு அப்பால் இருந்தன. சேலம் ஒரு முக்கிய நகரமாயிருந்தும் அங்கு ஆண்பிள்ளைகளுக்கென்று ' ஒரு ஆரம்பப்பள்ளியேனும் துவக்கப்படாதிருந்ததற்கு இது ஒரு காரணம் போலும்! வாலிப குருமார்கள் பயிற்சிக்காக கோவிலூர். சேலம் இவைகளுக்கு அனுப்பப்படாமல் கோனேரிப்பட்டிக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த முப்பது வருட நால்வர் ஆட்சியில் எலத்தகிரி, சவேரியார்பாளையம் என்ற இரு புதிய பங்குகள் நிறுவப்பட்டன. ஆனால் 1922 இல் கடகத்தூர் பங்கு என்ற நிலையை இழந்தது. மத்திகிரி, ஏற்காடு, அக்கிரகாரம் அநேகமாக சுகவாசஸ்தலங்களாகவே கருதப்பட்டன. அக்கிரகாரம் பத்துவருடங்களாக சேலம் பங்கின் விசாரணைக்குள் திரும்பத்திரும்ப வந்தது.

சேலம் மேற்றிராசனத்தை நான்கு மேற்றிராசனங்கள் நிர்வகித்த பகுதிகள்.

**புதுச்சேரி அதிமேற்றிராசனம்:** எலத்தகிரி, கோவிலூர், சேலம், செட்டிப்பட்டி, ஏற்காடு, அக்கிரகாரம், பொன்னையாற்றின் வடபாகம்,

**கும்பகோணம் மேற்றிராசனம்:** ஆத்தூர் (1910), கோனேரிப்பட்டி, காக்காவேரி, தோளூர்பட்டியில் ஒரு பகுதி.

**கோயம்பத்தூர் மேற்றிராசனம்:** மேட்டூர், சவேரியார்பாளையம்.

மானமதுரையிலும், பின் தஞ்சாவூரிலும், அதன்பின் திருச்சிராப் பள்ளியிலும் தன் திட்டத்தைத் துவக்கினர். ஆனல் திருச்சிராப் பள்ளி தஞ்சை நாயக்கருக்கு எதிராகப் போருக்கு ஆயத்தமாயிருந் ததனல் சந்தர்ப்பம் சரியில்லை என்று கண்டு சேலத்திற்குச் செல்லத் தீர்மானித்தார்.

## சேலத்தில் தத்துவ போதகர்.

**1623**-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சங். தெ நோபிலி சுவாமியார் காவிரி—கொள்ளிடத்தைக் கடந்து, பாச்சூர் (**1653**இல் பங்கு ஆனது), தொட்டியம் (**1655**-இல் பங்கு ஆனது), கொங்கு நாட்டின் எல்லையாகவிருந்த காரைப் பொட்டனுறு வழியாக சேர்ந்த மங்கல ராமச்சந்திர நாயக்கரின் (அநேகமாக ஒரு ரெட்டியார்) பிர தேசத்திற்கு வந்தார். பெரிய ஆரவாரமில்லாமல் நான்கு அந்தணச் சீடர்களோடும் உபதேசிமார்களோடும் அந்த நாயக்கரை அவரு டைய கோட்டையில் சந்தித்தார். ராமச்சந்திர நாயக்கர் அவரை வரவேற்று உபசரித்தார். அவருக்கு நிலமும் வீடும், வேத போத கம் செய்ய அனுமதியும் அளித்தார். ஆனல் தற்காலிகமாக அவற் றையெல்லாம் மறுத்து, சேலத்துக்குத் தன்பயணத்தைத் தொடர்ந்து செய்தார். அந்த நாட்களில் மதுரை நாயக்கருக்கு தாலகாட் பிரதேசத்தில் சில பாளையக்காரர்கள் உண்டு. காவிரியின் இரு மருங்கிலும் கெட்டி முதலியார்கள் மைசூர்க் கணவாயைக் காவல் புரிந்து வந்தனர். வடமேற்கில் சேலப்பட்டி பிரதேசம் ஏத்தாப்பூரி லிருந்து தெங்கரைக் கோட்டை வரை பரவி இருந்தது. தெற்கில் சேர்ந்த மங்கலம், நாமக்கல் நாயக்கரும், இளைய நகர், மோரூர் நாட்டார்களும் இருந்தனர். **1623**-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தத்துவ போதகர் சேலத்துக்கு வந்தார். "சர்வேசுரனைப்" பற்றி வீதிகளில் பிரசங்கித்தார். ஆனல் ஒருவரும் இந்தப் புதிய கொள் கையைப்பற்றி கவலை கொள்ளவில்லை. வியாபாரிகளும், நெசவாளி களும் தத்தம் வேலைகளிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். இறுதியில் சுவாமியார் தம் சீடர்களாலே கைவிடப்பட்டு, மூன்று பக்கங்களிலும் திறந்திருந்த ஒரு சத்திரத்தில் தங்கி நோய்வாய்பட் டார். மூன்று அல்லது நான்கு வாரங்கட்குப்பிறகு (ஆகமன காலம்)

ஒருவர் அவர் மீது இரக்கப்பட்டு, தன்னுடைய வீட்டில் அவரை ஏற்று உபசரித்தார். அதன் பின்னர் மக்கள் அவரைக் கண்டுபேசி, அவர் மந்திரித்த திரு நீறையும். சுவிசேடச் சொற்கள் பதிக்கப்பட்ட தாயத்துகளையும் வாங்கிச் சென்றனர். தாயத்துகள் தரித்த சிலர் உடனே நலமடைந்தனர். நாயக்கர் பரிவாரத்தைச் சேர்ந்த ஒருவர் அவ்வாறு குணமடைந்தார். நாயக்கரும் சில சமயங்களில் சுவாமியாரைத் தன்னுடைய பாளையத்துக்கு வரவழைத்து, தனது பிராமண ஆலோசகர்களுடன் அவர் போதனையைக் கேட்டார். ராமச்சந்திர நாயக்கரின் அண்ணன் திரு மங்கல நாயக்கர் சங். தெ நோபிலி சுவாமியாரின் சீடர்களில் ஒருவர் ஆனார். அவர் தன்னுடைய பிரதேசத்திலிருந்து துரத்தப்படவே. சேலப்பட்டி நாயக்கரிடம் வாழ்ந்து வந்தார். அவர் தன்மக்களை மந்திரம் கற்றுக்கொள்ள தத்துவபோதகரிடம் கொண்டு வந்தார், **1624**-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு கிழச் சிப்பாயும், சாகுந் தறுவாயிலிருந்த ஒரு வள்ளுவ பண்டாரமும் ஞானஸ்நானம் பெற்றனர். அநேகமாக அதே ஆண்டு மார்ச்சு மாதத்தில் சங். தெ நோபிலி சுவாமியார் கொச்சிக்கு அழைக்கப் பட்டார். அவர் கொச்சியிலிருக்கும் போது தம்முடைய வேத போதக முறைகளைப் பற்றிப் பாப்பரசர் கூறிய முடிவை அறிந்தார். இன்னும் தீர்க்கமாய் ஆராய்ந்து முடிவு கூறும்வரை அவருடைய புதிய முறைகள் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டன.

## மாரமங்கலம் மிஷன்

சங். தெ நோபிலி சுவாமியார் சேலப்பட்டியை விட்டுக் கொச்சிக்குச் சென்ற பின்னர் சேலப்பட்டி நாயக்கர் சேர்ந்த மங்கல நாயக்கனோடு ஒரு போர் தொடுத்தார். திரு மங்கல நாயக்கருக்கு தன் நாட்டைத் திரும்பப் பெற்றுத் தருவதாக உறுதி கூறி, சேலப் பட்டி நாயக்கர் அவரை அழைத்துச் சென்றார். ஆனால் உண்மையாகவே திருமங்கல நாயக்கரை மர்மமாகக் கொலை செய்யத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதை அறிந்த திரு மங்கல நாயக்கர் தன் மக்களுடனும் **40** சகாக்களுடனும் சேலப்பட்டியை விட்டு ஓடி வந்து மாரமங்கலம் நாயக்கரிடம் அடைக்கலம் அடைந்தார். அந் நாட்களில் மதுரை நாயக்கரின் பெரும் உத்தியோகஸ்தரில் கெட்டி முதலியார்கள்

மிகவும் பலம் வாய்ந்தவர்கள். அவர்களுடைய நாடு பொம்மிடியிலுள்ள மோரூரிலிருந்து பவானி வரையிலும், அந்தியூர், கொல்லேகாலிலுள்ள ராமபுரம், காவேரிபுரம், பெரம்பாலே, மனு கொண்டான் வரையிலும் பரவி இருந்தது. அடைக்கலமடைந்த திரு மங்கல நாயக்கர் தன் குடும்பத்திற்கு ஞானஸ்நானம் அளிக்கும்படியாக சங். தெ நோபிலி சுவாமியருக்கு ஆள் அனுப்பினர். ஜூலை மாதத்தில் தத்துவ போதகர் கொச்சியிலிருந்து திரும்பும் போது அந்த ஆள் சந்தித்து, சுவாமியாரை மாரமங்கலத்துக்கு அழைத்து வந்தார். ஆனல் சங். தெ நோபிலி சுவாமியார் திருமங்கல நாயக்கரைக் காண வந்தபோது, நாயக்கர் சுவாமியாரைப் பார்க்கத் தயாராக இல்லை என்று சொல்லி விட்டார். தத்துவ போதகர் மீண்டும் தனியே விடப்பட்டார். பூசை செய்வதற்குக் கூட வசதியில்லாமல் மெத்த அவதியுற்ருர். இறுதியாக நோய்வாய்ப்பட்டார். ஆனல் கடவுளின் அருளால் குணமடைந்தார். இச் சமயத்தில் திரு மங்கலநாயக்கரின் மனம் இளகியது. தன் ஆண் பிள்ளைகளை ஞானுேபதேசம் கற்று ஞானஸ்நானம் பெறும்படியாக சுவாமியாரிடம் அனுப்பினர். சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். நாயக்கர் சுவாமியாருக்கு மாரமங்கலத்தில் ஒரு வீடு கொடுத்தார். அங்கேதான் திரு மங்கலநாயக்கர் சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளன்று ஞானஸ்நானம் பெற்ருர். கர்த்தர் பிறந்த திருநாளில் திரு மங்கலநாயக்கரின் மனைவி திருச்சபையில் சேர்ந்தாள். சில நாட்களுக்குப் பின்னர் அவருடைய குடும்பத்தில் பன்னிருவர் சத்சத்திய வேதத்தில் சேர்ந்தனர். இதே சமயத்தில் ராமச்சந்திர நாயக்கர் தன் அண்ணன் திருமலை நாயக்கரோடு சமாதானம் செய்து கொண்டார். இரு சகோதரர்களும் சேர்ந்து சேலப்பட்டி நாயக்கனேடு போரிட்டனர். 1626-இல் இரு சகோதரர்களின் தாயார் ஞானஸ்நானம் பெற ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். ராமச்சந்திர நாயக்கரும் மனந்திரும்பி யிருக்கவேண்டும் என்று கருத இடமுண்டு.

கெட்டி முதலியாரின் சகோதரர் ஒருவர் அண்டை நாட்டில் ஒரு பாளையக்காரனுக இருந்தார். அவர் தன்னுடைய பகுதியில் வேதம் போதிக்க தத்துவ போதகரை வரவழைத்தார். தன்னுடைய

பிரதேசத்தில் ஒரு வீடும் கோவிலும் கட்டிக்கொள்ள அவருக்கு அனுமதி தந்தார். அநேகமாக இந்த சமயத்தில்தான் மேட்டூருக்கு அருகில் படையாச்சி அல்லது வன்னியர் என்னும் குலத்தவருக்கு விசுவாசம் அருளப்பட்டது. அதே சமயத்தில் நன்கு கற்றறிந்த வள்ளுவ னொருவன் முக்தியுடையான் என்ற நாமம் பூண்டான், தன்னுடைய சீடர்களில் 83 பேர்களைக் கிறிஸ்துவ மதத்தில் சேரச் செய்தான். ஆனால் இந்த வள்ளுவன் ஞானஸ்நானம் பெற்ற பின்னும் தன்னுடைய மூட நம்பிக்கைகளை விடாததனால் தத்துவ போதகர் அவனைக் கிறிஸ்து மதத்திலிருந்து நீக்கிவிட்டார் என்று எடப்பாடியில் ஒரு கர்ண பரம்பரை உண்டு. அவ் வள்ளுவரில் சிலர் சேலத்திலும் (அங்தேரிப்பட்டி), சிலர் ஈரோடிலும் வசித்தனர். 1640-இல் ஈரோடிலும் சேலத்திலும் சேரிகளிலுள்ள சிலர் மனந் திரும்பினர். இச்சமயத்தில் சேலத்தில் மனந்திரும்பியவர்களில் அநேகமாக எல்லோருமே தாழ்ந்த குலத்தவர் என்று கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில் சேலத்திலுள்ள கிறிஸ்துவர்கள் "சேலம் சேரிகளிலுள்ள கிறிஸ்துவர்கள்", என்றே கடிதங்களில் காணப்படுகின்றனர். மேலும் தாழ்ந்த குலத்தவருக்கு அக்காலத்தில் கோவில் கட்ட உத்தரவு கிடையாது. எனவே சேசு சபைக் குருக்கள் 1717 வரையில் கோவிலில் அல்ல பந்தல்களில் தான் பூசை செய்தனர் என்பதிலிருந்தும் இது பெறப்படுகிறது.

சேலப்பட்டி நாயக்கருக்கும் சேர்ந்தமங்கல நாயக்கருக்கும் நடந்த சண்டையின் முடிவுதெரியவில்லை. ராசிபுரம் தாலுகாவிலுள்ள ரெட்டிமார்களை கவுண்டர்கள் துரத்திவிட்டனர் என்று ஒரு பரம்பரை கூறுகிறது. மேலும் அப்பகுதியில் அந்நியர் காலெடுத்து வைத்தால் கொலை செய்யப்படுவர் என்று ஒரு சேசு சபைக் குரு கூறியுள்ளார்.

ஒரு சமயம் மாரமங்கலத்தில் தொற்று நோய் ஒன்று பரவியது. அதற்குக் காரணம் அங்கிருந்த கத்தோலிக்குக் குருவானவரான சங். தெ நோபிலி சுவாமியாரே என்று முடிவு செய்து, கெட்டி முதலியார் அவரை நாடு கடத்த விரும்பினர். ஆனால் தத்துவ போதகர் அங்கேயே தங்கியிருந்து,ஒரு கோவில் கட்டி, அதன்மேல் ஒரு சிலுவையை நாட்டினர். இக் கோயில்தான் கொங்கு நாட்டி

லேயே, நமது மேற்றிராசனத்திலேயே, முதற் கோவில். சிலநாட்க ளுக்குப் பின் கொள்ளை நோய் நீங்கியது. தத்துவ போதகர் மதுரையிலிருந்து சங். மனுவேல் மார்ட்டின்ஸ் சுவாமியாரை தமக்கு உதவி குருவானவராகவும் தமக்குப் பின் அப்பகுதிகளில் உழைக்கவும் அழைத்துவந்தார். சின்னாட்களுக்குப் பின் சங். தெ நோபிலி சுவாமியார் மதுரைக்கு அழைக்கப்பட்டார். அதன் பின் அவர் இப்பகுதிகளுக்குத் திரும்பி வரவில்லை. மாரமங்கலத்தில் சங். அந்த்துவான் தெவிக்கோ **1627** முதல் **1629** வரை உழைத்து வந்தார். அவர் மீண்டும் மாரமங்கலத்தில் **1637** முதல் **1639** வரை உழைத்தார்.

அதன்பின் சேலம் மேற்றிராசன சரித்திரத்தில் ஒரு இருண்ட பாகம் பதினைந்து ஆண்டுகள் நீடித்தது. மாரமங்கலம், சேலம், சேர்ந்தமங்கலம் முதலிய பகுதிகளைப்பற்றி ஒன்றுமே கடிதங்கள் வாயிலாகவேனும் அறிந்துகொள்ள இயலவில்லை. **1640** இல் சங். தெ கோஸ்ட்டா சுவாமியார் காவேரியைக் கடந்து ஈரோடுக்கருகி லுள்ள ஒரு கிராமத்தில் கிறீஸ்துவர்களிடையே சமாதானம் உண்டு பண்ண வந்தார் என்ற ஒரு விடயம் மட்டும்தான் இப்பதினைந்து ஆண்டுகளில் நாம் தெரிந்து கொள்ளக்கூடியது.

**1640** இல் பிராமண சந்நியாசிகள் அல்லாமல் பண்டார சுவாமிகள் என்ற புதுவகைக் கத்தோலிக்க குருக்கள் தோன்றினார் கள். இவர்கள் காவி அங்கி அணிந்தனர்; கையில் ஒரு செம்பில் நீர் வைத்திருந்தனர்; தருமம் வாங்க கையில் தாம்பாளம் ஏந்தியி ருந்தனர்; தமக்காளம் வைத்திருந்தனர்; உட்காருவதற்கும் தூங்கு வதற்கும் மான் அல்லது புலித்தோல் உபயோகித்தனர்; கால் நடை யாக அல்லது குதிரையில் ஏறிச்சென்றனர். இவர்கள் தாழ்ந்த குலத்தோரை நெருங்கி வேதம் போதித்தனர். இந்த ஏற்பாட்டின் பயனாக தாழ்ந்த இந்து சமூகத்தினரில் அநேகர் மனந்திரும்பினர்.

இச்சமயத்தில் டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசியருக்கு விரோ தமாகக் கடற்சண்டை செய்தனர். நாயக்கர்கள் குருக்களுக்கு முன் போல் அவ்வளவு அனுசரணையாக இருக்கவில்லை. அவர்களுக்

குள்ளே பூசல்கள் பல மல்கின. **1640** இல் பீஜபூர் மராட்டிய குதிரை வீரர்கள் சௌத் வரி பெற்றுப்போக ஆம்பூர் கணவாயைக் கடந்து வந்தனர். அதே சமயத்தில் மைசூர் அரசன் கொல்லே காலேக் கைப்பற்றினன். மைசூர் அரசனும் பீஜபூரியர்களும் சேர்ந்து காவேரிபுரம் கோட்டையை முற்றுகையிட்டனர். (காவேரிபுரம் இப்போது மேட்டூர் தேக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறது). **1646** இல் பாரமகாலிலுள்ள செகதேவிபாளேயம் சிவாஜியின் தகப்பனுராகிய சாஜீயின் கைக்கு வந்தது.

## பாச்சூர், கொங்குப்பட்டி பங்குகள்.

காவேரியின் வலக்கரையில் கிறீஸ்துவர்கள் அநேகர் இருந்ததனுல் சேசு சபையார் பாச்சூரை ஒருபங்காக நிறுவ நிச்சயித்தனர். **1655** இல் பாண்டார சுவாமி மனுவேல் அல்வாரஸ் ஸ்ரீரங்கத்துக்கு வடக்கே நான்கு மைல் தொலேவில் பாச்சூரில் ஒரு அறைவீடு கட்டினுர். ஆனுல் பீஜபுரியர்கள் வருடா வருடம் திறைபெற படை திரட்டி வந்தனர். **1659** இல் அந்த அறைவீடு தீயிடப்பட்டது. சில கிறீஸ்துவச் சிறுவர்களேச் சிறை பிடித்துச் சென்றனர். ஏனேயோர் தப்பி ஓடி விட்டனர். இவ்வருட இறுதியில் சங். அல்வாரஸ் சுவாமியார் தன்னுடைய புதுக் கிறீஸ்துவர்களுடன் அமைதியான இடத்தில் நிலம் பெறுவதற்காக மேற்குப் புறமாக நான்கு பயணங்கள் செய்தார். இறுதியாக கெட்டி முதலியார்களுடைய பிரதேசத்தில், எடப்பாடிக்கு மூன்று மைல் தூரத்தில், கொங்குப்பட்டி என்ற கிராமத்தில் தங்கினுர். **1664**-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் **13**-ஆம் நாள் சங், அல்வாரஸ் சுவாமியார் பூதப்பாடி அருகிலுள்ள சிங்கம் பேட்டையில் காய்ச்சல் கண்டு இறந்துபோனுர். இவர் பேளம், சிங்கம்பேட்டை, ஜம்புலினிகோட்டை (சம்பள்ளி) முதலிய இடங்களில் கோவில்கள் கட்டினுர். சங். அல்வாரஸ் சுவாமியார் காலத்தில்தான் கொங்குப் பட்டியில் கர்த்தரின் பாடுகள் நடித்துக் காண்பிக்கப் பட்டது. அவர் நாகபட்டினத்தில் பிறந்தவர். அவருக்கும் அவரது உபதேசிமார்களுக்கும் மருத்துவம் தெரியும்.

**1665**-இல் சங். தெ புரு என்சா சுவாமியார் திருச்சியை விட்டுக் கொங்குப்பட்டியில் அடைக்கலம் புக வேண்டியிருந்தது. அவர் அங்கு சங். தோமினிக் டல்மேய்டா. மனுவேல் தெ பிரிட்டோ முதலிய இரு குருக்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். சங். மனுவேல் தெ பிரிட்டோ தமிழ் நன்ருகக் கற்றுக் கொண்ட பின் கொங்குப்பட்டியில் வேலே செய்யத் துவக்கினர். சங். தெ புரு என்சா சுவாமியார் தொட்டியத்துக்கு அருகில் சந்நியாசி மடம் என்று இற்றைக்கும் அழைக்கப்பட்டு வரும் ஒரு ஊக் கிராமத்தில் பிராமணர்களுடைய நிலத்தில் ஒரு அறை வீடு கட்டிக் கொண்டு சேவை செய்ய ஆரம்பித்தார். அக்காலத்தில் சுவாமிமார்களுக்கு மூன்று வகை உபதேசிமார்கள் இருந்தனர்:—(i) தர்க்க பண்டாரங்கள்: இவர்கள் கிராமங் கிராமமாகச் சென்று பாட்டுப் பாடி பிற மதத்தினர் மத்தியில் நம் வேதத்தை விளக்கிக் கூறினர். (ii) கிராம உபதேசி: ஒரு கிராமத்தில் தங்கி மனந்திருப்புதல் வேலேக்கு ஆயத்தம் செய்து வந்தார். (iii) பெரிய உபதேசி : சுவாமியார் அருகிலேயே எப்பொழுதும் இருந்து, அவர் செல்லுமிடமெல்லாம் சென்று உதவி செய்தார். இவர்களேத்தவிர ஒவ்வொரு குருவானவரும் பல சீஷப் பிள்ளேகளே வைத்திருந்தார். சீஷப்பிள்ளே பூசைக்கு உதவி செய்து, உபதேசித் தொழிலுக்குப் பயிற்சி பெற்று வந்தான்.

**1665**-இல் சங். மனுவேல் தெ பிரிட்டோ கொங்குப்பட்டி, இலுப்பிலி, அணேக்கரைப்பாளேயம் முதலிய ஐந்து இடங்களேக் கவனித்து வந்தார். ஓமலூர், சங்கிகிரி துர்க்கம், சேலம், அந்தியூர் முதலிய பாளேயங்களில் கிறீஸ்துவர்கள் இருந்தனர். ஆனல் பேளம் என்ற ஊரிலிருந்த கிறீஸ்துவர்கள் அவ்வூரை விட்டுச் சென்றனர். குருவானவருடைய கண் காணிப்பு இல்லாமல் அவ்வூர்க் கோவில் பாழடைந்து போனது.

**1666**-இல் இரு வடுக வண்ணர் நமது சத்திய வேதத்துக்காகத் துன்புறுத்தப்பட்டனர். தொட்டியத்திலுள்ள வைணவ குரு இவ்விருவர்களின் நெற்றிகளில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினல் வைணவர்களின் குறியாகிய நாமத்தை இட்டார். சங். மனுவேல் தெ பிரிட்டோ ஓமலூர் கோட்டையிலிருந்த கெட்டி முதலியாருக்கு இக்

கொடுமையைப் பற்றி வியாச்சியம் செய்தார். ஆனல் கெட்டி முதலியார் தம் அந்தணர்களின் ஆலோசனைப்படி குருவானவரைத் தம் எல்லைக்குள் தங்கக்கூடாது என்று கட்டளையிட்டார். இச்சிறிய கலாபனை சுவாமியாருக்குப் பெருத்த மகிழ்ச்சி ஒன்றைக் கொடுத்தது. அவ் வருடம் 272 பேர் சத்திய வேதத்தில் சேர்ந்தனர். மனந்திரும்பியவர்களில் அநேகர் வடுக வண்ணர் குலத்தைச் சேர்ந்தவர்கள். ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னல் துன்புறுத்தப்பட்ட இருவடுக வண்ணர்களும் ஞானஸ்நானம் பெற்றனர். அவ்விருவரில் ஒருவன் பெயர் ராயப்பன்.

ஓமலூருக்கு அருகில் ஏற்கனவே கிறீஸ்துவர்கள் இருந்தனர். அதே வருடம் (1666) சங். புரூஎன்சா சுவாமியார் வயிற்றுக் கடுப்பால் கஷ்டப்பட்டு சந்நியாசி மடத்தில் மரித்தார். சுவாமியாருடைய அறைவீடும் கோவிலும் பிராமணர்களுடைய நிலத்தில் இருந்ததனல் அவரை அங்கே புதைக்க அனுமதி கிடைக்க வில்லை. எனவே அவரைக் காவிரியாற்றின் படுகையில் புதைத்தனர். ஆனல் ஒரு மாதத்திற்குப் பின் அவருடைய சடலத்தைத் தோண்டி எடுத்து சந்நியாசி மடத்திலேயே குழி தோண்டிப்புதைத்தனர். அவர் இறந்து ஒரு மாத காலமாயும் அவருடைய சடலம் அழியாமல் இருந்தது. அவருடைய கல்லறை ஒரு புனித இடமாகக் கருதப்பட்டு வருகிறது.

1666-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ஆம் தேதி சங். மனுவேல் ரோட்ரிகஸ் சுவாமியார் தாலகாட்டில் சாவிலிருந்து தப்பிய நிகழ்ச்சி ஒரு கடித வாயிலாக அறியக் கிடக்கிறது. 1666—1667 இல் மைசூரியர் ஈரோடு, தாராபுரம், ஓமலூர், சேலம் முதலிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். மதுரை நாயக்கருடைய பாளையக்காரர்களில் ஒருவனை இளையநகர் நாட்டார் திருமலைநாயக்கர் காலத்திலிருந்து மதுரையின் வட எல்லையிலுள்ள தலகாட்டில் தனி ஆட்சி நிறுவ முயற்சி செய்துவந்தார். மேலும் பலம் மிகுந்த மைசூர் மன்னன் அடைந்த வெற்றியைக் கண்டு அவர் பக்கம் சேர்ந்து கொள்ள சமயம் பார்த்திருந்தார். இந் நிலையில் மதுரை நாயக்கர் சொக்கநாதர், இளையநகர் நாயக்க நாட்டானின் மீது படையெடுக்கப்

போவதாக அச்சுறுத்திக் கொண்டிருந்தார். எனவே இளைய நகர் நாயக்க நாட்டார் தன் பாளையத்தைச் சேராத எந்த அந்நியனும் வந்தால் அவனைச் சிறை பிடித்து, சொத்துக்கள் இருந்தால் அவற்றைப் பறிமுதல் செய்து, கொலைபுரியக் கட்டளையிட்டிருந்தார். ஏனெனில் அக்காலத்தில் ஒற்றர்கள் சிலர் ஆண்டி வேடந் தரித்து, பணங் கொடுத்து, வீரர்களைத் தங்கள் பக்கம் திரட்டுவதுண்டு.

இச் சூழ் நிலையில் சங். மனுவேல் ரோட்ரிகஸ் சுவாமியார் நான்கு சீடர்களோடும் ஒரு கூடையோடும் சேர்ந்த மங்கலத்திலிருந்து மலையடிப்பட்டிக்கு இளையநகர் நாயக்க நாட்டாரின் பாளையம் வழியாக வந்தார். சந்நியாசி உடையில் இருந்த சுவாமியாரை வீரர்கள் கண்டு பின் தொடர்ந்தனர். வேற்று நாட்டவர் இப்பாளையத்துக்கு வரக்கூடாது என்பது தெரியாததால், ஒரு கிறீஸ்துவ வீரன் சுவாமியாருக்கு வணக்கந் தெரிவித்து, அவருக்கு நேர்ந்துள்ள அபாயத்தை அறிவித்தான், குருவானவர் நேரே பாளையக்காரனிடம் தனக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு வினவச் சென்றார். ஆனால், சுவாமியார் கோட்டை வாயிலுக்கு வந்தவுடன் ஒரு வடுக வீரன் அவரை அங்கேயே நிறுத்தி, தனியே பாளையக்காரனிடம் சென்று, தான் ஒரு சந்நியாசியையும் அவருடைய நான்கு சீடர்களையும் சிறை பிடித்திருப்பதாகச் சொன்னான். இளையநகர் நாயக்க நாட்டார் சுவாமியாரிடம் பணம் இருந்தால் கொன்று விடும்படியாகவும், பணமில்லையென்றால் விடுதலை செய்து அனுப்பி விடும்படியாகவும் கூறினார்.

இருள் கவ்விய வேளையில் அவ்வடுக வீரன் சுவாமியாரையும் அவரது சீடர்களையும் ஒரு தோப்புக்கு அழைத்துச் சென்றான். சுவாமியாரைக் காவல் புரிந்த கத்தோலிக்கு வீரனொருவன் தாங்கள் கொலை செய்வதற்காக அழைத்துச் செல்லப்படுவதை சுவாமியாருக்குக் கூறினான். சுவாமியார் நடந்து செல்லும்பொழுது தன் நான்கு சீடர்களுக்கும் பாவசங்கீர்த்தனம் அளித்தார். தோப்புக்குச் சென்றவுடன் அவ் வடுக வீரன் சுவாமியாருடைய காதணிகளைப் பார்த்தான். ஆனால் அவை பித்தளையானதால் அவன் அவற்றைக் களையவில்லை. சுவாமியாரின் சீடர்களில் ஒருவன் தங்க வளையங்கள் காதில் அணிந்திருந்ததால் அவற்றைக் கழற்றிக் கொண்டான். அதன்பின்

சுவாமியாருடைய கூடையைச் சோதனை செய்தான். ஆனால் கூடையில் பூசை உடுப்புகள் இருந்ததனால் அவற்றைத் தொடுவதற்குப் பயந்து, சுவாமியாரைக் கூடையினுள் இருந்த பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டச் சொன்னான். பூசைப் பாத்திரத்தின் அடி பாகத்தை சுவாமியார் காட்டியபோது, அது பித்தளை என்று அவ் வீரன் விட்டு விட்டான். கூடையிலிருந்த வேர்களை எடுத்து அவை இன்னின்ன வியாதிகளுக்கு மருந்து என்று கூறினார். பின்னர் ஐவரும் முழங்காலிலிருந்து மரணத்துக்கு ஆயத்தம் செய்தனர். அப்பொழுது சில கிறிஸ்துவ வீரர்கள் அவ்வடுக வீரனைப் பார்த்து, சுவாமியார் உண்மையான சந்நியாசி என்றும் அவரிடம் விலையுயர்ந்த பொருளோ அல்லது பணமோ இல்லையாதலால் நாயக்கர் ஆணையின்படி அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவரைக் கொலை செய்தால் அது மாபெரும் பாதகமாகும் என்று கூறினர். அதன்பின்னர் அந்த வடுக வீரன் சுவாமியாரையும் அவரது சீடர்களையும் காவிரியின் அக்கரையில் விட்டு வரும்படி இரு வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் காவிரியைக் கடந்து, கரையோரமாக ஒருநாள் பயணம் செய்து இறுதியாக ஒரு கிறீஸ்துவனுடைய வீட்டில் தங்கினார்கள்.

இந்த சரித்திர நிகழ்ச்சி, நாயக்கருடைய பாளையத்தில் சில கிறீஸ்துவ வீரர்கள் இருந்தனர் என்பதைப் புலப்படுத்துவதால், முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. அவர்கள் அமைதியான காலங்களில் பாளையத்தினருகில் உள்ள நிலங்களில் உழவுத் தொழில் செய்து வந்தனராதலால் அவர்கள் வன்னிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருத வேண்டியிருக்கிறது. பரமத்திக்குத் தென் கிழக்கிலுள்ள பாகல்பட்டி என்னும் கிராமத்தில் இருநூறு வருடங்களுக்கு முன் கிறீஸ்துவ வன்னியர் இருந்தனர் என்று சரித்திரம் கூறுகிறது.

**1667**-ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையில் அநேகர் அவ்வாண்டு ஞானஸ்நானம் பெற ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர் என்று தெரிய வருகிறது.

சங். மனுவேல் தெ பிரிட்டோ காலரா கண்டு **1670**-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **28**-ஆம் தேதி கொங்குப்பட்டியில் காலமா

னர். அவருடைய கல்லறை எங்கு உள்ளது என்று இதுவரையில் அறியக்கூடவில்லை. குருக்கள் போதாமையின் காரணத்தால் அப் பங்கை **1675–76** வரை உபதேசியாரே பார்த்து வந்தார். சமயா சமயம் தொட்டியத்திலிருந்து சங். டல் மேய்டா சுவாமியாரும், சம் பள்ளியிலிருந்து மைசூர் மிஷன் குருமார்களில் சிலரும் கொங்குப் பட்டிப் பங்கை விசாரணை செய்து வந்தனர். இச் சமயத்தில் கொங்கு நாட்டில் உழைத்த சங். பல்த்தசார்தெ கோஸ்ட்டா சுவாமியார் போர்த்துக்கலிலிருந்து புதிய குருக்களோடு இந்தியாவுக்குத் திரும்பும் போது கப்பலில் இறந்து போனர். அவர் அழைத்து வந்த புதிய குருக்களில் அர்ச். அருளானந்தரும் ஒருவர்.

**1653** முதல் **1656** வரை மைசூரும் மதுரையும் கோயம்பத் தூரை அடைவதற்காகச் சண்டையிட்டனர். சத்தியமங்கலம் மைசூர் வசம் வந்தது. மைசூரியர் ஈரோடை முற்றுகையிட்டு சம்பள்ளி வரைத் தங்கள் ஆட்சியைப் பரப்பினர். **1675**-ல் மைசூர் மன்னர் சிக்க தேவராயர் காவிரியைக் கடந்து, கெட்டி முதலியார்களின் பிரதேசத்தைப் பிடித்து, ஆத்தூர், திருச்சிராப்பள்ளி வழியாகப் போர்க்கனலை மூட்டிச் சென்றார். தொட்டியம் பங்கு புறத்தாக் குடிக்கு வடக்கிலுள்ள கல்பாளையம் பங்குக்கு மாற்றப்பட்டது. கொங்குப்பட்டி பங்கு குருவானவர் இன்றி இருந்தது.

## அணைக்கரைப் பாளையம் பங்கு (வெள்ளாண்டி வலசை அல்லது இடப்பேரி)

**1676**-ல் மைசூர் மிஷனைச் சேர்ந்த வயோதிப குரு சங். வின்சென்ட் துஆர்த்தே (தேவராதநாதர்) கொங்குப் பட்டிப் பங்கை ஏற்று விசாரணை செய்தார். ஆனால் கொங்குப்பட்டி சுகக் கேடான இடமாதலால் அந்த இடத்தை விட்டு அணைக்கரைப்பாளையம் என்ற கிராமத்துக்கு தன் கிறீஸ்துவ மக்களோடு வந்தார். அது ஐரோப்பிய குருவானவரின் விசாரணையிலிருந்ததால் அதை வெள்ளாண்டி வலசை (வெள்ளை + ஆண்டி + வலசை) என்று புற மதத்தினர் அழைத்தனர். ஏற்கனவே அந்த கிராமத்தில் சங். புருஎன்சா சுவா

மியார் **1655**-இல் கட்டிய கோவிலும், மனந்திருப்பிய சில தமிழ் கொல்லியர் குடும்பங்களும் இருந்தன. **1676**-இல் சங். தேவராத **(Duarte)** சுவாமியார் ஒரு அறைவீடும் ஒரு பெரிய கோவிலும் கட்டினர். இக்கோவில் மதுரை மிஷனிலேயே மிகப் பெரிய கோவிலாக இருந்தது. அதே ஆண்டில் **240** பேர் ஞானதீட்சை பெற்றனர்.

**1678**-ஆம் ஆண்டு மே மாதம் ஒரு பெரிய தீ விபத்து வெள்ளாண்டி வலசையில் ஏற்பட்டது. புதிய அறைவீடும் பெரிய கோவிலும் தீக்கிரையாயின. ஏழை நெசவாளிகளுக்கென்று வாங்கி வைத்திருந்த பருத்திப்பஞ்சு மூட்டைகளெல்லாம் சாம்பலாயின. இந்த விபத்து சுவாமியாருக்குப்பெருத்த நஷ்டத்தை உண்டாக்கியது மல்லாமல், மன அதிர்ச்சியையும் விளைவித்தது. அவர் சின்னுட்களுக்குப் பின் அவஸ்தைக்குச் சென்று திரும்பிய போது காய்ச்சல்கண்டு இறந்து போனுர். கல்பாளையம் பங்கிலிருந்த சிரேஷ்டர் சுவாமியார் சங். ரோட்ரிகஸ் குதிரைமேல் இரண்டு நாள் பயணம் செய்து சுவாமியாரை நல்லடக்கம் செய்தார். இப்பொழுது வெள்ளாண்டி வலசைக் கோயிலின் தென் மேற்கில் காணப்படும் தேவராத சுவாமியாரின் கல்லறை பிற்காலத்தில் கட்டப்பட்டது. புற மதத்தினர் இக் கோவிலுக்கு ஏற்பட்ட விபத்தைக் கண்டு எள்ளி நகையாடினர். எனவே சங். ரோட்ரிகஸ் சுவாமியார் வெள்ளாண்டி வலசையிலேயே தங்கி, அங்குள்ள கிறீஸ்துவர்கள் விசுவாசத்தில் தளராமல் இருப்பதற்கு ஊக்கமூட்டி வந்தார். கிராம முனிசீப்பின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் தீயில் வெந்து போன கோவிலை மீண்டும் கட்டி முடித்தார்.

**1679**-இல் எழுதப்பட்ட ஆண்டறிக்கையிலிருந்து அணைக் கரைப் பாளையத்துக்கு ஏழு சிறிய பங்குகள் இருந்தன என்று தெரிய வருகின்றன. அவை சங்கிகிரி, ஓமலூர், மணலி, இளையநகர், மதியம்பட்டி, சேந்தமங்கலம், சேலம் முதலியனவாம்.

அர்ச். அருளானந்தரோடு இந்தியாவுக்கு வந்த சங். அமாதியோ சுவாமியார் அந்தியூருக்கு வடக்கிலுள்ள எல்லமங்கலம் பங்கில் இருந்தார். அவர் ஒருமுறை தன்னுடைய சிரேஷ்ட சுவாமியா

ரும். பக்கத்துப் பங்கு சுவாமியாருமான சங். ரோட்ரிகஸ் சுவாமியாரைக் காண வெள்ளாண்டி வலசைக்கு வந்தார். கொங்கு மூப்பர்களுள்ள ஒரு கிராமத்திலிருந்து அவஸ்தைக்கு ஆள் வந்து அழைத்த போது, சங். ரோட்ரிகஸ் சுவாமியார் வாலிபரான சங். அமாதியோ சுவாமியாரை அனுப்பினார். அவர் அந்த கிராமத்துக்குச் சென்று, அங்குள்ள சில கிறீஸ்துவர்களின் விசுவாசத் தளர்ச்சியைக் கண்டு கடிந்தபோது, மூப்பர்களின் தலைவன் கோபங்கொண்டு சுவாமியாரை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டி நையப்புடைத்தான். இந்த அக்கிரமம் மைசூர் மன்னனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மூப்பனார் தண்டிக்கப்பட்டார், ஆனால் சங். அமாதியோ சுவாமியார் அந்நாளிலிருந்து பூரண சுகமில்லாமல் அவதியுற்று, அடுத்த ஆண்டு **1680** இல் மரித்தார். சங். ரோட்ரிக்ஸ் சுவாமியார் தன்னுடைய கல்பாளையம் பங்குக்குச் சென்ற பின்னர் கிறீஸ்துவ மூப்பர்களில் சிலர் விசுவாசத்தை மறுதலித்தனர்.

அர்ச். அருளானந்தரோடு இந்தியாவுக்கு வந்த சங். இஞ்ஞாசி—க்சேவியர் (லண்டனில் பிறந்தவர்)—**1680**ஆம் ஆண்டு அணைக்கரைப்பாளையம் பங்கை விசாரணை செய்துவந்தார், அவரது சலியாத சேவையால் **93** பேர் மனந்திரும்பினர்; விசுவாசத்தை இழந்த மூப்பர்களில் அநேகர் மீண்டும் திருச்சபையில் சேர்ந்தனர். ஆறுமாத காலமட்டும் அயராது உழைத்த இச்சற்குரு **1680** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது **32** ஆவது வயதில் இறந்து போனார். அவருடைய கல்லறை வெள்ளாண்டி வலசைக் கோவில் முற்றத்தில் இருக்கிறது.

**1680—81** இல் ஜிஞ்சி நாட்டில் எறையூர் என்ற ஊரிலுள்ள கிறீஸ்துவர்கள், பஞ்சத்தினின்றும், மராட்டியரின் வரி பளுவிலிருந்தும், கொடுமைகளினின்றும் தப்பித்துக்கொள்ள, சேலத்திற்கு வந்து காய்ச்சல் கண்டு இறந்து போயினர்.

அணைக்கரைப்பாளையத்தைப் பற்றிய இறுதிக் கடிதம் **1684** ஆம் ஆண்டு அர்ச். அருளானந்தர் தயாரித்த ஆண்டறிக்கையில்

காணக்கிடக்கிறது. தலகாட்டு சிக்க தேவராயரிடமிருந்து மீட்கப்பட்டது, ஆனால் அதை திடீரென்று மராட்டியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். 1682 ஆம் ஆண்டு கர்த்தர் உயிர்த்த திருநாளன்று அநேக கோவில்கள் இவர்களால் அழிக்கப்பட்டன. ஆனால் வெள்ளாண்டி வலசையிலுள்ள பெரிய கோவில் நாசமாக்கப்படவில்லை. மேலும் கிறீஸ்துவர்கள் அக்கோவிலுக்கு நல்ல கூரை அமைப்பதற்காக சாம்போஜியின் மைத்துனனான ஹார்ஜி மஹதிக் என்பவனிடமிருந்து சூரிய மலையிலுள்ள காட்டில் மரம் வெட்டிக்கொள்வதற்கு உத்தரவும் பெற்றனர். பூதப்பாடியிலிருந்து முதலியார்களும், துளுவ வேளாளர்களும் இக்கிராமத்துக்கு வந்தபடியால் கிறீஸ்துவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்தது.

மராட்டியர்களின் ஆக்கிரமிப்பின்போது தாலகாட்டில் ஒரு குருவானவரேனும் தங்கவில்லை, 1684—85இல் கொங்கு நாட்டை மராட்டியர் விட்டுச் சென்றபோது சங். அந்த்துவான் புரு என்சா சுவாமியார் அணைக்கரைப்பாளையம் பங்கைச் சில மாதங்கள் விசாரணை செய்தார். சேலமும், கோயம்பத்தூரும் சிக்க தேவராயருடைய ஆட்சிக்கு உட்பட்டபடியாலும், மதுரை மிஷனுக்கு குருக்கள் போதாமையும், பணத்தட்டும் ஏற்பட்டதாலும் 1687 இல் இப்பிரதேச முழுவதும் மைசூர் சேசு சபையாரின் விசாரணைக்கு உட்பட்டது.



## இரண்டாம் அத்தியாயம் :

## மைசூர் சேசுசபைக் குருக்களும் சேலமும்

மைசூர் மிஷனைச் சேர்ந்த கன்னடியர்களுக்கு வேதம் போதித்த கோவா மாகாணத்தைச் சேர்ந்த இத்தாலிய சேசுசபைக் குருக்களைப் பற்றிய முழு சரித்திரம் புத்தக வடிவில் இன்னும் பிரசுரமாகவில்லை.

வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த மைசூர் நாட்டிற்குள் முதல் முதல் சென்று (**1649–50**) சத்திய வேதத்தைப் போதித்த சேசுசபை சற்குரு சங். லெயோனுர்தோ சின்னமி ஆவர். மைசூரியர்கள் தர்மபுரி, தாலகாட், பாலகாட் முதலிய நாடுகளின் மேல் கொண்ட வெற்றியால் சேல மிஷனினுடைய வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. பீஜபூரியர்கள், மராத்தியர்கள், கடப்பை நவாபுகள் முதலானோர்களின் கைகளில் பாரமஹால் மாறி மாறி வந்தது. இறுதியாக அது ஹைதர் ஆலியால் **1765** இல் பணங் கொடுத்து வாங்கப்பட்டது.

மதவிஷயமாக மைசூரை ஆளும் அதிகாரத்தை கோவாவிடமிருந்து மைசூர் சேசுசபைக் குருக்கள் பெற்றனர். ஆனல் **1711** இல் இருந்து அந்த அதிகாரம் கொடுங்களூர் அதிமேற்றிராணியாரிடமிருந்து பெறப்பட்டது. இக்கருத்து, வேதத்திற்காக உயிர் துறந்த சங். குஞ்ஞாசுவாமியாரை திருச்சபையின் வணக்கத்துக் குரியவர்கள் பட்டியில் சேர்ப்பதற்கு, கொடுங்களூர் மேற்றிராணியார் முயற்சி செய்தார் என்பதிலிருந்தும், மறை வழிபாட்டு முறையைப்பற்றிப் பாப்பரசர் இட்ட ஆணையை இவர் பிரகடனப்படுத்தியதிலிருந்தும், சேசுசபை பாப்பானவரால் வருத்தத்தோடு நிறுத்தம் செய்யப்பட்டபோது சேசுசபைக் குருக்களில் சிலர் கோவாவுக்குச் செல்லாமல் தப்பி வந்து இவருடைய ஆளுகையில் இருந்தனர் என்பதிலிருந்தும் விளங்குகிறது. சேசுசபை நீக்கி வைக்கப்பட்டபோது சில கன்னட குருமார்கள் சேசுசபைக் குருக்கள் இருந்த மைசூருக்கு கோவாவிலிருந்து அனுப்பப்பட்டனர். அவர்கள் **1782** ஆம் ஆண்டு திப்பு

சுல்தானுல் பயமுறுத்தப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டனர். அவர்கள் 1799 ஆம் ஆண்டு வரையில் மீண்டும் மைசூருக்குத் திரும்பவில்லை.

1795 முதல் 1833 வரை கர்த்தனுர் (சீரிய வழிபாட்டு முறையை அனுசரிக்கும் மலையாள குருமார்கள்) கொடுங்களூரிலிருந்து வந்து, சேல நகரத்தின் தென் பாகத்திலுள்ள தாலகாட் பகுதியைப் பராமரித்துவந்தனர். சேல மாவட்டத்தின் ஏனைய பகுதிகள் சோழமண்டல சிரேஷ்ட சுவாமியாரின் ஆளுகையில் 1785 இல் இருந்துவந்தது என்பது பற்றி கருத்துபேதம் கிடையாது.

## நாவல்பட்டிப் பங்கு, 1654.

மைசூர் மன்னர்களால் 1640 இல் வெல்லப்பட்ட மேட்டுருக்கு அருகில் காவேரியின் வலது கரையின் பகுதியிலிருந்த கன்னடியர்களுக்கு முதல் முதல் சுவிசேஷத்தைப் போதித்தவர் இத்தாலிய சேசுசபைக் குரு சங். செல்வநாதர் செராபினி சுவாமியார் ஆவர். கொங்கு நாட்டில் தமிழர்களுக்கு ரோமான குருத்துவ போதகர் முதல் முதல் வேதம் போதித்ததுபோல கன்னடியர்களுக்கு இத்தாலிய குரு சங். செராபினி முதல் முதல் வேதம் போதித்தார்.

கோவாவிலிருந்து மங்களூர் வழியாக கிழக்குத் தொடர்ச்சி மலைகளைக் கடந்து 1649—1650 இல் சங், சின்னமி சுவாமியார் மைசூர் நாட்டுக்குவந்தார். இவருடன் மேல் நாட்டிலிருந்து கப்பலில் சேர்ந்துவந்த சங். செராபினி சுவாமியார் இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் பரதவர் நாட்டிலிருந்து திரிச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள காந்தளூரில் தமிழர்களுடைய மொழியையும் பழக்க வழக்கங்களையும் கற்கவந்தார். அங்கிருந்து 1651 இல் சத்தியமங்கலத்திலிருந்த சங். மனுவேல் மார்ட்டின்ஸ் சுவாமியாரிடம் சென்று, பின்னர் மேட்டுருக்கு அருகிலுள்ள ஜம்புலினிக் கோட்டை அல்லது சம்பள்ளிக்கு வந்தார். மதுரையும் மைசூரும் 1652 இல் போருக்கு ஆயத்தம் செய்துவந்தனதாதலால், அங்கு அதிக நாட்கள் தங்கவேண்டாமென்று சங். மார்ட்டின்ஸ் சுவாமியார் அவருக்கு எச்சரிக்கை செய்தார்.

சங். செராபினி சுவாமியார் உபதேசியார் இராயப்பனின் உதவியுடன் வன்னிய குலத்தவர்களில் சிலரை மனந்திருப்பினுர். ஆனுல் அவர்களுக்கு ஒரு கோவில் கட்டுவதை ஜோகிகள் எதிர்த்த தனுல், தமிழ் மொழியை மீண்டும் படிக்க காந்தளூருக்குத் திரும் பவும் சென்ருர். சுவாமியார் இல்லாத போது ராயப்பன் என்ற அந்த உபதேசியார் மேட்டூருக்குத் தெற்கே நான்கு மைல் தொலை விலுள்ள புதுக் கிறீஸ்துவர்கள் அதிகமாக இருந்த நாவல்பட்டி என்னும் கிராமத்தை கோவில் கட்டுவதற்கும், குருவானவர் விடுதி அமைப்பதற்கும் தெரிந்து கொண்டார். சங். மார்ட்டின்ஸ் சுவாமி யாரின் வேண்டுகோளுக்கிணங்கி மைசூர் ஆட்சிக்குட்பட்ட சம்பள் ளிக்கோட்டையின் தலைவன் **1652**-இல் பிரசங்கிக்கவும், கோவில் கட்டவும் அனுமதி அளித்தான். சங். செராபினி சுவாமியார் காந்த ளூரிலிருந்து திரும்பி வந்த போது நாவல்பட்டியில் கோவில் கட்டி முடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். இது மைசூர் இராஜ்யத்தில் கட் டப்பட்ட முதல் கோவில் என்று சொல்லாம். எனினும் மைசூர் நகரத்திலாவது அல்லது ஸ்ரீரங்கபட்டினத்துக்கு அருகிலுள்ள சிறிய கிராமங்களிலாவது பதினேழாவது நூற்ருண்டிலேயே ஒரு கோவில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. ஏனெ னில் வெடி மருந்து செய்வதிலும், பீரங்கிகள் வார்ப்பதிலும் கைதேர்ந்த கோவானியர் அல்லது போர்த்துக்கீசியர் மைசூர் மன் னர்கள் அநேகரிடம் வேலை செய்து வந்தனர். அவர்கள் கிறீஸ்துவர் கள் ஆனதால் அக்காலத்திலேயே கோவில் இருந்திருக்கவேண்டும்.

சங். செராபினி சுவாமியார் காந்திரவ நாரச மன்னரிடம் மைசூரில் பிரசங்கிக்க உத்தரவு கேட்டார். ஆனுல் அது மறுக்கப் பட்டது. **1653**-இல் இவர் கிறீஸ்மஸ் விழாவை நாவல்பட்டியில் கொண்டாடினுர். **1654**-இல் கர்த்தர் உயிர்த்த திருநாளில் காய்ச்ச லினுலும், மிகுந்த பலவீனத்தாலும் அவதியுற்றிருந்த சுவாமியாரை கோவாவுக்குத் திரும்பிப்போய் விடும்படி அவருடைய சிரேஷ்டர் சங். சின்னமி சுவாமியார் கட்டளையிட்டார்.

**1653**-இல் மைசூரியர்கள் சத்தியமங்கலம் கோட்டையை வெகு எளிதில் கைபற்றினர். இதை முன்னிட்டு மதுரை மைசூரோடு

போரிட்டது. இப்போரின் காரணமாக சங். மார்ட்டின்ஸ் சுவாமியாரும், சங். அர்க்கோலினி சுவாமியாரும் முதலில் மலைகளுக்குச் சென்று, பின்னர் நாவல்பட்டிக்கு வந்தனர். கெட்டி முதலியார் பகுதியிலும் போர்த் தீ மூண்டபோது சங். செராபினி சுவாமியார் நாவல்பட்டிப் பங்கை விட்டுவிடும்படி நேர்ந்தது. அங்கிருந்த கோவிலும், சுவாமியார் வீடும் சூறையாடப்பட்டு பாழ்படுத்தப்பட்டது. கிறீஸ்துவர்கள் முதலில் குண்டரிக்குன்றுகளுக்கு ஓடி, பின் மார்த்தஹல்லிக்குச் சென்றனர் (**1656-59**). சங். மனுவேல் மார்ட்டின்ஸ் சுவாமியார் திரிச்சிராப்பள்ளியில் **1656**-இல் இறந்தார். சங். ராபர்ட் தெ நோபிலி சுவாமியார் 'விதைத்ததை' சங். மார்ட்டின்ஸ் சுவாமியார் 'அறுத்தார்'. போர்க்காலத்தில் சங். செராபினி சுவாமியாருக்குப் பதிலாக சங். சைமன் மார்ட்டின் சுவாமியார் வந்தார். ஆனால் அவர் **1659** முதல் **1660** வரை குண்டரிக்குன்றுகளில் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

**1660**-இல் தர்மபுரியிலிருந்த நல்லராயர் என்ற வைணவ குரு, லிங்காயித்துக்களோடு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு, சம்பள்ளியிலிருந்த கிறீஸ்துவர்களைத் துன்புறுத்தினர். ஸ்ரீகர்ணிக்கர் குலத்தைச் சேர்ந்த இராயப்பன் என்ற கிறீஸ்துவனின் நெற்றியில் பலவந்தமாகச் சூடு போட்டு, வேலையிலிருந்து நீக்கி, அந்த கிராமத்தை விட்டு ஓடும்படி செய்தார். இந்த நிகழ்ச்சியைக் கண்டு ஆத்திரமடைந்த கிறீஸ்துவர்கள் சம்பள்ளிக் கோட்டைத்தலைவனிடம் தாங்கள் வேறு நாட்டுக்குப் போவதாகச் சொல்லி அச்சுறுத்தினர். இதையறிந்த தலைவன் தனக்குச் சேரவேண்டிய வரியையும், தன்னுடைய சேனையின் பலத்தையும் இழக்கவேண்டியிருக்கும் என்று பயந்து, அவ் வைணவ குருவையே சம்பள்ளியை விட்டேகுமாறு பணித்தான். இதன்பின் அமைதி நிலவியது.

### தாலகாட், பாலகாட் பகுதிகளிலுள்ள வேறு பங்குகள் :

**1660** இல் மைசூர் மிஷனில் நான்கு பங்குகள் இருந்தன. சேல மாவட்டத்தில் இரண்டு பங்குகள் இருந்தன. ஒன்று கொங்கு நாட்டில் சம்பள்ளி, குள்ளவீரம்பட்டி (மேட்டூர்), சோளப்பாடி, மல்லி

குண்டம், சிக்கக்காவல் (காவேரியும் பாலாறும் சேருமிடம்), நங்கவள்ளி முதலிய விசாரணைகளைக் கொண்டிருந்தது. மற்றொன்று பாலகாட்டில் கீளமங்கலத்திற்கு அருகில் உள்ள கப்புனெல்லி அல்லது கப்பினகத்தி அல்லது கப்பிகனத்தி. இங்குள்ள குருமார்கள் கன்னடம் பேசினர். ஆனால் அவர்களுடைய கிறீஸ்துவ மக்களில் அநேகர் தமிழர்கள்.

**1666** இல் சம்பள்ளிக்கோட்டை மீண்டும் மதுரை வசம் வந்தது. ஆனால் அங்கிருந்த கோவில் நாசமாக்கப்பட்டிருந்தது. எனவே சோளப்பாடியில் வேறொரு கோவில் கட்டப்பட்டது. சங். சிமாவோ மார்ட்டினும், சங். வின்சென்ட் துவார்த்தே சுவாமியாரும் இப்புதிய பங்கை விசாரித்தனர். சம்பள்ளிக் கோட்டையைக் காப்பாற்றும் பணியில் அரிய சேவை செய்த மரகதம் என்ற கிறீஸ்துவன் சிக்கக்காவல் கோட்டைக்குத் தலைவன் ஆனான். அவனுடைய கோட்டையில் அர்ச். மிக்கேல் சம்மனசு பேரால் ஒரு கோவில் கட்டப்பட்டது. இச்சமயத்தில் காவேரிபுரத்திற்கு அருகாமையில் வாணக்காரர்களில் சிலர் மனந்திரும்பினர்.

## தர்மபுரி பங்கு.

சங். சிமாவோ மார்ட்டின் சோளப்பாடியிலிருந்து பிரசங்கம் செய்துகொண்டு பென்னாகரம், காவேரிப்பட்டினம் வழியாக தர்மபுரிக்கு வந்து அங்கே பள்ளாளிகள் (வேளாளர்), படகானியர்கள் (கவரை அல்லது வடுகர்), பள்ளிகள் (வன்னியர்), தீண்டப்படாதவர் முதலானோர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஆனால் சங். சின்னமி சுவாமியார்தான் **1661** இல் தர்மபுரி பங்கை ஏற்படுத்தினார். அவருக்குப்பின் சங். சிமாவோ மார்ட்டின் (**1661—72**), சங். ஜே. முச்சியாரெல்லி (**1673—79**), சங். சிமாவோ கோமஸ் (**1675-82**) முதலியோர் அப்பங்கை விசாரணை செய்துவந்தனர். சங். சின்னமி சுவாமியார் காந்திராவ நாரசா, தொட்ட தேவராஜா முதலிய மைசூர் மன்னர்களின் அன்பைப் பெற்றிருந்தார். இக்காலத்தில் தான் மைசூர் மிஷனின் இப்பகுதியில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டது. இந்த நல்ல சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல கோயில்கள் கட்டி

னர். ஊத்தமலைக்கு அருகில் ஆலம்பாடியில் அர்ச். மதலையம்மாள் பெயரால் ஒரு கோவிலும், பாலக்கோடுக்கு அருகிலுள்ள மாரண்டவள்ளியில் அர்ச். சூசையப்பர் பேரால் ஒரு கோவிலும் கட்டப்பட்டது. மேலும் பென்னுகரம், மடம், நீர்குண்டி, செங்கப்பாடிக்கு அருகில் கொங்கோரல்லி, முதலிய இடங்களில் கத்தோலிக்கு மக்கள் இருந்தனர். இப்பொழுது இந்த விசாசரணைகள் கிடையாது. 1670க்குப் பின் மைசூரிலிருந்து மிஷனரிகள் துரத்தப்பட்டதாக ஒரு வதந்தி உலவியது. இரண்டு மூன்று ஆண்டளவாக கிறீஸ்துவர்கள் எங்கணும் துன்புறுத்தப்பட்டனர். 1672 இல் சங். சின்னமி சவாமியாருடன் இருந்த சங். முச்சியாரெல்லி ஸ்ரீரங்கபட்டினக் கோட்டையிலிருந்து துரத்தப்பட்டார், எனவே அவர் தர்மபுரியை அடைந்தார்,

சங். முச்சியாரெல்லி சுவாமியார் எதிர்ப்புகளைக்கண்டு கலங்காத வீரவுள்ளம் படைத்தவர். அவர் ஆம்பூருக்குப் பக்கத்திலுள்ள வாணியம்பாடியிலும், கங்குந்தியிலும் வேதம் போதித்தார். இவ்விடங்களில் கோவில் கட்டுவதற்கு அநேக தடைகள் இருந்தன. இவர் தீர்த்தமலை—செங்கம் கணவாயைக் காவல் புரிந்த சில்லி நாயக்கன் பகுதியிலும் புகுந்து விசுவாசத்தைப் பரப்பினர். மதுரை மிஷனுக்கு உட்பட்ட, செங்கத்திற்குத் தெற்கிலுள்ள, வீராணம் என்ற ஊரிலுள்ள கிறீஸ்துவர்களைச் சந்தித்தார். இவர் வெங்கோஜியின் நாட்டிலிருந்த மணலூர்ப் பேட்டைக்கு அருகிலுள்ள பெருமனுத்தியில் மந்திரி ஜெகநாத பாந்த் என்பவரால் 20 நாட்கள் சிறையிலடைக்கப்பட்டார். 1678 அல்லது 1679 இல் மரணமடைந்தார்.

சங். முச்சியாரெல்லி சுவாமியார் இறந்தபின் சங். சிமாவோ கோமஸ் தர்மபுரியை விசாரணை செய்தார். ஆனால் இவரும் கப்பாத்துறை (நிப்பாத்துறை?) என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டார், 1674 இல் மலையாளக் கடற்கரையிலிருந்து கொலை என்ற ஊருக்குச் செல்லும் வழியில் அர்ச். அருளானந்தர், சங். பிரையர் சுவாமியாரைச் சந்தித்து, அவரோடு வாணிப்புத்தூர் (பவானி) குலியாத்தூர் (குண்டரி மலைகள்), மார்த்தஹல்லி, பாலாறு பள்ளத்தாக்கு, காவேரிபுரம், சம்பள்ளி, கோனூர் முதலிய இடங்களைக் கடந்தார். கோனூரில்

தங்கியிருந்த சங். அந்தோணியோ ரிபெய்ரோ சுவாமியார் இந்த இரு குருக்களோடு தர்மபுரிவரை வந்தார். பின்னர் அவ்விரு குருக்கள் செங்கங்கணவாய் (ஷெங்கம்கணவாய்), அத்திப்பாக்கம், இளவனசூர், திருமுத்தம் (ஸ்ரீ முஷ்ணம்) வழியாக கொலே என்ற ஊரை 1674 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் தேதி அடைந்தனர்.

தாலகாட்டிலும் அந்தியூரிலும் குருக்கள் இல்லாதிருந்த போது, மைசூர் மிஷன் குருமார்கள் சம்பள்ளியிலிருந்தும், கோனூரிலிருந்தும் கிறீஸ்துவர்களை விசாரித்துவந்தனர்.

## கப்பிகனுத்தி பங்கு.

இப்பங்கு பாலகாட்டிலுள்ள கீளமங்கலத்திற்கு வடக்கே முக்கால் மைல் தூரத்தில் உள்ளது. ஒசூர், தேவர்பல்லாலி, இரத்தினகிரி முதலிய பகுதிகளை மைசூர் மன்னன் ஆக்கிரமித்துக் கொண்டபோது இது துவக்கப்பட்டது. கப்பிகனுத்தியில் இருந்த கோவில் அர்ச். அந்தோணியார் பாதுகாவலிலும், மாரண்டவல்லியிலுள்ள கோவில் அர்ச். இஞ்ஞாசியார் பாதுகாவலிலும் கட்டப்பட்டது. இங்கிருந்த கத்தோலிக்கு மக்களில் அநேகர் திகளர் அல்லது பள்ளிகள். இவர்கள் பிராமணரின் இனம் நிலங்களை உழுதுண்பவர்கள். மற்றும் சில கிறீஸ்துவர்கள் காகுந்தி (கொங்கொட்டி) தாசிரப்பள்ளி, தெங்கணிக்கோட்டை முதலிய பாளையங்களில் இருந்தனர். இவர்கள் தமிழ்—தெலுங்கு—கன்னடம் முதலிய மொழிகளாலான ஒரு அவியல் மொழி பேசினர் என்று அக்காலத்திலேயே குருமார்கள் குறிப்பிட்டிருந்தனர். இச்சமயத்தில் ஒசூருக்கு அருகாமையில் சில இடையர்கள் (கொள்ளர்) மனந்திரும்பினர். மொத்தம் ஆறு விசாரணைகள் இருந்தன என்று கணக்கிடப்பட்டிருந்தது. 1674 இல் மைசூர் மிஷனில் தமிழ் மக்களைக் கொண்டிருந்த பங்குகள் கோனூர், தர்மபுரி, கப்பிகனுத்தி முதலியனவாம். ஆனல் கன்னட மக்களைக் கொண்டுள்ள பங்குகள் நல்ல வளர்ச்சி பெறவில்லை. எனவே மைசூர் மிஷனின் வளர்ச்சி இந்தத் தமிழ்ப்பகுதியிலிருந்து பெரிதும் வந்தது என்பது நன்கு விளங்கும்.

மைசூர் மன்னன் 1669 இல் இறந்தபின் வைணவர்களுக்

கும் லிங்காயித்துக்களுக்கும் ஆதிக்கம் செலுத்துவதில் போட்டிகள் ஏற்பட்டன. இச்சமயத்தில் சங். சின்னமி சுவாமியார் ஸ்ரீரங்கபட்டினக் கோட்டையிலிருந்து அகற்றப்பட்டார். அவர் அக்கோட்டையின் கீழ் பாகத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் தங்கவேண்டியிருந்தது. கிறீஸ்துவ மதத்தைப் பிரஸ்தாபிக்கக் கூடாதென்றும், சோளப்பாடி, ஒசூர் தலைவர்களுக்கு கிறீஸ்துவர்களின் கோவில்களை அழிக்க உத்தரவு பிறந்துள்ளதென்றும் ஒரு வதந்தி இச்சமயத்தில் இருந்தது. தர்மபுரி மடாதிபதிகளான நல்லராயர், கூஷ்மராயர். பெண்ணேஸ்வர மடாதிபதி குட்டியேந்திரர், தெங்கணிக்கோட்டை மடாதிபதி மலைராஜா முதலியோர் மதமாற்றத்தை எதிர்த்தனர். தங்களுக்குச் சேரவேண்டிய வரிகளை கிறீஸ்துவர்கள் இனிமேல் கொடுக்கமாட்டார்கள் என்று அஞ்சி, தாங்கள் அரசரிடமிருந்து பெற்ற அதிகாரப்பட்டயங்களைக் காண்பித்து, கிறீஸ்துமக்களை அழைத்து, துன்புறுத்தி, சிறையிலிட்டு, வதை செய்து வழக்கம் போல் வரிசெலுத்தவேண்டும் என்று கர்ஜித்தனர். இடையர் இனத்தைச் சேர்ந்த சிலர் இக்கொடுமைக்கு அஞ்சி கிறீஸ்துவை மறுதலித்தனர். ஆனால் பொதுவாக வன்னியர் இனத்தைச் சேர்ந்தவர்கள் விசுவாசம் தளராமல் இந்த அநீதியை சிலர் எதிர்த்தனர்; சிலர் இடம் விட்டு இடம் பெயர்ந்தனர். **1676** இல் சிக்கதேவராயரின் தளவாய் மீண்டும் மதமாற்றம் செய்ய அனுமதி அளித்தார்.

மைசூர் மிஷனிலிருந்துவந்த குருமார்கள் முதல் முதல் கன்னட மொழி பேசும் மக்களுக்கென்று வந்தனர், தாலகாட் பகுதியிலுள்ள தமிழ்க் கிறீஸ்துவர்கள் கன்னட மொழி பேசும் குருமார்களைவிட்டு மதுரை மிஷனுக்குச் சொந்தமான அணைக்கரைப்பாளையத்திலுள்ள தமிழ் பேசும் சுவாமிமார்களிடம் பாஸ்குத் திருநாளுக்கென்று போய் வந்தனர். மைசூர் சேனையில் அநேக கிறீஸ்துவ வியாபாரிகளும், சிப்பாய்களும், ஆசாரிகளும் இருந்தனர். மேலும் தொட்ட ராஜா பிராமணர்களுக்கு அளித்த இனும் நிலங்களை கிறீஸ்துவர்களில் அநேகர் உழுதுவந்தனர். சங். சைமன் கோமஸ் தான் முதல்முதல் தர்மபுரியில் தமிழ்க் கிறீஸ்துவர்களை விசாரித்துவந்தார்.

ஸ்ரீரங்கபட்டினத்திலிருந்து கொல்லேகால் வழியாக தர்மபுரிக்கும் கீளமங்கலத்துக்கும் மலைகள், வயல்கள் பல கடந்துவரவேண்டியிருந்தமையால், மைசூரிலிருந்து வந்த குருக்கள் நோயுற்றனர். இதன் காரணமாகத்தான் சங். துவார்த்தே, சங். கொரேயா சுவாமிமார்கள் 1674 இல் மதுரை மிஷனுக்கு மாற்றிக் கொண்டனர். மேலும் சில மிஷனரிகள் உதாரணமாக, சங். செராபினியும் சங். சிமாவோமார்ட்டினும், மைசூருக்கு வந்து, உடனே கோவாவுக்குத் திரும்பி விட்டனர். அக்காலத்திலே இருவது வருடங்களுக்குமேல் மிஷனரி வாழ்க்கை நடத்திய குருக்கள் மிகச் சிலரே, சங். சின்னமி சுவாமியார் மலேரியா மிகுந்த ஸ்ரீரங்க பட்டினத்துக்கு மேற்கேயுள்ள கஞ்சத்தில் 1676 இல் இறந்தாரென்றும், கீர்த்திவாய்ந்த இத்தாலிய குடும்பத்திலுதித்த சங். ஸ்பினோலா சுவாமியார் கொல்லேகாலிலுள்ள சந்நியாசிமடத்தில் மலேரியாவால் பீடிக்கப்பட்டு 1670 இல் இறந்துபோனார் என்றும் முன்னமேயே கூறியுள்ளோம்.

1674 இல் எடுத்த கணக்குப்படி, அதாவது மைசூர் மிஷன் தோன்றி 25 ஆண்டுகள் ஆனபிறகு கப்பிகனுத்தியில் 300, தர்மபுரியில் 600, சம்பள்ளியில் 400, ஆக மொத்தம் 1300 கிறீஸ்துவர்கள் இருந்தனராகத் தெரிகிறது. இவர்களன்றி கொங்கணக் கரையிலிருந்துவந்த கிறீஸ்வர்களும் இருந்தனர்.

1669 இல் கெம்ப்ப தேவராயர் இறந்தார் என்றும், அவரும் தன் முன்னோரைப் போலவே சங். சின்னமி சுவாமியாருடன் நட்புறவோடிருந்தாரென்றும், அவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த தேவராய உடையார் கண் தெரியாமல் இரண்டு வருடங்கள் ஆண்டு மரித்தார் என்றும், இவர்காலத்தில் வைணவ குருக்களின் ஆதிக்கம் ஓங்கியது என்றும், அதன் காரணமாக சங். சின்னமி சுவாமியாரும், சங். முச்சியாரெல்லி சுவாமியாரும் ஸ்ரீரங்கபட்டினக் கோட்டையிலிருந்து துரத்தப்பட்டன ரென்றும், இதனால் சத்தியவேதம் தடை விதிக்கப்பட்ட மதம் என்ற ஒரு வதந்தி உலவிய தென்றும் பார்த்தோம். உண்மையிலேயே ஒரு வேத கலாபனை துவங்கியது. கப்பிகனுத்தியில் இருந்த சங். கொரெய்யா சுவாமியாரை நாடு கடத்த தலைநகரிலிருந்து ஒசூர் அரசப்பிரதிநிதிக்கு ஒரு உத்தரவு வந்தது. நீதிமன்

றத்திற்குச் சுவாமியார் சென்ற போது ஒரு செய்தி அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒசூர் அரசப்பிரதிநிதி சுவாமியாரிடம் முப்பது கிராமங்களுக்கு ஒரு மிட்டாதாராக இருக்கும்படி சொன்னான். ஆனால் சுவாமியார் தாம் சுவிசேஷத்தைப் போதிப்பதற்காக வந்ததாகச் சொல்லி அரசப்பிரதிநிதி அளித்ததை மறுத்துவிட்டார். சுவாமியாரை விடுதலை செய்யுமுன் அந்த அரசப்பிரதிநிதி சில இந்துக் குருக்களோடு மறுபிறப்பு, நான்கு சாதிகளின் தோற்றம் முதலியவற்றைப் பற்றி வேத தர்க்கம் புரிய ஏற்பாடு செய்தான். உலகில் நல்லவர்கள் துன்பத்தில் உழல்வதையும், தீயவர்கள் இன்ப வெள்ளத்தில் மிதப்பதையும் முன்பிறப்பின் வினைப்பயன் என்று கூறுவது, நேர்மை குன்றுக் கடவுளின் நீதியைச் சரியாக விளக்காத கூற்று என்றும், விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட இரண்டாவது அம்சமாகிய சாதிப்பிரிவினை மதப்பிரச்சினையல்ல, அது சமூகப்பிரச்சினை என்றும் தெள்ளத் தெளிய விளக்கம் செய்தார். வேதகலாபனையை எழுப்பிய அதே அரசப்பிரதிநிதி **1675** ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பாஸ்குத்திருநாளன்று தன்னுடைய இன்னிசை வாத்தியக்காரர்களை கத்தோலிக்குக் கோயிலுக்குமுன் வாத்தியம் முழக்க அனுப்பிவைத்தான்.

விசுவாசத்தை வேறறுக்க முனைந்த சவுல், விசுவாசத்தை வளர்த்த பவுலானதுபோல, தெங்கணிக்கோட்டையில் பணிபுரிந்து வந்த ஒரு இந்து, தன்னுடைய மைத்துணன் மெய்வேதத்தில் சேர மந்திரம் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, அவன் எப்படியாகிலும் கிறீஸ்துவேதத்தில் சேராமலிருக்க முயன்றான். தன்னுடைய முயற்சி வீணானதைக் கண்டு பில்லி சூனியத்தை அவன் மேல் விட்டான். இந்துக்களிடம் பிரமாதமாகப் பலிக்கும் தன்னுடைய பில்லி சூனியம், கிறீஸ்துவனாகப் போகும் தன் மைத்துணனிடம் மும்முறை உபயோகித்தும் பலியாததைக் கண்டு ஆச்சரியமடைந்து, கிறீஸ்து வேதமே மெய்வேத மென்று உணர்ந்து, அவனும் சேசுவின் சீடனானான்; இதுவுமல்லாமல் தன் இனத்தவரில் அநேகருக்கு மெய் ஒளி காட்டும் அப்போஸ்தலனுமானான்.

வன்னிய குலக்கிறீஸ்துவர்கள் தங்களுடைய வீடு, காணி குலம் இவைகளுக்கு மேலாக விசுவாசத்தை எப்பொழுதுமே மதித்து

அதில் தளர்ச்சியுருமலிருந்தனர். பாரூர் மருதேரியில் உள்ள முதலி குலத்தைச் சேர்ந்த கிறீஸ்துவர்களை இந்து குரு வதைத்தபோது, ஆண்மக்கள் அனைவரும் மலைகளுக்கு ஓடிவிட்டனர்; ஆனால் பெண் மக்கள் அத்தனை பேர்களும் வீர விசுவாசம் கொண்டு, மதத்தை மறுதலிப்பதற்குப் பதிலாக உயிரைவிடத் திடமனதுள்ளவர்களாய் இருந்தனர்.

## மைசூர் மிஷனின் நாசம்: 1682

1682-ஆம் ஆண்டில் மதுரை, தஞ்சை, சேதுபதி, மராத்தியர், மைசூர் முதலிய ஐந்து சைனியங்கள் திருச்சிராப்பள்ளியின் கோட்டை மதில்களைச்சுற்றி வளைந்துக்கொண்டன. மைசூர் சைனியம் கீர்த்திவாய்ந்த தளவாய் குமரையன் தலைமையில் நின்றது. குமரையன் உதவி அனுப்பும் பொருட்டு பல முறை விண்ணப்பித்தும், தலைநகரில் ஏற்பட்ட தகராறுகளின் காரணமாய், உதவி ஒன்றும் பெருதிருந்தார். எனவே தன் சைனியத்தைச் சிறு பிரிவுகளாகப் பிரித்து, இரகசியமாக மைசூருக்குத் திருப்பிவிடலாம் என்று திட்டம் செய்தார், ஆனால் இதைக் குறிப்பாலுணர்ந்த மராத்தியத் தளகர்த்தன் ஹார்ஜி மஹாதிக், முதலில் குமரையனின் காலாட் படைகளை நசுக்கி, பின்னர் அவருடைய குதிரைப்படையையும் சிதறடித்தான். பல ஆண்டுகளாக மைசூர் இத்தகைய படுதோல்வியை அடைந்ததே கிடையாது. குமரையனின் சேனை தவிடு பொடியாக்கப்பட்டபின் மராத்தியர்களுக்கு மைசூரைத் தாக்குவதற்கு வழி கிடைத்தது. இந் நிகழ்ச்சி 1682 ஆம் ஆண்டு பாஸ்குத்திருநாளுக்குமுன் நடந்தது. மதுரை நாயக்கனுக்கு உதவி அளிப்பதாக உறுதி கூறிவிட்டு, சில நாட்களில் மராத்திய குதிரை வீரர்கள் கசலாத்திக்கணவாயிலிருந்து சம்பள்ளிக்கு அணிவகுத்துச் சென்று மைசூர் எல்லைக்குள் வந்துவிட்டனர். பின்னர் தர்மபுரியும் மராத்தியரின் கையில் சிக்கியது. மேலும் ஒசூர் பக்கமாக வடதிசை நோக்கி மைசூரின் தலைநகரைப்பிடிக்க சாம்போஜியின் படைகள் சென்றன.

மராத்தியர்களின் தாக்குதல்களின் போது, அந்தியூர், சம்பள்ளி, தர்மபுரி, முதலிய ஊர்களிலுள்ள கிறீஸ்துவர்களில் அநேகர்

வெள்ளாண்டிவலசையில் நடைபெற்ற பாஸ்குத்திருநாளுக்கு வந்திருந்தனர். கோனூர், வெள்ளாண்டிவலசை முதலிய ஊர்களைத் தவிர, சம்பள்ளி. சோளப்பாடி, பெண்ணுகரம், தர்மபுரி, மாரண்டவள்ளி, கப்பிகனுத்தி முதலிய ஊர்களிலுள்ள கோவில்கள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. குருக்கள் அனைவரும் மலைகளுக்கு ஓடி, பின்னர் எல்லோரும் கொல்லேகாலிலுள்ள பாசனபுரத்தை அடைந்தனர், கிறீஸ்துவர்களிலும் அநேகர் மலைகளுக்கு ஓடினர்; சிலர் வெகு தூரம் ஓடிச் சென்று தப்பினர். அநேக கிறீஸ்துவக் குடும்பங்கள் அர்ச். அருளானந்தர் ஏற்படுத்திய கூத்தூர், ஐயம்பள்ளி (வரதராசன்பேட்டை) முதலிய புதிய பகுதிகளில் குடிபுகுந்தன. தர்மபுரி திரு வன்னியர், நீலகிரியான், பொம்பரப்பி, கொங்குநாட்டான், கொம்படிப்பட்டியான், சேலத்தான், இவைபோன்ற பெயர்களுள்ள குடும்பங்கள் இற்றைக்கும் அப்பகுதிகளில் இருப்பதிலிருந்து, சேலத்திலிருந்து கிறீஸ்துவர்கள் அப்பதிகளுக்குச் சென்றனர் என்பது உறுதிப்படுகிறது, வேறு சில கிறீஸ்துவர்கள் தென் ஆர்க்காட்டிலுள்ள கோர்த்தாம்பேட்டை அல்லது அத்திப்பாக்கத்திற்குச் சென்றனர்.

ஏறக்குறைய **1684** இல் மொகலாயர்களின் தாக்குதல்கள் அதிகப்பட வடபாகத்திற்கு மராத்தியர்கள் வந்தனர். கொங்குநாடு, தர்மபுரி, பாலகாட் முதலிய பகுதிகளை மைசூரியர்கள் மீண்டும் ஆக்கிரமித்துக்கொண்டு, அவற்றைப் பலப்படுத்திவந்தனர். இப்பகுதிகளில் வரிகள் உயர்த்தப்பட்டன. மத குருக்களின் தூண்டுதலின் பேரில் உழவர்கள் புரட்சி செய்தனர். கொங்கு நாட்டில் மைசூர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். **30,000** கலகக்காரர்கள் ஸ்ரீரங்கபட்டினத்தின் வாயிலில் முகாமிட்டு ஆரவாரம் செய்தனர். ஆனால் அவர்கள் உடனடியாக மிகக் கடுமையுடன் நசுக்கப்பட்டனர். பின்னர் இந்த ஆரவாரக்காரர்கள் தங்கள் கோபத்தைக் கிறீஸ்துவர்கள் மேல் திருப்பினர். மதுரை மிஷனைச் சேர்ந்த இரு குருமார்கள் கருமத்தாம்பட்டியில் தங்கள் விசுவாசிகளுடன் இக்கலக்காரர்களோடு இரண்டு வாரங்கள் போராடவேண்டியிருந்தது. இறுதியில் சத்தியமங்கலத்திலிருந்து அனுப்பப்பட்ட குதிரை வீரர்கள் அவர்களைக் காப்பாற்றினர். தர்மபுரி, பெண்ணுகரம், நல்லம்பள்ளியரு

கில் உள்ள வெள்ளையன்கவுண்டன்பட்டி முதலிய இடங்களில் மராத்தியர்களால் பாழ்படுத்தப்பட்ட கோவில்களைக் கிறீஸ்துவர்கள் பழுதுபார்த்தனர். அவற்றுள் வெள்ளையன் கவுண்டப்பட்டிலிருந்த கோவிலைத் தவிர மற்றவை எல்லாம் இந்தக் கலகக்காரர்களால் மீண்டும் நாசமடைந்தன.

## மூன்றும் அத்தியாயம்.

## சேலம் முழுவதற்கும் மைசூர் மிஷன்.

1687 இல் குருக்கள் தொகையும், பொருளுதவியும் போதாததாலும், சேலம் மதுரை நாயக்கனிடமிருந்து மைசூர் ராயனின் ஆட்சிக்குள் வந்ததினாலும், கொங்கு நாட்டிலிருந்த வெள்ளாண்டி வலசை, கருமத்தாம்பட்டி, காக்காவேரி முதலிய விசாரணைகளை மதுரை சேசுசபையார் மைசூர் மிஷனுக்குக் கொடுத்துவிட்டனர், **1690** இல் மூன்று பங்குகள் மட்டும் மைசூர் மிஷனில் இருந்தன; அவற்றை ஏழே குருக்க்ள் விசாரணை செய்தனர். தர்மபுரி, கப்பிகனுத்தி போன்ற வேறு சில பங்குகள் கிடையாது.

### காக்காவேரிப் பங்கு

சேர்வைக்காரன்பட்டியிலிருந்த கிறீஸ்துவர்கள் மதுரையின் எல்லையில், மைசூர் சைனியம் வரும் வழியில் இருந்தனர். **1686-87** க்குப் பிறகு சில வேளாளக் கிறீஸ்துவர்கள் காக்காவேரியில் குடிபுக ஆரம்பித்தனர். அணைக்கரைப் பாளையத்திற்குப் (வெள்ளாண்டி வலசை) பதிலாக காக்காவேரி சங். மனுவேல் டிசூசா சுவாமியாரின் உறைவிடமாக மாறியது. அவர் காக்காவேரியில் ஒரு கோவில் கட்டத் துவக்கின போது இந்துக்கள் அவரைத் தடுத்தனர். தொட்டியத்தின் அருகில் இருந்துவந்த இக் கிறீஸ்துவர்களால் தான் மழையின்றிப் பஞ்சம் தோன்றியது என்று அவர்கள் கருதினர்கள், அப்

பகுதியின் அரசப்பிரதிநிதியான ஒரு முஸ்லீம் இந்துக்கள் சார்பில் இருந்துகொண்டு கோவில் கட்டுவதற்குத் தடை செய்தார். மழை யின்மை தான் இதற்கெல்லாம் காரணமென்றறிந்த குருவானவரும் அவருடைய கிறீஸ்துவர்களும் தேவதாய்க்கு ஒரு நவநாள் வைத்து மழைக்காக வேண்டிக்கொண்டனர், நல்ல மழையும் பெய்தது; அரசப்பிரதிநிதி கோவில் கட்ட உத்தரவும் தந்தார். கோவில் உத்த ரிய மாதாவின் பேரால் கட்டப்பட்டது.

இப்பகுதியிலுள்ள இரண்டு கோவில்கள் (செட்டியப்பட்டி, கோனூர்) ஒரு பாளையத்தாரால் பூட்டப்பட்டு, முத்திரை வைக்கப் பட்டன. அவனுடைய முன்னிலையில் ஒரு உபதேசியாருக்கும் ஒரு இந்து குருவுக்குமிடையே சத்திய வேதத்தைப்பற்றித் தர்க்கம் நடந் தது. அதில் வெற்றி சத்தியவேதத்திற்கே கிடைத்தது. அதற்குப் பின் அப்பாளையத்தார் கோயில்களை மீண்டும் திறக்க உத்தரவிட் டார்.

மைசூர் இராச்சியத்தில் கொள்ளர் (கோனூர்) இனம் மிகப் பெரிய குலமாகக் கருதப்பட்டு வந்தது. ஸ்ரீரங்கபட்டினத்தில் அவர் கள் மெய்க்காப்பாளர்களாகவும், அரசரின் ஆலோசகர்களாகவும், கஜானு அதிகாரிகளாகவும் விளங்கினர். கீர்த்திவாய்ந்த திவான் திருமலை அய்யங்கார் காலத்தில் இதுகாறும் தண்டப்படாமல் விட்டு வைத்து வரிகள் எல்லாம், குறிப்பாக ஒவ்வொரு குடும்பமும் கோயி லுக்கு (பகோடாவுக்கு) செலுத்தவேண்டிய பணம் மீண்டும் வசூ லிக்கப்பட்டன. ஆனால் இச்சமயத்தில் கொள்ளர்களில் சிலர் திருச் சபையில் சேர்ந்து இந்துக் கோவில்களுக்கு வரி கொடுக்க மறுத்த னர், கொள்ளர்களின் இந்துத் தலைவர்கள் இதை அறிந்து, சினம் பொங்கி, சிறிய அளவில் கலாபனை செய்தனர், **1690** இல் கொள் ளர்கள் கிறீஸ்துவ மிஷனரிமார்களை நாடுகடத்த உத்தரவு பெற்ற னர். சம்பள்ளியில் சங். லூக்காஸ் மெனெசஸ் சுவாமியாரையும், சங். அல்வாரோ ரொட்ரிகஸ் சுவாமியாரையும் சிறைப்படுத்தினர். சம் பள்ளி கோவிலை சூரையாடினர்; தேவதாயின் திரு உருவப்படத் தைக் கிழித் தெறிந்தனர். சில வீரர்கள் சங். ரொட்ரிகஸ் சுவாமி யாரை எல்லைப் புறத்துக்கு இழுத்துவந்தனர். சங். லூக்காஸ் சுவாமி

யார் சிப்பாய்களிடமிருந்து தப்பி, காடுகளில் பல மாதங்கள் தங்கி இருந்தார். சங். எம்மானுவேல் டிசூசா சுவாமியார் இரவுகாலங்களில் எல்லையைக் கடந்துவந்து கிறீஸ்துவர்களைக் கவனித்துவந்தார்.

சில வருடங்களுக்குப்பின், ஓயாது சண்டைகள் புரிந்துவந்த சிக்க தேவராயர் வரி வாங்கும் விஷயத்தில் மிகக் கண்டிப்பாக இருந்தார், இந்துக் கோவில்களுக்குச் செலுத்தப்பட்டு வந்த வரிப் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு அரச கஜானாவைச் சேர்ந்தது. ஆனால் ஆட்தொகையில் பெருகிக்கொண்டு போகும் கிறீஸ்துவர்கள் பகோடாவுக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தாததினால் அரசருடைய நிதிக்குப்பெருத்த நஷ்டம் விளைந்தது என்று ஒரு புகார் சத்தியமங்கலம் கோட்டையிலிருந்து மைசூருக்கு எட்டியது. இந்த வதந்தியைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளர்களும் தாசிகளும் கொங்கு நாட்டில் இருந்த குருக்களையும் விசுவாசிகளையும் நசுக்குவதற்கு அரசர் ஆணை பெற்றனர். சங். அந்தோணி பாய்வா, சங். மனுவேல் டிசூசா, ஜான் ரொட்ரிகஸ், சங். லூக்காஸ் மெனெசஸ், முதலிய நான்கு குருக்களையும் சில உபதேசிமார்களையும், வேதம் போதித்த காரணத்திற்காக சிறைப்படுத்தி, முதலில் இந்துக் கோயில்களில் அடைத்து, பின்னர் சத்தியமங்கலம் கோட்டைக்கு இழுத்துச் சென்றனர். அங்கே உபதேசிமார்களை நையப்புடைத்து, குருமார்களிடம் பணம் உண்டா என்று துருவிப்பார்த்து, பின் அவர்களைத் தலை நகருக்குக் கொண்டுவந்து சிறைவைத்தனர். அவர்களோடு அர்சினக்கேரையில் பிடிக்கப்பட்ட சங். ஹென்ரிக்கஸ், சங். மைக்கிள் அவல்லோஸ் குருமார்களும் சிறையிலடைக்கப்பட்டனர். பதின் மூன்று மாதங்களுக்குப்பிறகு **1699** ஆம் ஆண்டு ஜூலை மாதம் **31** ஆம் தேதி அர்ச். இஞ்ஞாசியர் திருநாளன்று அவர்கள் அனைவரையும் அரசப்பிரதிநிதி விடுதலை செய்தார், சங். பாய்வாசுவாமியார் கார்ட்டிக்கும் (கருமத்தாம்பட்டி), சங். லூக்காஸ் மெனெசஸ் எல்லமங்களத்திற்கும், சங். ஜான்ரொட்ரிகஸ் கணைவாய்க் கரைக்கும், சங். மனுவேல் டிசூசா காக்காவேரிக்கும், பூதப்பாடிக்கும் (சிங்கம்பட்டி) வந்தனர். சங். மனுவேல் டிசூசா, தான் சிறையிலிருந்து விடுதலை அடைந்ததற்கு நன்றி செலுத்த, தேவமாத மோட்சத்துக்கு ஆரோபணமான திருநாளை அநேகமாக வெள்

ளாண்டிவலசையில் மிக விமரிசையாகக் கொண்டாடினர். அத்திரு நாளை முன்னிட்டு சில நாட்களுக்குள் 3,000 பாவசங்கீர்த்தனம் கொடுத்தார். இதிலிருந்து சேலம், தர்மபுரி, அந்தியூர் முதலிய பகுதிகளில் குறைந்தது 4,800 கிறீஸ்துவர்கள் இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

பதினெட்டு வருடங்களாக கப்பிகனுத்தியைப்பற்றிச் சரித்திரம் ஒன்றும் கூறவில்லை. ஆனல் 1700இல் சில கடிதங்களின் வாயிலாக கப்பிகனுத்தியைப்பற்றி சில குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. மராத்திய, மொகலாயப் படையெடுப்புகளின் போது, குருவானவரின் விடுதி பாழ்படுத்தப்பட்டது. கிறீஸ்துவர்கள் ஊரைவிட்டுச் சிதறி ஓடிவிட்டனர். ஆனேக்கல் புதிய இருப்பிடமானது.

1700ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சங். மனுவேல் டி சூசா எழுதிய கடிதத்தில் இருந்து காக்காவேரியைக் கண்காணித்து வந்த குருவானவர் பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் அப்பகுதியை விசாரித்துவந்தார் என்று தெரிகிறது. 1682இல் மராத்தியர்கள் தர்மபுரியிலிருந்த கோவிலையும் குருவானவர் விடுதியையும் இடித்து ஏலங்கூறி விற்றனர். அதே கடிதம் கடகத்தூர் கோட்டைத்தலைவன் சின்னப்ப நாயக்கன் அல்லது சின்னப்ப கவுண்டன் என்ற ஒரு வீரக் கிறீஸ்துவனைப்பற்றி ஒரு ருசிகரமான நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. சின்னப்ப நாயக்கனின் வீரம் மைசூர் அரசன் வரை எட்டியது. அவனுடைய வீரத்தைக் கண்டு அநேகர் பொருமைப்பட்டனர். சின்னப்ப நாயக்கன் வீராதி வீரன் மட்டுமல்ல; அவன் ஒரு உத்தம கத்தோலிக்கன். சின்னப்ப நாயக்கனுடைய மிகப்பெரிய பகைவனுக்கு பசாசினல் பிடிக்கப்பட்ட ஒரு பையன் இருந்தான். அவனுடைய வேண்டுகோட்கிணங்கி, பிறர் சிநேகத்தினிமித்தம், அந்தப் பையனுடைய பேயை செபம் செய்து விரட்ட ஒப்புக்கொண்டான். சத்திய வேதக்காரர்களின் பிரார்த்தனைகளுக்கு பசாசு கட்டுப்படும் என்று இந்துக்கள் அனுபவ வாயிலாக அறிந்திருந்தார்கள். ஆனல் சின்னப்ப நாயக்கனின் மன்ருட்டு அவனுடைய பகைவனின் வீட்டில் இருக்கும்வரை 'சக்தி பெற்றிருந்தது. அந்த வீட்டை விட்டு அவன் வந்த உடனே பையன்

மீண்டும் பசாசின் வயப்பட்டு ஆர்பாட்டம் செய்தான். கிறீஸ்துவன் ஒருவன் இந்துப் பெரியார் வீட்டில் பேய் ஓட்டுகின்ற செய்தி எங்கும் பரவியது. இதைப் பெண்ணுகரத்தில் இருந்த இந்துக்கள் எதிர்த் தனர். இதைப் பொருட்படுத்தாமல் அந்த இந்து மதத்தினன் தன் னுடைய மகனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அனுமதி அளித்தான். ஆனல் ஞானஸ்நானம் பெற்ற பையன் இறந்துபோனுன். உடனே பையனுடைய தகப்பனும் அநேகமாக நீர்குண்டியிலிருந்த இந்துக் களும் கிறீஸ்தவர்களைத் தாக்கி, சிலருடைய வீடுகளைச் சூரையாடி கோவிற் பொருட்களையும், பங்கு சுவாமியாரின் சொத்தையும் கொள்ளையிட்டனர். சின்னப்ப நாயக்கன் (சட்டப்பிரகாரம் தண் டிக்கக்கூடிய) மாய வித்தைக்காரன் என்று அவனைப் பிடித்து, விலங் கிட்டு, உபதேசியாரையும் சில கிறீஸ்துவர்களையும் பிடித்து ஹாச னூர் நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றனர். அங்கே அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற சத்தியவேதத்தை மறுதலிக்கச் சொல் லியும் அவ்வாறு செய்யாததனுல் ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு அழைத் துச் சென்று அவர்களை அரசர் முன்னிலையில் நிறுத்தினர். தன் முன் நிற்பவர்கள் போர்த்துக்கீசிய ஒற்றர்கள் அல்லர், தன்னுடைய குடிமக்கள் என்று அறிந்து, அவர்கள்மேல் குற்றஞ் சாட்டிய வர்களைக் கடிந்து கிறீஸ்துவர்களை விடுதலை செய்தார்.

## கோவிலூர் (தர்மபுரி) பங்கு.

**1700—1702**க்குப்பின் மைசூர் மிஷன் சிரேஷ்டர் சங். பிரான்சிஸ்கோ தோஸ் ரேஸ் தர்மபுரி பகுதியில் கிறீஸ்துவர்களின் தொகை அதிகரிப்பதை உணர்ந்து, குருவானவர் தங்க ஒரு உறை விடம் கட்டத் திட்டமிட்டார். ஆனல் தர்மபுரி கோட்டையில் ஒரு அறைவீடு கட்ட அப்போதிருந்த சூழ்நிலை அதற்கு இடந்தரவில்லை. எனவே மராத்திய படையெடுப்புக்குப் பின் கிறீஸ்துவர்களாலேயே கட்டப்பட்ட, கலகக்காரர்களின் கையில் நாசமுற்ற வெள்ளைக் கவுண்டன்பட்டி அல்லது வெள்ளையன்பேட்டை அல்லது பெல்லப் பன் கவுண்டன்பட்டி என்ற கிராமத்தை அவர் தெரிந்துகொண்டார். அதிலிருந்து அக்கிராமம் கோவிலூர் என்று வழங்கப்பட்டது. அதன் பின் சேலமிஷனில் அதுவே மையமாக ஏறக்குறைய **1720** ஆம்

ஆண்டு வரை இருந்தது. 1705இல் சங். மோதுயி சுவாமியார் கர்னடக மிஷனிலிருந்து வந்து, கோவிலூரிலுள்ள சிரேஷ்ட சுவாமியாரைக் கண்டு, இரண்டு மிஷன்களுக்கும் உள்ள எல்லைகளை நிர்ணயிப்பதற்கு வந்தார்.

வெள்ளைகவுண்டன்பட்டியில் அப்பொழுது கோவிலும் குருவானவர் விடுதியும் இருந்த இடம் இப்பொழுது கோவில் இருக்கும் இடத்திலிருந்து தென் கிழக்கில் அரைமைல் தூரத்தில் இருந்தது. இப்பொழுது இருக்கும் பாதையும், அப்பொழுது இருந்ததில்லை. ஆனால் நல்லம்பள்ளியிலிருந்து நெளியம் மார்க்கமாக பழைய கொட்டம்பட்டி வழியாக ஒரு குறுக்கு வழி இருந்தது. வெள்ளைகவுண்டன்பட்டி இருந்த இடத்தில் இப்பொழுதும் ஒரு கிணறு இருக்கிறது.

### வேதசாட்சியான சங். எம்மானுவேல் தா குஞ்ஞா.

"வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து", என்று தெர்த்துலியன் சொன்ன தீர்க்கதரிசனத்தை வரலாறு, ரோமையில் மட்டுமல்ல, சத்தியமறை பரவிய இடங்களிலெல்லாம் மெய்ப்பித்து விட்டது. நமது சேலமேற்றிராசன சரித்திரமும் இக்கூற்றின் உண்மைக்கு மாறுபட்டதன்று. கிறீஸ்துநாதருக்காக சேலமண்ணிலே குருதி சொட்டியவர்கள் பலர் உளர். அவர்களில் ஒருவர் சங். எம்மானுவேல் தா குஞ்ஞா.

சங். எம்மானுவேல் தா குஞ்ஞா கப்பிகனுத்திப் பங்கை 1708 இல் ஏற்று திறம்பட விசாரணை செய்து வந்தார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தைந்து. அவர் அநேகமாக கஞ்சம் என்ற ஊரில் இரண்டு ஆண்டுகள் உழைத்தார். கிறீஸ்துவர்களுக்கு எதிராக அநேக இன்னல்கள் இழைக்கப்பட்ட அக்காலத்தில் தன்னுடைய மந்தையில் பெரும்பான்மையோரான வன்னிய குல (பள்ளி) கிறீஸ்துவர்களை மிக்க வீரத்தோடு விசாரணை செய்து வந்தார்.

1710 இல் மொகலாயர்கள் காகுந்தி எல்லையைத் தாக்கின போது அவர்கள் கிறீஸ்துவர்களின் பழைய கோவில் ஒன்றைத் தீக்கு இரையாக்கினர். தன்னுடைய புதுக் கிறீஸ்துவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போனதால், அவர்களுக்கு

ஒரு புதிய கோவிலைச் சற்று பெரிய அளவில் கட்டிமுடிக்கத் திட்டமிட்டார், அவர் காகுந்தியின் தளவாயிடம் நட்புறவோடு இருந்ததனல் கோவில் கட்டுவதற்கு அவருடைய அனுமதியை வெகு எளிதில் பெற்றார். ஊருக்கு வெளியே ஒரு இடத்தைத் தெரிந்துகொண்டு அங்கே ஆலய அமைப்புப் பணியை வெகு மும்முரமாகக் கவனித்து வந்தார். இரவு காலத்தில் அப்புதுக்கட்டிடத்தினருகில் ஒரு மரத்தடியிலிருந்த குடிசையில் தங்கினார். ஆனல் அக்காலத்தில் பகைவர்கள் திடீரென்று படையடுப்பது வழக்கமாகையால், சுவாமியார் ஊருக்கு வெளியே, அரண்களுக்குப் புறம்பே இருத்தல் மிகவும் ஆபத்தானது என்று மக்கள் கூறியும், அதைப் பொருட்படுத்தாமல் அதனுடைய வேலையிலேயே கருத்தூன்றியிருந்தார்.

சங். குஞ்ஞா சுவாமியார் கோவில் கட்டிக்கொண்டிருக்கும் பொழுது இந்துக்களில் அநேகர் அவரிடம் வேத விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வந்தனர். சிலர் உண்மையைக் கண்டறிந்து ஞான தீட்சை பெற நல்ல எண்ணங் கொண்டனர். ஆனல் பெரும்பான்மையோர் வேத தர்க்கம் நிகழ்த்துவதற்காகவே வந்தனர்.

காகுந்தி மடகுருவின் சீடர்களான தாசிரிகள் சங். குஞ்ஞா சுவாமியாரோடு வேத தர்க்கம் செய்தபோது, அவர், "கடவுள் ஒருவர்; அவர் உடல் முதலிய ஜடப்பொருட்கள் அற்றவர்," என்ற கடவுள் இலட்சணங்களைத் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி, முழுமுதற் கடவுளைப்பற்றித் தாசிரிகள் கொண்ட கருத்து முற்றிலும் தவருனது என்று விளக்கினர். சைவர்கள் (அல்லது வைணவர்கள்) கத்தோலிக்குக் குருவானவருடைய கருத்து சரியானது என்று அவர் சார்பாகப் பேசினர். தோல்வி அடைந்த தாசிரிகள் சுவாமியாரைப் பழி வாங்க எண்ணினர். தாசிரிகளின் உள்ளக் கொதிப்பை அறிந்த இவர்கள் சுவாமியாரை முன் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், இரவில் ஊருக்குள் தீக்கிரையர்ன கோவிலிலே தூங்குமாறும் ஆலோசனை கூறினர். ஆனல் இவர்கள் கூறின ஆலோசனைகளையும் பொருட்படுத்தாமல், தன்னுடன் நட்புறவோடு இருந்த தளவாயின் பாதுகாப்பில் நம்பிக்கைவைத்து முன் போலவே ஊருக்கு வெளியே இருந்தார்.

பல எதிர்ப்புக்களிடையே கோவில் கட்டி முடிக்கப்பட்டது. மேமாதம் ஒன்பதாம் நாள், கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகண மான திருநாளில் சங். குஞ்ஞா சுவாமியார் புதியகோவிலே மந்திரித்து, அதிலே முதற் பூசை செய்தார்; ஆனல் அதுவே அவர் செய்தக் கடைசிப் பூசை. அவர் பூசை செய்துகொண்டிருக்கும் போது நாத சுரம், சிங்கி, சேமண்டி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு, தங்கள் கோவிற் கொடிகளை விரித்துக்கொண்டு பெருத்த ஆரவாரம் செய்து நாற்பது தாசிரிகள் இப்புதுக்கோவிலே நோக்கி வந்துகொண்டிருந்தனர். பேரோசையைக் கேட்ட கிராம அதிகாரி (பட்டேல்) கலவரம் ஏற்படுமென்று அஞ்சி, கோவிலிலிருந்த ஒரு கிறீஸ்துவனே அழைத்து, தளவாயிடம் ஆலோசனே கேட்கவும், கலவரத்தை அடக்க உதவி பெற்றுவரவும் அனுப்பினன்.

பூசை செய்துகொண்டிருந்த சுவாமியார் கிறீஸ்துவன் ஒருவன் மூலமாகவும், வரவர ஓசை கோவில் பக்கமாக அதிகரித்துக் கொண்டுவருவதிலிருந்தும், வரப்போகிற ஆபத்தை உணர்ந்தவராய் பூசையை முடித்துக்கொண்டு, விசுவாசிகளே அமைதியாகவும், கிறீஸ்துநாதருக்காகத் துன்பப்படுவதற்குத் தயாராக இருக்கவும், அறிவூட்டினர். அதற்குள் பேரிரைச்சலுடன் தாசிரிகள் கோவிலே நெருங்கி, உள்ளிருக்கும் எவரும் தப்பிப்போகாவண்ணம் பெரிய கதவருகே அணிவகுத்து நின்றனர். ஆனல் குருவானவர் இவர்கள் சூழ்ச்சி செய்வதற்கு முன்பே தன்னுடைய மந்தையைத் தனியே விட்டுத்தான் மட்டும் தனித்து ஓடிவிடக்கூடாது என்று திடமாகத் தீர்மானித்துவிட்டார்.

அந்த ஆரவாரக்காரர்களின் தலைவன், ஒரு பிராமணன், திடீரென்று தன்னுடைய சகாக்களுடன் பலிபீடத்திற்கு ஓடிவந்து தடியால் சுவாமியாருக்கு முதல் அடி கொடுத்தான். உடனே மற்றவர்கள் அவனேப்பின்பற்றி சற்குருவை மூங்கில் தடிகளால் சரமாரியாக அடித்துத்தள்ளினர். அவர்களில் ஒருவன் சுவாமியாருடைய வலது கையை வாளால் வெட்டினன். சில விநாடிகளில் இருநூறுக்கு மேற்பட்ட அடிகள் அவர்மேல் விழுந்தன. கோவிலிலிருந்த கிறீஸ்துவ ஆடவர்கள் ஆயுதந்தாங்கிய ஆரவாரக்காரர்களிடமிருந்து

தங்கள் பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்றுவதைத் தவிர, சுவாமியாருக்கு எந்த உதவியும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர். ஒரு பிராமணன் கோபாவேசம் கொண்டவர்களைத் தடுத்திராமலிருந்திருந்தால் அவர்கள் சுவாமியாரைப் பீடத்தடியிலேயே கொன்றுவிட்டிருந்திருப்பார்கள். பின்னர் தாசிரிகள் தங்கள் மத குருவிடம் குருவானவரைக்கொண்டு செல்ல கோவிலிலிருந்து அவரைப் பிடித்து இழுத்து, வீதி வழியே தொண்டை தடிக்கக் கத்திச் சென்றபோது, மற்ற இந்துக்கள் அவர்கள் அநியாயச் செயல் புரிவதை விட்டொழிக்க மண்டியிட்டு மன்றாடினர். நெஞ்சினிலே ஈரமில்லாக் கயவர்கள் அவர்களுடைய கதறலுக்குக் காதுகொடுக்கவில்லை. அக்காலத்தில் மத விடயங்களில் மதகுரு நீதிபதியாக இருந்து விசாரணை நடத்த அரசரின் அனுமதி பெற்றிருந்தார்.

தாசிரிகளின் குரு புலித்தோலின் மீது கோர உருவாய் வீற்றிருந்து சங். குஞ்ஞாசுவாமியாரை உறுமலுடன் வரவேற்று, அவரின் பெயர், குலம், நாடு, மொழி முதலியவற்றைப் பற்றிக் குறுக்கு விசாரணை நடத்தினர். இரத்தம்தோய்ந்த உடலோடு நிற்கச் சக்தியற்றவராய் உபதேசியாரின்மேல் சாய்ந்து தள்ளாடிக்கொண்டிருந்த குருவானவர் அவற்றிற்கு மறுமொழி பகராமல் மௌனமாயிருந்தார். சுவாமியாருக்குப் பதிலாக உபதேசியார் அவர் ஒரு க்ஷத்திரியர் என்று கூறினர். சுவாமியாருடைய மதத்தைப்பற்றிக் கேட்ட போது உபதேசியார் அவருடைய கடவுள் எல்லாப் பொருட்களையும் படைத்த, பூரண சக்திவாய்ந்த சர்வேசுரன் என்றார். மறுமுறையும் சர்வேசுரன் என்றால் என்ன என்று மதகுரு கேட்டபோது, சங். குஞ்ஞாசுவாமியார், "அவர் தாமாயிருக்கிறார்; அவர் அநாதியாயிருக்கிறார்; அவர் சரீரமில்லாமல் இருக்கிறார்...." என்று சொல்லும் போது, அந்த இந்து மதகுரு வெறுப்பு வெடிக்கச் சிரித்து, "ஆமாம்; அந்த அசரீரியான உன்னுடைய கடவுளிடம் உன்னை அனுப்பிவிடுகிறேன்." என்றார். குற்றுயிராயிருந்த குருவானவர் தான் கூறின இறைவனது இயல்புக் குணங்களைத் தெளிவாக விளக்கிக்காட்ட முடியும் என்று வீர கர்ஜனை செய்தார். இவ்விடத்திலே வேத தர்க்கத்திற்கு இடங்கொடுத்தால் தோல்வி நிச்சயம் தன்பக்கம் இருக்கும் என்று அறிந்து தந்திரம் நிறைந்த தாசிரிகளின் குரு நம் வீரத்திலகத்தைச் சூழ்ச்சியால் வெல்ல

நினைத்து, "திருப்பதி பரமாத்மா முழுமுதற் கடவுளா?" என்று கேட்டான். "இல்லை," என்ற அழுத்தமான பதிலைக்கேட்டதும், இடி கேட்ட நாகம் போல் சீறினன். அருகிலிருந்த கிராம அதிகாரியை விஷ்ணுவுக்கு எதிராக சுவாமியார் கூறிய நிந்தைக்குச் சாட்சியாக எடுத்துக்கொண்டான். குருவானவரை அந்த இடத்திலேயே கண்ட துண்டமாய் வெட்டிவிடப் போவதாக அலறினன்; அச்சுறுத்தினன். இதைக்கேட்டு சுவாமியார் நடுங்கவில்லை; அதற்கு மாருகத்தான் ஒரு வேத சாட்சியாகப் போவதை நினைத்துப் பெருமகிழ்ச்சியுற்றவராய் இன்முகத்துடன் இருந்தார். ஆனல் எக்காலத்திலும் எந்த மத குருவுக்கும் மரணதண்டனையிட அதிகாரம் கிடையாது. இதை தாசிரிகள் தங்கள் மத குருவுக்கு ஞாபகமூட்டினர்.

இவ்வேளையில் வன்னியர் குலத்தைச் சேர்ந்த ஒரு புதுக் கிறீஸ்துவன் தானும் சத்தியவேதத்தைத் தழுவியவன் என்றும், தன்னுடைய சகோதரனும் இந்துமதத்தைவிட்டு சில நாட்களுக்குள் கிறீஸ்துவின் சீடனுவான் என்றும் ஒளிவு மறைவு இன்றி வீர முழக்கம் செய்தான். இதற்குப்பின் வன்னியகுல பழைய கிறீஸ்துவர் இருவர் குருவானவரின் கால்களில் விழுந்து, தாங்களும் விசுவாசத்துக்காக இன்னல்பட ஆயத்தமாக இருப்பதை அற்பப் பயமின்றி எடுத்துக் கூறினர். ஆனல் அவ்விருவரும் அடிக்கப்பட்டு வெளியே தள்ளப் பட்டனர். விசுவாச உறுதியில் சற்றும் தளர்ச்சியுருத உபதேசியாரின் வீர நெஞ்சத்தை ஒரு வாள் பதம் பார்த்தது.

நீதி மன்றம் இரத்தக்களரியானதைக்கண்டு பிராமணர்களும் மற்ற இந்துக்களும் உள்ளங்கசிந்தனர். இதைக் குறிப்பாலுணர்ந்த தாசிரிகளின் குரு தன்னுடைய கோப வெறியை மறைத்துக்கொண்டு "நீ இங்கே இருப்பாயாஞல், என்னுடைய சீடர்களில் அநேகரை மத மாற்றம் செய்வாய்; அதனல் எனக்குச் சேரவேண்டிய வரிப்பணம் சேராது ; என் பிழைப்பு கெட்டுவிடும்," என்று சொல்லி, "நீ இக் கணத்திலிருந்தே இப்பாளையத்தின் எல்லைக்குள் இருக்கக்கூடாது," என்று கட்டளை இட்டார். குற்றுயிராகவிடப்பட்ட குருவானவரின் காயங்களுக்குச் சிகிச்சை செய்ய பாளையத்தில் ஓர் இரவுமட்டுமாவது குருவானவரைத் தங்கவைக்க உத்தரவு அளிக்கவேண்டும் என்று

உபதேசியார் தாசிரிகளின் குருவிடம் கெஞ்சினர்; கதறினர். ஆனல் அதற்கு அனுமதி ஈவு இரக்கமின்றி மறுக்கப்பட்டது. அதற்கு மாருக உடனே சுவாமியாரைப் பாளையத்தைவிட்டுத் துரத்தும்படி இரு சேவகருக்குக் கட்டளையிட்டார். கண்ணீரும் கம்பலையுமாக நின்ற தன் ஞான மக்களுக்கு இறுதி ஆசீர் அளித்து, தான் கட்டி முடித்த கோவிலை கடைசி முறையாக ஏறெடுத்துப் பார்த்து, கால் நடையாக அப்பாளையத்தைவிட்டுப் புறப்பட்டார்.

மாலை வேளையிலே மடாதிபதியின் நீதி மன்றத்தைவிட்டு இரு சேவகர் இடையே மெதுவாகத்தள்ளாடி நடந்தார். இருள் கவ்வியதும் ஒரு கிறீஸ்துவனுடைய இல்லத்தில் தங்கினர். அவ்வி ரவில் அவர் அனுபவித்த வேதனை சொல்லுந்தரமன்று. உடல் முழு வதும் சகிக்க முடியாதவலி கண்டது. முக்கியமாக தாசிரிகள் தன்னைத் தடிகள் கொண்டு தாக்கியபோது தலையில் அடி விழா வண்ணம் தாங்கிக்கொண்ட அவரது வலக்கரம் அசைவுத்தன்மை அற்று இருந்தது. காலையில் நால்வர் அவரைக் கட்டிலில் கிடத்தி கப்பிகணத்திக்குத் தூக்கிச் சென்றனர்.

கோவிலூரைத் தனது இருக்கையாகக் கொண்டிருந்த சங். சந்தியாகு சுவாமியாருக்கு இச் செய்தி பறந்தது. அவர் உடனே குதிரை ஏறி நாற்பது மைல் சவாரி செய்து சங். குஞ்ஞா சுவாமியாரிடம் வந்தார். ஆனல் அப்பொழுது அவருக்கு உண்ணவும் முடியவில்லை; உறங்கவும் இயலவில்லை. சங். சந்தியாகு சுவாமியாரைக் கண்டதும் சங். குஞ்ஞா சுவாமியார் மிகுந்த ஆறுதல் அடைந்தார். ஆனல் அவருக்குக் காய்ச்சல் நெருப்பாகக் காய்ந்தது. காய்ச்சலின் அகோரத்தினல் அவருக்குப் புத்தி பேதலித்துவிட்டது. சில சமயம் தாசிரிகள்முன் வாக்குவாதம் செய்வார்; சில சமயம் தன் கிறீஸ்துவர்களுக்குப் பிரசங்கம் செய்வார்; வேறு சமயங்களில் தன்னைச் சித்திரவதை செய்த தாசிரிகளைப்பார்த்துப் பரிகாசம் செய்து. தாங்கள் துவக்கிய வதையைச் சீக்கிரம் முடித்துவிடும்படி பிதற்றுவார்.

குருதிகெட்டுக் காயங்களிலிருந்து நிணம் சொட்டியது. குணமடையமாட்டார் என்று மருத்துவர் கைவிட்டார். பதினெட்டு நாட்க

ளாகப் புழுவெனத் துடித்த வீர சற்குரு தனது 52 ஆவது வயதில் கிறீஸ்துநாதரின் பெயரை ஒலித்துக்கொண்டே தன் இறுதி மூச்சை விட்டார். மெய்மறைக்காகக் குருதி கொட்டி உயிர் விடுத்த சங். எம்மானுவேல் குஞ்ஞாசுவாமிகளின் வரலாற்றை அவருடைய உபதேசியாரும் சங். சந்தியாகு சுவாமியாரும் எழுதியுள்ளனர்.

சுவாமியாரைப் பாளையத்திலிருந்து துரத்திவிட்ட செய்தியை இந்துமத குரு மூலமாய்த் தளவாய் அறிந்துகொண்டார். அவர் உடனே நடந்த நிகழ்ச்சிகளை அறிந்துவர தன் அதிகாரிகளை அங்கே அனுப்பினர். மத குருவையும் தாசிரிகளையும் அவர்கள் விசாரித்த போது சுவாமியார் தான் வணங்கும் தெய்வந்தான் உண்மைக்கடவுள் என்றும் தாங்கள் வணங்கும் தெய்வங்கள் கூளிகள் என்றும் கூறினதால் அவரைத் துரத்திவிட்டனர் என்றும் மற்றபடி குருவானவரைப்பற்றியும் அவரது கிறீஸ்துவர்களைப்பற்றியும் எந்தவிதமான குறையும் கிடையாது என்றும் அவர்கள் கூறினர். அதிகாரிகள் சுவாமியாரைக் கடுமையாக நடத்திய ஒருவனைத் தளவாயிடம் அனுப்பினர். தளவாய் அவனைத் தீர்க்கமாய் விசாரித்துச் சிறையிலடைத்தார். சிறையில் இருந்த அவனை யாரும் பார்க்கக்கூடாதென்றும் அவனுக்கு யாரும் உணவு அளிக்கக்கூடாதென்றும் கண்டிப்பான ஆணை பிறப்பித்தார்.

அந்த இந்துமத குருதான் அவ்விதம் சிறைப்படுத்தப்பட்டார் என்று சங். சந்தியாகு சுவாமியார் கூறுகிறார். சிறைப்பட்ட அந்த குரு மூன்று நாட்கள் உணவில்லாமல் இருந்தார். பின்னர் அறுபது வராகன்கள் கொடுத்து விடுதலை பெற்றார். ஆனால் மனிதர்களுடைய ஞாயத்திற்குத் தப்பினாலும் கடவுளுடைய தண்டனைக்குத் தப்பமுடியவில்லை. விடுதலை பெற்ற விரக்தர் வீட்டிற்கு வந்தவுடன் தன்னுடைய மகனின் விரைத்த சடலத்தைப்பார்த்தார். இரு பையன்களுடன் கிணற்றில் நீராடச் சென்ற மடாதிபதியின் மகன் மட்டும் விபத்துக்குப் பலியாகி மூழ்கி மாண்டான். கிறீஸ்துவர்களைத் தாக்கிக் காயப்படுத்தின சில தாசிரிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் தாக்கப்பட்ட கிறீஸ்துவர்களுக்குச் சேரவேண்டிய அந்த அபராதப்பணம் சேரவில்லை.

இறுதியாக அந்தக் கிறீஸ்துவ சமூகத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுமானம் தளவாயினுல் நீக்கப்பட்டது. நெருப்பு, தண்ணீர் முதலியன எடுப்பதற்கு உத்தரவு அளிக்கப்பட்டது. அபகரிக்கப்பட்ட அல்லது முத்திரை வைக்கப்பட்ட சொத்து திருப்பிக் கொடுக்கப்பட்டது. இறந்துபோன குருவானவருக்குப் பதிலாக வரப்போகும் சுவாமியாருடன் எப்பொழுதும் நல்லுறவு வைத்துக்கொள்ளப்போவதாகத் தளவாய் கிறீஸ்துவர்களுக்குக் கூறிய உறுதிமொழியுடன் அந்த சோக வரலாறு முடிவடைகிறது.

சங். எம்மானுவேல் குஞ்ஞா சுவாமியாரின் கல்லறை கப்பிகனுத்தியின் பழைய அறைவீட்டைச் சேர்ந்த முற்றத்தில் தான் இருக்கவேண்டும். ஆனுல் அந்தப் பழைய அறைவீடும், அது இருந்த இடமும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதுபோலவே காகுந்தியின் எல்லைகள், நிகழ்ச்சி நடைபெற்ற இடம், இந்துமத குருவின் மடம் முதலியன இன்னும் குறிப்பாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

காகுந்தியைக் கங்குந்தி ஜமீன் என்று சொல்லுவது பொருத்தமற்றது. ஏனெனில் அது கீளமங்கலத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. ஆனுல் சுவாமியார் அடிபட்ட பிற்பாடு அந்த இடத்திலிருந்து நேர் குறுக்காக 40 மைல் கட்டில்மேல் வைத்துச் செல்லப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மேலும் ஒரு அஞ்சலில் கப்பிகனுத்தி ஒசூருக்குத் தென்கிழக்காக இருக்கிறது என்றும், காகுந்தி கப்பிகனுத்தியிலிருந்து 10மைல் தென்மேற்கில் இருக்கிறதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கடைசிக் குறிப்பு தெங்கணிக்கோட்டை அல்லது தேவர் பள்ளாஹல்லியைக் காட்டுகிறது. சேசுசபையாருக்குச் சொந்தமாயிருந்த எல்லாப் பங்குகளையும் முக்கிய பட்டணங்களையும் நிர்வகித்த குருவானவர், ரத்தினகிரி, மல்லிகார்சுனதுர்க், தெங்கணிக்கோட்டை முதலிய கீர்த்திவாய்ந்த கோட்டைகளை விட்டு தேவர் பள்ளாஹல்லியின் தலைவனுக்குச்சேர்ந்த தாரவந்திரம் என்ற ஊரைத் தெரிந்துகொண்டது விந்தையாகத்தான் இருக்கிறது. தேவர் பள்ளாஹல்லியிலிருந்து தாசிரிகளின் ஊராகிய தாசிரிப்பள்ளி வெகு தொலைவில் இல்லை. மேலும் தாசிரிப்பள்ளி மிகப்

பழமையான கிறீஸ்துவ கிராமம். எனவே சங். குஞ்ஞா சுவாமியார் வேதசாட்சி முடிபெற்ற இடம் தாசிரிப்பள்ளியாகத்தான் இருக்க வேண்டும். சங். குஞ்ஞா சுவாமியார் கப்பிகனுத்திக்கு வருமுன் தங்கி இருந்த இடம் சிலுவைக் குப்புலுவாக இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது அங்கு ஒரு குருசடி மட்டும் உண்டு. கிறீஸ்துவர்கள் மாரண்டஹள்ளி அல்லது கிறீஸ்துப்பாளையத்தில் வீடுகள் கட்டிக்கொண்டனர். மேலும் தேவர்பள்ளாஹல்லியைச் சுற்றிலும் சைவ, வைணவ பிராமணர்களின் அக்கிரகாரங்கள் நிரம்ப இருந்தன. தெங்கணிக்கோட்டைக்கு அருகில் புகழ் பெற்ற பெத்த ராய ஸ்வாமி விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இக்கோவில் இரத உற்சவம் சித்திரை மாதத்தில் தெலுங்கு வருடப்பிறப்புக்கு இரண்டு நாட்களுக்குப் பின் சிறப்பாக நடந்து வருகிறது.

சங். குஞ்ஞா சுவாமியார் இறந்த இரண்டு ஆண்டுகட்குப் பின் கொடுங்களூர் அதிமேற்றிராணியார் மிக. வந். ஜோவா ரிபெய்ரோ திருச்சபை சட்ட பூர்வமாக அவர் இறந்த வரலாற்றை அறிந்து வர சங். பிளாத்தெல் சுவாமியாரை அனுப்பினர். ஆனால் அவர் ஆராய்ச்சி தொடங்குமுன் காகுந்தியில் உள்ள ஒரு மூரினல் ஒரு மாதம் சிறைவைக்கப்பட்டார்.

ஏறக்குறைய **1713—14**இல் கடப்பை, கர்நூல், சாவனூர் முதலிய மூன்று நவாபுகளின் படைகள் சேலத்தின் வடபாகத்தை முற்றுகையிட்டனர். **1714**இல் பாரமஹாலும் காகுந்தியும் கடப்பை நவாபு அப்துல் நபிகானுக்கு ஜாகீராக அளிக்கப்பட்டன. **1717**இல் தர்மபுரிக் கோட்டை ஒரு மொகலாயனின் அதிகாரத்தில் இருந்தது.

## வடுகர்கள் மனந்திரும்புதல் — 1711-12.

அக்காலத்தில் தெலுங்கு மொழி பேசுபவர்களை வடுகர்கள் என்று அழைப்பதுண்டு. ஆனால் அவர்களில் அநேகர் தமிழர்கள் தான். கிருஷ்ணகிரி, எலத்தகிரி, மருதேரி, நெல்லிமரத்துப்பட்டி (சில குடும்பங்கள்)முதலிய இடங்களிலிருந்த முதற் கிறீஸ்துவர்கள் இத்தகைய வடுகர்களே. நாயக்கர் என்ற பெயர் ஒரு அதிகாரப் பட்டமாகக் கொடுக்கப்பட்டதேயன்றி குலத்தைக் காட்டுவதற்கு

அல்ல. உதாரணமாக, தமிழர்களுக்குக் கடகத்தூரில் கவுண்டரா யிருந்த சின்னப்பன் கடகத்தூர் நாயக்கன் என்ற பட்டத்தைப் பெற்ருர்.

வடுக இனத்தைச் சேர்ந்த ஒரு சிறு பெண், (அவள் எந்த கிராமத்தைச் சேர்ந்தவள் என்று கொடுக்கப்படவில்லே) மூன்று வயதுள்ளவளாக இருந்தபொழுது அருகிலிருந்த கிறீஸ்துவர்களிட மிருந்து ஞானேபதேசம் படித்து, செபம் சொல்லக் கற்றுக்கொண் டாள். கிறீஸ்மஸ் தினத்தன்று அச்சிறுமியின் தகப்பனுர் அவளு டன் கோவிலுக்கு வந்தார், கோவிலில் அவளுடைய பக்திப்பெருக் கத்தைக் கண்டு பரவசமடைந்தார். உடனே அவர் சில வடுகர் களுடனும் ஒரு பூசாரியுடனும் கிறீஸ்துவர்களாக முடிவுகொண்டார். ஆனுல் அதற்குப் பலத்த எதிர்ப்பு உடனே கிளம்பியது. அவர் களுடைய சம்மந்திகள் கிறீஸ்துவர்கள் ஈனச் சாதியினர் என்று தெரிவித்தனர். எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் சங். சந்தியாகு சுவா மியார் ஒரு வடுக குடும்பத்துக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்; இந் துக்கள் அந்தக் குடும்பத்தைத் தங்கள் சாதியிலிருந்து நீக்கிவிடப் போவதாக அச்சுறுத்தினர். இதைக் கேள்வியுற்ற ஒரு பிராமணன் கிறீஸ்துவர்களின் வேதம் மெய் வேதமென வெளிப்படுத்தினன். தாசிரிகள் இந்த விடயத்தைக் காடித்தலேவனிடம்கொண்டுவந்தனர். ஆனுல் காடித்தலேவனுடைய தகப்பனும் ஒருமுகமதியனும் கிறீஸ் துவர்கள் சார்பில் பேசினர். எனவே அந்த காடித்தலேவன் வடு கர்களுக்கு ஞானதீட்சை கொடுக்க அனுமதி அளித்ததோடு கூட சாகுபடி செய்ய ஒரு ஹேபாலியும் (சிறு கிராமம்), கோவில் கட்டு வதற்கு உத்தரவும் சுவாமியாருக்கு அளித்தார். **1712**இல் **37** வடு கர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

## பெண்ணுகரத்தில் வேத கலாபனே — 1715–1718.

பெண்ணுகரம், பர்காணுவின் காடி—ஒரு முக்கியபட்டணம். மக்கள் கூட்டம் அதிகமாயிருந்தது. அங்கே ஒரு பேட்டை உண்டு. தர்மபுரியிலிருந்து ஸ்ரீரங்கபட்டணத்துக்குச் செல்லும் அஞ்சல் மார்க் கம் பெண்ணுகரம் வழியாகச் சென்றது. பெண்ணுகரத்தின் காடித்

தலைவன் ஒரு இளைஞன். அவன் ஸ்ரீரங்கபட்டின அரண்மனையிலே கல்வி பயின்றவன்.

1685ல் நடந்த விவசாயிகளின் கலகத்தின்போது நெருப்பு வைக்கப்பட்ட பெண்ணுகரக் கிறீஸ்துவர்கள் கோயில் இன்னும் புழுது பார்க்கப்படாமலேயே இருந்தது. அங்குள்ள கிறிஸ்துவர் களில் கவரை, ஸ்ரீகர்ணிக்கர் முதாலானோர் முக்கியமானவர்கள். பெண்ணுகரத்துக்கு மேற்கே மடம் என்ற ஊரில் தராசு அல்லது கொள்ளியர் என்ற பஞ்சம நெசவாளிக் கிறீஸ்துவர்கள் இருந்தனர். அவர்களுக்கு ஒரு சிறு கோவில் இருந்தது,

பெண்ணுகரத்தில் வைணவர்களும் லிங்காயித்துக்களும் இருந்தனர். இவர்கள் ஆதிக்கப் போட்டியிட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டிருந்தனர். இவர்களில் வைணவர் கள் அரசாங்க உதவி பெற்றனர். தங்களுக்குள் மனத்தாங்கல் இருந்தபோதிலும், கிறீஸ்துவர்களை ஒறுக்கும் பணியில் ஒன்றித்து இருந்தனர். கிறீஸ்துவர்களின் எண்ணிக்கையும் செல்வாக்கும் ஓங்கி வளர்ந்து வந்ததைக்கண்டு அழுக்காறு அடைந்தனர். கிறீஸ் துவர்களின் இல்லங்களிலும் சுவாமியாரின் அறைவீட்டிலும் பில்லி சூனியம் வைத்தனர். சிறு குறையைப் பெருங் குற்றமாக்கி வழக்குக்கு இழுத்தனர். கிறீஸ்துவர்கள் கழுத்தில் அணிந்த சுரூப மும் அவர்களுடைய துவேஷக்கண்களை உறுத்தின. கிறீஸ்துவர்கள் இந்து மாப்பிள்ளைகளுக்கு முறைப் பெண்கள் கொடுக்க மறுத்தனர். ஒரு ஸ்ரீகர்ணிக்கர் இந்துக்கோவில் இருந்த திசைக்கு எதிராக ஒரு சிலுவையை நட்டார். இந்துக்களுடைய கூப்பாடுகளுக்கு ஏற்றுப் போல் சில கிறீஸ்துவர்கள் தங்கள் விசுவாச உறுதியை விவேகமற்ற முறைகளில் சிற்சில சமயங்களில் காட்டினர். இந்துக்களுக்குப் புனி தமான ஒரு மரத்தில் கிறீஸ்துவனொருவன் சிலுவையைச் செதுக்கி னான். வேண்டுதல் மண் குதிரைகள் உடைபட்டுக்கிடந்தால் அது கிறீஸ்துவர்கள் செய்த குற்றமாகக் கருதப்பட்டது, ஒரு கிறஸ்துவப் பிச்சைக்காரன் இந்துக் கோவிலில் அளித்த உணவை உண்டு, 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே', என்ற மந்திரத்தைப் பாடினான். சந்தையில் வேத தர்க்கம் நடந்தபோது ஒரு கிறீஸ்துவ

இளைஞன் கல்லின் மூன்று முக்கிய உபயோகங்களைக் கூறினான். அதே இரவு வைணவர்களின் ஆதிக்கத்தை வெறுத்துவந்த லிங்காயித்துக்கள் மடம் என்ற ஊரில் உள்ள வைணவக் கோவிலின் கதவை உடைத்து உள்ளே சென்று அசுத்தப்படுத்திவிட்டு காலையில் அந்த வேலை கிறீஸ்துவர்களால் செய்யப்பட்டது என்று குற்றஞ்சாட்டினர். வைணவர்களின் கோபம் அத்துமீறி விட்டது. கிறீஸ்துவர்களை ஊரைவிட்டுத்துரத்திவிடப் போவதாக பயமுறுத்தினர். சந்தைக்கு வந்த கிறீஸ்துவர்களை அடித்துவிரட்டினர்.

இந்த விஷயங்களை அறிந்த காடித் தலைவன் தேவதாய் மோக்ஷ ஆரோபணமான திருநாள் அன்று 40 கிறீஸ்துவர்களைக் கைது செய்து தனது நீதி மன்றத்தில் நிறுத்தினான். யோகிகள் கிறீஸ்துவர்கள் மேல் உள்ள குற்றங்களை எடுத்துக் கூறினர். நல்லதம்பி என்ற கிறீஸ்துவன் வாங்கின பணத்தைத் திருப்பித்தரவில்லை என்றும் ஒரு இந்து உறவினனுக்கு முறைப்படி தன் மகளை மணம் செய்துதர இசையவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டான். சிறிது மரியாதைக் குறைச்சலாக நல்லதம்பி நடந்துகொண்டதால் அதிகாரி கடுஞ்சினங் கொண்டு, வெஞ் சொல் பேசி, வன்மையாக அடித்தான். நல்லதம்பி மயக்கமுற்று விழுந்தவுடன் அவனைச் சிறைக்குத் தூக்கிச் செல்ல காடித்தலைவன் உத்தரவிட்டான். கோரமான இக் காட்சியைக்கண்ட கிறீஸ்துவர்கள் குலை நடுங்கிப் போயினர். சிலர் வாயளவிலே தாங்கள் கிறீஸ்வர்கள் அல்ல என்றி கூறி அபராதம் செலுத்தி சிறை செல்லாமல் தப்பினர். பக்தியுடையான் என்ற ஒரு பஞ்சம நெசவாளி விசுவாசத்தை மறுதலிக்க மறுத்தான். இந்துக்கள் அவனுடைய தலைக்குப் பாதிமொட்டை அடித்து, சாணத்தண்ணீர் தெளித்து, நையப்புடைத்து, கழுதைமேல் பின்புறமாக உட்காரவைத்து அதன் வாலைப்பிடித்துக் கொள்ளச் செய்து ஊரைச் சுற்றி வலம் வந்தார்கள்.

சங். சந்தியாகு சுவாமியார் நீதி மன்றத்துக்கு இருமுறை வந்து தனது கிறீஸ்துவர்களுக்காக மன்றாடினார். ஆனால் அவரை பயமுறுத்தி வெளியே அனுப்பிவிட்டனர். காரியம் மிஞ்சிவிட்டது, கெஞ்சிப்பயனில்லை என்று அறிந்து, அன்று மாலை தன் கிறீஸ்துவர்

களை அழைத்து, வேறு ஊருக்கு ஓடிப்போய்விடும்படியாக ஆலோசனை கூறினர். அடுத்தநாள் காலை சேவகர் சுவாமியாரைக் கைது செய்து நீதி மன்றத்துக்கு இழுத்துவந்தனர். நீதிமன்றத்தில் சுவாமியார் சட்டபூர்வமாக பெண்ணுகரத்திலிருந்து துரத்தப்பட்டதாகவும், அவருடைய பொருள்கள் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்று காட்ட முத்திரையிடப்படும் என்றும், அவரது கோவில் நாசமாக்கப்படும் என்றும் காடித்தலைவன் கோபவெறியோடு கூறின தீர்ப்பைக் கேட்டார். சங். சந்தியாகு சுவாமியார் நீர் குண்டியில் அடைக்கலம் அடைந்தபோது, நல்லதம்பிக் காவரை (வடக்கத்தியான்) சிறையிலிருந்து தப்பி, தன்னைவிடாமல் துரத்தி ஓடிவந்தவர்களுக்கு அகப்படாமல் தர்மபுரி திசையை நோக்கி ஓடி, மைசூர் எல்லைக்கு அப்பால் பாரமஹாலிலுள்ள திருப்பத்தூரில் இருந்த கிறீஸ்துவர்களை அடைந்தான். அப்பொழுது பாரமஹால் கடப்பை நவாபின் ஆட்சியிலிருந்தது. எனவே நல்லதம்பியைத் துரத்திவந்த மைசூர் சேவகர் அந்நிய நாட்டில் கால்வைக்க அஞ்சித் திரும்பிப் போய்விட்டனர். பெண்ணுகரத்திலும் மடத்திலும் கிறீஸ்துவர்களின் வீடுகளை இந்துக்கள் சோதனை செய்தனர். இந்த அவதிகளைத் தாழாமல் கிறீஸ்துவர்கள் நீர் குண்டி, கடகத்தூர் முதலிய ஊர்களில் பாதுகாப்பான புகலிடம் தேடினர்.

சங். சந்தியாகு சுவாமியாருக்கும் அவரது கிறீஸ்துவமக்களுக்கும் இழைக்கப்பட்ட இன்னல்களை அறிந்த சின்னப்பகவுண்டர் உதவிக்கு வந்தார். அவர் கடகத்தூர் கோட்டையைக் கண்காணிக்கும் நாயக்கன். அப்பகுதிகளில் அவருக்கு மிகுந்த அதிகாரம் இருந்ததோடு, மைசூர் அரண்மனையில் அவருக்கு நல்ல செல்வாக்கும் இருந்தது. சங். சந்தியாகு சுவாமியார் அஞ்சல் மூலமாக நான்கே நாட்களில் மைசூர் திவானிடமிருந்து கைது செய்யப்பட்ட கிறீஸ்துவர்களை விடுதலை செய்யவும், முத்திரை இடப்பட்ட சொத்துக்களை திருப்பிக் கொடுத்துவிடவும் ஒரு உத்தரவு வாங்கிவந்தார். பெண்ணுகரத் தலைவன் உத்தரவின் பிரகாரம் நடந்துகொண்டான். ஆனால் கிறீஸ்துவர்கள் சிலைகளைத்தகர்த்து, கோவிலை அசுத்தப்படுத்தி, திரு மூர்த்திகளுக்கு நிந்தனை வருவித்து இந்துமதத்துக்கு விரோதமாகக் குற்றங்கள் புரிந்ததால், வியாச்சியத்தை வைணவ

மடாதிபதியின் நீதிமன்றத்துக்கு அனுப்பிவிட்டான். பிறகு சட்டத்துக்கு விரோதமாக நீர் குண்டியிலிருந்த சங். சந்தியாகு சுவாமியாரையும் கிறிஸ்துவர்களையும் கைது செய்ய சேவகர்களை அனுப்பினான். பெண்ணுகரக் கிறீஸ்துவ ஸ்ரீகர்ணிக்கர் ஒருவர் தடுத்திராதிருந்தால் சேவகர் கோவிலை நாசப்படுத்தியிருப்பர். சேவகர் கைது செய்ய வரப்போவதை அறிந்த கிறிஸ்துவர்கள் எல்லோரும் வேறு ஒரு சிறிய கிராமத்துக்குச் சென்றுவிட்டனர்.

சின்னப்பநாயக்கன் வன்னியகுல இந்துக்களோடு ஒரு கூட்டணி திரட்டி, தங்கள் இனத்தவர்களாகிய வன்னியகுலக் கிறிஸ்துவர்களைக் காக்கவும், தேவைப்பட்டால் பெண்ணுகரத்தை முற்றுகையிடவும் தயாரானார். ஆனால் இந்த மிதமிஞ்சிய போக்கை ஒரு கிறீஸ்துவன் தடை செய்தான். இது இங்ஙனமிருக்க, பெண்ணுகரத்தில் நடந்த விஷயங்களெல்லாம் மைசூர் திவானுக்கு எட்டியது. சங். பிளாத்தெல் சுவாமியார் திவான் அருகிலே இருந்து கிறீஸ்துவர்களுக்காகப் பரிந்துபேசினார். பெண்ணுகரத் தலைவன் திவானிடமிருந்து தான் நடந்துகொண்ட விதம் முற்றிலும் சட்டத்திற்கு விரோதமானதா? என்று கேட்டான். கோப வெறியால் மடம் என்ற ஊரில் ஏற்கனவே இடிக்கப்பட்டிருந்த கோவிலைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினான்.

### கோவிலூர்—திருப்பத்தூர் பங்கு நிறுமணம்—1715.

சங். சந்தியாகு சுவாமியார் பெண்ணுகரத்தில் இருப்பது விவேகமற்ற செயல் என்று உணர்ந்து, நல்லதம்பிக் காவரை முதலிய கிறீஸ்துவர்கள் சரண் புகுந்த திருப்பத்தூருக்குச் சென்றுவிட்டார். திருப்பத்தூரில் கொள்ளியர் என்ற பஞ்சம நெசவாளிகள் இருந்தனர். அக்காலத்தில் மேன்குலத்தாருக்கு மட்டும் நிலையான கோயில் கட்ட உத்தரவுஇருந்ததால், திருப்பத்தூரில் இருந்த தாழ்த்தப்பட்ட கிறீஸ்துவ சமூகத்திற்குக் கோவில் இல்லாமல் இருந்தது. இக்குறை பெண்ணுகரத்தில் இருந்து வந்த காவரை, வன்னியர் முதலிய மேன்குலக் கிறீஸ்துவர்களால் போக்கப்பட்டது. திருப்பத்தூருக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் அர்ச். சவேரியார் பாது

காவலில் ஒரு தேவாலயம் கட்டப்பட்டது. கோயிலின் அருகில் கிறீஸ்துவர்கள் வீடு கட்டிக்கொண்டனர். திருப்பத்தூரில் ஏற்கனவே இருந்த கிறீஸ்துவர்களும் இப்புதிய சமூகத்தோடு சேர்ந்து கொண்டனர், எனவே கிறீஸ்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு சென்றது.

செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு இந்து திருப்பத்தூரிலுள்ள இந்து ஆலயத்தைப் பழுதுபார்க்கும் பொறுப்பை ஏற்ருன், இதற்குக் கிறீஸ்துவர்களும் வரி கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினுன், ஆனுல் கிறீஸ்துவர்கள் பண உதவி செய்ய மறுத்தனர். இதனுல் சில கிறீஸ்துவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர், இந்துக்களுக்குப் பணியாத கிறீஸ்துவர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமாறு அந்த இந்துப் பெரியார் திருப்பத்தூர் தலைவனைக் கேட்டுக் கொண்டார். திருப்பத்தூர் முகமதியத்தலைவன் நீதிமன்றத்தில்விசாரணை நடத்தினுர், விசாரணை செய்தபொழுது, கிறீஸ்துவர்களில் ஒருவனும் பலவந்தத்தினுல் மதமாற்றம் செய்து கொள்ளவில்லை என்றும், கிறீஸ்துவர்கள் கோவில் கட்டினபோது இந்துக்கள்யாரும் எவ்வுதவியும் செய்யவில்லை என்றும், இந்தத் தொந்திரவு எல்லாம் இந்துக்களிடமிருந்துதான் வந்ததுஎன்றும்நிரூபிக்கப்பட்டது. இந்துக்கள் கோவில்களுக்கு கிறீஸ்துவர்கள் வரிகொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படக்கூடாது என்று நீதி கூறப்பட்டது. அதன் பின் அமைதி நிலவியது. அந்த முகம்மதியத் தலைவனிடம் சங். சந்தியாகு சுவாமியார் சிநேக பான்மையுடன் பழகி வந்தார்.

கடகத்தூர் சின்னப்ப நாயக்கனுடைய அறிய முயற்சியால் பெண்ணுகரத்தில் அமைதி ஏற்பட்டது. சங். சந்தியாகு சுவாமியார் மூன்று மாதம் மைசூர் எல்லைக்கு வெளியேஇருந்து மீண்டுப் பெண்ணுகரத்திற்கு வந்தார், பெண்ணுகரத்தில் இருந்த புதிய தலைவன் ஊரைவிட்டுச் சென்ற கிறீஸ்துவர்களை வரவழைத்து அவர்களுக்கு மதச்சுதந்திரம் அளித்தான்: முத்திரையிடப்பட்ட பொருட்கள் சேர வேண்டியவர்களுக்குச் சேர்க்கப்பட்டன. இந்தவேத கலாபனை ஐந்து மாதகாலம் நீடித்தது. திருப்பத்தூர்–கோவிலூரில் ஏற்பட்ட புதிய விசாரணை இக்கலாபனையால் கிறிஸ்துவர்கள் அடைந்த லாபமாகும்.

1718 இல் மடம் என்ற ஊரில் கோவில் கட்ட அனுமதி கிடைத்தது. சின்னப்பநாயக்கர் தர்மபுரித் தலைவனிடமிருந்து பெண்ணுகரத்தில் பழுதாக்கப்பட்டக் கோவிலைப்புதிப்பிக்க அனுமதி கேட்டார் ஒருவரையும் மதமாற்றம் செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் மேல் தலைவன் அதற்கு உத்தரவு தந்தான். அந்த நிபந்தனை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறி சின்னப்ப நாயக்கன் தன் கோட்டைக்குள் சென்றார்.

நல்லதம்பிக் காவரை பெண்ணுகரத்திற்குத்திரும்பி வரவில்லை. அவனுடைய தாயார் கோவிலூர்—திருப்பத்தூரில் இறந்து, அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். தர்மபுரியில் அவளது குலத்தில் அவள் தான் முதன் முதலில் சத்திய வேதத்தைத் தழுவினுள். அவளுடைய அயராத முயற்சியால் தன் உறவினரில் 40 பேர்களுக்கு மேல் கிறீஸ்துவர்கள் ஆக உதவி செய்தாள்.

சங். தெ நோபிலி சுவாமியார் தர்மபுரியில் 'ராஜ குல'த்தைச் சேர்ந்த 400 பேர்களுக்கு அதிகமான புதுக் கிறீஸ்துவர்களை விசாரணை செய்தார் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றது- அவர் தர்மபுரிக்கு வந்ததாகச் சான்று ஒன்றும் கிடையாது. அவ்வளவு புகழ்வாய்ந்த, மக்கட் தொகையில் பெரிதான ஒரு விசாரணை அங்கு அவர் காலத்தில் இருந்ததாக சேசுசபைக் குருக்கள் எழுதிய அஞ்சல்களில் எங்காவது ஒரு இடத்தில் கூடக் குறிப்பிடப்படவில்லை. மதுரை மிஷனரிகள் தொப்பூர்க் கணவாய்க்கு வடக்கே வேத போதகம் செய்யவில்லை. முதல் தடவையாக தர்மபுரிக்குவந்த மைசூர் மிஷனரிகள் மதுரையிலிருந்துவந்த ஒரு சிலக் கிறீஸ்துவர்களைமட்டும் அங்கே கண்டனர்.

## தர்மபுரியில் வேத கலாபனை—1717

1683-இல் நடந்த விவசாயிகளின் கலகத்தின் போது நாசமடைந்த தர்மபுரிக் கோவிலும் குருவானவரின் வீடும் பழுதுபார்க்கப் படவில்லை. இந்தப் பாழடைந்த கட்டடங்கள் இருந்த இடம் புலப் படவில்லை. இவை அநேகமாக தர்மபுரிக் கோட்டைக்கு மேற்கே

யுள்ள சிறிய கல்லறை மேடுக்கு அருகில் இருந்திருக்க வேண்டும். தர்மபுரி இப்பொழுது ஒரு முக்கிய பட்டணமாக, மாகாணத் தலைநகராக விளங்கியது. இந்நகரிலே மாகாணத் தலைவனும் சேனைத்தளபதியும் இருந்தனர். எல்லா இடங்களிலும் அக்காலத்தில் நடந்தது போல் மதமாற்றம் செய்துகொண்ட கிறீஸ்துவர்கள் இந்துக்கோவில்களுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாததால் தாசிரிகளும் யோகிகளும் கோபங் கொண்டு பழிவாங்க வாய்ப்பு தேடிக்கொண்டிருந்தனர். பலநாள் தேடின இந்த வாய்ப்பும் கிட்டியது.

**1717** இல் லிங்காயித்து ஒருவன் மரணப்படுக்கையில் கிடந்தான். அவனுடைய வேண்டுகோளுக் கிணங்கி தர்மபுரி உபதேசியார் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவந்தார். லிங்காயித்து கழுத்தில் அணிந்திருந்த லிங்கத்தைக் கிணற்றில் எறிந்துவிட்டு அவனுக்கு ஞானதீட்சை அளித்தார், அக்காலத்தில் லிங்கத்தை அழிப்பது தண்டனைக்குரிய செயலாகும். உபதேசியார் லிங்கத்தைக் கிணற்றில் எறிந்தபோது அந்த லிங்காயித்துவின் மனைவி அதைப்பார்த்துக் கொண்டாள். இதை வீராக்ஷிபுரத்திலுள்ள தன்னுடைய குருவாகிய விரக்கதமடம் முதிரையிடம் தாக்கீது செய்தாள். உடனே அந்த மடாதிபதி சங். சந்தியாகு சுவாமிகளையும் அந்த உபதேசியாரையும் கைது செய்யத் தன் காவலாளிகளை அனுப்பினன் இதையறிந்துகொண்ட சுவாமியாரும் உபதேசியாரும் ஓடிவிட்டனர், ஆனல் அந்த முதிரை கிறீஸ்துவர்களில் முக்கியமானவர்களையும் சாக்ஷிகளையும் தன் முன் வரவழைத்து வியாச்சியம் நடத்தினர், கடைசியாக அந்த உபதேசியார் தாமாகவே அவர்கள் முன் வந்து நின்றார். இரவு நெருங்கிக்கொண்டு வந்தபடியால் உபதேசியாரையும் குற்றம் சாட்டினவர்களையும் தனது கோட்டையிலே நிறுத்திக் கொண்டான். அன்று சங். பியர் தெல் ரொஸ்ஸோ தன்னுடைய சிரேஷ்டரான சங். சந்தியாகு சுவாமியாரைப்பார்க்க தர்மபுரிக்குவந்தார். அங்கு விஷயத்தை அறிந்து, தனக்கு நன்ருகத் தெரிந்த தர்மபுரித் தலைவனிடம் சென்று சங். சந்தியாகு சுவாமியாருக்காகப் பரிந்து பேசி, சுவாமியார் கைது செய்யப்படவேண்டிய ஆணைபிறப்பிக்கப்பட்டபோது ஊரில் இல்லாததால் அந்தக் கட்டளையை ரத்து செய்து, வியாச்சியத்தைத் தலைவனே நடத்தும்படியாகக் கேட்டுக்கொண்டார்.

தலைவன் வழக்கைத் தனது நீதி மன்றத்தில் விசாரித்து, சுவாமியாருக்குக் கனத்த அபராதம் விதிக்க எண்ணினுர், சுவாமியார் பெரிய தொகை கொடுக்கச் சக்தியற்றவராயிருந்ததால், அவரது கிறீஸ்துவ சமூக முழுமைக்கும் அபராதம் விதிக்கவேண்டும் என்று நியாயம் பேசினவர்கள் வாதாடினர். வரப்போகும் தண்டனையை அறிந்து கொண்ட கிறீஸ்துவர்கள் தங்களது சொத்துக்களை எடுத்துக் கொண்டு ஊரைவிட்டு வெளியேறினர். கிறீஸ்துவர்கள் எல்லோரும் தங்கள் காடியைவிட்டு வெளியேறினல் தனக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தில் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்று பயந்த தர்மபுரித் தலைவன் சங். சந்தியாகு சுவாமியாருக்கு ஒரு கடிதம் எழுதி உபதேசியார் மாத்திரம் குற்றம் புரிந்தவராதலால் மற்ற கிறீஸ்துவர்கள் ஊரைவிட்டுப் போகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஆனுல் அந்தக் காகிதம் சுவாமியார் வீட்டைவந்து அடைந்தபோது, சுவாமியார் செபமாலை மாதாத் திருவிழா கொண்டாட கருமத்தாம் பட்டிக்குச் சென்றுவிட்டார். சுவாமியார் ஊரை விட்டுச் சென்றபோது தான் மட்டும் தனியாக விடப்பட்டதாக உபதேசியார் உணர்ந்தார். திருவிழா முடிந்தபின் சங். சந்தியாகு சுவாமியார் வேருெரு குருவானவரோடு **1717** ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **8** ஆம் தேதி திரும்பிவந்தார். கொளகத்தூர் கிராமத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கும் பொழுது இரு குருக்களும் குதிரைகளிலிருந்து கீழே விழுந்துவிட்டனர். அவர்களால் தர்மபுரிக்கு வர இயலவில்லை. தர்மபுரித்தலைவன் பல நாட்களாகத் தன்னிடமிருந்து எதிர்பார்த்திருந்த வெகுமதிகளை ஆட்கள் மூலமாக சங். சந்தியாகு சுவாமியார் கொடுத்து அனுப்பினுர். ஆனுல் அந்த ஆட்கள் தலைவனிடம் அந்தப் பரிசில்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்குமுன் கிறீஸ்துவர்கள் சிறைவைக்கப்பட்டனர். சங். சந்தியாகு சுவாமியார் வியாதியுடனேயே கைது செய்யப்பட்டார். பிறகு சுவாமியார் அனுப்பின வெகுமதிகளைக் கண்டவுடன், தலைவன் சுவாமியாரை விடுதலை செய்து, அவரது குதிரையைக் கொடுத்து தலைமறைவாய் இருக்கும்படி கூறி அனுப்பிவிட்டான். அதன் பின் தலைவன் கிறீஸ்துவர்களை நியாய மன்றத்தில் அழைத்து அவர்கள் எல்லோரும் அபராதத்தைக் கட்டியே தீரவேண்டும் என்ருன். அப்போது

ஒரு கிறிஸ்துவ வாலிபன் தலைவனைப் பார்த்து, "சட்டங்களெல்லாம் பின்பற்றுவதற்காகத் தான். ஆனால் ஒரு இந்து ஒரு எருதைத் திருடினால், அவனுடைய உறவினரோ அல்லது சிநேகிதனோ அதற்காகத் தண்டிக்கப்படுவதில்லை. கிறிஸ்துவர்கள் மட்டில் மாத்திரம் ஏன் இந்த வேறுபாடு ?" என்று கேட்டான். அதற்குத் தலைவன் பதில் கூறவில்லை. பின்னர் சங். சந்தியாகு சுவாமியார் மீண்டும் தலைவன் முன் வந்து கிறிஸ்துவர்களுக்காகப் பரிந்து பேசினார். அதைக்கேட்ட தலைவன் தனது மத குரு இந்த வியாச்சியத்தில் கலந்திராதிருந்திருந்தால் கிறிஸ்துவர்களுக்கு விழுந்த அபராதத்தை ரத்து செய்வதோடு அவர்கள் ஏற்கனவே செலுத்தின அபராதத் தொகையையும் திருப்பிக் கொடுத்துவிடத் தான் எப்போதும் தயாராக இருப்பதைக் கூறினான். பிறகு உபதேசியார் அபராதத்தைச்செலுத்தி விடுதலை அடைந்தார். அதன் பின் அமைதி ஏற்பட்டது. கலாபனை காலத்திலேயே சங். சந்தியாகு சுவாமியார் 300 ஞானஸ்நானம் கொடுத்தார்.

1719 இல் சங். பிளாத்தெல் சுவாமியார் ஸ்ரீரங்கபட்டினத்தில் காலமானார். அவர் கொங்கு நாட்டில் சில ஆண்டுகள் உழைத்தார். பல இடைஞ்சல்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடையே மைசூர் அதிகார பீடத்தருகிலேயே வேத பரம்புதலுக்காக அரும்பாடு பட்டார்.

சேலத்தில் சத்தியமறை வளர்ந்துவந்த விதத்தை ஆராய்ச்சி செய்துவரும் போது 1720 முதல் 1744 வரை கண்ணைக்கட்டிக் காட்டில் விடப்பட்ட ஒரு நிலையை உணரவேண்டியிருக்கிறது. இக் கால சரித்திரத்தை எடுத்துக்காட்ட போதிய குறிப்புக்கள் இல்லாமையே இதற்குக் காரணம். எனினும் கார்முகிலைக் கிழித்துக் கொண்டுவரும் மின்னல்களைப் போன்று ஒரு சில கடிதங்கள் இந்த இருண்ட பாகத்தில் ஒளிவிட்டுச் செல்கின்றன.

### 1720-ம் ஆண்டுக் கடிதம்.

சங். ரெனய்ரோ சுவாமியார் கப்பிகனுத்திப் பங்கை விசாரணை செய்தார். அவர் காலத்தில் அநேகர் மெய்மறையில் சேர்ந்தனர். எத்துணை இன்னல்களையும் பொருட்படுத்தாமல் சிலுவை நாதனை

வந்தடைந்த வீர உள்ளங்கள் எக்காலத்திலும் இருந்தன. ஒரு இளம் பெண் சத்திய வேதத்தில் சேரப் பெருவிருப்புக்கொண்டாள். இதையறிந்த அவளின் உறவினர் அவளைக் காட்டுக்கு இழுத்துச் சென்று அங்கே அவளை நையப்புடைக்கத் தீர்மானித்தனர். ஆனால் அவர்கள் காட்டிற்குள் சென்ற போது ஒரு புலி உறுமிக்கொண்டு வந்தது. அதைப்பார்த்த அவர்கள் ஓடினர். அப்பெண் அங்கேயே நின்றாள். ஓடினவர்களைப் புலி துரத்திச் சென்று ஒருவரையும் விடாமல் கடித்துக் குதறித்தள்ளியது. அந்தப் பெண் எவ்வித ஆபத்துமில்லாமல் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

காக்காவேரியில் மழை பெய்யாமல் பெருத்த பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் எவ்வளவு கொடியது என்றால் தாய்மார்களில் சிலர் தங்கள் குழந்தைகளைக் காசுக்கு விற்றனர். சிலர் குழந்தைகள் உணவின்மையால் போடும் கூக்குரலைக் கேட்கச் சகியாமல் அவர்களைக் கொன்று எறிந்தனர். எங்கும் கொலையும் கொள்ளையுமாக இருந்தது. கிறீஸ்துவர்களில் சிலர் அந்தக் கோரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததைத் தடுக்க பங்கு சுவாமியார் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டார். இறுதியில் குற்றம் செய்த கிறீஸ்துவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இந்துக்கள் தங்களுடைய தேவர்களின் கோபத்தால் வந்த இப் பஞ்சத்தைப் போக்குவதற்கு பங்கு சுவாமியாரைக் கொலை செய்ய வேண்டும், அல்லது ஊரைவிட்டுத் துரத்த வேண்டும்; கோவிலைக் கொளுத்த வேண்டும்; கிறீஸ்துவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்று எண்ணினர். அவர்கள் கொள்ளைக் கூட்டத்தினரில் ஒரு இந்துவைப் பிடித்து அவனுடைய சகாக்களைக் காட்டிக் கொடுக்குமாறு வற்புறுத்தினர். ஆனால் அவன் குறிப்பிட்ட ஆட்களில் ஒரு கிறீஸ்துவன் கூடக் கிடையாது. இறுதியில் அமைதி ஏற்பட்டது. எங்கும் பொதுப் பிரார்த்தனைகள் நடந்தன. 1710ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி திருவிழா மிக விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. அதன் பின் நல்ல மாரி பெய்தது. குழப்பங்கள் ஒழிந்தன. சங். பிரான்சிஸ் தொஸ்ரேஸ் என்பவருக்குப் பதிலாக சங். தெ பெய்வா சுவாமியார் தாலகாட் பகுதியை விசாரணை செய்தார்.

## 1726-ஆம் ஆண்டுக் கடிதம்.

1724-ஆம் ஆண்டு லிங்காயித்துக்களுக்கு விரோதமாக ஒரு சட்டம் பிறந்தது. அவர்கள்மேல் அநேக குற்றச் சாட்டுகள் இருந்தமையால் அவர்களின் கோயில்களை இடித்துவிட சட்டபூர்வ மான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இச் சூழ்நிலையில் லிங்காயித்துக் களில் சிலர் கிறீஸ்து மதத்தில் சேர்ந்ததால் கிறீஸ்துவ சமூகத்துக் கும் அநேக இடையூறுகள் ஏற்பட்டன. சங். கோஸியூத்தி, சங். மரியானே, சங். அத்தூனஸ் முதலிய சுவாமிமார்கள் பாலகாட்டை முறையே விசாரணை செய்தனர். இதே காலத்தில் மராத்தியர் அல் லது மொகலாயர்களின் குதிரைப் படையெடுப்பு நடந்தது.

காக்காவேரியில் சங். பெதரிச்சி சுவாமியாருக்குப் பதிலாக சங். சாய்வா சுவாமியார் விசாரணை செய்தார். அவர் (அநேகமாக வெள்ளாண்டி வலசையில்) மிஷனிலேயே மிக அழகு வாய்ந்த கோவிலைக் கட்டினார். அவர் அவஸ்தைக்குச் சென்றபோது காய்ச் சல் கண்டு, சங். அத்தூனஸ் சுவாமியாரால் சிங்கம் பேட்டைக்கு (பூதப்பாடி) கொண்டுவரப்பட்டு, தனது 39-ஆவது வயதில் இறந்து போனார். அவருடைய சடலம் சிங்கம்பேட்டையிலே அடக்கம் செய் யப்பட்டது. சங். அல்வாரெஸ் சுவாமியாரின் கல்லறையின் அரு கில் 15-1-1726 என்று காலம் குறிப்பிடப்பட்டுள்ள கல்லறை அவ ருடையது தானே தெரியவில்லை. அவருக்குப் பிறகு சங். மனுவேல் ஹென்ரிக்கஸ் அல்லது ரோட்ரிக்கஸ் சுவாமியார் காக்காவேரியைக் கண் காணித்தார். பஞ்சம் தொடர்ந்து வந்தது. பஞ்சத்திற்குக் கார ணம் கிறீஸ்துவர்கள்தான் என்று அதிகாரியிடத்தில் இந்துக்கள் கூறினபோது, அவன் ஆத்திரமடைந்தவனாய், "உங்கள் தேவர்க ளுக்கு சக்தி அவ்வளவு குறைந்துபோய் விட்டது என்றால் அவர்கள் போகட்டுமே." என்றான்.

## 1728 — 1735-ஆம் ஆண்டுக் கடிதங்கள்.

தர்மபுரியை சங். பெர்நார்து கார்சியா சுவாமியார் விசாரணை செய்தார். சங். மனுவேல் தெல்மாயிதா கண்காணித்து வந்த பால காட் பகுதியை 1727-இல் பாஜிராவின் தலைமையில் 20,000 மராத்

தியர்கள் தர்மபுரியின்மீது படையெடுத்தனர். போர்மூண்ட போது அந்த இரண்டு சுவாமிமார்களும் கிறீஸ்துவர்களும் ஆலம்பாடி மலைகளுக்குச் சென்று அங்கே மூன்று மாதங்கள் தங்கி இருந்தனர். போருக்குப் பிறகு தங்கள் விசாரணைகளுக்கு ஆவ்விரு குருக்களும் திரும்பி வந்தபோது கோவில்கள் தீக்கிரையாகிக் கிடந்த கோரக் காட்சியைக் கண்டனர். சங். கார்சியா சுவாமியார் பூதப்பாடிக்கு அனுப்பப்பட்ட பின் சங். அந்தோணியோ பெரெய்ரா சுவாமியார் தர்மபுரியை விசாரணை செய்தார். சங். தெல்மா:பிதா சுவாமியாருக்குப் பதிலாக சங். மனுவேல் ஜோசப் பாலகாட் பகுதியைக் கண்காணித்தார். பிறகு **1735**-இல் சங். முச்சி சுவாமியார் வந்தார். இவர் தாசிரிகளில் ஒருவன் மனந்திரும்பிய காரணத்தால் எழுந்த கலாபனையின் போது காடித் தலைவனிடமிருந்து கிறீஸ்துவர்களுக்குப் பாதுகாப்பு பெற்றுத் தந்தார்.

அவதூறுகளும் துன்புறுத்துதல்களும் சங்கிலித் தொடர் போல் வந்துகொண்டே இருந்தன என்று சங். ரோட்ரிகஸ் சுவாமியார் காக்காவேரியிலிருந்து எழுதினார். ஆனால் செந்தாரப்பட்டியிலிருந்த ஒரு முஸ்லீம் கிறீஸ்துவர்களின் சார்பாகப் பேசினார். இந்துக்கள் சேலம் சேரியிலிருந்த கிறீஸ்துவர்களுக்கு கோவில் கட்ட உதவி செய்தனர். பஞ்சம், பிணி, போர் முதலிய மூன்றும் வீறுகொண்டு எழுந்து மக்களை அங்கலாய்த்தன. இந்துக்கள் ஒரு மந்திரியக்காரனைப் பார்த்து சாதி நீக்கம் அல்லது சத்தியவேதம்—இவற்றில் ஒன்றைத் தெரிந்துகொள்ளச் செய்தனர். அவன் தன்னுடைய மாந்திரிய வேலைகளை மறப்பதற்கு கிறீஸ்து வேதத்தில் சேர்வதை விட சிறந்த வழி வேறு கிடையாது என்று அறிந்து மெய்மறையில் சேர்ந்து கொண்டான்.

**1735** இல் சங். ஜான் இஞ்ஞேஸியஸ் என்ற ஒரு புதிய குரு காக்காவேரியை விசாரணை செய்தார். அப்போது விசுவாசத்தை மறுதலித்த ஒரு கெட்ட கிறீஸ்துவன் இந்துக் கோவிலைக் கட்டிக் கொண்டிருக்கும் போது, கற்சிலைகளைப் பார்த்து நையாண்டி செய்தான். கிறீஸ்துவர்களுக்கு விரோதமான ஆண்டி ஒருவன் அதை அறிந்து கொண்டு தேவர்களுக்கு நிந்தை ஏற்பட்டது என்று சேல நீதிமன்

றத்தில் வழக்கு தொடுத்தான். சங். இஞ்ஞேஸியஸ் சுவாமியார் நீதி மன்றத்துக்கு வந்து குற்றம் செய்தவனுக்காக அருமையாகப் பேசினுர். நீதிபதி சுவாமியார் கூற்றை ஆமோதித்து, சுவாமியாரை மேள தாளத்துடன் அவருடைய கோவிலில் விட்டு வரும்படி கட்டளேயிட்டார். கோபத்தால் குமுறியிருந்த ஆண்டிக்கு சலுகை வயய்ந்த ஒரு கிறீஸ்துவன் சில வெகுமதிகளே வழங்கி அவனேச் சாந்தப் படுத்தி அனுப்பி விட்டான்.

சங். இஞ்ஞேசிய்ஸ் சுவாமியார் ஒரு இந்து குருவை மனந் திருப்பினுர். அவன் கிறீஸ்துவ மதத்தைத் தழுவுவதற்குமுன் ஒரு பஞ்சாங்கக் காரனுய்—மாந்திரீகனுய் இருந்தான். தனது மந்திர தந்திரங்களால் அதிக லாபம் அடைந்தான். ஆனுல் அவனுடைய மாந்திரீயச் சக்தி எப்படியோ திடீரென மறைந்துவிட்டது எனவே அவனுடைய வாடிக்கைக்காரர்கள் ஒருவர் ஒருவராக அவனிடம் வருவதை நிறுத்திவிட்டனர். மேலும் அவனுடைய உடைமைகளில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது: அநேக ஆடுகள் செத்தன; அவனது இரு குழந்தைகள் இறந்தன. சிலேகளுக்குப் பல பலிகள் இட்டும் இழந்த சக்தி அவனுக்குத் திரும்பிவந்த பாடில்லே. பயங்காக் காட்சிகள் கண்டான். கடைசியாக நோய்வாய்ப்பட்டு, மனமுடைந்து, பேசாமடந்தை ஆனுன். அப்போது சங். இஞ்ஞேசியஸ் சுவாமியாரின் உபதேசியார் அவனேச் சந்தித்து, சத்திய வேதத்தைப்பற்றி அவனுக்கு எடுத்துக் கூறினுர். எந்த இந்து குரு தேவ அருளால் தனது மனதைத் தேற்றிக்கொண்டு, மெய்மறையை விரும்பி ஏற்று, ஞானஸ்நானம் பெற்றுன்.

ஒரு பிராமணனின் நிலத்தில் வேலே செய்துவந்த நான்கு கிறீஸ்துவக் குடும்பங்கள் சங். இஞ்ஞேசியஸ் சுவாமியாருக்கு நல்ல வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர், கிறீஸ்துவர்கள் இந்தவிதமான ஆடம்பர வரவேற்பை தங்களுக்கும் தங்கள் சிலேகளுக்கும் இதுவரை செலுத்தாதிருந்ததைக் கண்டு பொருமை அடைந்த அந்தணர்கள் சில ஆட்களேக்கொண்டு அந்தக் கிறீஸ்துவர்களில் முக்கியமானவனே அடிக்கச் செய்தனர். பிறகு சுவாமியார் அந்த வழியில் வராமலிருக்க ஆட்களே வைத்துத் தடுத்தனர்.

சங். இஞ்ஞேசியஸ் சுவாமியார் விஷயத்தை அறிந்துகொண்டு தனது மக்களைப் பாதுகாப்பதற்காக நீதிபதியிடம் சென்று ஒரு ஓலை பெற்று வந்தார். அக்காலத்தில் அந்தணர்களைச் சாதாரண மாகத் தண்டிக்கக்கூடாததனால், அக்கிறீஸ்துவர்களின் அந்தண எசமானர்களைக் கடிந்து பேசி அனுப்பினார் நீதிபதி.

அநேகமாக சங், இஞ்ஞேசியஸ் சுவாமியார் செந்தாரப்பட்டி யிலிருந்த பஞ்சமக் கிறீஸ்துவர்களை இரவில் பந்தலில் சந்தித்தார்.

### 1740—44 ஆண்டுக் கடிதங்கள்.

1740-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ஆம் தேதி எழுதப் பட்ட ஆண்டு அறிக்கை மூலமாக காக்காவேரியை வாலிப பிரெஞ் சுக் குரு சங். குஸ்தோத் அர்னேவும், பூதப்பாடியை சங். பிரான் செஸ்கியும், கோவிலூர்—தர்மபுரியை சங். முசியும், கப்பிகனுத்தியை சங். பிரான்சிஸ் மர்த்தினும் கண்காணித்து வந்தனர் என்று தெரிய வருகிறது.

### சேலமிஷன் வளர்ச்சியின் உச்சநிலை - 1740—50

சந்தா சாயபு திருச்சியில் சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்து வந்தான். இராணி மீனாட்சி அம்மையார் அவன் ஆட்டி வைத்த கைப் பாவையாக விளங்கினாள். சந்தா சாயபுவினுடைய இரு தோழர்கள் திண்டுக்கல் மதுரை கவர்னர்களாகஇருந்தனர். சந்தா சாயபு கரூரை முற்றுகையிட்டு, 1739-இல் நாமக்கல்லைத் தாக்கப்போவதாக அச் சுறுத்திக் கொண்டிருந்தான். ஆனால் இவனை அடக்குவதற்கு பங்காரும், தஞ்சாவூர் பிரதாப சிங்கும் சதாரா மராட்டியரின் உதவி யை நாடினர். 60,000 மராட்டியக் குதிரை வீரர்கள் திருச்சியை நோக்கிச் செல்லும் வழியில் கொங்கு நாட்டைத் துவம்சம் செய்து சென்றனர். அவர்கள் சென்ற வழிகளிலெல்லாம் நாசம், பயங் கரக் கொள்ளை, நெருப்பு, பஞ்சம் முதலியன தொடர்ந்து சென் றன. போர்க்களத்தில் ஆயிரக்கணக்கான வீரர்கள் இறந்தனர். அல்லது படுகாயமடைந்தனர்; எஞ்சியவர்கள் காடுகளுக்கும் மலை களுக்கும் சென்று தப்பினர். நம் கோயில்கள் பல தீக்கு இரை

யர்யின. கர்நுடகம், சேலம், கொங்கு முதலிய நாடுகளில் இருந்த குருக்கள் அனைவரும் பாண்டிச்சேரி, கொல்லேகால் அல்லது மைசூரின் மேற்குப் பகுதிக்குச் சென்றுவிட்டனர். ஒரு போலி இராஜா மூன்று ஆண்டுகள் கொங்கு நாட்டை ஆண்டான். **1743**-இல் போரில் வெற்றிபெற்ற மொராரி ராவ் கோர்ப்பாடு சதாராவுக்குத் திரும்பிச் சென்ற பொழுது கொங்கு நாட்டு மக்கள் பல இன்னல்களையும் சேதங்களையும் மறுபடியும் அனுபவித்தனர்.

காக்காவேரியை சங். அர்னே சுவாமியார் விசாரணை செய்து வந்தபோது அவ்வூர் பாளையத்தார் கிறீஸ்துவ மக்களுக்கு எப்பொழுதும் தொந்திரவு கொடுத்துவந்தார். ஒரு நாள் இரவு சுவாமியாரது வீடு தீ பற்றிக்கொண்டது. ஆனுல் சுவாமியார் புதுமையாக உயிர் தப்பினுர். சங். பிரான்செஸ்கி சுவாமியார் பூதப்பாடியில் வசித்த அரச பிரதிநிதியைக் கண்டு அந்த ஊர் மணியக்காரனுக்கு எதிராக ஒரு சட்டம் பெற்றுர். அக்காலத்திலேயே பெண்களில் சிலர் அப்போஸ்தலிக்குச் சேவை செய்திருக்கின்றனர். அதற்குச் சான்ருக காக்காவேரியில் ஒரு பெண் தனது கணவனுலும் உறவினராலும் மிகுந்த இன்னல்களை அனுபவித்து பிச்சைக்காரியாகக் கோவிலின் அருகே வசித்து வந்தாள். அவள் ஞானுபதேசம் கற்றுக் கொடுப்பாள்; நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் கூறுவாள்; கிறீஸ்துவர்களுக்கு உற்சாகமூட்டுவாள்; விசுவாசத்தை இழந்த கெட்டக் கிறீஸ்துவர்களை மனந்திருப்பிப் புண்ணிய வழியில் நடக்கச் செய்வாள்.

மராட்டியப் படையெடுப்பின்போது சங். அர்னேசுவாமியார் நோய்வாய்ப்பட்டு மலையாள வழியாக பாண்டிச்சேரியை அடைந்து, போர் முடிந்தபின் தன் பங்குக்கு வந்தார். சண்டை முடிவடைந்தமைக்கு தேவதாய்க்கு நன்றி செலுத்தும் முறையில் சேலத்தில் ஒரு ஆடம்பர சுற்றுப்பிரகாரம் நடந்தது. அதில் அரசப்பிரதிநிதி தனது பரிவாரங்களுடனும் உத்தியோகஸ்தர்களுடனும் கலந்துகொண்டார்.

கோவிலூரை சங். முசி சுவாமியார் கண் காணித்துவந்தார். அவருடைய இரண்டாண்டு விசாரணைக் காலத்தில் மைசூருக்

கும் கொங்கு நாட்டுக்கும் அதன்பின் நவாபுகளுக்கும் மராட்டியர் களுக்கும் ஆக இரண்டு சண்டைகள் நடந்தன. 1742 இல் சங். முசி சுவாமியார் பூதப்பாடிக்குச் சென்றார். அவருக்குப்பின் சங். அந்த்ராத் காக்காவேரியை விசாரணை செய்தார். 1743 ஆம் ஆண்டில் மொரரரி ராவின் மராட்டிய சைனியம் திருச்சியிலிருந்து சதாராவுக்குச் சென்றபோது மராட்டிய வீரர்கள் கொள்ளைக்கூட்டத்தினரைப்போல் நடந்துகொண்டனர். இச்சமயத்தில் சங். அந்த்ராத் சுவாமியார் ஆலம்பாடி மலைகளுக்குச் சென்றார். அங்கே கப்பிகனுத்தியிலிருந்து ஓடிவந்த சங். வியேரா, அருபப்பள்ளியிலிருந்துவந்த சங். ராமோஸ் முதலிய குருக்களைக் கண்டார். சங். வியேரா சுவாமியார் சங். பிரான்சிஸ் மார்த்தின் சுவாமியாருக்குப்பின் கப்பிகனுத்தியை விசாரணை செய்தார். சங். பிரான்சிஸ் மார்த்தின் அனெக்கல்லை முக்கியமான இருப்பிடமாகத் தெரிந்துகொண்டார். சங். மனுவேல் ஜோசப் சுவாமியாரை அனெக்கல் பாளையத்தார் ஊரைவிட்டு வெளியேறும்படி சொன்னார். ஆனால் பாளையத்தாரின் மகன் ஆட்சிக்கு வந்தவுடன் சுவாமியாரை வரவழைத்து, மிகுந்த மரியாதையும் உபசரிப்பும் செய்தான்.

## பாரமஹாலிலிருந்த துளுவவேளாளர் — முதலியார்

மருதேரி, கம்மனெல்லூர், எலத்தகிரி முதலிய ஊர்களிலிருந்த துளுவவேளாளர்கள் மனந்திரும்பிய வரலாற்றைக் கடிதங்கள் வாயிலாகவேனும் அறிதற்கில்லை. அவர்களுடைய சரிதம் ஒரு யூகத்தின் மேல் தான் வரையப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய 1670 இல் காவேரிப்பட்டினம், பண்ணுந்தூர், பாரூர் முதலிய இடங்களிலுள்ள புதுக் கிறீஸ்துவர்களை தர்மபுரி மதகுரு துன்புறுத்தினார். பாரமஹாலிலுள்ள இந்த மூன்று இடங்களும் சங். சீமோன் மார்த்தின் (1664) சங். ஜோசப் முசியாரெல்லி (1674) சங் சிமோன் தாமஸ் முதலியோர் வேதம் போதித்த மருதேரி என்ற ஊரைக் காட்டுகின்றன. அதே காலத்தில் சங். ஃபெரெய்ரு சுவாமியாரும் அர்ச். அருளானந்தரும் அத்திப்பாக்கம், கோர்த்தாம்பேட்டை முதலிய இடங்களிலுள்ள கிறீஸ்துவ

முதலியார்களைச் சந்தித்துவந்தனர். இக்கிறீஸ்துவர்களுக்கு மருதேரி, கம்மனெல்லூர் முதலிய ஊர்களிலுள்ள முதலியார்கள் உறவினர். அவர்கள் எல்லோரும் வெற்றிலைக்காரர்கள் அல்லது நெசவாளிகள்.

**1750** இல் சங். மோதுாயி சுவாமியார் கோர்த்தாம் பேட்டை-செங்கம். ஊத்தங்கரைக்கு வடகிழக்கிலுள்ள காளும்பட்டி முதலிய இடங்களைச் சந்தித்தார். படகர்கள் (வடக்கத்தியார்) மனந்திரும்பியபின் (**1712** இல் **37** படகர்கள் கிறீஸ்துவர்களாக இருந்தனர்) அதிகாரியிடமிருந்து ஒரு கிராமத்தைப்பெற்று, அங்கே ஒரு கோயில் கட்டினர். இந்தக் கிராமம் அநேகமாக நாகையம் பேட்டை அல்லது கம்மனெல்லூர் ஆக இருக்கவேண்டும். படகர் என்ற சொல் பொதுவாக தெலுங்கு மக்கள் என்பதைக் குறிக்காமல், வடக்கிலிருந்து வந்தவர்கள் என்று காட்டுகிறது. இச்சமயத்தில் இராஜா தேசிங்கினுடைய திருப்பி அனுப்பப்பட்ட சிப்பாய்கள் ஜிஞ்ஜிக்கோட்டையிலிருந்து பாரமஹாலுக்கு வந்தனர். எலத்தகிரியிலுள்ள தோட்டக்காரக் குடும்பத்தின் முன்னோர் அவ்விதம் வந்தவரே.

**1740**க்கு முன் ஜலித்திகிரி (ஜிட்டோபன ஹல்லி) என்ற கிராமத்திலிருந்த புதுக்கிறீஸ்துவர்களை இந்துக்கள் துன்புறுத்தினர். ஆதலால் கிறீஸ்துவர்கள் மூர்களினால் பாதுகாக்கப்பட்ட ஜெகதேவிதுர்க்கம் கோட்டையில் குடியேறினர். ஆனால் **1740** இல் மராட்டியப் படையெடுப்பின் போது வேறொரு ஊருக்குச் சென்று அந்த ஊருக்குப் புதூர் என்று பெயரிட்டனர். சங். முசி சுவாமியார் கோவிலூர்—திருப்பத்தூருக்குச் செல்லும் பொழுது வழியில் அவர்களை அடிக்கடி சந்தித்தார். புதூரில் ஒரு கொள்ளை நோயால் அநேக கிறீஸ்துவர்கள் இறந்ததால் இந்துக்கள் அந்த ஊரைச் சாவூர் என்று அழைத்தனர். அதன் பின் மராட்டியர்கள் அச்சிறு கிராமத்தைக் கொள்ளையடித்து நெருப்புவைத்தனர்; சிலரைக் கொன்றனர்; சிலர் சிதறி ஓடிவிட்டனர். ஜாதிமணியம், தாசிரிப்பள்ளி, என்னம்பள்ளி முதலிய எலத்தகிரிக் கிறீஸ்துவக் குடும்பங்கள் இந்த வீரக் கிறீஸ்துவர்களின் வழித்தோன்றல்களாக இருக்க வேண்டும். சாதிமணியக் குடும்பத்தின் முன்னோர் ஜெகதேவி

பாளையம், பொக்குப்பள்ளி, அங்கனமலை, பெய்பாளையம், பொக்குப்பள்ளி, கொட்டூர், மாட்டார்லாப்பள்ளி முதலிய கிராமங்கள் மேல் அதிகாரம் செலுத்த உரிமை பெற்றிருந்தார் என்று கருதப்படுகிறது. இந்தக் கிறீஸ்துவர்களில் சிலர் ஜிட்டோபனஹல்லியில் தங்கியிருந்திருக்கவேண்டும். ஏனென்றால் தோட்டக்காரக் குடும்பம் திப்புசுல்தானின் படையெடுப்புக்குப் பிறகு எலத்தகிரியில் நிலம் வாங்குவதற்கு முன் ஜிட்டோபனஹல்லியின் அருகே இருந்தது. எலத்தகிரியிலுள்ள நடுவீதிக் குடும்பத்திற்கு கீளவாலி (கம்மனெல்லூர்), பருகூருக்கு அருகிலுள்ள மல்லாப்பாடி, நாகமங்கலம் முதலிய கிராமங்களில் இற்றைக்கும் உறவினர் உண்டு. இக்குடும்பம் அகரம் மருதேரியிலிருந்து எலத்தகிரிக்கு வந்தது. கிருஷ்ணகிரி முதலியார்களின் முன்னோர் கரடி சின்னப்பன் என்ற கீர்த்திவாய்ந்த வீரன். அவர் ஏறக்குறைய **1750** இல் பிறந்தார். அவருடைய பங்காளிகள் அப்பொழுது அங்கனமலை, என்னம்பள்ளி முதலிய இடங்களில் வசித்துவந்தனர். பாரமஹாலிலுள்ள கிறீஸ்துவ முதலியார்களுள் அநேகர் ராணுவத்தில் சேர்ந்துகொண்டனர். அந்தப் பரம்பரை இயல்பு அவர்களிடையே இருந்துவருகிறது. இரண்டாம் உலகமாயுத்தத்தின் போது இவர்களில் அநேகர் இராணுவத்தில் சேர்ந்தது இக்கூற்றுக்குச் சான்றாகும். ஆனால் கொல்லப்பட்டியான் குடும்பத்திலிருந்து திரிச்சிராப்பள்ளி, சென்னை முதலிய இடங்களுக்கு உபதேசிமார்கள் சென்றனர். மிக உறுதியுள்ள விசுவாசத்தைக் காட்டிய வீரக்கிறீஸ்துவர்களின் வழிவந்தவர்களான எலத்தகிரிக் கிறீஸ்துவர்களிடமிருந்து குருக்கள் வெகு விரைவில் வருவார்களாக!

## 1750—53 ஆண்டுக் கடிதங்கள்:—

சங். பிரான்செஸ்கி சுவாமியார் இருபதுவருட கடின உழைப்பிற்குப்பின் காலமானார். சங். முச்சி, சங். குஸ்தோத் அர்னோ, சங். ஜோசப் அந்த்ராத் முதலானோர் கோவாவுக்குத் திரும்பி வரும்படி அழைக்கப்பட்டனர்.

1747 இல் விசுவாசிகளை விசாரிக்கும் முறையில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. இதற்குமுன் மிஷனரிகள் தாழ்த்தப்பட்ட

கிறீஸ்துவ சமூகத்தினரை இரவில் இரகசியமாகக் கவனித்துவந்தனர். ஆனால் பாப்பரசரின் உதவி பெற்று தீண்டப்படாத சமூகத்தினருக்கென ஐந்து குருமார்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் மூவர் சேலத்தில் உழைத்தனர். சங். மனுவேல் சோவாரஸ் களங்கானியை உறைவிடமாகக்கொண்டு தொப்பையாற்றுக்குத் தெற்கில் விசாரணை செய்தார். பின்னர் கிராங்கனூரில் இருந்துவந்த சங். அந்தோணி ஜோசப் கர்த்தனும் அவரோடு உழைத்துவந்தார். தர்மபுரி—பாரமஹாலில் சங். திமோத்தி சேவியர் லளியத்தை உறைவிடமாகக்கொண்டு (லளியத்திற்கு மேற்கே உள்ள கல்லறை மேட்டுக்கு அருகில்) விசாரணை செய்தார். சங். தெலெமோஸ் கோடுரை (அரோபல்லி) இருக்கையாகக்கொண்டு பங்களூரையும் பாலகாட்டையும் கண்காணித்துவந்தார். தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்காகச் சேவை செய்த மிஷனரிகளின் தொண்டுகளைப்பற்றிய அறிக்கை ஒன்றும் கிடையாது. இதே காலத்தில் லளியத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள கோவிலூரில் சங். பிரான்சிஸ் மெனசஸ் சுவாமியார் மேன்குலக் கிறீஸ்துவர்களைக் கவனித்துவந்தார்.

1750 இல் மைசூர் மிஷன் தனது வளர்ச்சியில் உச்சநிலையை அடைந்தது. சேலத்தில் அப்பொழுது நான்கு பங்குகள் இருந்தன; ஆறு குருமார்கள் இருந்தார்கள்.

1. **தாலகாட்:** மேன்குலத்தோருக்காக **காக்காவேரிப் பங்கு.** வெள்ளாண்டி வலசை, மோஹனூர், பாகல்பட்டி, சின்னப்பன்பட்டி, சவரியூர், விரலிக்கட்டூர், சம்பள்ளி, நாயம்பாடி, பழைய செட்டியப்பட்டி (ஓமலூர் ரஸ்தரவில்) முதலியன விசாரணைகள்.

2. **களங்கானிப்பங்கு:** தாழ்ந்த குலத்தோருக்காக சேந்தமங்கலம், கருப்பன்பட்டி, பவுத்திரம், வராகூர், மேட்டுப்பாளையம் (பேட்டைப்பாளைத்துக்கு அருகில்). நாமகிரிப்பேட்டை, சொந்தாரப்பட்டி, நாரியப்பனூர், சேலம் சேரிகள் (அந்தேரிப்பட்டி) முதலியன விசாரணைகள்.

3, **தர்மபுரி :—** பாரமஹாலில் கோவிலூர்ப்பங்கு;

மேன் குலத்தோருக்கு கொளகத்தூர், கடகத்தூர், சாவுடியூர் ? கொத்தாவூர், நெல்லிமரத்துப்பட்டி, ஆலம்பாடி, கொட்டம்பட்டி, கொல்லப்பட்டி? செல்லியம்பட்டி? காஞம்பட்டி, மருதேரி, கோவிலூர்—திருப்பத்தூர் முதலியன விசாரணைகள்.

**4. லளியம் பங்கு :—** தாழ்ந்த குலத்தோருக்கு சாவலூர், சௌக்கார்பட்டி, சித்தூர், நார்த்தாம்பட்டி, தர்மபுரி, பைரனத்தம் பள்ளிப்பட்டி, குறும்பேரி, வாணியம்பாடி, கிருஷ்ணபுரம், கங்குந்தி முதலியன விசாரணைகள்.

**5. பாலகாட்டில் ஆனெக்கல் பங்கு:** சிலுவைக் குப்புலு (மரதனஹல்லி, தாசிரிப்பட்டி, மதகொண்டபள்ளிக்கு மேற்கில் உள்ள சிலுவைக்குப்பம்) முதலியன விசாரணைகள்.

**6. பெங்களூர் பங்கு:** கப்பிகனுத்தி, ஹரலே மத்திகிரி, எடப்பள்ளி (சின்னுத்தி) தெங்கணிக்கோட்டை முதலியன விசாரணைகள்.

எனவே 1750-இல் இரு மிஷனரிகள் தாலகாட்டிலும், இருவர் தர்மபுரி—பாரமஹாலிலும், இருவர் பாலகாட்டிலும் ஆக ஆறு குருமார்கள் சேலத்தில் இருந்தனர்

மேன்குலக் கிறீஸ்துவர்கள் அதிகமாயிருந்தனர். அவர்களில் பெரும்பான்மையோர் வன்னியர், துளுவ வேளாளர், வேளாளர், வடுக வண்ணர், ஆசாரிகள், முதலிகள், சில கொங்கு கவுண்டர், கொங்கு சாணர், செம்படவர், கள்ளர், உப்பிலியர், கொள்ளர், இருளர் முதலிய பலதிறப்பட்டோர் இருந்தனர்.

கீழ் குலத்தவர்களில் பெரும்பான்மையோர் கொள்ளியர் (நெசவாளிகள்), வாத்தியக்காரர்கள், கட்டிவலங்கை, சாயவலங்கை, சேனையில் லஸ்கார், பண்ணையாள், பள்ளர், வண்ணர், நீர்கட்டி, கொம்புக்காரர் (பகடை) முதலியவர்கள் இருந்தனர்.

அநேகமாக எல்லா வன்னியர்களும் அமைதிக் காலத்தில் சாகுபடி செய்தனர்; போர்க் காலத்தில் சிப்பாய்களாயிருந்தனர்.

குறுநில மன்னர்களிடமிருந்து கவுண்டர்கள் (வன்னியர்) பெற்ற நிலங்களைச் சாகுபடி செய்தனர். சிறு கோட்டைக் கொத்தளங்களை நாயக்கரின் (வன்னியர்) கீழ் காவல் புரிந்தனர். கிராமங்களில் இந்துக்களின் கீழ் அரசியல் அல்லது மதத் தொண்டுகள் செய்து வந்த பெரும்பான்மை ஊழியர்களுக்கு திவ்விய நன்மை கொடுக்கப் படவில்லை. ஆனால் ஐம்பது வருடங்களுக்குப்பின் அவர்கள் இரா னுவத்தில் சேர்ந்துகொண்டபோது இந்து எசமானர்களின் வரம்பு மீறிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தனர்.

**1650** முதல் **1750** வரை நூறுவருட காலமாக கூட்டங் கூட்டமாக மனந்திரும்புதல் நிகழவில்லை. ஒவ்வொரு மிஷனரியும் நல்ல பயிற்சி பெற்ற உபதேசிமார்களை வைத்திருந்தனர். அவர்க ளில சில பிராமணர்களும் உண்டு. சாதாரணமாக நீண்ட நாள் தாயாரிப்பு அல்லது சோதனைக்குப் பின்தான் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அநேக சமயங்களில் புதுக்கிறீஸ்துவர்கள் தங்கள் இனத்தவரின் அப்போஸ்தலர்களாக விளங்கினர். அடுத்தடுத்து நிகழ்ந்த வேத கலாபனைகள், படையெடுப்பின்போது மாதக் கணக் காக காடுகளில் அல்லது மலைகளில் பதுங்கி இருத்தல், பஞ்சத்தி னல் ஏற்பட்ட கொடுமையை குருவானவரோடும் உபதேசிமார்க ளோடும் பங்கிட்டு அனுபவித்தல் முதலியன விசுவாசிகளுடைய அன்பையும் ஐக்கியத்தையும் அதிகப்படுத்தின. கிறீஸ்துவர்கள் குருமார்களுக்கு எல்லாக் காரியங்களிலும் அடங்கி நடந்த விதம் இந்துக்களை ஆச்சரியப்படுத்தினது. சாவிலிருந்து அதிசயத்தக்க விதமாகத் தப்புதல், ஆச்சரியத்தக்கவிதமாகச் சுகம் பெறல், பஞ்ச காலத்தின் போது பிரார்த்தனை, விழா முதலியவற்றிற்குப்பின் எதிர் பாராதவிதமாக மழை பெய்தல், கிறீஸ்மஸ், பாஸ்கு முதலிய விழாக் களுக்கும், அவற்றைச் சிறப்பிக்க நடத்தப்படும் நாடகங்களுக்கும் மக்கள் திரளாகக் கூடுதல், கிறீஸ்துவர்களைத் துன்புறுத்தியவர் களுக்கு பயங்கர அகால மரணம் அல்லது தண்டனைகள் வருதல், கிறீஸ்துவப் பெண்கள் புறமதத்தினரை ஒரு போதும் மணம் செய்து கொள்ளாதது, கிறீஸ்துவ உறவினரில் மாப்பிள்ளைகள் தேட நீண்ட பயணம் செய்தல் அல்லது மணமாகாமலே இருத்தல் முதலியன புறமதத்தினரையும் சத்திய வேதத்தில் சேரச் செய்தன.

சந்நியாசிகளின் வாழ்க்கை முறைகளை நுணுநுணுக்கமாக அனுசரித்த மிஷனரிகளில் ஜீவியம் மிகக் கடினமானது. அடிக்கடி கால் நடையாக நடந்து, எளிய உணவு கொண்டு, எளிய ஆடை உடுத்தி, இராக்காலத்தில் தங்க இடமின்றி, ஓரிடத்தில் வரவேற்கப் பட்டு, வேறிடத்தில் விரட்டப்பட்டு, காட்டு விலங்குகளால் அச்சுறுத் தப்பட்டு, கொள்ளைக் கூட்டத்தினரால் பயமுறுத்தப்பட்டு, எங்க னும் மலேரியா வியாதியோடு போராடி மிகுந்த இன்னல்களை அனுப வித்தனர். உடல் நலனுக்காகக் கடற்கரைக்குச் செல்லாத குருக் கள் மிக அரிது.

ஆலயங்களும் கோவில்களும் மண்ணால் கட்டப்பட்டு கீற்றுக் கூரை வேயப்பட்டன. எனவே அவை நாசமடைந்த போது பெரிய நஷ்டம் ஏற்படாது. அதிகாரியின் உத்தரவோடு செங்கல், காரை முதலியவற்றால் மிகச் சில கோயில்கள் கட்டப்பட்டன. இத்தகைய கோவில்களுக்கு வடக்கு, தெற்கு, கிழக்கு முதலிய திசைகளில் மூன்று திறப்புகள் இருந்தன, ஒவ்வொரு திறப்பிலும் இரட்டைக் கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு கதவுக்கு முன்னால் ஒரு பந்தல் போடப்பட்டிருந்தது. பந்தலில் விசுவாசிகள் ஆரா தனைக்காகக் கூடினர். வெள்ளாண்டி வலசையிலுள்ள செல்வநாயகி மாதாக்கோவில் தான் சேலத்திலேயே மிகப் பெரிய கோவில். பாஸ் குத் திருநாளுக்குத் திரளாக வந்த விசுவாசிகள் தங்குவதற்கு சத்தி ரமும் தோப்பும், இருந்தன. கீழ்க்குலக் கிறீஸ்துவர்கள் தங்களுக் காக குருக்கள் வரும்வரை (1750) சேரியிலேயே இரகசியமாக ஒரு செபக் கூட்டம் வைத்திருந்தனர்.

புதிதாக மனந்திரும்பியவர்களில் சுற்றத்தாரிடமிருந்தும் பழைய மதக் குருக்களிடமிருந்தும் துன்பங்கள் அனுபவிக்காமல் இருந்தவர்கள் மிகச் சிலரே. கலியாணக் காலங்களில் உறவினரிட மிருந்தும், விழாக் காலங்களில் கோயில் வரிக்காரணமாக மதக் குருக்களிடமிருந்தும் அல்லல்கள் பல பட்டனர். கிறீஸ்துவர்களை நசுக்குவதில் மிகுந்த கொடுமை காட்டியவர்கள் விஷ்ணுவை வணங் கின தாசிரிகள்; அவர்களுக்கு அடுத்தபடியாக லிங்காயித்துக்கள். ஆனால் 1724 முதல் 1730 வரை மைசூர் அரண்மனையில் வைண

வர்களின் ஆதிக்கம் உச்ச நிலை அடைந்த போது லிங்காயித்துக்கள் தாசிரிகளிடத்தில் இன்னல்கள் அடைந்தனர்.

---

## நான்காம் அத்தியாயம்.

### பெரும் சோதனை காலம்—1750–1792

பதினெட்டாவது நூற்றுண்டின் பிற்பகுதி சேலம் மேற்றிராசன சரித்திரத்திலேயே சோதனை மிகுந்த கட்டங்களிலே ஒன்றுகும். இக்காலத்தில் பழக்கவழக்கங்களில் மாறுதல், சேசுசபைக் குருக்களின் நீக்கம், ஓயாத போர்கள். திப்புசுல்தானின் வேத கலாபனை முதலியன நடந்தன.

இச் சோக வரலாற்றைச் சரிவரத்தெரிந்துகொள்ள மிஷனரிமார்களுடைய வருஷாந்திர அறிக்கைகள் இந்த அரை நூற்றுண்டுக் காலத்திற்கு இல்லாமல் போனது மிகவும் வருந்தத்தக்கதாகும். துன்பமுற்ற கிறீஸ்துவர்களின் தளர்ச்சியுருத மனவுறுதி, இக்கட்டு வேளைகளில் தம் இனிய தாசர்களுக்கு இறைவன் தமது கருணையைத் தவருமல் காட்டி, எத்துணை இன்னல்களையும் சமாளிக்க வல்லமை தந்து, வலிமை இலார்க்கு வலிவளித்து, பெருமை கொள்பவர்களைச் சிறுமைப்படுத்தி, இறுதியில் அனைவரையும் தமது அன்பு என்னும் போர்வைக்குள் ஐக்கியப்படுத்தி அணைத்துக் கொள்ளும் அருளினைப்பற்றி ஒருவர் கூட எழுதிவிட்டுச் செல்லாதது ஒரு பெருங்குறை யாகும்.

#### பழக்க வழக்கங்களில் மாறுதல் :

கிறீஸ்துவர்கள் பொன் பெற்று விண் பெறுவதாகப் புறமதத்தினர் இன்றும் கூட எண்ணுவது அகந்தையால் ஏற்பட்ட அறியாமையாகும். சில்லறைக் காசுக்காகச் சிலுவைநாதனை நம் முன்னோர் ஏற்றுக்கொண்டனர் என்று இயம்புவது பசும் பொய்யாகும். சேலத்தின் முதற் கிறீஸ்துவர்கள் மெய்மறையில் சேரும் போது தங்களது உற்ருர் உறவினர், சொந்த இனத்தவர், அதிகாரிகள், முதலானோ

ரின் இரங்குதல், ஏசுதல், மிரட்டல், தொந்திரவு, உபத்திரவம், மத குருக்கள் அச்சமூட்டும் சாதி நீக்கம், அரசர்கள் விதிக்கும் சிறைவாசம் முதலியனவற்றையெல்லாம் பொறுத்து மேற்கொண்டனர். வான் வீட்டைப் பெறுவதொன்று தான் அவர்கள் கருதிய பேருகும். எனினும் முதற் கிறீஸ்துவர்களில் அநேகர் கிறீஸ்துநாதரின் போதனைகளுக்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்களையும் மாமூல்களையும் முதலைப்பிடியாகப் பிடித்துக்கொண்டனர். அதனுல் ரோமை அவர்களின் போக்கைக் கண்டனம் செய்தது. 1744 இல் பாப்பரசர் தமது ஆணைகளுக்கு முற்றிலும் பணிந்து நடக்க கண்டிப்பான கட்டளைபிறப்பித்தார். கிறீஸ்துவர்கள் சாதி வேறுபாட்டு முறை அனுசரிப்பதைப் பாப்பரசர் குறிப்பாகக் கண்டித்தார். தாழ்ந்த குலத்தினரை 'தீண்டக்கூடாது, தீட்டு ஒட்டும்', என்று தள்ளிவைத்தனர் நம் கிறீஸ்துவ மேன்குல மூதாதையர். 'வேதத்தில் விழுந்தவர்கள்', என்று புறமதத்தினர் தங்களைப்பற்றிக் கூறுவதைக்கேட்டு வெட்கமடைந்தனர். ஆனுல் நாம் எல்லோரும் ஆதம் ஏவையின் மக்கள் அல்லவா ? சேசுக்கிறீஸ்துநாதர் மனிதர் யாவருக்காகவும் பிறந்து, பாடுபட்டு, மரிக்கவில்லையா? இருந்த போதிலும் பாப்பரசர் அக்காலக் கிறீஸ்துவர்களின் முரட்டுப் போக்கை அறிந்து, அவர்களது மனதைக் கொஞ்சங் கொஞ்சமாக மாற்றும் பொருட்டு ஒரு சில காலத்துக்கு கீழ்க் குலக் கிறீஸ்துவர்களுக்கென உழைப்பதற்குச் சில குருமார்களை அனுப்பினுர். அம் முறையில் சேலத்தில் மூன்று குருவானவர்கள் தீண்டப்படாத சமூகத்தினருக்காக உழைத்துவந்ததை இப்புத்தகத்தில் முன்பு படித்திருக்கிறோம்.

பாப்பரசரின் கண்டிப்பான போக்கைக் கண்ட சில மேன் குலக் கிறீஸ்துவர்கள் திருச்சபையைவிட்டு நீங்கினர்; சிலர் மறைமுகமாக இருந்து பின்னர் வெளிப்படையாகப் புரட்சி செய்ய ஆரம்பித்தனர்; சிலர் குருக்களுக்கு புத்தி புகட்ட முற்பட்டனர். தாழ்த்தப்பட்டோரோடு நெருங்கி உறவாடும் மேன் குலக் கிறீஸ்துவர்களைச் சாதி நீக்கம் செய்துவிடப் போவதாகப் பயமூட்டினர். இந்தியத் திருச்சபைகள் ஏற்பட்டுவிடும் போல் தோன்றியது. சில கிறீஸ்துவர்களுடைய இந்த விபரீதமான செயல் புறமதத்தினருக்கும் இந்து அரசர்களுக்கும் மகிழ்ச்சியை ஊட்டியது. ஆனுல் இது நமது சேசு

இரட்சகருக்கு மிகவும் துன்பத்தை அளித்திருக்கும். கிறீஸ்துவர்களுக்குள் இருந்த அன்னியோன்னிய பிறர் சிநேகம் அழிந்துவிடும் போல் இருந்தது.

**சேசு சபைக் குருமார்களின் நீக்கம் :**

கிறீஸ்துவர்களுக்குள்ளே சாதி வேற்றுமை மனப்பான்மையால் குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் குருமார்கள் தங்கள் பிழைப்பிற்காகப் பெற்றுவந்த உதவி திடீரென்று வாராமல் நின்றுவிட்டது. உபதேசிமார்களுக்கும் இதர வேலையாட்களுக்கும் குருமார்களால் சம்பளம் கொடுக்க இயலவில்லை. பழைய உபதேசிமார்கள் ஒருவர் ஒருவராக இறந்தனர். புதிய உபதேசிமார்களுக்குப் பயிற்சி அளிக்கப் பணமில்லை. இந்நிலையில் இறுதியாக பங்குக்கு ஒரு உபதேசியார் மட்டும் இருந்தார்.

1759 இல் பொம்பால் என்ற போர்த்துக்கல் பிரதம மந்திரி சேசுசபைக் குருமார்களை எல்லாம் கைது செய்ய ஒரு திடீர் ஆணை பிறப்பித்தான். போர்த்துக்கல் எல்லையிலுள்ள சேசுசபைக் குருக்கள் அனைவரையும் இரக்கமற்ற விதமாக கப்பல்களிலே ஏற்றி போர்த்துக்கலுக்குக்கொண்டு சென்று விசாரணையின்றிச் சிறையில் தள்ளினான். சேலத்திலிருந்த, முக்கியமாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த, சேசுசபைக் குருக்கள் இந்த ஆணைக்குட்படாமல் தங்கள் கிறீஸ்துவர்களுடனே தங்கியிருந்தனர். கிறீஸ்துவர்களிற் சிலர் கோவாவுக்குச் சென்று குருமார்கள் தங்களோடு இருக்க உத்தரவு அளிக்கவேண்டுமென்று மன்றாடினர். ஆனால் அவர்களது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. சேசுசபைக் குருக்கள் மீது குற்றங்களைச் சாட்டிக் கைது செய்துதரும்படி கோவா ஆட்சி பீடம் மைசூர் அரசாங்கத்தைக் கேட்டபோது, மைசூர் அதிகாரிகள் சேசுசபைக் குருமார்கள் ஒரு நூற்றுண்டுக் காலமாக விசுவாசமும் சேவைமனப்பான்மையும் மிகுந்த குடிமக்களாக இருந்தனர் என்று தெரிவித்து அவர்களைக் கைது செய்து கோவாவுக்கு அனுப்ப மறுத்தனர். விசுவாசிகள் தங்கள் குருமார்களைப் பாதுகாப்பதாக வாக்களித்தனர். போர்த்துக்கல்லைப் பின்பற்றி ஸ்பெயின், பிரான்சு, நேப்பிள்

முதலிய நாடுகளும் தங்கள் எல்லைகளிலுள்ள சேசுசபைக் குருக்களை நீக்கினர். அரசர்களாலும் பகுத்தறிவாளர்களாலும் பலவந்தம் செய்யப்பட்ட பாப்பரசர் பதினான்காம் சாந்தப்பர், 1774 இல் கத்தோலிக்கு உலகில் அமைதியை நிலைநாட்ட சேசுசபையை நீக்குதல் நலம் எனக் கருதினார். 1774 இல் மைசூர் மிஷனில் ஐந்து சேசுசபைக் குருமார்கள் மட்டும் இருந்தனர்; மற்றவர்கள் எல்லோரும் ஏற்கனவே இறந்தனர். எடப்பாடியில் நடந்த அர்ச். குணகோந்து நாடகச் சுவடியிலிருந்து அவர்களில் நால்வர் பெயர்கள் தெரிகின்றன:— 1. தவமுனி ராஜரிஷி அமிர்தநாதர் (சங். பாவோனெ). 2. ஞானேந்திர ரிஷி (சங். லிசெஷித்தர்). 3. தவவேத பத்திநாதையர். 4. சத்தியநாதர், தர்மபுரியில் சங். திமோத்தேயுஸ் சேவியர் (2 அல்லது மூன்று ஆண்டுகள்). சங். லான்சலோத்தி. சங். சேவியர் தாங்தேரேயா முதலியோர் விசாரணை செய்தனர். பாலகாட்டில் சங். இராசேந்திரமும் அவருக்கு உதவியாக சங். பாவோனெயும் கொடுங்களூரிலிருந்து வந்த சங். சின்னப்பர், சங். ஞானதிக்கம் முதலிய சீரிய குருமார்களும் உழைத்தனர்.

1780 இல் மூன்று சேசுசபைக் குருக்கள் மட்டுமே உயிருடனிருந்தனர். இந்து மாமூல்களைப்பற்றிப் பாப்பரசர் இட்ட ஆணையை சட்டை பண்ணாத இரு கொங்கணிக் குருக்கள் கோவாவிலிருந்து வந்து கொங்கு நாட்டில் உழைத்தனர்.

போர்த்துக்கல் பிரதமர் பொம்பாலினது போக்கு மிஷன் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருந்தது. மனந்திருப்புதல் வேலை நின்றுவிட்டது. பழைய கிறீஸ்துவர்களுக்குத் தேவத்திரவிய அனுமானங்களை அடிக்கடி வழங்குவதற்குப் போதிய குருக்கள் இல்லை. சாதி வேறுபாட்டு மனப்பான்மையுள்ள கிறீஸ்துவ கலகக்காரர்கள் ஆண்டுக்கொரு திவ்ய பூசை எங்கோ ஒரு தூரதிசையில் கண்டு ஆனந்த எக்களிப் போடிருந்தார்கள்.

## ஓயாத போர்கள்.

1750 இல இயற்கைச் சக்திகளே போருக்கு எழுந்ததுபோல ஒரு பெரும் புயல் அந்தியூர் முதல கொளத்தூர் வரை பெருந்த

நாசத்தை விளைவித்தது. 1751 முதல் 1758 வரை மைசூர் தளபதிகள் திருச்சிராப்பள்ளியின் மேல் படையெடுத்தனர். ஹைதராலி அனெக்கல் பகுதியைப் பிடித்துக்கொண்டான் மராட்டியர்களிடமிருந்து பாரமஹாலை விலைக்கு வாங்கினான். பிரெஞ்சுக்காரர்களோடு நட்புறவு கொண்டு மைசூரை ஆண்டுவந்தான். 1767 முதல் 69 வரை நடந்த முதல் மைசூர் யுத்தம் சேல மாவட்ட முழுவதையும் வாதித்தது. திரிம்பாக்ராவ் கொங்குநாட்டிலிருந்து சேலம் வரை கொழுத்த கொள்ளையடித்துத் தப்பி ஓடினான். 1769–70 இல் பஞ்சமும் கொள்ளை நோயும் மக்கள் உயிர்களைக் குடித்தன. ஆங்கிலேயர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட சேலம் ஆறே வாரங்களில் ஹைதராலியால் பிடிக்கப்பட்டது. அதன் பின் பன்னிரண்டு ஆண்டுகள் அமைதி நிலவிய போதிலும், நாடு முழுவதிலும் இராணுவ ஆட்சி முறை இருந்தது எங்கும் வாளேந்திய சிப்பாய்கள் அணிவகுத்து நின்றனர். கோட்டை கொத்தளங்களில் வீரர்கள் குழுமி இருந்தனர். கீளமங்கலம் துப்பாக்கி, பீரங்கிகள், வெடிமருந்துகள் முதலியவற்றிற்குக் கிடங்கானது. எங்கும் யுத்த பீதி தாண்டவமாடினது. கிறீஸ்துவர்களில் அநேகர் லஸ்கர்களாகவும் சிப்பாய்களாகவும் இராணுவத்தில் சேர்ந்தனர். இவர்கள் சாதி வேறுபாட்டினால் ஏற்பட்ட இன்னல்களை மறப்பதற்காகச் சேனையில் சேர்ந்த தாழ்ந்த குலத்தவர்கள். சேனையிலும் பங்கிலுமிருந்த கிறீஸ்துவர்களைக் குருமார்கள் விசாரணை செய்தனர். ஓயாமல் நடந்த யுத்தங்களினால் மக்களின் வரிச்சுமை அதிகரித்தது. போர்க் கைதிகளை திருச்சி, தஞ்சை ஜில்லாக்களிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு இழுத்துச் சென்ற மக்கள் கூட்டம் வழியில் கிராமங்களில் தீவைத்து, சூறையாடினது.

## திப்பு சுல்தானின் வேத கலாபனை.

ஆங்கிலேயர்கள் அபகரித்துக்கொண்ட மங்களூரை திப்பு சுல்தான் 1768 இல் மீண்டும் கைப்பற்றினான். ஆனால் அது மறுபடியும் 1783 இல் ஆங்கிலேயர் வசம் வந்தது. திப்பு சுல்தான் இது கோவாக் குருக்களின் சதி என்று எண்ணினான். மறுபடியும் 1784 இல் திப்பு சுல்தான் நீண்டநாள் முற்றுகைக்குப்பின் ஆங்கி

லேயர்களிடமிருந்து மங்களூரைக் கைப்பற்றினன். அதன் பின்னர் தன் கடும் சினத்தைக் கிறீஸ்துவர்கள் மேல் செலுத்தினன். ஆயிரக் கணக்கான கிறீஸ்துவர்களை ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு வரவழைத் தான். இச் செயலுக்குப் பின்னும் திப்புவின் சினம் தீரவில்லை. தன்னுடைய ஆட்சிப்பகுதி எங்கணும் ஜிஹட் என்ற புனிதப்போரைத் துவக்கப் போவதாகக் கதறினன். கிறீஸ்துவர்கள் பிரார்த்தனை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது அவர்களை ஹுசூர் கச்சேரிக்கு அனுப்ப இரகசிய உத்திரவு கொடுத்தான் அங்கு சிலரைத் தேர்ந் தெடுத்து ஸ்ரீரங்கபட்டினத்துக்கு அனுப்பினன். கிறீஸ்துவர்களு டைய வீடுகள் காணிகள் யாவும் அரசாங்கச் சொத்துகள் ஆயின. கோவில்களின் கூரைகள் பிரிக்கப்பட்டு உள்ளிருந்த சாமான்கள் விலைகூறிவிற்கப்பட்டன. ஹுசூர் கச்சேரியில் கிறீஸ்துவ அடிமை அல்லது கண்ணியமுள்ள முஸ்லீம் இதில் ஒன்றை விசுவாசிகள் தெரிந்துகொள்ளக் கேட்கப்பட்டனர். குருமார்கள் கைது செய்யப் பட்டு நாடு கடத்தப்பட்டனர். கொங்கணிக் குருக்களும் கர்த்தனுர் களும் மலையாளக் கரைக்கு ஓடினர். சங். பாவோனெ (அமிர்தநாதர்) கைது செய்யப்பட்டு, பின் நாடு கடத்தப்பட்டார். கருமத்தாம் பட்டி யிலிருந்த அவரது அறை வீடு கொள்ளையிடப்பட்டது. அங்கிருந்த ஞானஸ்நானக் கட்டும் காணுமற்போனது. சுவாமியார் முதலில் புதுச்சேரிக்குச் சென்று, பின் பரதவநாட்டிலிருந்து மூன்றுவருடங் கள் திருவாங்கூர்—மைசூர் எல்லையில் தங்கி. மீண்டும் தன் விசா ரணைக்குச் செல்ல வாய்ப்பு தேடிக்கொண்டிருந்தார்.

அநேக கிறீஸ்துவர்கள் புலிகள் வாழ்ந்த பாலைமலை, ஆலம் பாடி, செங்கிடிமலை முதலிய காடுகளில் பதுங்கினர். வேறு சிலர் தங்களது இந்து உறவினர் அல்லது நண்பர் வீடுகளில் மறைந்திருந் திருந்தனர். சிலர் விசுவாசத்தை மறுதலித்தனர். ஒரு சிலர் தங் கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள குர்ரானைத் தழுவினதாக வெளிப்படையாகக் கூறிக்கொண்டு, உள்ளூரக் கிறீஸ்துவர்களாக வாழ்ந்தனர். ஃபிரே பவுலீனோ என்பவர் வரைந்தபடத்தில் கொல் லேகாலின் முக்கியபட்டணமாகிய பசனபுரத்தில் அநேக முகாம்களில் பிராமணர்களும் கிறீஸ்துவர்களும் கைதிகளாக இருந்தனர் என்ற குறிப்பிலிருந்து அநேக கிறீஸ்துவர்கள் திப்புசுல்தானின் மதவெறி

யை வெளிப்படையாக எதிர்த்தனர் என்று தெரிகிறது. சேலம் கசட்டை எழுதிய லெ ஃபனு சேலமாவட்டத்திலுள்ள கிறீஸ்துவர் களில் பாதிப்பேர்கள் நாடுகடத்தப்பட்டனர் என்று தெரிவித்திருக் கிறார். வெள்ளாண்டி வலசை, காக்காவேரி, களங்காணி, கீள மங்களத்திற்கருகிலுள்ள எடப்பள்ளி முதலிய ஊர்களிலிருந்த கோவில்கள் அறை வீடுகள் முதலியவற்றின் கூரைகள் பிரித்தெறி யப்பட்டன. பழைய மத்திகிரியில் இருந்த கோவில் இவ்வாபத்திலி ருந்து தப்பித்துக்கொண்டது. எத்துணையோ இளைஞர் வலுவந்த மாக முகமதியர்களாக்கப்பட்டு, க்ஷேலா என்ற இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். பரம்பரை, மக்கள் பட்ட பயங்கர அனுபவங்களை எடுத்துச் சொல்லவும் அஞ்சி, மௌனம் சாதிக்கிறது.

இந்த வேதகலாபனை நான்கு ஆண்டுகளுக்கு மேல் மும் முரமாக நடக்கவில்லை. சங். அமிர்தநாதர் கூறினதுபோல 1788 இல் பிரெஞ்சுக்காரர்களின் வேண்டுகோட்கிணங்கி குருமார்கள் மீண்டும் மைசூருக்குள் வர அனுமதிக்கப்பட்டனர். ஆங்கிலேயர், நைஜாம், மராட்டியர்கள் முதலிய தன் பகைவர்களோடு போராட நாட்டுக்குள் அமைதியும் சிப்பாய்களும் தேவை என்பதை திப்பு உணர்ந்து, தனது மதவெறியைச் சிறிது மறைத்துக்கொண்டான்.

★

# இரண்டாவது பாகம்:
# இராயப்பர் சபை.

## முதல் அத்தியாயம்:
## புத்துயிர் பெற்ற மிஷன்.

### இராயப்பர் சபையின் முதல் குருமார்கள்:

**சுருக்கம் :** சேலம் **1776** முதல் **1823**வரை சேசு சபைக் குருமார்கள் உழைத்துவந்த மலபார் மிஷன் சிரேஷ்டர்களிடமிருந்து ஆளும் அதிகாரத்தைப் பெற்றது. வந். பிரிகோ, வந். ஷம்பனூவா. வந். ஹெபர்ட் முதல் மூன்று சிரேஷ்டர்கள். இவர்கள் மூவரும் அபிஷேகம் பெற்ற மேற்றிராணிமார்கள். ஆனால் அவர்களுடைய அதிகாரத்தை ஏற்க போர்த்துக்கல மறுத்தது.

வந். பியர் பிரிகோ **1713** இல் பிறந்தார். **1757** இல் சையாம் மிஷன் மேற்றிராணியானார். பர்மியர்களால் சிறைபிடிக்கப்பட்டபோது, புதுச்சேரிக்கு வந்தார். தனது அறுபத்தாருவது வயதில் மலபார் மிஷன் முதல் சிரேஷ்டராக நியமனம் செய்யப்பட்டார். தமிழர் இருவருக்குக் குருப்பட்ட மளித்தார். **1791** இல் புதுச்சேரியில் இறந்தார்.

வந். பிரிகோ ஆண்டவரின் உதவி மேற்றிராணியாரும் வாரிசுமாகிய வந். நிக்கோலாஸ் ஷம்பனூவா **1734** இல் இந்தியாவுக்குவந்து, **1786** இல் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்டார். சேலத்திற்கு விசாரணை செய்யவந்த முதல் மேற்றிராணியார் தமிழர் எழுவருக்குக் குருப்பட்டமளித்தார். **1810** இல் காலமானார்.

மூன்றுவது சிரேஷ்டர் வந். லூயிஸ் ஹெபர்ட் **1763** இல் பிறந்து. **1792** இல் இந்தியாவுக்குவந்து, **1811** இல் மேற்றிராணி

யானுர். எட்டு தமிழருக்குக் குருப்பட்டமளித்தார். இவரது விசாரணை செய்யும் அதிகாரத்தை பத்ருவாதோ அனுமதிக்க மறுத்தது. முத்துக் குளித்துறையின் முதல் அப்போஸ்தோலிக்கு விக்கார் ஆக நியமனம் பெற்றுர். 1836 இல் இறந்தார்.

1776 இல், அதாவது சேசுசபை நீக்கப்பட்ட இரண்டாவது ஆண்டில், பாப்பரசர் இராயப்பர் சபைக் குருமார்களைத் தேர்ந்தெடுத்து, சேசுசபையார் நிருவகித்துவந்த கர்னுடக மிஷனை அவர்களுக்கு ஒப்புவித்தார். அப்போது உயிருடனிருந்த சேசுசபைக் குருக்களில் அநேகர் மிகவும் குறைந்த உறுப்பினர்களையுடைய இந்தப் புதிய மிஷனில் சேர்ந்துகொண்டனர். இச்சபைக்குச் சிரேஷ்டராயிருந்தவர் வந். பிரிகோ மேற்றிராணி ஆண்டவரவர்கள். சிறிது காலத்திற்குப்பின் இவர் மதுரை, மறவர் மிஷனிலும் ஆதிக்கம் செலுத்தினுர். இவருக்குப்பின் வந்த வந். ஷம்பனூவா ஆண்டவரின் ஆட்சியில், 1785 இல், மைசூர் மிஷனும் சேர்க்கப்பட்டது. அதே சமயத்தில் திப்பு சுல்தானின் வேதகலாபனை உச்ச நிலை அடைந்து, 30,000 கிறீஸ்துவர்களுக்கு ஒரு குருவானவர் கூட இல்லாத நிலைமை ஏற்பட்டது. மைசூரிலிருந்த மிஷனரிகள் ஆன்மதாகம் இல்லாதவர்களாகக் காலங் கழித்தனர். ஆனுல் புலிப்படையில் அறுநூறு பிரெஞ்சு சிப்பாய்களுக்கு இராணுவ குருவாக இருந்த சங். கிராண்ட் மோத்தே தனது உயிருக்கு வரப்போகும் பேராபத்தைப் பொருட்படுத்தாமல் இரகசியமாகப் பங்குகளிலுள்ள கிறீஸ்துவர்களைப் பராமரித்துவந்தார். வந். பிரிகோ ஆண்டவரின் பெருமுயற்சியால் இந்திய குருமார்களைத் தயாரிக்க புதுச்சேரியில் 1777 இல் ஒரு குருமடம் ஆரம்பமானது.

மூன்றும் மைசூர் யுத்தம் முடிந்தபோது (1789–91) திப்பு தோல்வி அடைந்தான். மேட்டூர், பாலகாட் முதலிய பகுதிகளை உள்ளடக்காத சேல மாவட்ட முழுவதையும் ஆங்கிலேயருக்கு விட்டுவிட்டான்; சேலத்தில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. சங். மோத்தே, சங். பாரோ முதலிய குருமார்கள் கிறீஸ்துவர்களின் அழைப்புக்கு இணங்கி, அனுமதிச் சீட்டு பெற்று, கோர்த்தாம் பெட்டிலிருந்து 1792 இல் பாரமஹால்—தர்மபுரி, தாலகாட் முதலிய

பகுதிகளிலுள்ள விசுவாசிகளைச் சந்தித்தனர். கோவிலோ அல்லது அறைவீடோ இல்லாமையால் சுவாமிமார்கள் பந்தல்களிலே தங்கினார்கள். அவர்கள் கூறுவதிலிருந்து, வேத கலாபனையின்போது ஒருவரும் இரத்தம் சிந்தி வேத சாட்சியாக மரிக்கவில்லை என்றும், ஆனால் வேத கலாபனையின் போது ஏற்பட்ட கொடுமைகளினாலும் சிறைவாசத்தினாலும் அநேகர் இறந்தனர் என்றும், அதனால் விசுவாசிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது என்றும் தெரிகிறது. அறியாமையினாலோ அல்லது தவறான விவேகத்தினாலோ விசுவாசத்தை மறுதலித்தவர்களிடம் இந்த இரு குருமார்களும் விசேஷ கருணை காட்டினர்.

சேலத்தை மேற்பார்வையிட்டு விசாரணை செய்யவந்த முதல் மேற்றிராணியார் வந். ஷம்பனூவா ஆண்டவரவர்களே. அவர் 1794 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சங். மோத்தே சுவாமியாருடனும் சங். தூபுவா சுவாமியாருடனும் சேலத்தை மேற்றிராணியார் என்ற முறையில் பார்வையிட்டார். அறுபது வயதுள்ள மேற்றிராணியார் பல்லக்கிலும், இரு குருமார்கள் குதிரைகள் மேலும் வேலூர், கிருஷ்ணகிரி, கோவிலூர்—தர்மபுரி, சங்கரிதுர்க்கம், சேலம், காக்காவேரி முதலிய இடங்களுக்குப் பயணம் செய்தனர். விசுவாசிகள் மேற்றிராணியாரைக் கூடாரம் அல்லது பந்தலில் ஆரவாரத்துடன் வரவேற்றனர். 3500 கிறீஸ்துவர்கள் பாவசங்கீர்த்தனம் செய்து, தேவ நற்கருணை உட்கொண்டனர். ஏறக்குறைய 1000 பேர்கள் உறுதிபூசுதல் பெற்றனர். வேதகலாபனை நடத்திய திப்புவின் ஆட்சியிலிருந்த பாலகாட், கொல்லேகால் முதலிய இடங்களிலிருந்தும் கிறீஸ்துவர்கள் மேற்றிராணியாரைக் கண்டு ஆசி பெற வந்தனர். வந். ஷம்பனூவா ஆண்டவர் 1795 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சேலத்தைவிட்டு திரிச்சிராப்பள்ளியை விசாரணை செய்யச் சென்றார். ஆண்டவர் திரிச்சியில் ஒரு வருடம் தங்கினார். ஆனால் பத்ருவாதோவும் ஆங்கிலேயர்களும் ஆண்டவர் அங்கிருந்தால் நாடுகடத்தப்படுவார் என்று அச்சுறுத்தினதால், மேற்றிராணியார் 1796 இல் புதுச்சேரியை அடைந்தார்.

## அந்தோணி சுவாமி என்றழைக்கப்பட்ட சங். அப்பேதூபுவா.

வந். ஷம்பனூவா ஆண்டவர் சேலத்தை விசாரணை செய்ய சங். அப்பேதூபுவா (அந்தோணி சுவாமி) என்ற குருவானவரை நியமித்தார். அவருக்கு அப்பொழுது வயது 28. அவர் இந்தியாவில் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தங்கியவர். அவருக்குத் தமிழும் ஆங்கிலமும் நன்கு தெரியும். சுவாமியாரைக் கண்டதும் தலைமறைவாக இருந்த அல்லது நாடுகடத்தப்பட்ட கிறீஸ்துவர்களில் அநேகர் என்னம்பள்ளி (எலத்தகிரி), எடப்பாடி, கோவிலூர், முதலிய இடங்களிலிருந்து சுவாமியாரைச் சந்தித்தனர். அக். கிரகாரத்தில் நத்தம உடையார்களும், சடையம்பாளையத்தில் கொங்கு மூப்பர்களும் புதிய குடியேற்றங்களை உண்டுபண்ணினர். சிப்பாய்களும் லஸ்கர்களும் பயிற்சி முகாம்களில் சேர்ந்தனர். சங். அந்தோணிசுவாமியார் எடப்பாடி, காக்காவேரி, கோவிலூர்—தர்மபுரி முதலிய இடங்களில் கோவில்களையும் சுவாமியார் வீடுகளையும் பழுதுபார்த்தார். கிருஷ்ணகிரி (அர்ச். இஞ்ஞாசியார்), ராயகோட்டை, அந்தேரிப்பட்டி (அர்ச். இஞ்ஞாசியார்), சங்கரிதுர்க்கம் (அர்ச் அந்தோணியார்), ஆத்தூர் முள்வாடி முதலிய ஊர்களில் சிப்பாய்கள் கோவில்கள் கட்டினர். காக்காவேரி, கோவிலூர்—தர்மபுரி, கோவிலூர்—திருப்பத்தூர் முதலிய பங்குகளிலிருந்த மூன்று உபதேசிமார்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது.

சங். அந்தோணிசுவாமி 1794 இல் இருந்து 99 வரை மெய்மறையை மறுதலித்த 2,000 பேர்களைத் திரும்பவும் திருச்சபையில் சேர்த்தார். அவர் வருடமுழுதும் பிரயாணம் செய்துகொண்டே இருப்பார். பங்குகளைவிட இராணுவத்தில் அதிகக் கிறீஸ்துவர்கள் இருந்ததனால் அவர்களை அடிக்கடி சந்திப்பார். இதனால் ஆங்கில இராணுவ அதிகாரிகளினது நட்பைப்பெற்று அவர்களிடமிருந்து அநேக உதவிகளையும் சலுகைகளையும் அடைந்தார். சங்கரிதுர்க்கத்தில் அம்மைப்பால் குத்தும் முறையை ஆரம்பித்தார். முகமதிய மாதை வலுவந்தமாக மணம் செய்துகொள்ளச் செய்யப்பட்ட ஒரு கிறீஸ்துவ வள்ளுவன் சிப்பாய்களுக்கு அம்மை குத்தும் வேலையை

அங்கு செய்துவந்தான். திருச்சியிலிருந்துவந்த தோட்டக்காரன் குடும்பத்தைச் சேர்ந்த கிறீஸ்துவ ஆசாரிகள் இங்கு போர்க்கருவிகளையும் யுத்த தளவாடங்களையும் செய்தனர். சில கிறீஸ்துவர்கள் ராயகோட்டையில் இராணுவத்திற்காக வாணமத்தாப்புகள் செய்தனர். பட்டாள வாத்தியக்காரர்களில் அநேகர் சேலம் ஜில்லாவிலிருந்துவந்த கிறீஸ்துவர்கள்.

முன்பு வந். ஷம்பனூவா ஆண்டவரை மதுரை மிஷனிலிருந்து துரத்திவிட்ட பத்ருவாதோவின் பெயரால் கிராங்கனூர் அதிமேற்றிராணியாருக்குப் பதிலாக வந்த நிருவாகி சங். அந்தோணி சுவாமியினுடைய கோவில்களை ஆக்கிரமிக்கக் கர்த்தனூர்களை அனுப்பினர். தாலகாட்டில் காக்காவேரி, களங்காணி, வெள்ளாண்டி வலசை, பூதப்பாடி முதலிய கோவில்களும் ஆயிரம் கிறீஸ்துவர்களும் கர்த்தனூர் வசம் வந்தன. சங். அந்தோணிசுவாமியாரை அவர் பழுது பார்த்துக் கட்டின கோவில்களுக்குக் கூட வரவிடாமல் செய்தனர். எனவே சுவாமியார் இராணுவத்திலிருந்த சிப்பாய்களைக் கவனித்து வந்தார். பத்ருவாதோவின் இவ்விதப் போக்கைக்கண்ட கிறீஸ்துவ மக்கள் சங். அந்தோணிசுவாமி ஒரு புரட்சிக்காரரோ, அல்லது பிரிவினைச் சபையைச் சேர்ந்தவரோ அல்லது மத நீக்கம் செய்யப்பட்டவரோ என்று பலவாறுக ஐயுற்றனர். சங். அந்தோணி சுவாமிக்கு எதிராக வந்த சங். பாக்கியநாதர் **1798** இல் பூதப்பாடியில் காலமானூர். அவருடைய சடலம் வெள்ளாண்டி வலசைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. கர்த்தனூர் சங். யாகப்பர் சுவாமியார் சங். பாக்கியநாதர் கல்லறையையும் சங். தேவராதநாதர் கல்லறையையும் சேர்த்து ஒரு மண்டபம் எழுப்பினர். இந்த சமயத்தில் சங். இஞ்ஞாசி சேவியர் கல்லறையில் இருந்த எழுத்துப் பலகை காணுமற் போய்விட்டது. மேற்கூறப்பட்ட பங்குகளை விசாரணை செய்வதற்குப் போதுமான குருமார்கள் தன் வசம் இல்லாதிருந்ததனல் வந். ஹெபர்ட் மேற்றிராணியார் **1811** முதல் **1833** வரை கர்த்தனூர் குருமார்களுக்கு அதிகாரம் அளித்தார்.

**1799** இல் நான்காவது மைசூர் யுத்தம் திப்புசுல்தானின் தோல்வியோடும் மரணத்தோடும் முடிந்தது. சங். அந்தோணி

சுவாமி வந். ஷம்பனூவாவின் கட்டளையின் மேல் ஸ்ரீரங்கபட்டினத்தி லுள்ள கிறீஸ்துவர்களைக் கண் காணிக்கச் சென்றார். போகும் வழி யில் முதலில் பாலகாட்டிலுள்ள மத கொண்டபள்ளிக்கு வந்தார். அங்கு வேத கலாபனை காலத்தில் புறமதத்தினரால் காப்பாற்றப் பட்ட விசுவாசிகளைக் கண்டார். பின்னர் பத்ருவாதோ மைசூரைக் கண்காணியாமல் இருப்பதை அறிந்து ஸ்ரீரங்கபட்டினத்துக்குச் சென் றார். அங்கு விசுவாசத்தை மறுதலித்த 44, 318 பேர்களைக் கண் டார். சங். அந்தோணிசுவாமியாருக்கு மைசூர் இராச்சியம் முழு வதிலுமுள்ள கிறீஸ்துவர்களைப் பராமரிக்கவேண்டியிருந்ததால், புதுச்சேரி குருமடத்தில் பட்டம் பெற்ற மூன்று தமிழ்க் குருவானவர் கள் அவருக்கு உதவி செய்ய அனுப்பப்பட்டனர். அம் மூவரில் ஒருவர் சேல மாவட்டத்தில் சேவை செய்தார்.

## ஆங்கிலேயர் ஆட்சி — மிஷனரிமார்களின் மௌனம்: 1799—1830.

அமைதியும் பாதுகாப்பும் தேவையாகவிருந்த கிழக்கிந்தியக் கம்பனிக்கு யுத்தங்கள் பெருத்த செலவை உண்டுபண்ணின. முக மதியர், பிரெஞ்சுக்காரர், மிஷனரிகள், போதகர்கள் முதலானோர் களெல்லாம் வெற்றிகண்ட ஆங்கிலேயருக்கு 1800 இல் இருந்து பீதிஅளித்த பூதங்களானார்கள். 1806ல் வேலூரில் நடந்த சிப்பாய்க் கலகம் இந்த பீதியை அதிகரித்தது. மனந்திருப்புதல் வேலை இந்துக் களின் மனதைக் குமுறச் செய்யும் என்று கம்பெனியார் அஞ்சினர்.

சேலத்தில் நிலவரி தண்டுவதற்கு இனும்தார், மிட்டாதார், ஜமீன்தார் முதலானோரில் 200 பேர்கள் ஏற்படுத்தப்பட்டனர். இதனால் பண்டைக்கால கிராம சமுதாய அமைப்பு நொறுங்கியது. புதிய நிலச்சுவான்தாரர்களின் பராமரிப்பில் காக்காவேரி, கொங்கணா புரம், மதகொண்டபள்ளி முதலிய இடங்களைத் தவிர மற்ற இடங் களில் மதம் ஓங்கி வளரவில்லை. பண்ணைகளில் மிகச் சிலகிறீஸ்து வர்கள் மட்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஓம்பாலகுத்தா, தாசிரிப்பள்ளி போன்ற சில ஊர்களில் இருந்த கிறீஸ்துவப்பண்ணை யாட்கள் விரட்டப்பட்டனர்.

ஹைதராலி, திப்பு முதலியவர்களிடம் பெற்ற பெரிய பண்ணைகளை முகமதியர் ஆங்கிலேயர் காலத்திலும் பயன்படுத்திவந்தனர். மைசூர் மன்னர்கள் நிலம் வழங்குவதில் முகமதியர்களுக்கு காட்டின தாராள குணத்தை அந்தணர்களுக்குக் காண்பிக்கவில்லை. கடகத்தூர் கோவில் நிலத்தைத் தவிர அரசாங்கம் அபகரித்த மற்ற கோவில் நிலங்களைத் திருப்பிக்கொடுக்கவில்லை,

நெப்போலியனது வெற்றி, பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் இந்திய அரசர்களது சபைகளில் இருத்தல் முதலியன பிரெஞ்சுக்காரர்கள் மேல் ஆங்கிலேயருக்கு இருந்த இயற்கையான பயம் பன்மடங்கு அதிகரித்தது. மிஷனரிகள் பிரெஞ்சுக்காரர்களாயிருந்தமையால் அவர்களையும் ஐயநோக் கோடு பார்த்தனர் பத்ருவாதோவினுடைய சூழ்ச்சியால் வந். ஷம்பனூவா ஆண்டவர் மதுரை மிஷனில் ஆதிக்கம் செலுத்துவது மறுக்கப்பட்டது. விவேக முற்ற முறையோடு அவருக்குப்பின் வந்த வந். ஹெபர்ட் ஆண்டவர் 1833 ஆம் ஆண்டுவரை புதுச்சேரி எல்லையைத் தவிர மற்ற இடங்களைப் பார்வையிடவில்லை. ஆங்கிலேயர்களின் எல்லைக்குள் செல்லவேண்டுமானுல் மைலாப்பூர் மேற்றிராணியாரிடம் அனுமதிச் சீட்டுப்பெற வேண்டும். ஆனுல் அவ்விதம் செய்வது பத்ருவாதோவின் அதிகாரத்தை ஒப்புக்கொள்வதற்குச் சமமாகும். அங்கே ஆங்கிலேயர்கள் கேட்கும் கேள்வித் தொடர்களுக்குப் பதில் சொல்லி ஆக வேண்டும். எனவேதான் சங். மோத்தே சுவாமியார் (தேவஸ்துதிநாதர்) மற்ற குருமார்களுக்குத் தாங்கள் இந்தியாவிலிருப்பதைக் கூட ஆங்கிலேயர்களுக்கு நினைவுபடுத்தவேண்டாம் என்று கூறியிருந்தார். சங். அப்பேதூபுவா தங்களைப்பற்றிக் கூறவேண்டாமென்றும் அப்படித்தவறி நடந்தால் பேராபத்துகள் நிச்சயம் வரும் என்று எச்சரித்திருக்கிறுர். சங். அப்பேதூபுவா ஆங்கில அதிகாரிகளோடு அடிக்கடி நெருங்கிப்பழகினதால் அவர் கூறின எச்சரிக்கைக்கு அதிக மதிப்புண்டு. மற்ற குருமார்கள் சுவாமியாரின் ஆலோசனைபடியே நடந்தனர். இக்காலத்தைப்பற்றி மிஷனிலிருந்து வந்த கடிதங்கள் மிகச் சில. ஆண்டறிக்கைகளே கிடையா. கிறீஸ்துவ பரம்பரையும் இக்காலத்தைப்பற்றி மௌனம் சாதிக்கிறது.

புரோட்டஸ்டாண்டு பாதிரிமார்களையும் கூட அழையாத விருந்தாளிகளாக எண்ணினர் வர்த்தக நோக்கையே உடைய கிழக்கிந்தியக் கம்பனியார். பாதிரிமார்கள் சந்தை கூடுமிடங்களிலும், விழாக் காலங்களில் இந்துக்கோவில் முகப்புகளிலும் சுவிசேஷ விளக்கம் செய்ததை ஆட்சியாளர் வெறுத்தனர். இதைவிட விநோதமானது—பெரும இந்துயாத்திரைக் கூட்டங்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளித்தது. இந்துக்கள் கம்பெனியார் மீது நல்லெண்ணம் கொள்ளவேண்டும் என்ற கருத்தோடு செய்யப்பட்ட செயல் இது. இந்துமதக் கோவில் காப்பாளர்க்கும் கோவில் நிதிக்கும் பாதுகாப்பு அளித்தது. சேலம் கலெக்டர் ஒருவருக்கு இந்துப்பூசைக்குப் பொதுப்பணத்தை அளிக்கக் கட்டளைவந்தது. வேறொரு கலெக்டர் திருச்செங்கோட்டில் இந்துக் கோவிலுக்கு வேண்டுதல் செலுத்தி, வேறொரு இடத்தில் இந்துக்கோவில் மண்டபத்தைப் பழுதுபார்த்தார். கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் இத்தகைய நடத்தையைப் பற்றி இங்கிலாந்தில் பெரிய வாக்குவாதம் நடந்தது. அதே சமயத்தில் இந்துமதக் கோவில் காப்பாளர் ஆங்கிலேயர்களின் பாதுகாப்பில் இருந்து கொள்ளப் பெருமுயற்சி செய்தனர்.

யாவருக்கும் ஒரே சட்டம் என்ற முறை பெரும்பான்மையோருக்கும் பணக்காரர்களுக்கும் நல்ல பயன்களை விளைவித்தன. ஆனால் கிறீஸ்துவர்களுக்கு அதனால் நன்மையொன்றும் ஏற்படவில்லை. சேல நகரத்தில் ஒரு ஆங்கிலேயன் சாயம், துணி முதலிய பொருட்கள் மீதுதனிஉரிமை பெற்று, சுதேசத் தொழிலை வளரவிடாமல் நசுக்கினன். முப்பதுக்கு மேலிருந்த கிறீஸ்துவ நெசவாளர் சங்கங்கள் நெசவுத் தொழிலைக்கொண்டே உயிர்வாழ்ந்தனர். ஆனால் 1820ல் நெசவுத்தொழிலுக்கு வேலையில்லாது போகவே மக்கள் மிகவும் அல்லல் பட்டனர். அப்போது சங். அந்தோணிசுவாமியார் கிறீஸ்துவ நெசவாளர்களுக்குத் தருமம் பெற்றுக்கொடுத்து, அவர்களை வேறு தொழில் தேடச் சொன்னர். எடப்பாடியில நெசவுத் தொழில் செய்துவந்த துளுவவேளாருக்கு தங்கள் மிட்டாக்களை விற்று வயிறுவளர்க்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டது. சில காலத்துக்குப்பின் செந்தாரப்பட்டி, நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், பூளப்பாடி முதலிய ஊர்களில் இருந்த இரும்புத் தொழில் இங்கி

லாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இரும்பினுல் மிகவும் பாதிக் கப்பட்டது. கட்டிப்பறையர்கள் வாழ்வழி தெரியாமல் திகைத்தனர்.

பாண்டிச்சேரி, கடப்பை, கூர்கு, பாலக்கோடு முதலிய பகுதியில் 1799 முதல் 1830 வரை மிஷனரிகள் மிகச் சிலரே; அவர்களும் தனித்தனியாக உழைத்தனர். 1793 இருந்து 1819 வரை அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே இல்லே. 1799இல் 8 பிரெஞ்சு மிஷனரிகளும் 9 மாஜி சேசுசபைக் குருக்களும் 4 தமிழ்க் குருவானவர்களும் ஆக மொத்தம் 21 குருமார்கள் இருந்தனர். 1819 இல் 7 பிரெஞ்சுக் குருமார்களும் 10 தமிழ்க்குருக்களும் இருந்தனர்; சேசுசபைக் குருக்கள் அனைவரும் இறந்துவிட்டனர்.

## முடிவு.

1803 இல் சேலமாவட்டத்தில் 3,500 கத்தோலிக்கர் இருந்தனர். அவர்களில் ஏறக்குறைய பாதிப்பேர்கள் கீழ் குலத்தவர்கள். 1000 கிறீஸ்துவர்கள் கொடுங்களுர் கர்த்தனுர் ஆளுகையிலிருந்தனர். சங். அந்தோணிசுவாமியார் 1819 இல் 4,400 கத்தோலிக்கர் இருந்தனரென்று தெரிவித்திருக்கிறுர்.

சங். அந்தோணிசுவாமி 25 வருடங்களாக மலேகளுக்கு அப்பாலிருந்த பிரதேசத்தை', (சேலம், கோயம்பத்தூர், மைசூர்) விசாரணே செய்துவந்தார். சேலத்தில் இருந்த ஒரே பங்கு கோவிலூர்—தர்மபுரி. அங்கே 1824—30 இல் புதுச்சேரியிலிருந்து பட்டம் பெற்றுவந்த தமிழ் குருக்கள் சுவாமியாருக்கு உதவி செய்தனர். அவர்களில் மூவரைப்பற்றிச் சிறிது கூறவேண்டியிருக்கிறது:— 1. சங். லூயிஸ் பிரகாசநாதர்: வேளாளர் குலத்தில் 1774 இல் பிறந்து, 1802 இல் குருப்பட்டம் பெற்று, கருமுத்தாம்பட்டியிலிருந்து தர்மபுரிக்குவந்து, 15—8—1812 இல் காலரா கண்டு காலமானுர். அவருடைய கல்லறை இருக்கும் இடம் தெரியவில்லே. 2. சங். தேவ சகாயநாதர் (சகாதேவ நாதர்): 1756 இல் பிறந்து, 50 வயதில் குருவானவராகி, புதுச்சேரியில் 26—6—1831 இல் இறந்தார். 3. அவருக்குப் பதிலாக வந்தவர் சங். மார்க் ஆரோக்

கியநாதர். அவர் தனக்கு அந்தணர்கள் அளித்த தொந்திரவுகளி ஞல் பெல்லப்பன் கவுண்டன் பட்டியில் சேசுசபையார் அமைத்த பங்கை இப்பொழுது கோவிலூரில் இருக்கும் இடத்திற்கு மாற்றி ஞர். பழைய கிராமத்தில் சில வீடுகளும் சிறுபான்மை வன்னியர் களும் இருந்ததால் மாற்றம் செய்வது எளிதாக இருந்தது. சுவாமி யார் அச்சமயம் கட்டுவித்த கோவிலும் அறை வீடும் இப்பொழுது கோவிலூரில் இருக்கும் அறை வீட்டிற்குக் கிழக்கில் இருந்தன. இவர் கோவிலூர்க் கோவிலேப் பெரிதாக்கினுர். அநேகமாக நான் காவது தமிழ்க்குருவானவர் முதலியார் குலத்தைச் சேர்ந்த சங். ஞானதிக்க நாதராக இருக்கவேண்டும். இவரைப்பற்றி வந். ஹெப்ர்ட் ஆண்டவர், "நூறுமைல்களுக்குமேல் பரவிக்கிடந்த நிலப்பகுதியில் சிதறியிருந்த ஏறக்குறைய 5,000 கிறீஸ்துவர்களேக் கொண்ட மிஷனில் சங். ஞானதிக்கம் சுவாமியார் மிகச் சிறந்த உழைப்பாளி." என்று எழுதியிருக்கிருர்.

இதே சமயத்தில் பாரீஸ் அந்நியவேத போதக சபையைச் சேர்ந்த (இராயப்பர் சபை) மூன்று வாலிப குருமார்கள் சேலத் துக்கு வந்தனர். 1822 இல் வந்த சங். கிரகோரி சுவாமியார் இந்து ஆலயங்களேச் செப்பனிட்ட கலெக்டர் டேவிஸ் என்பவரால் அனு மதிச் சீட்டு இல்லாத காரணத்தால் சேலத்திலிருந்து திருப்பி அனுப் பப்பட்டார். இரண்டாவதாக 1828 இல் கோயம்புத்தூரில் இருந்து வந்த சங். போஷத்தோன் (சின்னப்பர்சுவாமி) அதே காரணத்தி ஞல் திருப்பி அனுப்பப்பட்டார். 1830 இல் சங். ஒலாங்ன் (அருளப்பர் சுவாமி) சேலத்துக்கு வந்தார். ஆனல் அவர் இரத்தக் கடுப்பால் மிகவும் இன்னலுற்று புதுச்சேரிக்குக் கொண்டுவரப்பட் டார்.

தாலகாட்டில் உழைத்த மூன்று கர்த்தனுர் குருமார்களேப் பற்றி மட்டும் நினேவுச் சின்னங்கள் இருக்கின்றன. சங். பாக்கிய நாதர் என்பவருடைய கல்லறை எடப்பாடியிலுள்ள கல்லறை மண் டபத்தில் இருக்கிறது. காக்காவேரியில் சங். ஆனந்த சுவாமிநாதரு டைய கல்லறை இப்பொழுது இருக்கும் சக்றீஸ்துக்கு வடமேற்கில் இருக்கிறது. இவர் தன்னுடைய குதிரையோடு அறைவீட்டுக்குப்

பக்கத்திலிருந்து 5 அல்லது 6 அடி அகலமுள்ள (இப்பொழுது அது மிகவும் அகலப்படுத்தப் பட்டிருக்கிறது) கிணற்றைத் தாண்டப் போவதாகப் பந்தயம் போட்டு கிணற்றில் விழுந்து நொறுங்கிப் போனர். மதியம்பட்டியில் சங். ஞானேந்திர நாதருடைய கல்லறை இப்போது இருக்கும் கோவிலுக்கு எதிரேயுள்ள பழைய சத்திரத்தில் இருக்கிறது. வேெருரு சுவாமியார் காலராவினுல் இறந்து நாகலூரில் ஷார்ட்ஸ் துரை தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

1826-இல் சங். ஜாரிஜ் சுவாமியார் பங்களூரிலிருந்து பாலகாட்டை விசாரணை செய்தார். கிருஷ்ணகிரி, என்னம்பள்ளி (எலத்தகிரி) முதலியன புஷ்பகிரி—வேலூரிலிருந்த குருவானவரால் விசாரணை செய்யப்பட்டன. கோர்த்தாம்பெட்டிலிருந்த சுவாமியார் கானும்பட்டியைக் கண் காணித்தார்.

கிறீஸ்துவர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதென்னவென்றல், பெரம்பலூரிலிருந்த பற வண்ணார்கள் சாயத் தொழில் செய்ய ஆத்தூர் தாலுக்காவிற்கு வந்தனர். ஆற்காட்டு நவாபின் குதிரைப் படையில் லஸ்கர்களாக இருந்த வள்ளிமுக்தி இனத்தவர் சேலநகரத்துக்கு வந்தனர். சேலநகரத்தில் துணி வியாபாரம்செய்த துரை ஒருவன் வண்ணார்களோடு பலவந்த ஒப்பந்தம் செய்ய முயன்ருன். பதினெட்டாவது நூற்ருண்டின் இறுதியில் அக்கிரகாரம் நாட்டார் மங்கலத்தில் புதிய நத்தம உடையார்கள் குடி புகுந்தனர். ஒரு கிறீஸ்துவப் பெண் ஒரு இந்துவை மணந்து அக் குடும்பம் முழுவதையும் மனந்திருப்பினுள். எருவபாளையத்திலிருந்த ஒட்டர்கள் இராசீபுரம் தாலூக்காவில் குடியேறினர். 1827-இல் கஞ்சத்திலிருந்து ஆங்கிலேயர் குதிரைப் பண்ணை கொண்டுவரப்பட்ட போது, திப்பு சுல்தானின் வேத கலாபனையின் போது தப்பின பழைய மத்திகிரி இப்பொழுது மத்திகிரி இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. என்னம்பள்ளி, மோட்டூர். கொல்லப்பட்டி, கானும்பட்டி, மல்லியம்பட்டி முதலிய ஊர்களிலிருந்த முதலியார்களும் துளுவ வேளாளர்களும் எலத்தகிரியில் நிலம் வெறுதாவாக விடப்பட்டிருந்தபடியால் அங்கே திரளாகக் குடியேறினர்.

புதுப்பாளையத்திலிருந்த ஒரு மலையமான் உடையார் கர்த்த

னூர் சுவாமியார் ஒருவரின் ஆலோசனையின் படி காக்காவேரியில் உத்தரிய மாதாக் கோவிலில் பூசை கண்டு கொண்டிருந்த போது திடீரென அற்புதமாக ஆரோக்கியமடைந்த படியால் தன்னுடைய மூன்று குமாரர்களுடன் மெய் மறையிற் சேர்ந்தார். மற்ற மலையமான் உடையார்கள் தென் ஆற்காட்டிலுள்ள சித்தனூர்–சித்தாமூர் முதலிய இடங்களிலிருந்து புதுப் பாளையத்தில் குடியேறினர். ஒரு கிறீஸ்துவ பள்ளர் குடும்பம் கங்கவள்ளியில் காலரா கண்டபோது தனது இந்து உறவினருக்கு சர்வேசுரா சுவாமியைக் கும்பிடச் சொன்னபோது வியாதி திடீரென நின்றது. அதன் பின்னர் அவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றனர்.

பூலப்பாடி என்ற கிராமம் ரெட்டிப்பட்டி முஸ்லீம் மிட்டாவில் 1830-இல் ஆரம்பமானது. 10 வருடங்களுக்கு முன் கொட்டம்பட்டியிலிருந்த கிறீஸ்துவர்களுக்கு அந்தணர் தொந்திரவுகொடுத்தபோது அவர்கள் இப்பொழுது இருக்கும் கொட்டம் பட்டிக்கு வந்தனர். அங்கு தேவதாயின் மாசில்லாத திரு இருதயத்தின் பேரால் ஒரு கோவில் கட்டினர். இந்தியாவில் செய்யப்பட்ட தேவதாயின் மாசில்லாத திரு இருதய சுரூபம் அதுவாகத்தான் இருக்க வேண்டும். பழைமையின் நிமித்தம் அது விலைமதிக்கப்படாத ஒரு சுருபமாகும்.

நாரியப்பனூர் அர்ச். அந்தோணியார் யாத்திரைத்தலம் இன்னும் உதயமாகவில்லை. ஆனால் கோனுங்குப்பம் பெரியநாயகி மாதா, கருமுத்தாம் பட்டி செபமாலை மாதா, இவற்றைவிட மேலாக வெள்ளாண்டி வலசை செல்வநாயகி மாதா முதலிய ஆலயங்களுக்கு மக்கள் திரளாக வந்து கூடினர். வெள்ளாண்டி வலசை விழாக்களுக்கு மக்கள் நாற்பது மைல் சுற்றளவிலிருந்து வந்தனர். அங்கு ஆண்டுக்கு நான்கு விழாக்கள் நடைபெற்றன. சங்கரி துர்க்கத்திலிருந்த சேனையிலிருந்து கிறீஸ்துவர்களும் இந்துக்களும் வாண வேடிக்கையுடனும் வாத்திய முழக்கத்துடனும் இவ் விழாக்களுக்கு வந்தனர்.

1825-இல் இங்கிலாந்தில் புரோட்டஸ்டாண்டு மதம் புத்துணர்ச்சி பெற்ற பின் கிழக் கிந்தியக் கம்பனியார் மிஷனரிகளிடம்

நடந்து கொண்ட விதத்தில் மாறுதல் ஏற்பட்டது. இங்கிலாந்திலிருந்த மதச் சங்கங்களும் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் ஏஜண்டுகளும் புரோட்டஸ்டாண்டு மதத்தைப் பரப்ப ஆரம்பித்தனர். இவை சேலநகரத்தில் முதல் முதல் கத்தோலிக்கரை மதமாற்றம் செய்யத் தீவிரமாக முனைந்தன. மதமாற்றம் செய்து கொள்வதை பிழைக்கும் வழிகளில் ஒன்ருகக் கருதிய ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இவற்றின் பசப்புதல்களுக்குச் சாய்ந்து கொடுக்கவில்லை.

---

# இரண்டாம் அத்தியாயம்.

## அப்போஸ்தோலிக்கு விக்காரியேட்டுகளின் முன்னேற்றம் : 1833—76

### சங். பெஞ்சமின் கூ (ஞானதிக்க நாதர்) 1831—37

1797 இல் இருந்து கொடுங்களூரிலிருந்து வந்த ஒரு கர்த்தனர் சுவாமியார் தாலகாட்டை நிருவகித்துவந்தார். 1828 இல் மூன்று மிஷனரிகள் கோயம்பத்தூருக்கு அனுப்பப்பட்டனர். ஆனல் இந்த மிஷனரிகளின் வருகையால் அங்கே கலவரம் ஏற்படலாம் என்று கலெக்டர் அஞ்சி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். முதலில் மதுரைக் கிறீஸ்துவர்களும் பின்னர் கோயம்பத்தூர் விசுவாசிகளும் பத்ருவாதோவின் ஆட்சிக்குட்பட்ட குருமார்களுக்கு விரோதமாகக் கலவரம் செய்தனர். இந்தியாவிலே இக்காலத்தில் பத்ருவாதோ குருக்கள் மிகச் சிலரே. இவர்கள் வாழ்க்கைத் தேவைகளை மக்களிடையே பணம் பெற்றுப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியிருந்தது. சிலரது வாழ்க்கை மிஷனரியினது வாழ்க்கைக்கு ஒத்ததாக இல்லை. பத்ருவாதோவுக்கு விரோதமாகப் புரட்சி செய்த கிறீஸ்துவர்களில் சிலர் புரோட்டஸ்டாண்டு மார்க்கத்தைத் தழுவினர். சிலர் வெராப்பொலி அல்லது புதுச்சேரி மேற்றிராசனத்துக்கு பங்கு சுவாமிமார்களை அனுப்ப மனுசெய்தனர். கோவா அதிமேற்றிராணியாரும் தன்னிடம் போதிய குருமார்கள் வெளியே அனுப்பப்படுவதற்கு இல்லாமையால் மக்களின் மனுவை ஆதரித்

தார். எனவே சங். ஹெபர்ட் ஆண்டவர் மதுரைக்கும் கோயம்பத்தூருக்கும் மிஷனரிகளை அனுப்பினர். அவ்விதமாக கோயம்பத்தூருக்கு அனுப்பப்பட்ட மூன்று மிஷனரிகளிடம் அனுமதிச் சீட்டு இல்லாததாலும், கலவரம்ஏற்படலாம் என்றஅச்சம் இருந்ததாலும் கலெக்டர் அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். பின்னர் போர்த்துக்கல் ரோமையோடு வைத்திருந்த உறவை ரத்து செய்துகொண்டது. 1835 இல் கோவாவிலிருந்த சந்நியாச சபைகளை போர்த்துக்கல் நீக்கிவிட்டது. 1838 இல் கோவா, கொடுங்களூர், கொச்சி, மைலாப்பூர் முதலிய இடங்களிலிருந்த போர்த்துக்கீசிய நிருவாகிகள் பாப்பானவருடைய "மூல்த்தா பிரெக்ளாரா," என்ற நிருபத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அநேக வருடங்களாக கோயம்பத்தூர் கிறீஸ்துவர்களிடையே பத்ருவாதோவை ஆதரித்த கட்சிக்கும் புரோப்பகாந்தாவை சேர்ந்த கட்சிக்கும் சர்ச்சை நடந்து ஒரு வித பிரிவினை ஏற்படும் அளவுக்கு வேறுபாடுகள் அவர்களிடையே வளர்ந்துவிட்டன. சேலமாவட்டத்தில் ஆளும் அதிகாரத்தைப் பற்றிய வாதம் விரைவிலேயே முடிவு செய்யப்பட்டது.

சங். அவுலாங்னு சுவாமியார் கோயம்பத்தூருக்குச் சென்று திரும்பியபின் சங். அருளானந்த நாதர் (பிறப்பு: 1799; குருப்பட்டம்: 1828; இறப்பு: 1862) சில காலம் சேலத்தில் தங்கியிருந்து, பின் கோயம்பத்தூருக்குச் சென்று, அங்கே கிறீஸ்துவர்களிடையே அமைதியை நிலைநாட்ட முயன்றார். ஆனால் அவருடைய வருகைக்குப்பின் கலவரம் குமுறி எழுந்தது. எனவே கோயை கலெக்டர் சுவாமியாரிடம் நன்னடத்தை ஜாமீன் கேட்டார். சுவாமியார் சேலத்துக்குத் திரும்பிவநதுவிடுதலே நலம் என்று எண்ணி வந்துவிட்டார்.

அதே சமயத்தில் 1831 இல் புதிதாக வந்த சங். சூ (ஞானதிக்க நாதர்) காக்காவேரியையும் அதன் சுற்றுப்புறங்களையும் விசாரணை செய்ய காலதாமதமின்றி ஏற்றுக்கொண்டார். அவர் தான் இப்பொழுது அங்கு இருக்கும் கோவிலைக் கட்டினவர். அதற்கு முன்னிருந்த கோவில் சுவாமியார் அறைவீடாக இருந்து, பிறகு சத்திரமாக உபயோகப்பட்டு, இப்பொழுது பள்ளியாகப் பயன்பட்டு வருகிறது.

**1832** இல் சங். ஞானதிக்க நாதர் (செசில் நாதர்) கோயம் பத்தூருக்குச் செல்ல அனுமதிச் சீட்டு பெற்றார். அவர் கோயம் பத்தூரிலிருந்த காலத்தில் மூன்று குருமார்கள் ஒருவருக்குப்பின் ஒருவராய் சேல மாவட்டத்தை விசாரணை செய்தனர். சங். லப்போஸ் தொல் (யாகப்பநாதர்) தாலகாட்டில் இருந்த விசாரணைகளைக் கண் காணித்துவந்தார். காக்காவேரியில் பேய்பிடித்த பெண்ணொருத்தி யைக் குணப்படுத்தினார். வெருதாகக் கிடந்த களங்காணிக்குப் பதி லாக கொசவம்பட்டி விசாரணையை ஆரம்பித்தார். கொசவம்பட்டி யில் அர்ச். சவேரியாரின் தேவாலயத்துக்கு கால் கோலினார் (அஸ்தி வாரமிட்டார்.) அங்குள்ள கிறீஸ்துவர்கள் இந்து சகோதரர்களிடமி ருந்து அநேக துன்பங்களை அனுபவித்தனர். நயினார் சுவாமி கிறீஸ்து வர்களின் கோவில் எழுந்ததால் கோபங் கொண்டுவிட்டதாகச் சீறினர்.

எடப்பாடியில் பத்ருவாதோவை ஒட்டி ஒரு கட்சியும் அதை வெட்டி ஒரு கட்சியும் இருந்தன. சங், யாகப்ப நாதர் எடப்பாடி யிலிருந்த கர்த்தனார் சுவாமியாருக்கு வங். ஹெபர்ட் மேற்றிராணி யாரிடமிருந்து தான் பெற்றுவந்த கடிதத்தைக் காட்டினார். அதைப் பார்த்தவுடன் கர்த்தனார் சுவாமியார் எடப்பாடியைவிட்டுப் போவ தாகக் கூறினார். ஆனால் அவர் அங்கு பூசை செய்ய அனுமதி கேட்டபோது சங். யாகப்பநாதர் அதற்கு இசைவு தர மறுத்துவிட் டார். ஏனெனில் அவர் அங்கேபூசை செய்தால் அவருக்கு அங்கே இன்னும் அதிகாரம் உள்ளது என்று அர்த்தமாகும். கர்த்தனார் சுவாமியார் அதிகாலையில் கல்லறையில் பூசை செய்து போய்விட் டார், சேலமாவட்டத்தின் தாய்த் தேவாலயமான வெள்ளாண்டி வலசைக் கோவில் ஒருவித எதிர்ப்பும் இல்லாமல் சுவாமியார் வசம் வந்தது. மக்கள் நீண்ட அடர்ந்த முடியையுடைய சங். யாகப்பநாதரை வெறுப்பினால் ''கரடிக்குட்டி சுவாமியார்'' என்று அழைத்தனர்.

**1832** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மைசூரிலும் சேலத்தி லுமிருந்த மக்கள் பல நாட்கள் இரவிலே பழுக்கக்காய்ச்சின இரும் பை சம்மட்டி கொண்டு அடிக்கும் போது தெறித்து விழும் நெருப்புப் பொறிகளைப் போன்று வான மண்டலத்திலே எரிகற்களின் கூட்டங்

களைக் கண்டனர். அதற்கு அடுத்த ஆண்டே (1833) பெரிய பஞ்சம் தோன்றியது. இப்பஞ்சத்தை மக்கள் சக்கி முக்கிப் பஞ்சம் என்றழைத்தனர். சேலத்தில் மட்டும் 28% மக்கள் இறந்தனர், தென் ஆற்காட்டில் மக்கள் இறந்த தொகை இதைவிட அதிகமாயும், கோயம்பத்தூரில் சற்று குறைவாகவும் இருந்தது. பஞ்சத்துக்கு முன்னே சங். யாகப்பநாதர் தஞ்சை ஜில்லாவுக்கு மாற்றப்பட்டார். மதுரையில் பத்ருவாதோக்காரர்களுக்கும் புரோப்பகாந்தாக்காரர்களுக்கும் சச்சரவுகள் நடந்து கொண்டிருந்தமையால் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் வந். ஹெபர்ட் ஆண்டவருடைய உதவி மேற்றிராணியாராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சங். பொன்னுன் (சாந்தப்பநாதர்) சுவாமியாருக்கு மதுரையில் தங்க தடை உத்திரவு இட்டார். அவர் 1833 இல் சேலத்துக்கு வந்தார். அவர் தெலுங்குக் கிறீஸ்துவர்களிடையே ஒன்பது ஆண்டுகள் உழைத்தபின் தமிழ்க் கிறீஸ்துவர்களோடு தொடர்பு கொள்ள ஆசித்தார். அவர் தர்மபுரி, பாரமஹால், பாலகாட் முதலிய பகுதிகளில் உள்ள விசாரணைகளைக் காணச் சென்றார். அவர் தாலகாட்டைப் பார்வையிட இருந்த பொழுது திடீரென வந். ஹெபர்ட் ஆண்டவரால் அழைக்கப்பட்டு ஆடம்பரமின்றி மேற்றிராணியாராக அபிஷேகம் பண்ணப்பட்டார். தென் ஆற்காட்டில் பஞ்சத்தினல் மக்கள் சாலையோரங்களிலே விழுந்து இறந்த காலத்தில் குருமார்களுக்குப் பூசைப் பாத்திரங்களைக்கூட விற்று பசிப்பிணியைப் போக்கப்பாடுபடவேண்டும் என்று கூறின வந். ஹெபர்ட் ஆண்டவர் ஆடம்பரத்துக்காகச் செலவு செய்யவில்லை.

சங். பக்ரூ சுவாமியார் (ஞானப்பிரகாச நாதர்) 1834 இல் சேல விசாரணையை ஏற்றுக்கொண்டார். 1835 ஆம் ஆண்டு கிறீஸ்மஸ் விழாவுக்குச் சற்றுமுன் அத்திப்பாக் கத்திலிருந்த சங். லெஓதே சுவாமியாரைச் சந்தித்து இருவருமாக அமலோற்பவ மாதாவின் திரு இருதய சபையைத் தோற்றுவிக்கத் தீர்மானித்தனர். ஆரம்பத்தில் ஆறுமிஷனரிகள் அச்சபையின் அங்கத்தினராயினர். அது 1836 ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் திருச்சபை அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டது.

சங். கூ (ஞானதிக்க நாதர்) கோயம்பத்தூரில் பத்ருவாதோ—புரோப்ப காந்தா கட்சிக்காரர்களுக்கிடையே அமைதியை நிலை நாட்டினபின். தனது உதவி குருவான சங். பக்ருசுவாமியாருக்குக் கோயம்பத்தூர் விசாரணையை அளித்துவிட்டு, சேலத்துக்குத் திரும்பிவந்தார். அடுத்த ஆண்டில் (1837) தஞ்சாவூர் பங்கை விசாரணை செய்ய அனுப்பப்பட்டார். 1837 இல் அவர் சேலத்தைப்பற்றி எழுதின அறிக்கையின் சாரம்: "நான் சேலமாவட்டத்திலுள்ள விசாரணைகளில் அரைபாகத்தை நிருவகித்தேன், 318 குழந்தைகளுக்கும் 47 பெரியவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தேன். 1830 பாவசங்கீர்த்தனங்கள். 113 புதுநன்மைகள், 126 கலியாணங்கள், 34 அவஸ்தை பூசுதல்கள் அளித்தேன். ஏழு பதிதர்களைச் சத்திய மறையிற் சேர்த்தேன். 120 மைல் நீளமும் 60 மைல் அகலமுமுள்ள பிரதேசத்திலிருந்த 8000 கிறீஸ்துவர்களைப் பராமரிக்கவேண்டியிருந்தது. சில இடங்களில் ஒரு மாதமும், அதற்கு மேலும், சில இடங்களில் 8 அல்லது 15நாட்களும் தங்கினேன். புறமதத்தினரிடையில் வேத போதகம் செய்யஎனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இத்துணை பேர்களைப் பராமரிக்கும் வேலையே என் சக்திக்கு மிஞ்சியதாக இருந்தது. பத்ருவாதோ கட்சிக்காரர்களிடையில் பிரிவினைச் சபையே ஏற்பட்டுவிடும் போல் இருந்த சூழ்நிலை என் வேலையை இன்னும் அதிக் கடினமாக்கினது. பல குறைபாடுகளுக்கிடையில் அவர்களிடம் மிகுந்த பொறுமையை காட்டவேண்டியிருந்தது. கோவில் கட்டுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு முதலாய் அவர்களிடம் பணவுதவியை எதிர்பார்க்காமல் இருக்க நேர்ந்தது.

## சங். ஃபிரிக்கோ
## (சூசைநாதர் அல்லது அமிர்தநாதர்) 1837—45

1835 இல் புரோப்பகாந்தா முத்துக் குளித்துறையின் அப்போஸ்தொலிக்கு நிருவாகத்தின் வட எல்லையைப் பாலாறேடு வரையறுத்தது இந்த சமயத்தில்தான் கங்குந்தி ஜமீனின் ஒரு பாதி சேலத்தோடு இணைக்கப்பட்டது. இக்காலத்திலிருந்து தான் சங். ரோஜர் சுவாமியார் புஷ்பகிரி—காணியாம்பாடியிலிருந்து பாரம

ஹாலின் இப்பகுதியை விசாரணை செய்வதை நிறுத்திவிட்டார். எனவே பங்களூர் மிஷனரிகள் பாலகாட், ஒசூர் தாலூக்கா முதலியவற்றை 1854 வரை விசாரணை செய்தனர்.

1836இல் இருந்து 1845 வரை புதிய முத்துக் குளித்துறையின் அப்போஸ்தொலிக்கு நிருவாகம் பல பிரிவுகளாக்கப்பட்டன. நீண்ட காலமாக நிச்சயமான எல்லைகள் நிர்ணயிக்கப்படாமையால் மிஷனரி மார்களின் உற்சாகமும், நிர்வாகத்திறமையும், உழைக்கும் சக்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டன. முதலில் சேசுசபைக் குருக்களும், பின்னர் கோயம்பத்தூர் குருமார்களும், முக்கியமாக சங். பக்ரூ சுவாமியாரும் தாலகாட்டைத் தங்கள் விசாரணையில் சேர்த்துக் கொள்ள வாதாடினர். மிகப் பெரிய பரப்பைக்கொண்ட விக்காரியேட் சரிவர நிருவகிக்க முடியாது என்ற கொள்கையுடைய வந், போன்னுன் மேற்றிராணியார் அதற்கு இசையவில்லை. கோயம்பத்தூர் விக்கார் அப்போஸ்தலிக்கு மீண்டும் ஒரு முறை இதைப்பற்றி ரோமாபுரிக்கு 1860இல் எடுத்துக்கூறியும் பயன் கிடைக்கவில்லை. 1848இல் மைசூர் அப்போஸ்தலிக்கு விக்கார் பாலகாட்டை கேட்டபொழுது அது அழுத்தமாக மறுக்கப்பட்டது. சேலத்தை ஒரு விக்காரியேட் ஆகச் செய்யவேண்டுமென்று அக்காலத்திலேயே வந். போன்னுன் ஆண்டவர் எண்ணினுர். ஆனுல் அது அவருக்குப்பின் வந்தவர்களால் பலமுறைகள் விவாதிக்கப்பட்டு இறுதியாக 1930 இல் தான் அது நனவானது.

சங். ஃபரிக்கோ (சூசைநாதர்) இந்தியாவுக்கு வந்த பின்னர் சில மாதங்கள் சேலத்தில் சங் ஞானதிக்க நாதருக்கு உதவி குருவானவராக இருந்து அவருக்குப் பின் பங்கு குருவானுர். இவருருடைய பெயரிலிருந்துதாள் சேலமாவட்டத்தில் உழைத்த குருமார்களின் வரிசைக் கிரமமும், பங்குகளின் வருடாந்திர விசாரணையும் தவருமல் கிடைத்தன. இவர் பதினென்று மாதங்கள் சுற்றுப் பயணம் செய்து சேலம் பங்கைப்பற்றி 1838இல் குறிப்பு எழுதினுர்.

" ஒரு குருவானவர் போதாது. சில விசாரணைகள் குருவானவரின்றி மிக வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றன. சில இடங்

கள் பல ஆண்டுகளாக விசாரணை செய்யப்படவில்லை. உதாரணமாக மோஹனூரை 1795-க்குப் பின் விசாரணை செய்யவில்லை. காவேரிக்கு அப்பாலிருந்த நேரூர் 60 வருடங்களாக பத்ருவாதோ குருக்களால் விசாரணை செய்யப்படவில்லை. மோஹனூரில் கோவிலைப் புதுப்பிக்க ஆரம்பித்திருக்கிறேன். வந். பேரன்னுன் ஆண்டவர் உபதேசிமார் பயிற்சிகூடம் ஒன்றை கோவிலூர்— தர்மபுரியில் நிறுவத் திட்டமிட்டிருக்கிறார்.''

சங். ஃபிரிக்கோ சுவாமியார் உதவிகுருவானவர் இல்லாமல் இருந்ததே கிடையாது. அவருக்கு உதவி செய்த குருமார்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது:— 1. சங். கோடெல் இசிதோர் (1840—41) இவர் பின்னர் புதுச்சேரி அப்போஸ்தலிக்கு நிருவாகி ஆனார். 2. சங். லெ. ரூ. (தைரியநாதர்) 1841, இவர் சேலத்தில் ஒரு பள்ளியை ஆரம்பிக்க விரும்பினார்.

ஆனால் மேற்றிராணியார் அதைவிட மிக முக்கிய வேலைகள் பல இருந்தனவாதலால் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. 3 சங். மாத்தியான் (லூயிஸ் நாதர்) 1843—44. இவர் பின்னர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மிக்கேல்பட்டி, அய்யம் பேட்டை முதலிய இடங்களில் அறைவீடுகள் அமைத்தார். 4. சங். மாரியோன் தெபிரெசியாக்: இவர் பின்னர் கோயம்பத்தூர் முதல் அப்போஸ்தொலிக்கு நிருவாகி ஆனார். இவர் லியோன் ஆப்பிரிக்கன் மிஷனரிகள் சபையை ஸ்தாபித்தார். இவர் ஒரு முறை கோவிலூரிலிருந்து தர்மபுரி, கடகத்தூர், சாவுடையூர். கம்மனெல்லூர், தெங்கரைக்கோட்டை, B. பள்ளிப்பட்டி முதலிய விசாரணைகளைச் சுற்றிப் பார்த்தார். இவருக்கு அநேகமாக திருச்சபை வணக்கம் கிடைக்கப் போவதால் இவர் சேலத்தில் பார்வையிட்ட இடங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர் செவ்வாய்ப்பேட்டையில் வாலிபர்களைச் சேர்த்துஒரு சங்கம் நிறுவினார், அந்த வாலிபர்களில் ஒருவர் குருவானவரானார்—சங். மரிசவரிநாதர் (1850-86) 5. சங். கூயோன் (1844): அக்காலத்தில் உதவி குருவானவர் தன்னுடைய சுற்றுப் பயணங்களைப்பற்றி அரையாண்டு அறிக்கைகள் அனுப்பவேண்டும்.

சங். ஃபிரிக்கோ சுவாமியார் செவ்வாய்ப்பேட்டையில் பங்கு சுவாமியார் அறைவீடும், ஒரு சத்திரமும் கட்டினர். தொம்பாலப் பட்டியில் (இப்பொழுது இது விசாரணையல்ல) ஒரு செபக்கூடம் கட்டினர், திருமனூரையும் சேந்தமங்கலத்தையும் (இப்பொழுது ஒரு குருசடியைத்தவிர வேறென்றுமில்லை) முதன் முறையாகப் பார்வையிட்டார். 50 வருடங்களாக அக்கிரகாரத்தில் இருந்த கிறீஸ்துவ உடையார் சமூகம் 1842 இல் இரட்டித்துவிட்டது. அவர்கள் போதிய இடவசதியின்றி நெல்வயல்களுக்கு அருகிலேயே ஒரு செண்டு நிலத்தில் மிக நெருக்கத்தில் வாழ்ந்தனர். இவர்களது தேவையை அறிந்த சங். ஃபிரிக்கோ சுவாமியார் கோவில் கட்டுவதற்காக ஒரு சிறிய நிலத்தை வாங்கினர். அடுத்த ஆண்டு கோவிலுக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. ஆனல் இந்துக்கள் அஸ்திவாரத்தை மூடிவிட்டு கோவில் கட்டவே கூடாது என்று விடாப்பிடியாக வாதாடினர். கிறீஸ்துவர்கள் பன்முறைவிண்ணப்பங்கள் அனுப்பியும் அவை அதிகாரிகளின் காதுகளுக்கு எட்டவில்லை. விண்ணப்பங்களை மேலே போகவிடாமல் சிறிய உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கட்டினர் இந்து தோழர்கள். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் நடந்தன. ஒரு நாள் சங், ஃபிரிக்கோ சுவாமியார் சாலையிலே சென்றுகொண்டிருந்த போது, ஆத்தூர் கோட்டைத்தளகர்த்தனைச் சந்தித்து அவனிடம் தனது கதையைச் சொன்னர். அந்த நாள் மாலை வேளையில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் A. ப்ரெட் துரைக்கு விஷயத்தை அந்தத் தளபதி எடுத்துரைத்தார். நியாயம் வழங்கப் பட்டது. கோவிலை இறுதியாக சங். கூ (மகிமை நாதர்) கட்டி முடித்தார். வந் போன்னன் ஆண்டவர் அதை 1846 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் நாள் மந்திரித்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் இந்துக்கள் வதிந்த பாகம் தீயினல் வெந்துபோனது. இந்துக்கள் அந்த இடத்தைவிட்டு கிராமத்தின் வட பாகத்தில் குடியேறினர்கள். அவர்கள் விட்டுப்போன இடத்தில் கிறீஸ்துவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டனர்.

1843 ஆம் ஆண்டின் அறிக்கையிலிருந்து சேலம் மாவட்டத்தைப் பற்றிய கீழ்க்காணும் புள்ளி விவரங்களை அறிந்துகொள்ள முடிகிறது. கிறீஸ்துவர்களின் எண்ணிக்கை 7960. 1845 ஆம்

ஆண்டில் பங்குகளுக்கிருந்த எல்லைகளை வைத்துக்கொண்டு, 1840 முதல் 50 வரை கணிக்கப்பட்ட ஞானஸ்நான சராசரியை எடுத்துக் கொண்டு கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின் றன:—

தாலகாட் : சேலம், ஏற்காடு .... 1028–75% ஆதிதிராவிடர்

செட்டிப்பட்டி மோரூர் .... 311–வன்னியர், பறவண் ணூர்.

அக்கிரகாரம் .... 288–நத்தம உடையார் கள், பறவண்ணூர்கள்.

கங்கவள்ளி-திருமனூர்.... 334–பள்ளர், பறவண் ணூர், ஆதிதிராவிடர், பகடை.

காக்காவேரி-மதியம்பட்டி மோஹனூர் கொசவம்பட்டி சேந்தமங்கலம். } 1315 { வேளாளர்,கள் ளர், பறவண் ணூர், ஆதிதிரா டர், கொள்ளியர்,

ஆத்தூர்-முள்ளுவாடி நாரியப்பனூர் 741 { பறவண்ணூர், ஆதிதிரா விடர்,

எடப்பாடி .... 645–துளுவவேளாளர், வடுக வண்ணூர், மூப்பர், சாணூர், செம்படவர்.

கொடிவேலி : சோணுங்கலூர்-பூமனூர் நாயம்பாடி. } 272–வேளாளர், வன்னி யர், கொள்ளியர்.

தர்மபுரி: கோவிலூர், சௌக்கார் பட்டி,சித்தூர், சாவலூர், கொட்டம் பட்டி } 1052–வன்னியர்

கடகத்தூர் .... 526–வன்னியர்

B. பள்ளிப்பட்டி .... 288–ஆதிதிராவிடர், பறவண்ணூர்.

பாரமஹால் : எலத்தகிரி-கிருஷ்ணகிரி 478–துளுவவேளாளர்.

பாலகாட் : மதகொண்டபள்ளி-மத்திகிரி 933-வன்னியர், ஆதி திராவிடர்.

1842 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வந். போன்னுன் ஆண்டவர் மலேகளுக்கு அப்பாலிருந்த பிரதேசத்திலிருந்த (கோயம் பத்தூர், சேலம், மைசூர்) மிஷனரிமார்களேக் கருமத்தாம்பட்டிக்கு வரவழைத்து, அங்கே 1844 ஆம் ஆண்டு ஒரு சங்கத்தைக் கூட் டினுர். அங்கு முடிவுகாணப்பட்ட விஷயங்கள் பலவற்றுள் ஒன்று சேலத்திலிருந்த 25 சதவீத கிறீஸ்துவர்களான வடுக வண்ணுர்களே யும், அரூர், தர்மபுரி, ஆத்தூர், சேலம், ஓமலூர், திருச்செங் கோடு, நாமக்கல் முதலிய தாலுக்காக்களில் இரு நூறுக்கு மேற் பட்ட கிராமங்களிலிருந்த பறவண்ணுர்களேயும் பாதித்தது. கிராமப் பணியாளர்களாக அவர்கள் இருந்தமையால் அநேக மூட நம்பிக் கைகளில் அவர்கள் பங்கு பெற அவர்களது இந்து எசமானர் வற் புறுத்தினர், மேலும் முக்கியமாக எடப்பாடிக்கு அருகில் வடுக வண்ணுர்களின் தொகை மிக அதிகமாகி, அவர்கள் தொழில் செய் வதற்குப் போதிய கிராமங்கள் இல்லாமற் போயின. அவர்கள் ஒன்று தங்கள் பரம்பரைப்பணியைவிட்டு விடுவது அல்லது மூட நம்பிக்கைகளில் பங்கு பெற வலுவந்தம் செய்யப்படாத கிராமங் களில் மட்டும் வேலே செய்வது என்று அச்சங்கம் தீர்மானம் செய் தது. திருச் செங்கோட்டுத் தாலுக்காவுக்குத் தென் பாகத்திலிருந்த வடுக வண்ணுர்களிற் சிலர் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள் ளாமல், தங்களுடைய பதினுறு பெண்களே இந்து மாப்பிள்ளே களுக்கு மணம் செய்து கொடுத்தனர். அதனுல் அவர்களுக்கு 'பதினுறு பெண் வண்ணுர்' என்ற பெயர் வந்தது. பிரிந்துபோன அந்தக் குடும்பங்கள் இன்றும் கொங்குக் கவுண்டர்களின் கலியா ணங்களிலும், சாவுகளிலும் 'அருமைக்காரர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். வந். போன்னுன் ஆண்டவர் விசாரணே செய்த போது பார்வையிட்ட அவர்கள் கோவில் (ஆலம்பாளேயம்) மறைந்துபோய்விட்டது. பிரிந்துபோன அவர்களின் எண்ணிக்கை 1860 ஆம் ஆண்டில் கிறீஸ்துவ வண்ணுர்களின் தொகையைக் காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. அவர்கள் தேவத்திரவிய அனுமானங்களேப் பெருதிருந்தாலும், வெள்ளாண்டி வலசையில் நடந்த பாஸ்கு விழாவுக்குப் பல வருடங்கள் சென்றனர். இன்று இவர்களது சந்ததியார்களில் மிகச் சிலரே இருக்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் லண்டன் மிஷன் சபையார் சேலத்தில் பதினைந்துவருடங்களாக உழைத்துவந்தனர். சந்தை கூடுமிடங்களிலும், சாலைகள் சேரும் சந்திப்புகளிலும் வேத விளக்கம் செய்து பைபிள்களையும் துண்டுப் பிரசுரங்களையும் தாரா ளமாக வினியோகம் செய்தனர். சேல நகரத்தில் நான்கு அல்லது ஐந்து பள்ளிக்கூடங்கள் கட்டினர். 1832 இல் பெண்களுக்காக ஒரு பள்ளி அமைத்தனர், 1840 இல் ஒரு தொழிற் கல்விச்சாலை கட்டினர். இப்பொழுது இருக்கும் அவர்களது அழகான ஆலயம் 1831 இல் கட்டப்பட்டது. சேல நகரம், மணிவிழுந்தான் (முடலூர்), அரகாலூர், சமாதானபுரம் முதலிய இடங்களில் கிறீஸ்துவக் கூட் டங்கள் தோற்றுவிக்கப்பட்டு செபக்கூடங்களும் அமைக்கப்பட் டன. சேல நகரத்தைத் தவிர மற்ற இடங்களிலிருந்தவர்கள் 'சோற்றுக் கிறீஸ்துவர்கள்' ஆனபடியால், அவ்விடங்களில் செய்த வேலைகள் நிறுத்தப்பட்டன. இந்தத் தோல்விக்குப்பின்னர், ஒரு புதிய முறையைக் கையாண்டனர். கத்தோலிக்கர்களைப் புரோட் டஸ்டாண்டுகளாகச் செய்வதுதான் அப்புதிய முறை. மூன்று கத்தோலிக்கு உபதேசிமார்களை மதமாற்றம் செய்து, அவர்களைக் கொண்டு பிரச்சார வேலையை ஆரம்பித்தனர். புதிதாகச் சத்திய மறையிற் சேர்ந்த பள்ளர்கள் பதிதர்களின் பசப்பு மொழிகளைக் கேட்டு மயங்கிவிட்டனர். இதையறிந்த சங் ஃபிரிக்கோ சுவாமியார் உடனே கங்கவள்ளிக்குச் சென்று அவர்களுக்கு மெய்யறிவூட்டி மீண்டும் அவர்களை மெய்வேதத்தில் சேர்ந்தார். மணிவிழுந்தான், அரகாலூர் முதலிய இடங்களில் ஆங்கிலேயப் பதித முதலாளி களின் சாயத் தொழிற்சாலைகளில் வேலைசெய்த கத்தோலிக்கர்களில் சிலர் பதித மார்க்கத்தைத் தழுவினர். ஆனால் அவர்களும் விரை வில் மெய்மறைக்குத் திரும்பிவந்தனர். கத்தோலிக்கு உபதேசி யாராக இருந்து பதிதனான தாவீது என்பவன் 1843 இல் சேந்தமங் கலத்தில் வேலையில்லாது அவதிப்பட்டுக்கொண்டிருந்த கட்டிப்பறை யர்களைப் பதிதர்களாக்கப் பகீரதப்பிரயத்தனப்பட்டான். பிறகு அவன் பதித மார்க்கத்தில் ஒரு பிரிவினையை உண்டாக்கி, அதை அடைக்கலாபுரத்தில் (அஸ்தம்பட்டி) நிறுவினான். பத்துவருட சோதனைக்குப்பின் கத்தோலிக்கர்களை மனந்திருப்புவதில் தோல்வி

களையே கண்ட பதிதர்கள் அம்முறையைக் கைவிட்டனர். அவர்கள் உபயோகித்த இரண்டாம் முறை கல்வி அப்போஸ்தலத்துவம். சேலம், ஆத்தூர், எடப்பாடி, எல்லம்பிள்ளை, வெண்ணந்தூர், இராசிபுரம், சேந்தமங்கலம் முதலிய ஏழு இடங்களில் பள்ளிக் கூடங்களைக் கட்டினர். ஆனால் அப்பள்ளிகளின் ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். ஒரு நாள் ஆசிரியர் யாவருக்கும் பைபிளைப்படித்து மாணாக்கர்களுக்கு விளக்கம் கூறுமாறு கட்டளை பிறந்தது. இந்து ஆசிரியர்கள் எல்லோரும் ஒருமனமாக அந்த உத்தரவை நிராகரித்து அப்பள்ளிகளில் வேலை செய்வதற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். 10 அல்லது 12 வருடங்களுக்குப் பிறகு இந்து ஆசிரியர்கள் பதிதர்களின் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு இந்து மத போதனை செய்து வந்தனர் என்பது உணரப்பட்டது. இருபத்தாறு வருடங்களாக போதகம் செய்த பின்னர் 1861–இல் ஞான முழுக்குப் பெற்ற பதிதர்கள் 149 பேர்கள் என்றும், அவர்களில் நன்மை வாங்கினவர்கள் 55 பேர்கள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது

## சங். குயோன் (மகிமைநாதர்) : 1845—53.

சங். குயோன் சுவாமியார், தனக்கு முன் இருந்த இரண்டு குருமார்களைப் போலவே, இந்தியாவுக்கு வந்த ஒரு ஆண்டுக்குள் சேலத்தின் பங்கு விசாரணையை ஏற்றார். இந்தவிதமான எதிர்பாராத நியமிப்புகளின் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் அது முக்கியமாகக் குருமார்களின் பற்றுக் குறைதான் என்று தெரிகிறது. பத்ருவாதோ விலகிக் கொண்டதால் முத்துக் குளித்துறையின் அப்போஸ்தொலிக்கு நிருவாகம் மூன்று பிரிவுகளாக்கப் பட்டு, அப்பகுதிகளுக்குக் குருமார்களைப் பிரித்து அனுப்ப வேண்டியிருந்தது. மேலும் சேலத்திற்கு மிக்க உடல் நலமுள்ள வாலிப குருக்கள் தேவையாக இருந்தனர். மேலும் திருச்சி, தஞ்சை ஜில்லாக்கள் ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்ட இடங்கள். காவேரிக்கு வடக்கே சேசுசபையார் 20,000 கிறீஸ்துவர்களையும், தஞ்சையில் பத்ருவாதோ அதைவிட அதிக எண்ணிக்கையுள்ள கிறீஸ்துவர்களையும் விசாரித்துவந்தனர்.

சங். மகிமைநாதர் பிரான்சு நாட்டிலேயே மூன்று வருடங்கள் குருவானவராகப் பணிபுரிந்து, இவ்வேலைக்கு நல்ல பயிற்சி பெற்றிருந்தார். இவர் ஒன்பது வருடங்கள் தனிமையாக உழைத்தார். வருட முழுவதும் பயணம் செய்து கொண்டே இருந்தார். அவருடைய ஞானஸ்நானப் பெயரேடுகளிலிருந்து அவர் ஒவ்வொரு நாளும் தங்கின இடங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு நாள் இவர் வழக்கம்போல் பயணம் செய்து கொண்டிருந்தபோது வழியில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் சுவாமியாரைப் பார்த்து, "ஆமாம் சுவாமி! உங்களுடைய வீடு எங்கே? நீங்கள் எங்கே தங்குகிறீர்கள்." என்று கேட்டார். அதற்கு சுவாமியார் தன்னுடைய குதிரையின் சேணத்தைத் தட்டிக்காட்டி "இங்கேதான்," என்று பதில் சொன்னர். முதலில் அவருக்கு 34 விசாரணைகள் இருந்தன. ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய விசாரணையை ஏற்படுத்தினர். **1845**இல் கோவில்மேடு; **1846**இல் சங்கரி துர்க்கம், காட்டேரி, (சடையம்பாளையம்), அக்கிராகாரம்; **1847**இல் ரெட்டியூர், கொங்கரப்பட்டி; **1848**இல் சமாதானபுரம், இராசீபுரம்; **1850—51**இல் அவர் பாலகாட் முழுவதையும் விசாரணை செய்தார்.

அவர் சங். ஃபிரிக்கோ சுவாமியாருடையவும் அவரது உதவி குருமார்களினுடையவும் முறைகளைப் பின்பற்றி அவர்கள் வேலைகளைத் தொடர்ந்து செய்து அவற்றைப் பலப்படுத்தினர். அவர் தனது பங்கை ஐந்து ஆயத்தங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஒரு நிரந்தர உபதேசியாரை நியமித்தார். அந்த உபதேசியார் குழந்தைகளுக்குத் தேவையானபோது ஆடம்பரமில்லாத ஞானஸ்நானம் கொடுப்பார், ஆயத்தக்காரர்களுக்கு ஞானுபதேசம் கற்றுக் கொடுப்பார்; புது நன்மைக்கு ஆயத்தம் செய்வார்; பாவிகளுக்கு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய வழி கற்றுக்கொடுப்பார்; கலியாணம் செய்துகொள்ளப் போகிறவர்களுக்கு மந்திரம் கற்றுக்கொடுப்பார்; சாகப் போகிறவர்களுக்கு நல்ல மரணம் அடைய ஏற்பாடுகள் செய்வார். இவ்விதமாகப் பங்கு சுவாமியார் விசாரணை செய்ய வருவதற்கு வேண்டிய ஆயத்தம் செய்வார். பாஸ்குக் கடனைத் தீர்ப்பதற்கு வருட முழுதும் வாய்ப்பு கொடுக்கப் பட்டிருந்தது. ஏனெனில் வருடத்திற்கு ஒரு முறைதான் குருவானவர் ஒரு ஊரை விசாரணை செய்ய முடிந்தது. ஆனல் கோவிலூர்—தர்மபுரியையும், செவ்வாய்ப்பேட்டையையும் ஆண்டுக்கு இரு முறை விசாரணை செய்தார். மற்ற இடங்களில் விசாரணை

செய்யும் காலம் சாதாரணமாக அந்தந்த ஊர்ப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாளோடு சேர்ந்து இருந்தது. ஆனால் அந்த விசாரணையும் கூட உணவுக்கு நெருக்கடி ஏற்படும் சமயங்களில் தள்ளி வைக்கப்பட்டது.

ஆயத்தங்களும் அவற்றை ஒட்டியிருந்த விசாரணைகளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

1. கோவிலூர்—தர்மபுரி:— ஒட்டைப்பட்டி, பிலிகுண்டு, தர்மபுரி, கடகத்தூர், கொளகத்தூர், சாவுடையூர், கம்மனெல்லூர், தெங்கரைக்கோட்டை, B. பள்ளிப்பட்டி. ஒரு உபதேசியாரும், ஒரு பண்டாரமும்.

2. செவ்வாய்ப்பேட்டையும் ஏழு சேரிகளும்:— அன்னதானப்பட்டி, லைன், கோட்டை, முள்ளுவாடி, கருவாட்டுப்பாறை, கிச்சிப்பாளையம், அரிசிப்பாளையம். ஒரு பண்டாரமும், ஒரு கோவில் பிள்ளையும்.

3. கங்கவள்ளி:— ஆத்தூர் முள்ளுவாடி, நாரியப்பனூர், சமாதானபுரம், செந்தாரப்பேட்டை, தொம்பலாப்பட்டி, திருமனூர், ஒரு வள்ளுவ உபதேசி.

4. காக்காவேரி:— மதியம்பட்டி (ஒரு கோவில் பிள்ளை), பேட்டை, சேந்தமங்கலம், மோஹனூர், புதூர்—கொசவம்பட்டி. ஒரு உபதேசி, ஒரு பண்டாரம்.

5. எடப்பாடி:— சங்கரிதுர்க்கம், காட்டேரி, சடையம்பாளையம். காணியாம்பட்டி—ரெட்டியூர், சின்னப்பன்பட்டி. ஒரு உபதேசி.

6. கோவிலூர்—திருப்பத்தூர்:— கிருஷ்ணகிரி, எலத்தகிரி, கிருஷ்ணம்பட்டி, மல்லப்பாடி, ஒடியந்தரம், கோடஞ்சி ஒரு உபதேசி.

1845—46இல் சங். குயோன் சுவாமியார் சங். பக்ரு சுவாமியாருடன் கொல்லேகாலில் சுற்றுப்பயணம் செய்து ஈரோடு ஊராச்சிக்கோட்டை, பூதப்பாடி, குள்ளவீரம்பட்டி, நாயம்பாடி, மார்த்தஹல்லி, கௌதல்லி, சிங்கிடிமலை முதலிய இடங்களைப் பார்வையிட்டனர். பூனச்சிமலை ஏறி பிறகு செங்கப்பாடியிலிருந்து பரிசலில் காவேரியாற்றின் வழியாகத் திரும்பி வந்தனர்.

### சங்கரி துர்க்கம்.

சங்கரி துர்க்கத்திலிருந்த பயிற்சி பெற்ற பட்டாளம் கலேக்கப்பட்ட போது ஒரு ஆங்கில இராணுவ அதிகாரி ஊரின் நடுவிலே இருந்த தனது பங்களாவையும் அதன் சுற்றுப்புறத்தையும் கோவிலுக்கு அளித்துவிட்டுச் சென்ருர், இந்த பங்களா கோவிலாக மாற்றப்பட்டது. ஏனெனின் சங்கரி துர்க்கத்தின் வழியிலிருந்த அர்ச்- அந்தோணியார் கோவில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. திப்புசுல்தான் காலத்தில் ஒரு முகமதிய மாதை மணம் செய்யப் பலவந்தப்படுத்தப்பட்ட சங். அப்பேதூபுவாவின் வள்ளுவன் இப்புதிய கோவிலின் காவற்காரன் ஆனன். அவன் இறந்த அதே தினத்தில் ஒரு சேனே அவ்வழியாகக் கள்ளிக்கோட்டைக்குச் சென்றது. அப்படையின் தலேவனுக்கு இவன் இறந்த செய்தி தெரிவிக்கப்பட்டது. மறுநாட் காலே இராணுவச் செலவில், இராணுவ மரியாதையுடன் அவன் அடக்கம் செய்யப்பட்டான். இந்த வள்ளுவன் உயிருடனிருக்கும் பொழுது வங். போன்னுன் ஆண்டவரிடம் தான் இறந்தால் புதைப்பதற்குக் கூட ஆள் இல்லாமல் தனிமையாக இருப்பதை அடிக்கடி தெரிவிப்பான். அப்பொழுதெல்லாம் அந்த மேற்றிராணியார், "நீ விசுவாசமாயிரு. மற்றதெல்லாம் கடவுள் கவனித்துக் கொள்வார்," என்று கூறுவாராம். அவருடைய கூற்று பலித்தது. இத்தகைய ஆடம்பர அடக்கச் சடங்கு அவனுக்குக் கிடைக்கும் என்பதை அவன் கனவிலுங் கருதியிருக்கமாட்டான்.

### சடையம்பாளேயம்:

சடையம்பாளேயத்திலிருந்த கொங்கு மூப்பர்கள் தங்களது எளிய மிகச் சிறிய செபக்கூடத்தை புரொப்பகாந்தா மிஷனரிகளுக்குத் திறந்துவிட்டனர். கிறீஸ்துவப் பெண்கள் மிகச் சிலராயிருந்தபடியால் தங்கள் குல இந்துச் சிறுமிகளே வாங்கி வளர்த்துப் பின் வயது வந்தபின் அவர்களேக் கிறீஸ்துவ மாப்பிள்ளேகளுக்குமணம் செய்து கொடுத்தனர், 1845இல் பவானி ஆற்றின்மேல் பாலங் கட்டினபொழுது அனேக பனமரங்களேச் சாரம் கட்டுவதற்காக வெட்டினதால் மூப்பர்கள் தங்களது தொழில் கெட்டு நாகலூருக்குச் சென்றுவிட்டனர். அதே சமயத்தில் சென்னேயிலிருந்து கள்ளிக்கோட்டைக்குச் செல்லும் ரயில்பாதை போடப்பட்டது, அப்போது தண்டவாளக் கட்டைகளுக்காக சூரியமலேக்காடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டன.

### சூரமங்கலம்:

இச்சமயத்தில் சூரமங்கலத்தில் ரயில் தொழிலாளிகள் குடியேற்றம் ஏற்பட்டு விரைவில் வளர்ந்து வந்தது. லோக்கூர் கணவாயைக் கடக்கும் எஞ்சின்களின் நிலையமானதால் அது சீக்கிரமாக முக்கியத்துவம் அடைந்தது.

### கொங்கரப்பட்டி:

திருச்சங்கத்தின் விருப்பத்திற்கிசைந்து சங். குய்யோன் சுவாமியார் எடப்பாடியிலிருந்த எளிய ஆனால் நல்லொழுக்கமுள்ள குடும்பங்களில் சிலவற்றை கோவிலூரில் வேலை செய்ய அழைத்து வந்தார். இந்து மதச் சடங்குகளில் கிறீஸ்து வடுக வண்ணார்கள் பங்கு பெற வேண்டியது அவசியமில்லை என்று இந்துக்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில் அங்கு வடுக வண்ணார்கள் தொழில் புரிந்தனர். யானைக் கூட்டங்கள் இருந்த தொப்பையார் பள்ளத்தாக்கில் சில வடுக வண்ணார் குடும்பங்களும் சில வன்னியர்க் குடும்பங்களும் கொங்கரப்பட்டி என்ற சிற்றூரைத் தோற்றுவித்தனர். ஆத்தூர் தாலூக்காவில் புற்றக்கவுண்டன்பாளயத்துக் கருகில் கிருஷ்ணபுரத்திலும், அவ்வூருக்குத் தெற்கே சிலமைல் தூரத்தில் இருந்த அடைக்கலாபுரத்திலும் சில கீழ்க்குல வண்ணார்கள் குடியேறினர். ஆனால் 1876—78இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது அடைக்கலாபுரம் அழிந்துவிட்டது. கிருஷ்ணபுரம் துவக்கத்திலிருந்தே சரியாக வளர்ச்சியுறவில்லை. ஆனால் கொங்கரப்பட்டி நன்ருக செழித்து வளர்ந்தது. இப்பொழுது அங்கே ஒரு சிற்ருலயம் உண்டு.

### கேத்தம்பட்டி: (கேத்தனுஹல்லி):

1845இல் கோவிலூர் திருப்பத்தூரிலிருந்து சில வன்னியர்கள் அனுமந்தபுரம் மிட்டாவுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர்த் தொழில் செய்யவந்தனர். அர்ச். செபஸ்தியார் பேரால் கட்டப்பட்ட செபக்கூடம் கேத்தம்பட்டி கிராம வீதியில் இரண்டு செண்டு நிலத்தில் இருந்தது.

### வேதக்கார ரெட்டியூர்:

மேதரா பாய் நெய்வோர் வசித்து வந்த, பின் அவர்களால் விடப்பட்ட, இடத்திற்கு வேதக்கார ரெட்டியூர் என்று பெயர்.

கிறீஸ்துவர்களில் பல இனத்தவர்கள்—ஸ்ரீ கர்ணிக்கர், எடப்பாடி யிலிருந்து வந்த துளுவ வேளாளரான முட்டிக்கண்ணு சவரியின் பாதுகாப்பில் இருந்த திருநெல்வேலி மூப்பர்கள், பண்ணை முத லாளி முதலியோர் அந்த இடத்திற்கு வந்து குடியேறினர். இப் பொழுது இருக்கும் கோவிலுக்கு முன்னால் ஒரு சிறிய செபக் கூடத்தைக் கட்டிக்கொண்டனர். பின்னர் 1860-இல் முட்டிக் கண்ணு சவரி ஒரு கோவில் கட்டினார். அதற்காக மிஷன் அவ ருக்குத் தாராளமாக உதவி செய்தது.

முட்டிக்கண்ணு சவரி ஒரு சிறந்த கத்தோலிக்கர். அவ ருக்கு ராயம்மாள், சின்னம்மாள் என்ற இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ராயம்மாள் பிறந்த மூன்று நாட்களுக்குப் பின் சின்னம் மாள் பிறந்தாள். இவர்களின் தாயார் பிரசவத்திற்குப் பின் இறந்து விட்டாள். இரண்டு பச்சிளங் குழந்தைகளைக் காப்பாற்ற முட்டிக் கண்ணு இரண்டாவது கலியாணம் செய்ய வேண்டியிருந்தது. புதுச்சேரி மடத்தில் பயின்று கொண்டிருந்த வெரோணிக்கம்மாள் என்ற பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். புதுவைப் பட்டணத்திலிருந்து பட்டிக்காட்டு ரெட்டியூருக்கு வந்த கான்வென்ட் படிப்பு படித்த வெரோணிக்கம்மாள் தான் மடத்திலேயே இருந் திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்குமே என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டாள். புதுவை மடத்தின் சிறப்புகளைப் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருந்தாள். மடத்தின் அருமை பெருமையான இவ்விதப் பேச்சுக்களை சிறுமி சின்னம்மாள் தனது சிறிய செவிகளினால் கேட்டு பெரிய சிந்தனைகள் செய்து வந்தாள். ஓடி விளையாடும் பருவம் வந்ததும் அவளை ஆடு மேய்க்கும் பணி யில் போட்டார் முட்டிக்கண்ணு. பனைமரங்கள் அடர்ந்த காடுகளில் ஆடுகளை மேய்ப்பதற்கு மிகவும் பயந்த சிறுமி தனது சிறிய தாயார் இருந்த கார்மேல் மடத்தில் ஏன் சேர்ந்து கொள்ளக்கூடாது என்று பொருமினாள். அப்பொழுது சங். குயோன் சுவாமியார் ரெட்டியூரை விசாரணை செய்து வந்தார். பிறகு இவர் கார்மேல் தலை மடத்தை சீர்படுத்தும்படியாக புதுவைக்கு அழைக்கப்பட்டார். ஒரு நாள் சின்னம்மாள் புதுவையில் நடந்த கலியாணத்துக்கு தனது உறவினர் களுடன் சென்றாள். புதுவையிலிருந்த கார்மேல் மடத்தையும் அங் கிருந்த தன் பழைய பங்கு சுவாமியார் சங். குயோனையும் கண்டாள். சில மாதங்களுக்குப் பின் சங். குயோன் சுவாமியார் மறுபடியும் ரெட்டியூர் விசாரணையை ஏற்றுக் கொண்டார், ஒருநாள் சின்னம்

மாள் தன்னைக் கார்மேல் மடத்துக்கு அனுப்பும்படியாக சங். குயோன் சுவாமியாரிடம் மன்றாடினாள். சின்னம்மாள் தனக்கு மிகவும் உதவியாக இருந்தபடியால் அதற்கு முட்டிக்கண்ணு சவரி இசைவு தரவில்லை. ஆனால் ஒருநாள் சங். குய்யோன் சுவாமியார் ரெட்டியூரை விசாரணை செய்ய வந்தார். கோவிலுக்கு முன் இருந்த பாண்டவர் கல்லில் சுவாமியார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று முட்டிக்கண்ணு தன் மகள் சின்னம்மாளோடு கோவிலுக்குச் சென்று சிறிது நேரம் வேண்டிக்கொண்ட பின் வெளியே வந்து சுவாமியாரிடம் சின்னம்மாள் கன்னியாஸ்திரியாக இருக்க வேண்டும் என்று கனவு கண்டதாகவும், அவளை மடத்துக்கு அனுப்புகிற வரையில் தனக்குத் தூக்கம் வராதென்றும் கூறினார். சுவாமியார் அவளை உடனடியாக புதுவை கார்மேல் மடத்துக்கு அனுப்பி வைத்தார். சில ஆண்டுகளுக்குப் பின் சின்னம்மாள் கார்மேல் கன்னிகையானாள். சேல மாவட்டத்தில் முதல் கன்னிகையான இவள் கடைக்காரன் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

### சமாதானபுரம்.

கோனேரிப்பட்டிக்குக் கிழக்கே அரை மைல் தூரத்தில் உள்ள சமாதானபுரத்தில் இருந்த பதிதர்கள் 1851-இல் கத்தோலிக்கர்கள் ஆயினர். சங். மகிமைநாதர் அவர்களுக்கு அர்ச். இராயப்பர் சின்னப்பர் பேரால் ஒரு தேவாலயம் கட்டிக் கொடுத்தார். ஆனால் அவர்கள் 1855-இல் மறுபடியும் பதித மார்க்கத்துக்குத் திரும்பி விட்டனர். ஈசாக்கு என்ற ஒருவன் கோவிலிலிருந்த பலிபீடத்தைத் தகர்த் தெறிந்தான்: சிலுவையையும் சொரூபங்களையும் அவமரியாதை செய்து உடைத்துத் தள்ளினான். இதற்குப் பின் சமாதானபுரம் இராயப்பர் பாளையம் என வழங்கலாயிற்று. 1860 இல் அவர்கள் மறுபடியும் கத்தோலிக்கர்கள் ஆனார்கள். அப்போது அந்த ஊர் சிலுவைக்குப்பம் என வழங்கலாயிற்று. மறுபடியும் அங்கே ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. ஆனால் திரும்பவும் அவர்களிற் சிலர் பதிதர்களாயினர். ஒரு காலத்தில் செல்வந்தர்களாக இருந்த இவர்கள் முதற் கோவிலை அழித்ததிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக நிலங்களை இழந்து, ஏழைகளாகி, கடைசியாக அந்த சபிக்கப்பட்ட இடத்தை விட்டுப் போய்விட்டனர். அவர் இப்போது எங்கு இருக்கிறார்களோ ?

**கோவில் மேடு (சேர்வராயன் மலை) :**

1820-இல் காப்பி, வாசனைத் திரவியங்கள் முதலியனவற்றைப் பயிரிடுவதற்காக சேர்வராயன் மலைகளிலுள்ள தோட்டங்களை அளிக்க அரசாங்கம் முன் வந்தது, புதுச்சேரியிலிருந்து வந்த சில பிரெஞ்சுக்காரர்களும் கிறீஸ்துவர்களும் அத் தோட்டங்களை வாங்கினர். உடனே துரைமார்கள், வேலையாட்கள், கூலிகள் முதலானவர்களைக் கொண்ட ஒரு சிறிய கிறீஸ்துவ சமுதாயம் அங்கே தோன்றியது, முதன்முதலாக நாகலூரில் ஷார்ட் துரையின் தோட்டத்தில் ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டது, புதிதாக மனந்திரும்பின மலையாளிகளுக்கு அத்தியூரில் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. பாலமடீஸில் (பாம்புக்கல் சோலை) ஒரு கோவிலை மிஷன் கட்டினது. மனந்திரும்பின மலையாளிகட்குப் பெண்கள் கிடைப்பது கஷ்டமாகப் போனதால் அவர்கள் மறைந்து விட்டனர். விவாக பந்தனம் மலையாளிகளிடம் மிகவும் தளர்ந்து இருப்பதால் இன்றும் அவர்களை மனந்திருப்புவது மிகவும் கடினம்.

சமவெளியிலிருந்து வரும் கடிவாளம் போன்ற வழி மலை உச்சியில் சந்திக்குமிடம் சுகாதாரத்திற்கு ஏற்றதாயிருந்ததால், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்த — மகராசிகள் என்று பெரும்பாலோர் கூறிக்கொண்டனர்— ஐரோப்பியர்களின் வேலைக்காரர்கள் — பட்லர்கள், குதிரைக்காரர்கள், சொக்கராக்கள், ஆயாமார்கள், பஞ்சம ஆசாரிகள் — அங்கே வந்து கூடினர். அவர்களில் பெரும்பான்மையோராக இருந்த கிறீஸ்துவர்கள் புறம்போக்கில் ஒரு செபக்கூடம் கட்டிக் கொண்டனர். அக்காலத்தில் மிஷனரிமார்கள் விசாரணைக்கு அங்கு வந்த போது, ஐரோப்பிய தோட்ட முதலாளிகளின் பங்களாக்களில் தங்கினர். ஒவ்வொரு வருடமும் புதிய புதிய பங்களாக்கள் தோன்றின. மலேரியா ஜுரமுள்ள இடமானபோதிலும் கோடை காலங்களில் அநேகர் வந்து தங்கினர். வந். போனந்து ஆண்டவர் உடல் நலம் குன்றின குருக்களுக்கு ஆரோக்கிய விடுதி ஒன்று கட்ட ஆவல் கொண்டார். எனவே சங். மகிமைநாதர் 1845-இல் கிறீஸ்துவர்கள் கோவில் மேட்டில் கட்டின சிறிய செபக் கூடத்தை விலைக்கு வாங்கினார். அதைச் சுற்றியிருந்த நிலமெல்லாம் மிஷனுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதியைக் கோவில் நிலமாக வைத்துக் கொண்டு மற்ற ஒரு பகுதியை வீடுகள் கட்டிக்கொள்வ

தற்காக கிறீஸ்துவர்களுக்கு சங். மகிமைநாதர் கொடுத்தார். மண்ணாலும் கற்களாலும் மூன்று அறைகள் கொண்ட ஒரு அறை வீடு கட்டப்பட்டது. பின்னர் அது மிகவும் பெரிதாக்கப்பட்டது. அதற்கு அருகிலேயே ஒரு நல்ல கிணறும் வெட்டப்பட்டது.

1850-இல் சங். மகிமைநாதருக்குப் புதுக் கிறீஸ்துவர்கள் அநேகர் இருந்தனர். இராசிபுரத்திலும் பிள்ளாநெல்லூரிலும் ஒட்டர்கள் இருந்தனர். B. பள்ளிப்பட்டியில் சில ஆதி திராவிடர்கள் இருந்தனர். அப்போது அவருடைய விசாரணையாக இருந்த எலத்தகிரியில் 250 முதலியார்கள் இருந்தனர். கங்கவள்ளியிலிருந்த அறை வீட்டின் கூரையை அவரே செய்தார். 1848-இல் கோவிலூர் — தர்மபுரியில் ஒரு பெரிய கோவிலைக் கட்டினார். 1851-இல் செவ்வாய்ப்பேட்டையில் தனது இரண்டாவது பெரிய கோவிலைக் கட்டினார்.

ஒரு விதவையையும் இரண்டு பெண்களையும் படிக்க அனுப்பி, அவர்களைக் கொண்டு 90 பிள்ளைகளைக் கொண்ட மூன்று பாடசாலைகளை சேலத்தில் ஆரம்பித்தார். பெரிய விசாரணைகளில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. அநேகருக்கு 'பள்ளிக்கூடத்தான்' என்ற குடும்பப் பெயர் இருப்பது இதற்குச் சான்றாகும். மிஷனரியினுடைய பணத்தைக் கொண்டு அல்லது பிள்ளைகளின் பெற்றோர் அளிக்கும் உணவுப் பொருட்கள் முதலியவற்றைக் கொண்டு இந்த ஆரம்பப் பாடசாலைகள் நடத்தப் பெற்றன. எனவே அவை நிரந்தரமான பள்ளிக்கூடங்கள் அல்ல. சில வள்ளுவக் கிறீஸ்துவர்கள் ஆசிரியர் ஆனார்கள். இதற்கு உதாரணம்: எலத்தகிரியில் இருந்த பக்தியுள்ள வள்ளுவர்கள், பூசை காண்பதற்கும், செபங்கள் சொல்லுவதற்கும், சிறுவர்கள் ஒழுக்கத்தைக் கவனிப்பதற்கும் கோவிலில் இவர்களுக்கென்று ஒரு சிறிய திறப்பு விடப்பட்டிருந்தது.

இதற்குமுன் பத்து வருடங்களாக சேலத்தில் பல இடங்களில் சிதறிக் கிடந்த சிறிய சேனைகளை திருச்சி, கள்ளிக்கோட்டை, பெங்களூர், செக்குந்தராபாத் முதலிய இடங்களுக்கு அரசாங்கம் அனுப்பிவிட்டது. 1845-இல் சேலம் லைனிலிருந்த சிப்பாய்களைத் தவிர சேலத்தில் வேறு எங்கும் ஒரு சிப்பாய் கூட விட்டு வைக்கப்படவில்லை. சிப்பாய்கள் சேலத்தை விட்டுச் செல்லும் போது

அவர்களோடு லஸ்கர்களும் அவர்களுடைய குடும்பங்களும் உடனே அல்லது சில காலத்திற்குப் பிறகு சென்று விட்டனர். ஆத்தூர், தெங்கரைக் கோட்டை, மல்லாபாடி, கிருஷ்ணகிரி, சங்கிரிதுர்க்கம், ராயகோட்டை, சேலம் முதலிய இடங்களிலிருந்த இத்தகையோர் சென்றனர். எனவே சேலத்தில் இருந்த கிறீஸ்துவர்கள் எண்ணிக்கையில் பல நூறு பேர்கள் குறைந்து விட்டனர்.

1851-இல் வந். போனுந்து மேற்றிராணியார் கொல்லி மலையைச் சுற்றியுள்ள விசாரணைகளைப் பார்வையிட்டார். அவர் கோட்டைப்பாளையத்தில் ஆகஸ்டு மாதம் தங்கியிருந்த போது மலைவாசிகளின் முதல் அப்போஸ்தலராக விளங்கின சங். கிரிமோ (சவரிநாதர்) சுவாமியாரின் புதுக் கிறீஸ்துவர்களைப் பார்க்க முயன்றார். சேல மாவட்டத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டது. தொப்பூர் கணவாய்க்கு வடக்கே ஒரு பங்கும், அதற்குத் தெற்கே ஒரு பங்குமாகப் பிரிக்கப்பட்டது. வடக்கே தர்மபுரி, பாரமகால் இவைகளோடு பாலகாட்டும் சேர்க்கப்பட்ட ஓராயிரம் கிறீஸ்துவர்களைக் கொண்ட பங்கை சங். மகிமைநாதர் நிருவாகம் செய்து வந்தார். தாலகாட் பகுதி 1852-ஆம் ஆண்டு சங். போர்தரோ (பேரின்பநாதர்) சுவாமியாரின் விசாரணைக்கு விடப்பட்டது. அவரது தலைமைப் பங்கு சேலம்.

இனி வரப்போகும் 40 வருடங்களில் சேலத்திலிருந்த கிறீஸ்துவ மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்தனர். எடப்பாடியிலிருந்த முதலியார்கள் சேலம், எலத்தகிரி, புதுச்சேரி (முத்தியாலுப் பேட்டை) முதலிய இடங்களுக்குச் சென்றனர். கோவிலூர்—தர்மபுரியைச் சுற்றி வடுக வண்ணார்கள் குடியேறினர். வன்னியர்கள் பூலப்பாடி, கொங்கரப்பட்டி, சவேரியார்பாளையம், ஒசூர் முதலிய இடங்களிலும், பெங்களூர் மார்க்கத்திலும் குடியேறினர், கீழ் குல வண்ணார்கள் சாயத் தொழிற்சாலைகளை விட்டு மேற்குப் பாகத்திலிருந்த கிராமங்களில் தங்கினர்.

## பங்குகளின் பிரிவினை (1852—76)

### கோவிலூர் பங்கு — (1852 — 76)

சங். மகிமைநாதர் வெள்ளாண்டி வலசையில் புனித வாரத்தில் நடித்துக் காண்பிக்கப்பட்ட கர்த்தரின் பாடுகளைப் பற்றிய வரலாற்றை மிகவும் வெறுத்தார். தாலகாட்டிலிருந்து பாரமஹாலைப்

பிரித்தவுடன் அவர் கோவிலூர் — தர்மபுரியில் இந்த சோக வரலாற்றை மிகுந்த பக்தி சிரவணத்தோடு நடித்துக்காட்ட முயன்று வெற்றியும் பெற்ருர். அவருக்கு உதவியாக சங். புவாரோ (சவரிநாதர்) சுவாமியார் அனுப்பப்பட்டார். அவருடைய உதவியால் கோவிலூர் கோவில் பீடத்தைச் சுற்றியுள்ள இடம் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டது. இங்கே அவர் காட்டின திறமை அவருக்குக் கட்டிடக் கலை நிபுணர் என்ற புகழையும் பெயரையும் பெற்றுத் தந்தது. பின்னர் இவர் புதுச்சேரிக்குச் சென்று அங்கே அநேக அழகிய ஆலயங்களைக் கட்டினார். 1853-இல் சங். மகிமைநாதர் புதுச்சேரிக்கு அழைக்கப்பட்டு அங்கே சங். பூப்ளின், சங். லெ ஒதே முதலியவர்கள் துவக்கின கர்மேல் சபையை சீர்படுத்துதல், அக்கன்னியர்களுக்குத் தனி வாசத்திற்குத் தேவையான இடம் தேர்ந்தெடுத்தல், அவர்களது ஆடை, பொது ஒழுங்குகள் முதலியவற்றைக் கவனிக்கும் பணி அவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் 1858 — 62-இல் தாலகாட்டுக்குத் திரும்பி வந்தார்.

சங். மகிமைநாதருக்குப் பின் சங். மோரி (தர்மநாதர்) சுவாமி (5—7—1853 — 58) வந்தார். இவர் காலத்தில் தான் கோவிலூர் — தர்மபுரியின் கோவில் முற்றுப் பெற்றது. 10 வீடுகளைக் கொண்ட கோவிலூர், தொப்பூர்க் கணவாய்க்கு வடக்கே இருந்த விசாரணைகளுக் கெல்லாம் தலைமைப் பங்காயிருந்தது. ஆச்சரியமாகவும் விநோதமாகவும் இருக்கிறது. தாய்ப் பங்கு, கோவில் நிலம், பாஸ்காப் பண்டிகை முதலிய சிறப்புக்களைத் தவிர, கோவிலூர் வேறு வகைகளில் முக்கியம் வாய்ந்த இடம் அல்ல. வன்னியர்கள் இருந்த இடத்திற்குச் சில மைல்களுக்கு அப்பால் இருந்த தர்மபுரி வளர்ந்து வரும் பெரிய நகரமாயிருந்தது. அநேக சாலைகள் அங்கே சந்தித்தன, இருப்புப் பாதை அங்கே போடப்பட்டிருந்தது. ஆனால் முக்கியம் வாய்ந்த கூட்டத்தினராகிய பக்தியுள்ள கொள்ளியர்களை (இப்போது அவர்கள் அங்கே இல்லை) நாம் மறக்கலாகாது, பொன்னையாற்றிற்கு அப்பால் இருந்த கோவிலூர் — திருப்பத்தூரும், ஜோலார்ப்பேட்டை — கள்ளிக்கோட்டை இருப்புப் பாதை அமைக்கப்பட்ட பின் எழுந்த ஜோலார்ப்பேட்டை ரயில்வே காலனியும் முக்கியத்துவம் அடைந்து வந்தன. பாலகாட் மேற்கிலிருந்து அதிக தூரத்தில் இருந்தது. ஒசூரின் தெற்கு பாகத்தில் கிறீஸ்துவர்கள் மிகவும் சிதறி இருந்தனர். இப் பகுதி மைசூரிலிருந்து பிரிந்து இருந்ததை வந். போனுந்து ஆண்டவர் எப்பொழு

துமே எதிர்த்து வந்தார். இவ்வாறுக விசாரணைகள் சிதறி இருந்த தனுல் கோவிலூர் — தர்மபுரி பங்கு மிகக் கடினமான வேலைகள் நிரம்பின பங்காக இருந்தது. தன் விசாரணைகள் அனைத்தையும் பார்வையிடுவதற்கு இடைவிடாது பிரயாணம் செய்வதுதான் சங். தர்மநாதரின் முக்கிய வேலையாக இருந்து வந்தது.

**1853**-இல் கிருஷ்ணகிரியில் **50** அல்லது **60** கிறீஸ்துவர்கள் இருந்தனர். அவ்வூரிலிருந்த பட்டாளம் வெளியேற்றப்பட்ட பின் கிறீஸ்துவர்களின் எண்ணிக்கை மேலும் குறைந்தது. சங். தர்மநாதர் மிகவும் வயது வாய்ந்த மீர் முகமது சாயபுவை அங்கே சந்தித்தார். அவருக்கு **22** வயது ஆனபோது **1780** இல் ஹைதர் ஆலியின் பிரதிநிதியோடு பிரான்சு மன்னரான பதினுறும் லூயி ஸைக் காண ஐரோப்பாவுக்குச் சென்றுர். அவருக்குப் பாலக் கோடுக்கு அருகில் (பெவுஹல்லி மிட்டா) ஒரு பெரிய நிலம் இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆனுல் அந்த நிலம் ஏறக்குறைய வெருதாவாக விடப்பட்டிருந்தது. இந்த சந்திப்பிற்குப் பின் சுவாமியார் அந்த நிலத்திலே வன்னியர்களுக்கு ஒருகுடியேற்றத்தை நிர்மாணித்தார். ஞானஸ்நானக் கட்டிலிருந்து சில சமயம் திருப் பாப்பத்தி என்றும், சில சமயம் சிலுவைப்பாளையம் என்றும் பெயர் இருந்ததாகத் தெரிகிறது. **1870**இல் முப்பது வன்னியர்களுக்காக அங்கே ஒரு செபக்கூடம் இருந்தது. உப்பாற்றுக் கணவாயிலுள்ள மாரண்டவள்ளியிலிருந்து கம்மனெல்லூர் வரை உள்ள நிலப்பகுதியில் மலேரியா ஜுரம் அதிகமாக வருவதுண்டு. இக் காரணத்தினுல் தான் அக் குடியேற்றம் ஓங்கி வளரவில்லை.

சங். தர்மநாதர் மத்திகிரியில் ஆண்டு தோறும் சிலரை மனந்திருப்பினுர். **1853**-இல் இப்பொழுது உள்ள விசுவாசப் பட்டிக்கு அருகிலிருந்த ரெட்டி வலசையிலும், கிருஷ்ணம்பட்டியிலும் சிலரை மனந்திருப்பினுர். **1857**-இல் எலத்தகிரியில் ஒரு அருமையான ஆதி திராவிட குடும்பத்தை மனந்திருப்பினுர். **B**.பள்ளிப்பட்டி, தெங்கரைக் கோட்டை இவ்வூர்களிலிருந்த புதுக் கிறீஸ்துவர்கள் தங்கள் இனத்தவரில் சிலருக்கு ஞானஸ்நானம் பெற வழி செய்தனர்.

**1855**இல் வந். போன்ஞன் ஆண்டவர் கோவிலூரையும் பாலகாட்டையும் விசாரணை செய்ய வந்தார். இதற்கு முன் அவர் **1841**இல் இங்கே விசாரணைக்கு வந்தார். அப்போது அவருக்கு

உதவி செய்தவர் சங். அபிரகாம்நாதர். சங். தர்மநாதருக்கு உதவி குருவாக சங். பரெய் (பெரிய சின்னப்பநாதர்) வந்தார் (1857–58) ஆனால் அவர் வியாதியுற்று பங்களூருக்குச் சென்றார். சுகமடைந்த பின்னர் பாலகாட்டை விசாரணை செய்தார். 1858இல் சங். தர்மநாதர் அத்திப்பாக்கத்திற்கு மாற்றப்பட்டார். 18 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் பாரீஸ் மாநகரில் பாரீஸ் அந்நிய வேதபோதக சபையின் உப சிரேஷ்டராகச் சேவை செய்தார். சேலத்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டபோது சங். தர்மநாதர் பிரெஞ்சு மக்களிடமிருந்து பண உதவி பெற்று இங்கு அனுப்பி வைத்தார். வந். லவூவென்னன் ஆண்டவர் காலமறிந்து அவர் செய்த சேவையை நன்றி ததும்பிய உள்ளத்தோடு பாராட்டி எழுதி வைத்தார்.

சங். தீரியோன் (சூசைநாதர் சுவாமி) செவ்வாய்ப்பேட்டையில் உதவி குருவாக இருந்து பின்னர் கோவிலூர்ப் பங்கை முப்பது வருடங்களாக (7—1858 முதல் 1887 வரை) விசாரணை செய்தார். சங். ∴பிரிக்கோ (அமிர்தநாதர்) இவருக்கு உதவி குருவாக இரு தவணைகள் இருந்தார். முதல் தடவை 1859இல் இருந்து 1860 வரை இவருக்கு உதவியாக இருந்தார். அதன் பின் பிரான்சுக்குச் செல்ல வேண்டுமென்று விரும்பினர். பிறகு இரண்டாம் முறை 1864இல் கோவிலூரில் கட்டடம் கட்டுவதற்கு உதவி செய்தார். 1868இல் இருந்து வந். லவூவென்னன் ஆண்டவர் வாலிப குருமார்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியைச் சங். தீரியோன் சுவாமியாருக்குக் கொடுத்தார். சங். ரிஸ் (நீதிநாதர்), சங். டூப்பா (பாக்கிய நாதர்), சங். தே செத்ரு (மிக்கேல் நாதர்), சங். பஸோ (ஜெரோம்) 1878—83—இவர் குதிரையிலிருந்து கீழே விழுந்து சாகும் வரை வேலை செய்யமுடியாத நிலையிலிருந்தார். இறுதியாக சங். க்ரோ பொர்ன் ஹென்றி (1883—85). சங். தீரியோன் சுவாமியாரின் நீண்ட கால விசாரணையின்போது கோவிலூர்—திருப்பத்தூரும், மத்தகிரியும் இவரது பங்கிலிருந்து பிரிக்கப்பட்டன.

1861இல் உணவு அரிதாகி 1866இல் பஞ்சம் தோன்றியது. உடனே சங். சூசைநாதர் சுவாமி கோவிலூர்—தர்மபுரியிலும் மல்லாபுரத்திலும் இரண்டு ஞானஸ்நான ஆயத்தங்களைத் தமது சொந்த செலவில் ஏற்படுத்தினர். மல்லாபுரத்தில் மனந்திரும்பின 137 பேர்களில் 98 பேர்கள் ஆதிதிராவிடர். இந்த ஆதிதிராவிடரும், இப்பொழுது கோவிலூரில் உபதேசியாராக இருப்பவரின்

இடையர் குடும்பமும் விசுவாசத்தை எப்பொழுதும் காப்பாற்றினர். இதே சமயத்தில் B. பள்ளிப்பட்டியில் மனந்திரும்பின இருளர்கள் வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். அவர்கள் குடியிருந்த நிலத்தில் இப்போது பள்ளிக்கூடம் இருக்கிறது. இச்சமயத்தில் கோவிலூரில் நூறுபேர்கள் மனந்திரும்பினர். சங்.சூசைநாதர் உணவில்லாது அவதியுற்ற இவர்களைத் தனது சொந்தப் பணத்தைக்கொண்டு பராமரிக்க முடியாதபோது மிஷன் அவர்களுக்கு உதவி அளித்தது.

நெல்லிமரத்துப்பட்டி என்பது ஒரு பழைய விசாரணை. 1774இல் அங்கு மூன்று தெருக்களில் நெசவாளிகள். வெற்றிலைக்காரர்கள், வியாபாரிகள் முதலானோர் இருந்தனர். கிறீஸ்துவர்களுக்குத் தலைவனாக இருந்தவன் பழைய மிட்டாதார் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய சாவு, நெசவாளிகளுக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்ட சண்டை, துணியின் விலை குறைவு. வெற்றிலைத் தோட்டத்தில் பூச்சி விழுந்தது, மலேரியா, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்தது, புதுச்சேரி, எலத்தகிரி முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டது. இவைபோன்ற காரணங்களால் அந்த விசாரணை நிலைகுலைந்து சீர்கெட்டுவிட்டது. அங்கு கட்டப்பட்டிருந்த பழைய கோவில் பல வருடங்களுக்கு முன்பே அழிந்துவிட்டது.

கேத்தம்பட்டியில் முதல் செபக்கூடம் 1863 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதே ஆண்டில் விசாரணையும் நடந்தது. கொங்கரப்பட்டியிலிருந்த செபக்கூடம் (1865—67) அநேகமாக சங். யாகப்பநாதரால் கட்டப்பட்டிருக்கவேண்டும். கடகத்தூரில் சர்வேசுரன் கோவிலுக்கு விடப்பட்டிருந்த நிலம் 1863இல் இனம் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டது. சின்னப்ப நாயக்கனுடைய சிறிய கோட்டையிலிருந்த சிறிய செபக்கூடம் கோவிலாக உபயோகிக்கப்பட்டது. 1872இல் சங். பினோ (ஆனந்தநாதர்) சில மாதங்கள் அங்கே தங்கினர். காவேரியாற்றின் கரையிலிருந்த ஆலம்பாடி கோயம்பத்தூர் நிருவாகத்தில் இருந்தபோதிலும் அது கோயம்பத்தூருக்கு வெகு தூரத்தில் இருந்தமையால் அவ்வூரையும் அதோடு பிலிகுண்டு, ஒட்டப்பட்டி முதலிய கிராமங்களையும் கோவிலூர்—தர்மபுரி பங்கு சுவாமியார் விசாரணை செய்தார். 1861இல் உணவு நெருக்கடி ஏற்பட்ட போது ஒரு சிலர் மனந்திரும்பினர். இடையர் இனத்தைச் சேர்ந்த ஒரு உபதேசியார் அவர்களைக் கவனித்து வந்தார்.

கோவிலூர் பகுதியின் மக்கள் தொகை 1000. B. பள்ளிப் பட்டி=236; கடகத்தூர்=300; 1861-இல் இருந்து 1872 வரை ஆண்டு தோறும் 120 முதல் 150 ஞானஸ்நானங்கள் கொடுக்கப் பட்டன. ஏறக்குறைய பாதிக் கிறீஸ்துவர்கள் சவுக்கார்பட்டி, சித்தூர், சாவலூர் முதலிய இடங்களில் வாழ்ந்தனர். பொன்னையாற்றின் வட பாகமும் கோவிலூர் விசாரணைக்குள் வந்தது. தெங்கரைக் கோட்டை, நாயகோட்டை அல்லது தெங்கணிக் கோட்டை முதலிய ஊர்களிலிருந்து சிப்பாய்களை அகற்றின பின்னர் அவ்வூர்கள் முக்கியத்துவத்தை இழந்தன.

சங். சூசைநாதர் சுவாமி சேலம் மாவட்டத்தில் மாதா திரு இருதய சபைக் கன்னியர்களின் முதல் மடம், அனாதைகள் விடுதி, பள்ளிக்கூடம் முதலியவற்றை நல்ல வசதிகளோடு கோவிலூரில் நிறுவினார்.

### தாலகாட் பங்கு — சேலம் : 1852—76.

1852இல் இருந்து 1876 வரை 25 ஆண்டுகளாக தாலகாட் பகுதியில் உழைத்த குருமார்களின் பட்டியல் கீழே கொடுக்கப் பட்டிருக்கிறது.

1. சங். போர்தெரோ (பேரின்பநாதர் சுவாமி) பங்கு சுவாமியார் (1852—57) உதவி குருமார்கள் :- சங். மரிய சவரிநாதர், சங். செரூங்னு (சூசைநாதர்), சங். கிரிமோ பிரான்சிஸ்நாதர், சங். தீரியோன், சங். பிரிசார் ஆசீர்வாதநாதர்.
2. சங். கூயோன் (மகிமைநாதர் சுவாமி) (1857—1862) பங்கு சுவாமியார். உதவி குருவானர்:— சங். லெரூ அருளப்ப மரிநாதர் சுவாமி.
3. சங். தெப்போமியே க்ளவுத் மரி (1862—1863) பங்கு சுவாமியார்.
4. சங். ஜெரே ஹென்றி (1863–1865) பங்கு சுவாமியார். உதவி குருமார்கள்:— சங். ஒத்தியெர்ரு மகிமைநாதர், சங். மத்தியான் பிரகாசநாதர், சங். பிரிஜான்.
5. சங். பால்க்கூ ஈவ்ஸ் (1865—1869) பங்கு சுவாமியார். உதவி குருமார்கள் :— சங். தோபுவா, சங். ரிஸ், சங். முத்துப்பையர், சங். பாக்ள் கியோம்.

6. சங். பிரிசார் ஆசீர்வாதநாதர் (1869—1878) பங்கு சுவாமியார், உதவி குருமார்கள் :— சங். வான்னே சாந்தப்பநாதர், சங். சீக் முல்லர், சங். பாலேஜ், சங். சுக்னே, சங். தெய்செதர்.

புதிய தாலகாட் பங்குக்கு வாலிப குருமார்கள் அனுபவப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வந்தனர்.

1853இல் வங். போன்னுன் ஆண்டவர் சங். செருந்னு சுவாமியாரோடு சென்று மூன்று மாதங்கள் இந்தப் புதிய பங்கைப் பார்வையிட்டார். விசாரணையின் போது ஆண்டவர் செய்த குறிப்புகள்: செட்டிப்பட்டி, அக்கிரகாரம் விசாரணைகளைத் தவிர இந்தப் புதிய தாலகாட் பங்கு மிகவும் கடினமானது; உழைப்புக்குத் தகுந்த பயன் கொடாதது. சாதி வேறுபாடுகள்தான் இதற்கு ஒரு முக்கிய காரணம். சேர்வராயன் மலையில் பங்கு குருவின் இருப்பிடம் மிகவும் மோசமானதாயிருந்ததால், தோட்ட முதலாளியான ஒரு துரையின் விருந்தாளியாக இருந்தார். வங். போன்னுன் ஆண்டவர் இரு முறைகள் கோயம்பத்தூருக்குப் போன போது செவ்வாய்ப்பேட்டைக்கு வந்து சென்றார். முதல் தடவை கோயம்பத்தூரிலிருந்த கிறீஸ்துவர்களுக்குள் சமாதானம் ஏற்படுத்தச் சென்றார்; வங். தெப்போமியே ஆண்டவரின் பட்ட விழாவுக்கு (1857) இரண்டாம் முறையாகச் சென்றார். அவருடைய இறுதி விசாரணை 1859-இல் அந்நிய வேத போதக மிஷனரிகளின் சிரேஷ்டர்கள் கூட்டத்தின் போது நடந்தது. அக் கூட்டத்திற்கு வங். தெப்போமியே, வங். ஃப்ளெஸ் (சீனுவிலுள்ள செச்சுவனிலிருந்து) வங். ஷார்பொனே (மைசூர்), நான்கு செயலாளர்கள் வந்திருந்தனர்.

1865-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல்நாள் வங். போன்னுன் ஆண்டவரின் கட்டளைக் கிணங்கி, கோவிலூரில் திரிதெந்தின் சங்கத்தின் கலியாணத்தைப் பற்றிய ஒரு அறிக்கையை சங். மோரி சுவாமியார் அறிவித்தார்.

1857-இல் நடந்த சிப்பாய்க் கலகத்தின் விளைவாக சேலத்தில் இருந்த பழைய கோட்டை மதில்கள் தகர்க்கப்பட்டனவே தவிர வேறெதுவும் நடக்கவில்லை.

சங். மகிமைநாதர் சுவாமி திரும்பவும் 1858ஆம் ஆண்டு தாலகாட் பங்கை ஏற்றார். அவ்வாண்டு அரும்பணிகள் பல புரியப்பட்ட ஓர் மகத்தான ஆண்டு. ஏற்காடில் ஒரு புதிய கோவில்,கங்க

வள்ளியில் ஒரு புது செபக்கூடம், அக்கிரகாரத்தில் குருவான வருக்கு ஒரு அறை வீடு, ரெட்டியூரில் புதுக் கிறீஸ்துவர்கள் ஏற் படல், சின்னப்பன் பட்டியில் செபக்கூடம் பழுது பார்க்கப்படல், 1858-ஆம் ஆண்டு புயலால் பாழாக்கப்பட்ட சங்கரி துர்க்கம் செபக்கூடம் செப்பனிடப்படல் முதலிய அரிய வேலைகள் அவ் வாண்டு செய்யப்பட்டன.

1860-இல் செவ்வாய்பேட்டையில் 30 அடி உயரமுள்ள ஒரு மணிக்கூண்டு கட்டப்பட்டு, அது வரையில் காணுத விமரிசை யுடன் திருவிழா நடத்தப்பட்டது, அடுத்த ஆண்டு கோவிலின் காம்பவுண்டு பெரியதாக்கப்பட்டு அதற்குள்ளே ஒரு கிணறும் வெட்டப்பட்டது. ஆனுல் உப்பு அரித்து நாசமாக்கப்பட்ட எடப் பாடி கோவில் இடிக்கப்பட்டது. இனி வரும் இருபது ஆண்டுகளில் 1850இல் கட்டப்பட்ட நாடக மன்றத்தில் பூசை செய்யப்பட்டது.

1861-இல் புதுப்பாளைய நத்தமர்கள் இப்பொழுதுள்ள கோவில் காம்பவுண்டில் ஒரு பகுதியைக் கொடுத்தனர். 1862 இல் அங்கு முதல் கோவில் கட்டப்பட்டது. இரும்பு மேல் நாட்டி லிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டதால், பூலாம்பட்டி யில் இரும்பு வேலை செய்தவர்கள்,கஞ்சமலையில் சுரங்கத்தில் வேலை செய்தவர்கள், இரும்பை உருக்கக் கரி செய்தவர்கள், இரும்பைக் காவேரியாற்றின் வழியாகக் கடத்திச் சென்ற பரிசல்காரர்கள் முத லானேருக்கு வேலையில்லாமற் போய்விட்டது. இத் தொழிலாளி களில் கிறீஸ்துவர்களும் இருந்தனர்.

1861இல் சேலத்தில் புதிதாக்கப்பட்ட பள்ளியில் 38மாண வர் பயின்றனர். பெண்களுக்கென்று ஒரு தனிப் பள்ளிக்கூடம் மிகவும் அவசியமாக இருந்தது. இரண்டு ஆண்டுகளாக வெள் ளாண்டி வலசையிலும் அக்கிரகாரத்திலும் நடந்து வந்த பள்ளிகள் மூடப்பட்டன. கங்கவள்ளியிலிருந்த நமது பள்ளிக்கூடம் புரோட் டஸ்டாண்டார்களின் பள்ளியை மூடிவிடும்படி செய்து விட்டது. நமது கத்தோலிக்குப் பள்ளிகள் பாலர் சபையினுல் உதவி பெற்று வளர்ந்து வந்தன. கிராமங்களில் கன்னியர் பள்ளிகளை நடத்து வதை வந். போன்னுன் ஆண்டவர் விரும்பவல்லை. அவ்வக்கிரா மத்திலிருந்த விதவைகள் அல்லது மணமாக முடியாத பெண்கள் பள்ளி நிருவாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவரின் நோக்கம்.

1861இல் வந். போன்னுன் ஆண்டவர் அப்போஸ்தொலிக்குப் பார்வையாளராக இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த போது, வந். கோடெல் ஆண்டவர் மேற்றிராசன நிருவாகி ஆக இருந்தார். அப்பொழுது அவர் விடுத்த சுற்றறிக்கையில், பங்கு குருமார்கள் தங்கள் விசாரணைகளில் மிகச் சிறியவற்றையும் ஆண்டு தோறும் பல தடவைகள் சந்திக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருந்தது. ஆனுல், இந்த வலியுறுத்துதல் சங். மகிமைநாதர் சுவாமியாருக்குத் தேவையில்லை. ஏனெனில் அவரது குருத்துவ வாழ்க்கை இடைவிடாத பயணமாக இருந்தது. 1863-இல் அவர் நிதிகாப்பாளர், கார்மேல் மடத்தின் ஆத்தும குருவானவர் வேலைகளைச் செய்ய புதுச்சேரிக்கு அழைக்கப்பட்டார்.

அவருக்குப் பின் தெப்போமியே ஒரு வருட காலம் வேலை செய்தார். பின்னர் அவர் 1864இல் கோயம்பத்தூர் அப்போஸ்தொலிக்கு விக்காராக புதுச்சேரியில் அபிஷேகம் செய்யப்பட்டார்.

அவருக்குப் பின் சங். ஜெரே சுவாமியார் விசாரணை செய்தார். அவருக்கு உதவியாக இருந்த சங். ஓத்தியேர்ரு காய்ச்சல் கண்டு இறந்து போனுர். அவருடைய கல்லறை செவ்வாய்ப்பேட்டைக் கோவிலுக்கு அருகில் 1941ஆம் ஆண்டுவரை இருந்தது. 1864 ஜூன் மாதம் சங். பிரியெர் சுவாமியார் சேலத்திலும், அதன் பின் எடப்பாடியிலும் மிஷன் பிரசங்கம் நிகழ்த்தினுர். எடப்பாடியில் கிறீஸ்துவர்களுக்குள் சமாதானம் செய்து வைக்கப்பட்டது. ஒற்றுமைக் குறைவு தான் கிறீஸ்துவக் கிராமங்களில் சிலவற்றை சீர்குலையச் செய்து விட்டது.

சங். பால்க்கூ சுவாமியார் விசாரணை செய்தபோது, ஒரு ஆங்கிலப் பள்ளியை சேலத்தில் நிறுவத் திட்டமிட்டிருந்தார். ஆனுல் அவர் திட்டம் 1930 வரையில் நிறைவேருமல் போய்விட்டது. செவ்வாய்பேட்டையில் விசுவாசப்பரம்புதல் சபை 1866இலும், அர்ச். இராயப்பர் காசுச் சபை 1867இலும் நிறுவப்பட்டன.

## தாலகாட் பங்கைப் பிரித்தல்.

### காக்காவேரிப் பங்கு : 1861.

சங். மகிமைநாதர் சுவாமி தனது அறிக்கையில் 1861ஆம் ஆண்டில் தாலகாட் பங்கில் 22 விசாரணைகளில் 5722கத்தோலிக்கர் இருந்தனர் என்று தெரிவித்திருக்கிறார். பங்கு குருவானவர் தனது விசாரணைகளை வரிசைக் கிரமமாகச் சுற்றி வந்தாலும் பொதுவாக குருவானவர் விசாரணைகளில் இல்லாத நாட்கள் அதிகமாயின. சில இடங்களில் குருவானவர் நிரந்திரமாக இருப்பது அவசியமாகிவிட்டது. சேலத்தில் ஏற்காடு ரோட்டில் புதிய குடியேற்றங்கள் துவக்கப்பட்டன. சேல நகரத்திலேயே ஆறு சேரிகள் இருந்தன. கிறீஸ்துவர்களில் பல குலத்தவர்கள், பல வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள் இருந்தனர். புரோட்டஸ்டாண்டார்கள் 800 பேர்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிகளை நிறுவி வெகு ஊக்கமாக உழைத்தனர். அக்கிரகாரத்திலும், செட்டிப்பட்டியிலும், பூசை, மற்ற தேவத் திரவிய அனுமானங்கள் அடிக்கடி நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. எடப்பாடி குருவானவரின் அதிகாரத்துக்கு எட்டாத தூரத்தில் இருந்தது. ஏற்காட்டில் மக்கள் நிரந்திரமாகத் தங்கிவிட்டனர். அங்கே இரண்டு அல்லது மூன்று புரோட்டஸ்டாண்டு சமுதாயங்கள் ஏற்பட்டு விட்டன. எனவே ஒரு குருவானவர் இத்துணை பெரிய பொறுப்புள்ள வேலையைச் செய்ய முடியாதெனத் தீர்மானித்து தாலகாட் பங்கை பல பிரிவுகளாகப் பிரித்து விட முடிவு செய்யப்பட்டது.

### சேலம் பங்கு :

சேலம், ஓமலூர், திருச்செங்கோடு தாலூக்காக்கள், 9 விசாரணைகள், 3123 கிறீஸ்துவர்கள் இவைகளைக் கொண்டு சேலம் பங்கு உருவானது. சேலம் பங்கு குருவானவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டும். அவருக்குத் தமிழ் கற்றுக்கொள்ளும் ஒரு உதவி குருவானவர் தேவை.

மற்றொரு பங்கு காக்காவேரி. இது கொள்ளிமலை, பச்சை மலையைச் சுற்றி 80 மைல் வட்டாரத்தில் இருந்தது. இதற்கிருந்த

12 விசாரணைகளில் 2600 கிறீஸ்துவர்கள் இருந்தனர். குருவான வரின் இருப்பிடம் காக்காவேரி, மதியம்பட்டி விசாரணை சேலத் தோடு இணைக்கப்பட்டிருந்தது. 1870-இல் இந்தப் புதிய காக்கா வேரிப் பங்கு நீக்கப்பட்டு, அதன் மேற்குப் பகுதி சேலத்தோடு 5 ஆண்டுகள் இணைந்திருந்தது.

சங். போலார் பிலவேந்திரர் (1861—69), சங். புரோஸ்னே நிக்கோலாஸ் (1869—70) பங்கு குருவானவர்களாக இருந்தனர்.

**தோளூர்பட்டிப் பங்கு : 1864.**

1864இல் காக்காவேரியிலிருந்து 735 கிறீஸ்துவர்களிருந்த நாமக்கல் தாலுக்காவை பிரித்து முசுரி தாலுக்காவைச் சேர்த்து தோளூர்பட்டிப் பங்கு ஆரம்பமானது. 1862இல் சங். பியர் ராயப்பநாதர் தோளூர்பட்டியில் கட்டிட வேலையைக் கவனித்து வந்தார். சங். லாப் ஸ்நாபக அருளப்பர் சுவாமியாரின் வருகைக் குப் பிறகுதான் (1864) பங்கின் எல்லை நிர்ணயிக்கப்பட்டது. ஒரு சிறிய இந்துக் கோவிலைத் தானே கட்டி அதற்குப் பூசாரியாக இருந்த செல்வச் செல்வாக்கு மிகுந்த ஒரு படையாச்சியை அவர் அதே ஆண்டில் மனந்திருப்பினர். அவன் தன் இனத்தவருக்கு அப்போஸ் தலனாக விளங்கினான். 50 பேர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு மந்திரம் கற்று வந்தனர். பூசாரியாக இருந்த அப்படையாச்சி தான் கட்டின இந்துக் கோவிலின் கற்களைக் கொண்டு பேட்டைப்பாளை யத்தில் அர்ச். செசிலி அம்மாள் பேரால் ஒரு கோவில் கட்டினான். அவன் இறந்த பொழுது அவனுடைய நிலமும் அவன் கட்டின இந் துக் கோவிலும் மிஷனுக்குக் கொடுக்கப் பட்டது. ஆனால் இச் சமயத்தில் புதிதாக மனந்திரும்பிய அவர்களிடம் மனக் கசப்பும் சண்டைகளும் ஏற்பட்டு, அநேகர் இந்து மதத்துக்கே சென்றுவிட்ட னர். விசுவாசத்தோடு இருந்த சிலர் கோனேரிப்பட்டிக்கும் தாரா புரத்திற்கும் சென்றனர். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பாழ டைந்த இந்த இந்துக் கோவிலை இந்துக்கள் தங்களுடைய உடைமை யாக்கிக் கொள்ள முயன்றனர். ஆனால் நீடிய வியாச்சியத்திற்குப் பின் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கிறீஸ்துவர்களும்

இந்துக்களும் அந்தக் கோவிலுக்குள் செல்லக் கூடாது என்று நீதி பதி தீர்ப்புக் கூறினர்.

சங். லாப் சுவாமியார் நாமக்கல்லில் 2 ஏக்கர் 96 செண்டு நிலமொன்றை ஒரு கிறீஸ்துவனிடமிருந்து வாங்கினர். வந்.லவூவென் ஞன் அந்த நிலத்துக்கு வாரிசு ஆனர். இங்கும் இந்த நில சம்பந்த மாக கோர்ட் வியாச்சியம் நடந்தது. இறுதியில் சங். பிரிக்கோ சுவாமியார் வெற்றி பெற்றுர். இப்பொழுதுள்ள கோவிலின் மேற்கு பாகத்தில் அந்த நிலம் இருக்கிறது. அதில் ஒரு ஏக்கர் நிலத்தை போலீசு இலாக்கா வாங்கி ஒரு போலீசு நிலையம் அமைத்திருக் கிறது.

### தோளூர்பட்டி—நாமக்கல் பங்கு குருமார்கள் :—

சங். லாப் (1864—69), சங். புரோஸ்னே (1869—71), சங். தோபுவா (1871—73), சங். ∴போர் (1874), சங். ஜுவாரே (1874—75), சங். ரெஸ் (1875—77). சங். மரிப் பிரகாசநாதர் (1877—82), சங்.ஜெகோரெஸ் (1883—87), சங்.குரோபோர்ன் (1888—91), சங். பிரகாசநாதர் (1891-92), சங். துரை (1892-1903), சங். ∴பெலிக்ஸ் (1903-04), சங். மஸோல் (1904-1915) சங். மார்டின் (1915), சங். ரோக் (1915—31).

### கங்கவள்ளிப் பங்கு 1870, கோனேரிப்பட்டி 1872.

சங். பியர் சுவாமியார் 1869-ஆம் ஆண்டு நவம்பர், டிசம் பரில் 141 பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். சங். புரோஸ்னே அதற்கு அடுத்த ஆண்டு ராசீபுரத்தில் வேதம் போதித்து, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, ஜேடர்பாளையம், புதுப்பாளையம் முதலிய இடங்களில் 340 பேர்களுக்கு ஞானஸ்நா னம் அளித்தார். பின்னர் மதியம்பட்டியில் முதல் கொல்லா சக்கி லியர்களும், 1871இல் முதல் தொட்டி நாயக்கர்களும் ஞானதீட்சை பெற்றனர். சங். பிரிசார்டும், சங். சீக்முல்லரும் காக்காவேரியை விசாரணை செய்து 178 பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர். இக்காலத்தில் மனந்திரும்பியவர்களில் 200 பேர்கள் மட்டும் விசு

வாசத்தில் உறுதியாக இருந்தனர். மற்றவர்களில் சிலர் பஞ்சத்தால் இறந்தனர்; சிலர் வேறு இடங்களுக்குச் சென்றனர். நாமகிரிப் பேட்டையில் 1871-இல் பகடைச் சக்கிலியர்களுக்கு ஒரு செபக் கூடம் கட்டப்பட்டது. சங். ஃபோர் சுவாமியாரும் சங். தெய்சதெர் சுவாமியாரும் வாங்கின நிலத்தில் அச் செபக்கூடம் மீண்டும் புதுப் பிக்கப்பட்டது.

இதே சமயத்தில் சங். பியர் சுவாமியார் ஆத்தூர் பள்ளத் தாக்கிலிருந்த புதுக் கிறீஸ்துவர்களை தேவ பராமரிப்பில் ஒப்படை த்து, சங். பிரிசார் சுவாமியாரின் ஆத்தூர் விசாரணையை ஏற்று, ஆத்தூர் கோட்டையில் தங்கியிருந்தார். அங்கு நெசவாளிகளுக்குக் கூட்டுறவுச் சங்கம், வாத்துக்களை வளர்த்தல், தோட்டம் போடு தல் முதலிய வேலைகளை ஆரம்பித்தார். ஆனால் 1873-இல் கலெக்டர் கோட்டையில் சுவாமியார் தங்குவதற்குத் தடை செய்தார். எனவே சுவாமியாருடைய புதிய முயற்சிகளெல்லாம் வீணாயின. அவர் கொள்ளிமலையிலிருந்த கிறீஸ்துவர்களை விசாரிக்க மூன்றும் முறையாக அனுப்பப்பட்டார். அவர் ஆத்தூரைவிட்டுப் போகுமுன் கங்கவள்ளியிலிருந்த பதிதர்கள் தங்களைக் கத்தோலிக்க மதத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மன்றாடினர். உடனே சங். பியர் சுவாமியார் அவர்களைக் கத்தோலிக்க மறையில் சேர்த்துக் கொண் டார். சங். பியர் சுவாமியாருக்கு உதவி குருவானவராக இருந்த சங். காந்தி சுவாமியார் கோட்டைப்பாளையத்தை விசாரணை செய் தார். அவர் அங்கிருந்து சங். பியர் சுவாமியார் கவனிக்க முடியாமல் விட்ட தம்மம்பட்டிப் புதுக் கிறீஸ்துவர்களைக் கவனித்து வந்தார். ஒரு நாள் சங். காந்தி சுவாமியார் கோனேரிப்பட்டிப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தபோது காய்ச்சல் கண்டு மிகவும் அவதிப் பட்டார். அதைக் கண்ட ஒரு பற வண்ணார விதவை தன்னுடைய குடிசையை அந்த இரவு சுவாமியாருக்குக் கொடுத்தாள். அவளு டைய அந்த அன்புச் செயலுக்காகக் கடவுள் அவளை ஆசீர்வதித் தார். 1872-இல் சங். காந்தி சுவாமியார் கங்கவள்ளி—தம்மம்பட்டிப் பள்ளத்தாக்கிலிருந்த கிறீஸ்துவர்களைத் தன்னுடை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று வந். லவூவென்னுன் ஆண்டவரைக்

கேட்டுப் பெற்றுக்கொண்ட நாள் வரையில் அந்த ஏழை விதவை ஒருத்திதான் கோனேரிப்பட்டியில் கிறீஸ்துவளாக இருந்தாள். கோனேரிப்பட்டியை மனந்திருப்ப சங். பியர் சுவாமியார் செய்த பிரசங்கங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீராயின. ஆனால் சங். காந்தி சுவாமியார் செந்தாரப்பட்டியிலிருந்த கட்டிப் பறையர்களுக்குக் காண்பித்த அன்பைக் கண்ட கோனேரிப்பட்டி வாசிகள் ஞானஸ்நானம் பெற விழைந்தனர். மனந்திரும்பினவர்களின் எண்ணிக்கை விரைவில் உயர்ந்துகொண்டே போனதால் பாதையின் வட பாகத்தில் ஒரு செபக்கூடம் கட்டப்பட்டது. அச் செபக்கூடம் இருந்த இடத்தில் இன்றும் ஒரு குருசடியைக் காணலாம். பின்னர் 1872இல் சங். காந்தி சுவாமியார் பாதையின் தென் பாகத்தில் ஒரு நிலத்தை வாங்கி அங்கு தனக்கும் தன் உதவி குரு சங். ஃபோர் சுவாமியாருக்கும் ஒரு எளிய அறைவீடு கட்டினார். வேறு நிலங்களையும் வாங்கி, இவற்றைப் புதுக் கிறீஸ்துவர்களுக்கும், பாதையின் தென் பாகத்தில் குடியேறின காக்காவேரி பெருமாள்பாளையம் கிறீஸ்துவர்களுக்கும் விவசாயம் செய்ய குத்தகைக்கு விட்டார். பஞ்ச காலத்தின் போது கோனேரிப்பட்டியிலிருந்த பெரும்பான்மையோரும், தம்மம்பட்டியிலிருந்த அநேகரும் கத்தோலிக்கு மதவிடயங்களை அறிந்து 1876-இல் ஞானஸ்நானம் பெற்றனர். அதிக வேலைகள் கோனேரிப்பட்டியிலேயே இருந்ததனால் 1873-இல் இருந்து கங்கவள்ளிக்கு பதிலாக கோனேரிப்பட்டி பங்கு குருவானவரின் இருப்பிடமானது. அங்கிருந்து கிழக்கு முகமாக நாரியப்பனூர் வரையில் இருந்த பகுதி பாளையம்—குறும்பாலூர் விசாரணைக் குருவின் காண்காணிப்பிற்கு வந்தது. பதிதர்கள் கோனேரிப்பட்டிக்கு வந்ததிலிருந்து அங்கு அமைதி குலைந்தது. சங். காந்தி சுவாமியார் செந்தாரப்பட்டி, ஆத்தூரில் புதிய செபக்கூடங்களைக் கட்டினார். முள்ளுவாடியில் இருந்த செபக்கூடம் வெறுதாவாக விடப்பட்டது. இச் சமயத்தில் தொம்பல்பட்டியிலிருந்த பகடைச் சக்கிலியர் தங்கள் வீடுகளையும் செபக்கூடத்தையும் விட்டு மலேரியா மிகுந்த முள்ளுக்குறிச்சி கிராமத்தில் குடியேறினர்.

**கொள்ளிமலையில் வேதபோதகம்: 1849—74.**

சேலத்துக்குத் தென் கிழக்கில் ராசிபுரம் நாமக்கல் தாலுக்

காக்களைப் பிரிக்கும் கொள்ளிமலை 12நாடுகளில் ஒன்று, அங்கிருந்த மலை யுச்சிகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருந்த குக் கிராமங்களில் மக்கள் வசித்து வந்தனர். 1851ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கிலிருந்து ஒரு சிறிது கன்னடம் பேசின தமிழ் மலைவாசிகள் 21000 என்று தெரிகிறது. பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டுகளில் மராட்டியர், மைசூர்க்காரர் இவர்களின் படையெடுப்புகளின் போது இந்த மலைகளில்தான் கிறீஸ்துவர்கள் அடைக்கலம் புகுந்தனர். 1849-இல் சங். மெஹே, சங். லெரூ, சங். பிரிசார் ஒருநாள் தோளூர்பட்டியிலிருந்து கோட்டைப்பாளையத்துக்குச் சென்றபோது கொள்ளிமலையின் தென்கிழக்குப் பாகத்தைக்கடந்து செல்ல வேண்டியிருந்தது. அதே ஆண்டு சங். கிரிமோ சுவாமியார் கோட்டைப்பாளையத்தைத் தனது நிரந்திர இருப்பிடமாக்கினர். அவர் புலையன் சோலைச் சந்தையில் மலையாளிகளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். விரைவில் உற்புறத்திற்கு அருகிலுள்ள வலப்பூரில் ஒரு செபக் கூடத்தைக் கட்டினர். ஆனல் வலப்பூர் நாட்டுத் தலைவனும் புகழ் வாய்ந்த அரபாலீஸ்வரன் கோவில் தர்மகர்த்தாவுமான கருமன் என்பவன் கிறீஸ்துவர்கள் கோவில் கட்டுவதை வன்மையாகக் கண்டித்தான். எதிர்ப்பு இருந்தபோதிலும் சிலர் மனந்திரும்பினர். ஆனல் மறுபடியும் எதிர்ப்புகள் வலுத்தன. 1851 இலும் 1853-இலும் வந். போன்னன் ஆண்டவர் அவர்களுடைய சிறிய செபக்கூடத்தைச் சந்திக்க வந்தபோது, புதுக் கிறீஸ்துவர்களில் ஒருவனும் அவரைக் காண வரவில்லை. இந்துக்களின் எதிர்ப்பைவிட மிக வன்மையும் கொடூரமுமானது மலேரியாக் காய்ச்சல். 1849-இலிருந்து 1855வரை சங். கிரிமோ சுவாமியார் கொள்ளிமலையில் ஏறி இறங்கினபோதெல்லாம் அவர் உடல் நலனும் குன்றி வந்தது. இறுதியாக அந்த நல்ல மேய்ப்பன், "மலையாளிகளின் மத மாற்றம் துவங்கி விட்டது; எனவே நான் மகிழ்ச்சியுடன் மரிக்கிறேன்", என்று வெற்றிப் புன்னகையோடு திருச்சியில் மே 18, 1855-இல் காலமானர்.

சங். பியர் சுவாமியார் கோட்டைப்பாளையம் பங்கை விரும்பி அதை ஏற்றுக் கொண்டார். அவர் மலையாளிகளின் நன் மனதைச்

சம்பாதிக்க அவர்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுத்தார். ஏனெனில் அவர்கள் செட்டிகளுடைய முதலைப் பிடியில் கடன் வாழ்வு வாழ்ந்தனர். சாம்பூரி ராயப்பன் என்னும் தலைவன் கொள்ளிமலையிலிருந்து துரத்தப்பட்டான், அவனும் அவன் குடும்பத்தினரும் சேர்வராயன் மலையில் ஞானதீட்சை பெற்றனர். சங். பியர் சுவாமியார் அவனை, "தேவ பராமரிப்பின் மனிதன்" என்று கருதி, அவனைக் கொள்ளிமலைக்கு வரவழைத்து, அங்கிருந்த புதுக் கிறீஸ்துவர்களுக்கு அவனைத் தலைவனாக்கினார், ஆனால் சுவாமியார் காய்ச்சலினால் ஓய்வு பெற இருக்கும்போது, அந்தத் தலைவன் கிறீஸ்துவர்களுக்குள் பிளவை உண்டாக்கினான்.

சங். பியர் சுவாமியாரின் இந்த விசாரணையை சங். பார்பே, சங். பிரிசார் சுவாமிமார்கள் கண்காணித்தனர். 1856 ஜூலையில் அவ்விரு குருமார்களும் கொள்ளிமலைக்குச் சென்றபோது குறிப்பாக வலப்பூர் புதுக் கிறீஸ்துவர்கள் சுவாமிமார்களின் கண்களில் படாமல் மறைவாக இருந்தனர். சங். பிரிசார் அவர்களைவிட்டு கொள்ளிமலையின் வடக்கிலும் தெற்கிலும், பச்சை மலையிலும் அலைந்து, அங்கிருந்த மலையாளித் தலைவர்களோடு நட்புறவு கொண்டார். அத்தலைவர்களும் சுவாமியாருக்கு உதவி செய்ய முன் வந்தனர். பெரிய கொம்பையில் ஒரு சிறிய குடியேற்றம் துவக்கப்பட்டது. ஆனால் அவருக்கும் மலேரியாக் காய்ச்சல் கண்டு, 1856-இல் கொள்ளிமலை மிஷனை மற்றவர்களுக்கு விட்டுச் சென்றார்.

அவருக்குப் பின் சங். பாதெனியே அலக்சாந்தர், சங். ரோஜர் யாகப்பநாதர் மே மாதம் வலப்பூருக்கு வந்தனர். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு இருவருக்கும் மலேரியாக் காய்ச்சல் வந்தது. சங் பாதெனியே புதுமையாகத் தப்பினார். ஆனால் சங். ரோஜர் யாகப்பநாதர் திருச்சியில் 1856 ஜூன் இரண்டாம் தேதி இறந்தார்.

பிறகு சங். தூரியெ அருளப்பர் சுவாமியார் அவ் விசாரணையை ஏற்றார். வந். போன்னன் ஆண்டவர் மூன்றும் முறையாக வலப்பூருக்கு வந்தபோது, மீண்டும் அக் கிறீஸ்துவர்கள் அதே

விதமான வெறுப்பைக் காட்டினர். ஒருவனும் மேற்றிராணி ஆண்டவருக்கு வணக்கமேனும் செலுத்தவில்லை. மிகுந்த வருத்தத்தோடு மௌனமாக ஆண்டவர் கோட்டைப்பாளையத்துக்கு வந்தார். சங். தூரியெ சுவாமியார் அடிக்கடி அங்கு சென்று அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். ஆனால் அவர்கள் சமாதானத்துக்கு வர ஆயத்தமாக இருந்த போது, சுவாமியாருக்கு மலேரியா கண்டு, புதுச்சேரிக்குச் சென்று அங்கு அடுத்த ஆண்டு காசநோயால் இறந்தார்.

**1860** ஆம் ஆண்டு பாஸ்கு விழா சமயத்தில் சங். பியர் சுவாமியார் மறுபடியும் இவ்விசாரணையை ஏற்றுக் கொண்டார். ஆனால் உடல் நலத்தை முன்னிட்டு விவேகமுடன் ஆறுமாத காலமாகக் கொள்ளிமலைக்குச் செல்லவில்லை. பங்கு சுவாமியார் மலைக்கு வராததைக் கண்டு மலையாளிகள் மனம் புழுங்கினர். எனவே ஜனவரி இரண்டாம் தேதி மலைக்குச் சென்றார். மலையாளிகள் அவருக்கு வலப்பூரில் நல்ல வரவேற்பு அளித்தனர். ஆனால் திரும்பி வரும் பொழுது காய்ச்சலோடு இறங்கினார். **1863** இல் மறுபடியும் ஓய்வு பெறவேண்டி இருந்தது. அடுத்த பத்து ஆண்டுகள் **(1863–73)** சங். பிரிசார் சுவாமியார் காட்டின கவலையைத்தவிர மலையாளிகளின் விசாரணை மறைந்தது என்றே சொல்லவேண்டும்.

**1873** இல் சங். பியர் சுவாமியார் மூன்றும் முறையாகக் கொள்ளிமலை விசாரணையை ஏற்றுக்கொண்டார். அங்கு அப்பொழுது **42** கிறீஸ்துவர்கள் மட்டும் இருந்தனர். சங். பியர், சங். பிரிசார் சுவாமிமார்களின் திட்டம். மலையாளிகளை அவர்களுடைய கடன்காரர்களின் பிடியிலிருந்து விடுதலை செய்வதே. சங். பியர் சுவாமியார் தன்னுடைய இருக்கையை சுகந்தரும் ஒரு இடத்தில் அமைக்கத் தீர்மானித்து, அதை **1874** ஜனவரியில் அவர்களுக்கு வெளிப்படுத்தி. தாங்கள் சுவாமியாருக்குத் திரும்பத் தரவேண்டிய பணத்துக்குப் பதிலாக நிலத்தைக் கொடுக்கச் சொன்னார். அவர்கள் வாய்மொழியாக ஒப்புதல் தெரிவித்து, பிறகு அப்பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

வந். லவூவென்னுன் ஆண்டவர் ஏற்கனவே மூன்று குரு மார்களின் உயிரை மாய்த்த அந்த மலை விசாரணையை 1874ல் மூடி விட்டு, எக்குருவானவரும் அங்கு செல்லக் கூடாது என்று தடை செய்திருந்தார். 1889 இல் இத்தடையை அறியாத கோட்டைப் பாளையம் பங்கு குருவானவர் சங். கோடே உல்லாசப் பயணமாக அங்கே சென்றுர். ஆனுல் அந்த மகிழ்வுச் செலவு சுவாமியாரின் உயிரையே குடித்துவிட்டது. அவர் கோட்டைப்பாளையத்தில் டை பாய்டுகாய்சலினுல் தனது 36 ஆவது வயதில் 1889 நவம்பர் 24இல் இறந்தார்.

## ஏற்காடு பங்கு : 1866

சங். கூய்யோன் சுவாமியார் தனது 1861 ஆம் ஆண்டு அறிக்கையில் ஏற்காடில் 43 ஐரோப்பியர், தொப்பிக்காரர், 15 மலை யாளிகள், 266 வேலைக்காரர், கூலிகள் ஆக மொத்தம் 324 கத்தோலிக்கர் இருந்தனர் என்று தெரிவித்திருக்கிறுர். கோடை காலத்தில் அனேகர் புதுச்சேரியிலிருந்து வந்து இங்கே தங்கினர். 1862 இல் ஒரு புதிய கோவிலும், பங்கு சுவாமியார் அறைவீடும் கட்டி முடிக்கப்பட்டன. பதிதர்கள் அங்கே 40 பேர்களை மனந் திருப்பி, 40 பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டினர்.

சங். கோடே அடால்ஃப் இந்தப் புதிய பங்கை 1866 இலி ருந்து 1888 வரை விசாரணை செய்தார். அதன் பின் அவர் பால்மி டீஸ் தோட்டத்தை மேற்பார்வையிட்டார்

## அக்கிரகாரம் பங்கு : 1868.

அக்கிரகாரம் பங்கு சேலத்திலிருந்து முற்றிலும் பிரிந்துவிட வில்லை. சங். ஃபிரிக்கோ சுவாமியார் மூப்பின் காரணத்திஞல் அங்கே ஒய்வு பெற்று 1880 இல் சாகுமட்டும் அங்கே இருந்தார். இதிலிருந்து நோயுற்ற அல்லது களைத்துப்போன குருக்கள் இச் சிறிய பங்கை விசாரித்துவந்தனர். 1930 வரை செவ்வாய்பேட்டை பங்கு குருவானவர் இப் பங்கை 12 தடவைகளுக்கு மேல் சில மாதங்கள் அல்லது ஓரிரு ஆண்டுகள் விசாரிக்கவேண்டியிருந்தது. அக்கிர

காரத்தில் குன்றின் மேல் கட்டப்பட்ட லூர்துமாதாச் செபக் கூடம் சங். ஃபிரிக்கோ சுவாமியார், அவரது விசுவாசிகள் இவர்களது பக்தியால் எழுந்தது.

**மேட்டூர் பங்கு : 1858.**

மேட்டூர் தாலுக்காவை மைசூர் சேசுசபைக் குருமார்களின் ஆட்சியின் போது (1653–1765) எப்பொழுதும் ஒரு மிஷனரி விசாரணை செய்தார். நாவல்பட்டி, சாம்பள்ளி, ஷோலப்பாடி, கோனூர், பூதப்பாடி முதலியன மிஷனரிமார்கள் தங்கின இடங்களாகும்.

1765 இல் சேசு சபைக் குருமார்கள் நீக்கப்பட்ட பின் பூதப்பாடி விசாரணை மறைந்தது. கிறீஸ்துவர்கள் குருவானவரைக் காக்காவேரியில் தங்கும்படி அழைத்தனர். பின்னர் கருமுத்தாம்பட்டிக் கிறீஸ்துவர்கள் சுவாமியாரை அழைத்துக் கொண்டனர். குருமார்கள் விசாரணைகளைப் பார்வையிடுவது மிக அரிதாகப் போயிற்று. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை விசாரணை செய்வது வழக்கமாகப் போயிற்று. 1790 இல் காவேரியின் இக்கரை திப்புவின் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது. போர்கள், ஆங்கிலப் படைகளுக்குப் பொருளுதவி செய்த லம்பாடிகளின் போக்குவரத்து, அப்பகுதியை பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஒரு பாலைவனமாகச் செய்துவிட்டன. சங். ஜாரிட்ஜ் சுவாமியாரும் அவருடைய உதவி குருக்களான கர்த்தனுர் சுவாமிமார்களும் 1830 வரை அப்பகுதியில் சமயா சமயம் தென்படுவர். 1836 இல் இப்பகுதி புதுச்சேரி மேற்றிராசனத்தின் ஆதிக்கத்திலிருந்தது. 1845 இல் அது கோயம்பத்தூர் அப்போஸ்தொலிக்கு விக்காரின் ஆதிக்கத்துக்குள் வந்தது. 1845 இல் மேட்டூர் கருமத்தாம்பட்டியிலிருந்து பிரிக்கப்பட்டு, புதிய கொடிவேரிப் பங்கோடு இணைக்கப்பட்டது. கோவிலூரிலிருந்த பழைய ஞானஸ்நானக் கணக்குப் புத்தகத்திலிருந்து 1845–46 இல் மிஷனரிகள் கொல்லேகாலைச் சந்தித்தது தெரியவருகிறது. குதிரையில் சவாரி செய்து ஊராச்சிக் கோட்டை, பூதப்பாடி, குலவீரம்பட்டி (மேட்டூர்), நாயம்பாடி, மார்த்தஹல்லி, கௌதல்லி, செல்கிடிமலை, செங்

கம்பாடி, முதலிய இடங்களைப் பார்வையிட்டு, பின் பரிசல் மூலமாக காவேரியாற்றில் பவானி அல்லது ஈரோடு வரைச் சென்றனர்.

இக்காலத்தில் இப்பகுதியில் உழைத்த குருமார்கள்; கார்டியிலிருந்து சங். பக்ரு; கொடிவேரியிலிருந்து சங். திரிபூலோ (1844) மேட்டூரிலிருந்து சங். லோஜியர் அந்தோணி (1846); சாதிப்பாகுபாட்டை ஒழிக்க முயன்ற சங். பஜோன்; சங். லெ:ஃபெவ்ரு மரகதநாதர் (1851–64).

1858 இல் மேட்டூர் கொடிவேரிப்பங்கிலிருந்து பிரிக்கப்பட்டது. இப்புதிய பங்கு 670 கத்தோலிக்கர்களைக் கொண்டு பவானியிலிருந்து செங்கிடிமலை வரை 60 மைல் பரவியிருந்தது: மேட்டூர்–102; நாயம்பாடி–91; சோணுங்கலூர்–102; ஆகமொத்தம் 295 பேர்கள் இப்பொழுதுள்ள சேலமாவட்ட எல்லைக்குள் இருந்தனர்.

1858 முதல் 1881 வரை மேட்டூரில் இருந்த பங்கு சுவாமிமார்கள்; சங். பெர்தோன் லூயிஸ் (1858); சங். பஜோல் சில்வியன் (1862–77); அவருடைய உதவி குரு சங். தால்கியெர் (1871–72); சங். பெரூல் ஃபிரெடெரிக் பங்கு சுவாமியார் (1877–81).

1862 இல் சங். பஜோல் சுவாமியார் மேட்டூர் பங்கை விசாரணை செய்த போது, குல வீரம்பட்டியில் ஒரு சிறிய எளிய செபக்கூடமும், நாயம்பாடியில் ஒரு புதிய செபக் கூடமும் இருந்தது. இங்கு பங்கு சுவாமியார் தங்குவதற்கு அறைவிடு எங்கும் கிடையாது. இவருக்குமுன் இப்பங்கை விசாரணை செய்த சங். பெர்தோன் சுவாமியார் சின்னப்பள்ளத்தில் ஒரு அனாதை மடம் ஆரம்பிப்பதிலேயே கருத்தாயிருந்தார். சங். பஜோல் சுவாமியார் மேட்டூரில் 1867 இல் மோக்ஷ இராக்கினி மாதா பேரால் ஓர் ஆலயம் கட்டினார். சாம்பள்ளிக் கோட்டையிலிருந்த சிப்பாய்களும் உழவர்களும் சோணுங்கலூரில் குடியேறினர். பாலைமலையில் நான்கு கிறீஸ்துவக் குடும்பங்கள் இருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியில் சேலத்திலிருந்து மைசூருக்குச் சென்ற பெரிய வியாபாரவழி மறைந்துவிட்டது. கோயம்பத்தூரிலிருந்து அதிக தூரத்தில் இருந்த இப்பகுதி முற்றிலும் கைவிடப்பட்டது. போக்குவரத்து சாதனம் இங்கு இல்லாததால் 1833 இல் தோன்றின பஞ்சத்தில் அநேகர் மாண்டனர்.

பாலமலைக்கு மேற்கே கிறீஸ்துவ வன்னியர்கள் ஏறக்குறைய 1850 க்குப்பின் பூமனூர், மல்லகலம்பாடி என்ற இரு குடியேற்றங்களை ஏற்படுத்தினர். மல்லகலம்பாடியில் இருந்த ஏழு குடும்பத்தினருக்கு இப்பொழுதுள்ள கல்லறைக்கு அருகில் ஒரு செபக்கூடம் இருந்தது. பூமனூரில் செபக்கூடம் ஊருக்குள்ளேயே இருந்தது. மல்லகலம்பாடியிலிருந்து கிறீஸ்துவர்கள் சவேரியார் பாளையத்தில் குடியேறின போது சங். பஜோல் சுவாமியார் அங்கு முதல் கோயிலைக் கட்டினர்.

### கோவிலூர் — தர்மபுரி பங்கு பிரிவினை.

சங். தீரியோன் சூசைநாதர் சுவாமி சேலத்தில் உதவி குருவாக இருந்தபோது கோவிலூர் பங்கை ஏற்று 1858 இலிருந்து 25 ஆண்டுகள் விசாரணை செய்தார். 1868-ஆம் ஆண்டுக்குப் பிறகு சங். ரிஸ் (1868—69), சங். டூப்பாஸ் (1873), சங். மெனுவல் (1875—76), சங். தெய்செதர் (1876—79), சங். பஸோத் (1879—83), சங். குரோபோர்ன் (1883—85) முதலிய வாலிப சுவாமிமார்கள் அவருக்கு உதவி குருமார்களாக இருந்தனர்.

1861–64 இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது கோவிலூரிலும் மல்லாபுரத்திலும் ஞானஸ்நான ஆயத்தங்களை ஏற்படுத்தினர். மல்லாபுரத்தில் 98 பேர்களும் B பள்ளிப்பட்டியில் 23 பேர்களும், தெங்கரைக்கோட்டையில் 16 பேர்களும் ஞானஸ்நானம் பெற்றனர். B. பள்ளிப்பட்டியில் மனந்திரும்பினவர்களில் இருளர்களும் இருந்தனர். ஒரு கொள்ளா விதவையும் அவளுடைய மகனும் கோவிலூர் உபதேசியார் குடும்பத்தின் முன்னோர்களாயிருந்தனர். பஞ்சமர்களில் பெரும்பான்மையோர் விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர்

கோவிலூரில் 100 பேர்களும், 1863 ல் ஆலம்பாடியிலும் ஒட்டப் பட்டியிலும் சிலர் மனந்திரும்பினர். கேத்தம்பட்டி கி ரா ம த் தி ன் நடுவில் இருந்த செபக்கூடம் 1863க்குச் சற்றுமுன் கட்டப்பட்ட தாகும். சேலத்தில் உதவி குருவாக இருந்த சங். வாலா (1865-67) கொங்கரப்பட்டியில் ஒரு செபக்கூடம் கட்டினார்.

1861-67 ஞானஸ்நானக் கணக்குப்புத்தகத்திலிருந்து கோ விலூர் பங்கில் ஆண்டுக்கு சராசரி 120 முதல் 150 பேர்கள் வரை ஞானஸ்நானம் பெற்றனர் என்று தெரிகிறது. இப்பங்கில் மொத் தம் 2075 கிறீஸ்துவர்கள் இருந்தனர். அவர்களில் மூன்றில் ஒரு பாகம் கொள்ளிய நெசவாளிகள், 570 பேர்கள் கடகத்தூரிலும், 555 பேர்கள் பொன்னையாற்றுக்குத் தெற்கே B பள்ளிப்பட்டி யிலும் இருந்தனர்,

### கோவிலூர்—திருப்பத்தூர் பங்கு : 1859—95.

1859 இல் கோவிலூர்–தர்மபுரியிலிருந்து கோவிலூர்–திருப் பத்தூர் பிரிந்தது. இப்பங்கு 1923 இல் சென்னை அதிமேற்றிராச னத்தோடு சேர்க்கப்படும் வரை பொன்னையாற்றின் வட பாகத்தில் இருந்த ஊத்தங்கரை – ஹரூர் தாலுக்காக்கள் திருப்பத்தூரோடு இணைந்திருந்தன. கிருஷ்ணகிரி, எலத்தகிரி, கிஷ்ணகுப்பம் ஆகிய மூன்று விசாரணைகள் 1895இல் திருப்பத்தூரிலிருந்து பிரிக்கப்பட்டு எலத்தகிரி–கடகத்தூர் பங்கு ஆக்கப்பட்டது.

இங்கு உழைத்த குருமார்கள் : சங். ஹென்றி (1859-62) சங். கோடே (1862-66). அவருடைய உதவி குருமார்கள்: சங். மோரி, சங். பிரியர், சங். தோபுவா (1866–69) சங். ரிஸ் நீதியப்பர் (1869–75) ; அவருடைய உதவி குருமார்கள் : சங். பீனே அன வரதநாதர், சங். டுபா, சங். போலார். சங். புகென் (1889–91) சங். போஸ்கே (1892–97).

கிருஷ்ணகிரி, எலத்தகிரி, கிஷ்ணகுப்பம் முதலிய விசாரணை களைப்பற்றி கிறிஸ்துவர்களிடமிருந்து பரம்பரையாக வந்த சில விஷ யங்களைத்தவிர வேறு எதையும் அறிய இயலவில்லை. 1832 இல் சிப்

பாய்களும் லஸ்கர்களும் கிருஷ்ணகிரியை விட்டுச் சென்றபோது, கரடி சின்னப்பனுடைய பெரிய குடும்பமும், அர்ச். இஞ்ஞாசியார் கோவிலின் கோவில் பிள்ளைக்குடும்பமும் இருந்தன.

எட்டிமரத்துப்பட்டி, எடப்பாடி, ஈரோடுக்கு அருகில் உள்ள கருங்கல் பாளையம், வெங்காயப்பள்ளி, கம்மனெல்லூர், ஆலம் பாடி முதலிய ஊர்களிலிருந்து மக்கள் எலத்தகிரியில் குடிபுகுந்த தால் அது தொடர்ந்து வளர்ந்து கொண்டே சென்றது. அவ்வாறு வந்த மக்கள் இச்சிறிய கிராமத்தில் நிலங்களை வாங்கி பயிர் செய்து மனதிருப்தியுடன் வாழ்ந்தனர். ஒரு சமயம் குருவானரொருவர் இவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட தகராறுகளை தங்கள் குலத்தவர் களாகிய இந்துக்களைக் கொண்டு தீர்த்துக்கொள்ளும் பழக்கத்தை நிறுத்திவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 1860இல் அக் கிராமத்திலிருந்த சிறிய கோட்டையைப் பகிர்ந்து கொள்வதில் நாயுடுகளுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் பெரிய சண்டை ஏற்பட்டது. ஒசூர் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ பிராட்ஷா இத்தகராறைத் தீர்த்துவைக்க வந்தார். அவர் கிறீஸ்துவர்களின் தலைவனோடு தெற்கு வடக்காக அச்சிறிய கோட்டையின் எல்லைக்குள் நடந்தபோது, திடீரென "போதும்" என்று நின்றுவிட்டார். உடனே அங்கு இன்றும் காணப் படும் ஒரு கற்சுவர் கட்டப்பட்டது. அந்த நிலத்தில்தான் 1863ல் சிலுவை வடிவிலே அடைக்கல மாதாக்கோவில் கட்டப்பட்டது. 1865 ஆம் ஆண்டு என்று குறியிடப்பட்டிருந்த கோவில் முகப்பில் ஒரு முகமதிய ஆசாரி செய்த தேவமாதாவின் சொரூபம் இருந்தது. ஏரியின் கரையை உயர்த்தினபோது பழைய கல்லறை விடப்பட்டு புதிய கல்லறை தோன்றினது. சங். பீனே சுவாமியார் இப்பொழுது உள்ள கோவிலின் சுற்றுப்புறத்தை 1872—73இல் கிறீஸ்துவர்களி டமிருந்து பெற்றுக்கொண்டார். இவர் 1873 ஜூலையில் பங்களூ ரில் காலமானார். மல்லபாடி விசாரணை எப்படி எப்பொழுது மறைந்தது என்று யாருக்கும் தெரியாது. கிஷ்ணம்பட்டியில் முதல் செபக்கூடமும் விசாரணையும் 1857இல் துவக்கப்பட்டது. கங்குந்தி யிலிருந்து கிறீஸ்துவர்கள் தங்கள் பாஸ்குக் கடனைத் தீர்க்க இங்கு வந்தனர். சங். மோரி சுவாமியார் ஊத்தங்கரையில் தான்

தங்குவதற்காக 1863இல் ஒரு இனும் நிலம் வாங்கினர், மருதேரி யிலும் மரியம்பட்டியிலும் இருந்த கிறீஸ்துவர்களைப்பற்றி பரம்பரை மூலமாகவேனும் அறிதற்கொன்றுமில்லை.

**மத்திகிரிப் பங்கு: 1859—75**

பங்களூரில் இராணுவ ஆத்தும குருவானவராக இருந்த சங். ஷெவாலியர் தாசிரப்பள்ளி, மத்திகிரி முதலிய இடங்களில் சங். பீகோ—போக்ளேர் கட்டின செபக்கூடங்களைப் பழுதுபார்த்த பின்னர் வந். போன்னுன் ஆண்டவர் ஓராயிரம் கிறீஸ்துவ மக்களிருந்த பாலகாட்டை 1850 முதல் 1862 வரை தனது நிருவாகத்தில் சேர்த்துக்கொண்டார். அதற்கு முன் பெங்களூர் மிஷனரிமார்கள் அநேக கிராமங்களில் சிதறிக்கிடந்த கிறீஸ்துவர்களை ஒரு சில விசாரணைக்குள் சேர்த்து வைக்கப் பெரிய முயற்சி செய்தனர். சங். கூயோன் சுவாமியார் கோவிலூர்-தர்மபுரியிலிருந்து ராயக்கோட்டை எடப்பள்ளி, மத்திகிரி, மதகொண்டபள்ளி, தாசிரப்பள்ளி: மரதன ஹல்லி, தெங்கணிக்கோட்டை முதலிய விசாரணைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது.

சங். பரெயி சுவாமியார் உடல் நலம் குன்றின காரணத்தால் இரண்டு ஆண்டுகள் (1855—56) மத்திகிரியில் தங்கியிருந்தார். மத்திகிரியின் சுகந்தரும் வெட்பதட்ப நிலை காரணமாக அநேக குருமார்கள் உடல் நலத்திற்காக மைசூரிலிருந்து வந்து அங்கே தங்குவதுண்டு. அங்கு வந்த குருமார்களின் எண்ணிக்கையே இதற்குச் சான்றாகும். சங். ஜிரோ (1857—59) சங். பரெபி சுவாமியாருக்குப் பதிலாக வந்து மத்திகிரியை ஒரு தனிப் பங்கு ஆக்க முயன்றார்.

வந். போன்னுன் ஆண்டவர் 1861 இல் காலமானபோது, சேலம் மாவட்டத்தை ஒரு அப்போஸ்தொலிக்கு விக்காரியேட்டாக ஆக்க வேண்டும் என்ற திட்டம் மறைந்தது, 1862ஆம் ஆண்டிலேயே பாலகாட் மைசூர் அப்போஸ்தொலிக்கு விக்காரியேட்டுடன் இணைக்கப்பட்டது. இப்பகுதிக்கு முதல் பங்கு குருவானவராக வந்தவர் சங். ரெனுதீன் சுவாமியாராவர் (1862), அவருக்குப் பின் 1875 ஆண்டுக்குள் பதினைந்து குருமார்கள் உடல் நலத்திற்காக வந்து சென்றனர்.

1861இல் ராயக்கோட்டையிலிருந்த இராணுவம் அழைத்துக் கொள்ளப்பட்டபோது ஒரு சில கிறீஸ்துவர்கள் மட்டும் அங்கே தங்கியிருந்தனர். எடப்பள்ளியில் ஒரு மேட்டின்மேல் கட்டப்பட்ட செபக்கூடத்தில் சுவாமியார் தனிமையாகத் தங்கியிருந்தார். சின்னுத்தி, ஒன்னலவாடி கிராமங்களிலிருந்த கிறீஸ்துவர்கள் மட்டும் சுவாமியாரிடம் வந்தனர். திப்புசுல்தான் காலத்தில் நம் மதத்தை மறுதலித்தவர்களும் அவருடைய சந்ததியார்களும் இக் கிராமங்களுக்கு அண்மையிலேயே இருந்தனர். பாலராயப்பனூர், திகலஹல்லி முதலிய பழைய விசாரணைகளில் ஓரிரு கத்தோலிக்குக் குடும்பங்கள் இருந்தன. 1861இல் தெங்கணிக்கோட்டையில் செபக்கூடம் கிடையாது. மரதனஹல்லிக் கிறீஸ்துவர்கள் தங்கள் 'பழைய கிராமமான சிலுவைக்குப்புலுவை விட்டுப் புதிய கிராமமான கிறீஸ்துகுப்பத்தில் குடியேறினர். மத்திகிரியில் ஆண்டுதோறும் சிலர் மனந்திரும்பினர்.

## மேற்றிராணியாரின் மூன்று விசாரணைகள்: 1872–73.

1870இல் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் போர் மூண்டபோது இந்திய மிஷனரிகளுக்கு அயல்நாடுகளிலிருந்து வரவேண்டிய பண உதவி வந்து சேரவில்லை. சேலம், சேர்வராயன் மலை, காக்காவேரி, கோவிலூர் முதலிய இடங்களிலிருந்த கிறீஸ்துவர்கள் இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளிப்பதற்குத் தாராளமாக உதவி செய்தனர்.

1871-ஆம் ஆண்டு அரசாங்க மக்கள் கணக்கின்படி சேலம் மாவட்டத்தில் திருப்பத்தூர் நீங்கலாக 10,800 கத்தோலிக்கர்களும், 800-க்குச் சற்றுக் குறைவான பதிதர்களும் இருந்தனர்.

1872இல் ஜனவரியிலும், அதே ஆண்டில் ஏப்பிரல் முதல் ஜூலை மாதத்திலும், பின்னர் 1873 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலும் ஆக மூன்று முறைகள் வந். லவுவென்னன் ஆண்டவர் சேலம் மாவட்டத்தைப் பார்வையிட்டார். அவர் திருப்பத்தூரிலிருந்து மல்லாபுரத்துக்கு வந்தபோது, கிருஷ்ணகுப்

பக் கிறீஸ்துவர்களும் முகமதியர்களும் சேர்ந்து ஆண்டவரை காட்டி லிருந்த ஒரு பங்களாவில் வரவேற்று, மிகுந்த மரியாதையுடன் உப சரித்தனர். **எலத்தகிரியில்** 30 பேர்களுக்கு மேல் காலராவினுல் இறந்தனர்; அநேகர் காலரா கண்டு துன்புற்றனர். அக் கிராமத்திற் குப் போக எவருக்கும் அனுமதியில்லை யாதலால் வந். ஆண்டவர் சங். ரிஸ் சுவாமியாரை அங்கு அனுப்பிவிட்டு **கிருஷ்ணகிரிக்குச்** சென்ருர். அப்பொழுது எலத்தகிரியில் 91 குடும்பங்களில் 455 கிறீஸ்துவர்கள் இருந்தனர். பாஸ்கு விழாவுக்குப் பின் வந். ஆண்ட வர் **கோவிலூருக்குப்** பயணமானுர். ஆனல் அங்கும் காலரா பரவியிருந்தது. வந். ஆண்டவர் அங்கிருந்த கிறீஸ்துவர்களைப் பார் த்து அர்ச். சவேரியாருக்கு ஒரு நவநாள் வைத்து வேண்டிக்கொள் ளச் சொன்ஞர். அவ்வாறு செய்த பின் காலரா திடீரென்று நின்றது. **கடகத்தூரைச்** சுற்றியிருந்த நான்கு கிராமங்களில் 400 கிறீஸ்து வர்கள் இருந்தனர். சாவுடையூரைச் சுற்றி 300 கிறீஸ்துவர்கள் இருந்தனர். வந். ஆண்டவர் **கேத்தம்பட்டி** ஒரு காலத்தில் பங்கு அகும் என்ருர். **நெல்லி மரத்துப்பட்டியில்** 85 கிறீஸ்துவர்கள் இருந்தனர். **மல்லாபுரத்தில்** இருந்த 80 பேர்களில் அநேகமாக எல்லோரும் புதுக் கிறீஸ்துவர்கள். B **பள்ளிப்பட்டியில்** 170 பேர்கள், கோவிலூர் பங்கில் மொத்தம் 3000 கிறீஸ்துவர்கள் இருந் தனர். சங். தீரியோன் சூசைநாதர் 14 ஆண்டுகளில் 20 செபக் கூடங்களைப் பழுது பார்த்து அல்லது புதிதாகக் கட்டி, பள்ளிக் கூடங்களையும் நடத்தி வந்தார். இப் பெரிய பங்கைப் பிரிக்க வேண் டுமென்ற திட்டம் 60 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நிறைவேறி யது.

பிறகு வந். ஆண்டவர் **ஏற்காடுக்குச்** சென்று அங்கிருந்த செபக் கூடம் மிகவும் சிறிது எனக் கண்டார். **செட்டிப்பட்டிக்குச்** சென்று அங்கே மக்கள் நல்லவர்கள்; கிராமம் செழிப்பு வாய்ந்தது; நிரம்ப பிள்ளைகள் உண்டு; அவர்களுக்கு ஞானேபதேசம் நன்ருகத் தெரிந்தது, என்று அறிந்து கொண்டார். **சின்னப்பன்பட்டிக்குச்** சென்று அங்கே இருந்த செபக்கூடத்தைப் பார்வையிட்டு, அதைப் பெரிதாக்கி,பற வண்ணுர்களுக்கு ஒரு தனி கை அமைக்கவேண்டும் என்ருர். **எடப்பாடியில்** இருந்த கோவில் பலிபீடம் இருந்த பாகத்

தைத் தவிர மற்ற இடங்கள் மிகவும் பழுதான நிலையிலிருந்தது என்றார். வந். ஆண்டவர் அவ்வூர்க் கிறீஸ்துவர்களுக்குள் இருந்த தகராறுகளைத் தீர்த்து சமாதானம் உண்டு பண்ண அங்கு ஒரு வாரம் தங்கினர். **ரெட்டியூரி**லிருந்த கோவிலைப் பழுது பார்த்தல் அவசியம் என்றும், **சங்கரி துர்க்கத்தில்** வடுக வண்ணார்கள் மூடக் கொள்கைகளை விட்டுவிட்டபடியால் தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினர். **சடையம் பாளையத்திலி**ருந்த செபக்கூடம் மிகவும் சிறியது. பதினாறுபெண் வண்ணார்களில் 14 அல்லது 16 குடும்பங்கள் மட்டும் விசுவாசத்தோடு இருந்தனர். **சேலத்திலிருந்த** கோவில் மிகச் சிறியது. **சூரமங்கலத்**தில் சங், கம்மியாது கோவிலைச் சுற்றிச் சுற்றுச் சுவர் எழுப்பினர். **அக்கிரகாரம்** 70 அல்லது 75 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய விசாரணை. இங்கு ஒரு கிறீஸ்துவப் பெண் தனது இந்து கணவனையும் அவனுடைய குடும்பத்தையும் மனந் திருப்பினள், அத்திப்பாக்கத்திலிருந்து மூன்று குடும்பங்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். சங். ஃபிரிக்கோ சூசைநாதர் ஒரு குன்றின் மேல் லூர்து மாதாவின் பேரால் ஒரு செபக்கூடம் கட்டினர்.

1873 ஜனவரியில் வந். ஆண்டவர் தனது விசாரணையை மீண்டும் தொடங்கினர். **நாரியப்பனூர்** விசாரணையில் 160 கிறீஸ்துவர்கள் இருந்தனர். **ஆத்தூரில்** சங். ராயப்பநாதர் (பியர்) கோட்டையினுள் வசித்து வந்தார். அம்மாப்பாளையத்தில் கோவில் கட்டுவதற்கென்று ஒரு நிலம் வாங்கினர் **ஏத்தாப்பூர்** கோவிலின் பெரும்பாகம் இன்னும் கட்டப்படவில்லை. பின்னர் **திருமனூருக்குச்** சென்று அங்கிருந்து **மதியம்பட்டி**க்கு வந்தார். மதியம்பட்டியில் அர்ச். அந்தோணியார் பேரால் ஒரு கோவில் இருந்தது. **புதுப் பாளையத்**தில் உடையார்களும் ஒட்டர்களும், சங். ராயப்பநாதரால் ஞானதீட்சை பெற்ற சில பகடைச் சக்கிலிகளும் இருந்தனர். இராசிபுரத்தில் செபக்கூடம் கிடையாது. **காக்காவேரியில்** குருவானவரின் அறைவீடு மிகவும் பழுதான நிலையில் இருந்தது. 77 ஆண்டுகளுக்கு முன்னர் சங். தாபுவா சுவாமியார் அதைச் செப்பனிட்டார். இவ் விசாரணையில் 835 பேர்களும் சங். ராயப்பநாதரால்

மனந்திருப்பப்பட்ட 100 பேர்களும் இருந்தனர். **பேட்டைப்பாளையத்தில்** சங். லாப் சுவாமியாரால் மனந்திருப்பப்பட்ட ஒருவனும், அவனுடைய இரு மகன்களும் வேறு சிலரும் பொய்சாட்சி சொன்னதற்கும் இன்னும் வேறு குற்றங்களுக்காகவும் கடின வேலை செய்யும்படி தண்டிக்கப்பட்டனர். மேற் குறிப்பிடப்பட்ட அந்த ஆள் ஒரு செபக்கூடத்தையும் குருவானவரின் அறை வீட்டையும் கட்டிக் கொடுத்து நிலமும் வழங்கினுன். **மோஹனூர்** ஒரு காலத்தில் பெரிய விசாரணையாக இருந்தது. **கோனேரிப்பட்டி**க்குத் தம்மம் பட்டி வழியாக ஆண்டவர் சென்று கொண்டிருந்த போது, ஆண்டவருடைய வண்டி ஒரு முகமதியனுடைய வண்டியின் மேல் மோதும் போலிருந்தது. உடனே முகமதியர் கிறீஸ்துவர்களுடன் சண்டைக்கு வந்தனர். ஆனல் ஆண்டவர் தனது வண்டியை ஒரு சிறிய சந்தின் வழியாக விடச் சொன்னபின் முகமதியர் அமைதியாகச் சென்றனர். கோனேரிப்பட்டி விசாரணையில் தொம்பலாப்பட்டியிலிருந்து கொண்டையம்பள்ளி வரை 655 கிறீஸ்துவர்கள் இருந்தனர். **செந்தாரப்பட்டியில்** செபக்கூடம் ஏரிக்கு அருகில் இருக்கக் கூடாதென்ருர். **கங்கவள்ளி** விசாரணையில் புங்கவாடியில் 10 குடும்பங்களும், கீழ் புதூரிலும் மேல் புதூரிலும் 100 கிறீஸ்துவர்களும் இருந்தனர். நாரியப்பனூர் விசாரணை பாளையத்திலிருந்து கங்கவள்ளிப் பங்கோடு இணைக்கப்பட வேண்டும் என்றும், ஆத்தூரை ஒரு புதுப் பங்காக்க வேண்டும் என்றும் கூறினுர்.

**1872 இல் இருந்த பங்குகளின் விவரம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மைசூர் விக்காரியேட்: | ஒசூர் தாலுக்கா-மத்திகிரி-ஏறக்குறைய | 1000 [கிறீஸ்துவர்கள், |
| 2. | புதுச்சேரி விக்காரியேட்: | பாரமஹால்-திருப்பத்தூரில் ஒரு பகுதி | 600 |
| 3, | ,, ,, | : தர்மபுரி, அரூர், கோவிலூர் தர்மபுரி | 3128 |
| 4. | ,, ,, | : சேலம், ஓமலூர், திருச்செங்கோடு, இராசிபுரம் | 3702 |
| 5. | ,, ,, | : நாமக்கல் தாலுக்கா, தோளூர்பட்டியில் ஒரு பகுதி | 760 |
| 6. | ,, ,, | : சேர்வராயன் மலை ஏற்காடு | 500 |

| | | | |
|---|---|---|---|
| 7. | புதுச்சேரி விக்காரியேட் | : அக்கிரகாரம் | 465 |
| 8. | ,, ,, | : ஆத்தூருக்கு வடக்கு-வசிஷ்டபள்ளத் தாக்குக்கு-ஆத்தூர் | 410 |
| 9. | ,, ,, | : ஆத்தூர் தெற்கு-கங்கவள்ளி | 1030 |
| 10. | ,, ,, | ; பாளையத்திலிருந்து நாரியப்பனூரில் ஒரு பகுதி | 160 |
| 11. | ,, ,, | : கோட்டைப்பாளையத்திலிருந்து கொள் ளிமலை | 42 |
| 12. | கோயம்பத்தூர் விக்காரியேட் | : மேட்டூருக்கு வடக்கு | 1000 |

ஆனால் உண்மையாக சேலம் மாவட்டத்தில் ஆறு பங்குகள் தான் இருந்தன: மத்திகிரி, கோவிலூர்-தர்மபுரி, சேலம், ஏற்காடு கங்கவள்ளி, மேட்டூர். அக்கிரகாரத்தில் ஓய்வு பெற்றுக்கொண்ட குருவானவர் ஒருவர் இருந்தார். ஆத்தூர் இன்னும் பிரிக்கப்பட வில்லை. திருப்பத்தூர், பாளையம், தோளூர்பட்டி, கோட்டைப்பாளை யம், விசாரணைகளிலிருந்த குருவானவர்கள் சேலம் மாவட்ட எல்லை களிலிருந்த 1600 கிறீஸ்துவர்களையும் கண்காணித்தனர். திருப் பத்தூர், கோவிலூர், சேலம், கங்கவள்ளி விசாரணைகளில் உதவி குருமார்கள் இருந்தனர்.

---

# மூன்றும் அத்தியாயம்

## பெரிய பஞ்சம் (1876-78)

1875 இல் மழைமாரி பெய்யவில்லை. உணவு தானியங் களில் நெருக்கடியும் பற்றுக் குறையும் ஏற்பட்டது. ஜூன் மாதத் தில் தானியங்களில் விலை இரட்டிப்பாயிற்று, 1876 இல் விலை வாசி மும்மடங்காக உயர்ந்தது. "கடைகளில் அரிசி இருந்தது; ஆனால் மக்களின் கைகளில் அவற்றை வாங்கப் பணம் இல்லை". ஏழை மக் கள் கிழங்கு, மரப்பட்டை, கத்தாழைச் சோறு, புளியங்கொட்டை மாவு, இலை தழைகள் முதலியவற்றைத்தின்றனர். வங்காளத்திலி

ருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி வயிற்றுப்போக்கு, காய்ச்சல், உடல் வீக்கம், முதலிய வியாதிகளைக் கிளப்பிவிட்டது. 1877 இல் பருவக்காற்று மழை இருந்த பயிர்களையும் அழித்து நாசம் செய்தது. தஞ்சையின் கழிமுகப் பிரதேசத்தைத் தவிர பஞ்சம் எங்கனும் கோரத்தாண்டவம் ஆடினது. மைல் கணக்காகத் தண்ணீர் கிடையாது. கால் நடைகள் ஆயிரமாயிரமாக இறந்தன. மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களை விட்டுக்கிளம்பினர். 1878 இல் இருந்த பசுந்தளைகளையும் வெட்டுக்கிளிகள் படையெடுத்து அரித்துவிட்டன.

வானத்திலிருந்துவந்த இடிபோன்று திடுமென்று அக்டோபர் 1876 இல் பஞ்சம் எங்கும் தோன்றினது. பஞ்சம் பரவின மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் உத்தியோகப்புலிகள் பஞ்சநிலையை உணர்ந்து அதைத் தடுக்க உடனடியான முயற்சி செய்யமுன்வந்தனர். ஆனல் ஏற்கனவே ஆயிரக்கணக்கான குழந்தைகள், வயோதிபர், நோயாளிகள் செத்து மடிந்தனர், பட்டினிப்பட்டாளங்கள் நகரத்திலிருந்த கஞ்சித் தொட்டிகளை ஓயாமல் ஒழியாமல் முற்றுகையிட்டன. 1877 செப்டம்பர் மாதம் 3,26,000 பேர்கள் பஞ்சநிவாரண முகாம்களில் சரணுகதி அடைந்திருந்தனர். திருடர் நாட்டில் எஞ்சியதைச் சூரையாடினர். சிறைச்சாலைகளில் எப்பொழுதும் உணவு இருந்தமையால் அவைகளும் அளவுக்குமேல் நிரம்பிவிட்டன. அரசாங்கம் பஞ்சத்தில் அவதிப்பட்டவர்களுக்கு இருப்புப்பாதை அமைத்தல். பாதை போடல், ஏரிகளுக்குக் கரை எழுப்புதல் முதலிய வேலைகளைக் கொடுத்து தலைக்கு ஒருநாளைக்கு இரண்டணு அளித்தது. ஆனல் அநேகர் தங்களுடைய எஞ்சிய சக்தியை விரயமாக்காமல் வீடுகளிலேயே முடங்கிக்கிடந்தனர். உணவு, பணம் முதலியவற்றைப் பகிர்ந்து கொடுப்பதற்கு பொதுக் கமிட்டிகள் மிஷனரிமார்களைத் தேர்ந்தெடுத்தன. ஆனல் இதற்கு முன்பே குருமார்கள் தங்களிடமிருந்தது, மிஷன் தந்தது, ஐரோப்பியரிடமிருந்து பெற்றது யாவற்றையும் பகிர்ந்து கொடுத்துவிட்டனர்.

சங். நோரோஞ சுவாமியார் பாலகாட்டில் யாவராலும் கைவிடப்பட்ட ஏழு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியருக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களை மைசூரிலிருந்த அனுதை மடங்களுக்கு அனுப்பினர்.

ஒசூர் தாலுக்காவிலிருந்து பெங்களூரை நோக்கி விரைந்து வந்த பட்டினியால் வாடினவர்களை மைசூர் அரசரின் குதிரைப்பட்டாளம் தடுத்துவிரட்டின.

பாரமஹால் பகுதியில் எலத்தகிரி வாசிகள் வெட்டுக்கிளிகளால் ஏற்பட்ட பஞ்சத்தை இற்றைக்கும் ஞாபகத்தில் வைத்திருக்கின்றனர். வெட்டுக்கிளிப்படைகளை எவ்வளவு தூரம் விரட்டித் துரத்துவது என்ற பிரச்சனையில் சண்டைகளும் அடிதடிகளும் ஏற்பட்டனவாம்.

தர்மபுரியில் சங். தீரியோன் சுவாமியாரும் அவருடைய உதவி குருவானவர்களும் கோவிலூர் மடத்தில் ஒரு கஞ்சித் தொட்டியையும் ஒரு ஞானஸ்நான ஆயத்தத்தையும் துவக்கி 40 மாதங்களில் 879 சிறுவர்களுக்கும் 2,285 பெரியவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தனர்.

ஓமலூரில் சங். வெர்தியர் சுவாமியார் ஏறக்குறைய 1400 புதுக்கிறீஸ்துவர்களைக் கவனித்தார். அவர் நாகமாரை கிராமத்தில் ஒரு செபக்கூடமும் அறைவீடும் அமைத்தார். ஆனால் அவர்கள் 1880 இல் தங்கள் இரட்சகரை மறுதலித்தனர். சங். வெர்தியர் சுவாமியார் கூறினது போல 50 வருடங்களுக்குப்பின் நாகமாரை 'மீன்பாறை'யாக மேட்டூர் தேக்கத்தினுள் அமிழ்ந்து கிடக்கிறது. மேட்டூரில் போக்குவரத்து சாதனங்கள் மிகவும் மோசமாக இருந்ததால் பஞ்சத்தின் கொடுமை மிக பயங்கரமாக இருந்தது. 1877 இல் தாணியங்களெல்லாம் மழையினால் நாசமுற்றன. சங். பெருல், சங். பஜோல், சங் ஃபூபெர் பஞ்ச நிவாரணக் கமிட்டியின் உறுப்பினர்களாயிருந்தனர். சங். பெருல் சுவாமியார் 20 கிராமங்களுக்கு வாரமொருமுறை 300 ரூபாய்களைப் பங்கிட்டுக் கொடுத்தார். ஆனால் அந்த மக்கள் திரளுக்கு ஆயிரம் ரூபாய்கள் கொடுத்திருந்தாலும் அவை போதாதென்று கருதப்பட்டது. மக்கள் புற்களையும் இலைகளையும் தின்றனர். கருங்கலூரிலும் பழையூரிலும் ஞானஸ்நான ஆயத்தங்கள் ஏற்பட்டு 505 பேர்கள் மெய்மறையில் சேர்ந்தனர். சங். ஃபூபெர் சுவாமியார் காவிரியாற்றின் இருமருங்கிலுமிருந்த அநேக

கிராமங்களைக் கவனித்தார். நாயம்பாடியில் ஒரு ஞானஸ்நான ஆயத்தத்தை ஏற்படுத்தி 850 பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். சங். பஜோல் சுவாமியார் காவிரிபுரத்தை விசாரணை செய்தார். ஞானஸ்நானம் பெற்ற 2300 பேர்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பாகம் பஞ்சத்தால் இறந்துவிட்டனர். மேட்டூரில் உபதேசியாராக இருந்து, பஞ்ச காலத்தின் போது அயராது உழைத்து இறந்த அமிர் தம்பிள்ளையின் அடக்கச் சடங்குக்கு மேட்டூர் மக்கள் அனைவரும் வந்தனர்.

ஏற்காடில் கூலிகளுக்கு அரிசி படி இரண்டு ரூபாய்களுக்குக் கொடுக்கப்பட்டது.

சேலத்தில் சங். பிரிசார்டு சுவாமியாரும் அவருடைய உதவி குருவானவரும் இறக்கும் தறுவாயிலிருந்த 8135 சிறுவர்களுக்கும் 4304 பெரியவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தனர். பஞ்சத்தில் தப்பித்துக்கொண்ட 2067 குழந்தைகளும் 4468 பெரியவர்களும் ஞானதீட்சை பெற்றனர். இவர்கள் யாவரும் 130 கிராமங்களிலிருந்துவந்தவர்கள். திருமலைகிரியும் சூரமங்கலமும் ஞானஸ்நான ஆயத்தங்களாக இருந்தன. சூரமங்கலத்தில் 500 பேர்களும், செவ்வாய்பேட்டையில் 500பேர்களும் பராமரிக்கப்பட்டனர்.

காக்காவேரியில் ஆகஸ்டு 1876க்குப் பிறகு சங். வான்னே புதுப்பாளைய உடையார்களையும் ஒட்டர்களையும் பட்டணத்திலிருந்த கிறீஸ்துவர்களையும் கவனித்துவந்தார்.

சங்கரிதுர்கத்தில் செப்டம்பர் மாதம் 1877இல் சங். ஃபோல் தெத் பஞ்ச நிவாரண முகாம்களில் 3000 அகதிகளைக் கண்டார். ஒருநாள் அவர் கோவிலுக்கு அருகில் மடிந்துகொண்டிருந்த 317 பேர்களுக்கு ஞானஸ்நானம் அளித்தார்.

மே 1878 இல் பஞ்சத்தின் கொடூரம் இன்னும் குறைந்தபாடில்லை என்று சங். பிரிசார்டு சுவாமியார் கூறினர். அவருடைய உதவி குருவானவர் சங். போட்சியர் கடின உழைப்பின் காரணமாக ஆகஸ்டு மாதத்தில் இறந்துபோனர். சங். பிரிசார்டு சுவாமி

யாரும் மிகவும் களைத்துத் தளர்ந்து சென்னைக்குச் சென்று அங்கே காலமானார். இவ்விருவருக்கும் பதிலாக சங். போத்தே, சங். தெய்ச தெர், சங். பெர்தோ மாறி மாறி உழைத்தனர்.

சங். ஃபோல்தெத் ரெட்டியூரைத் தனது தலைமை இருப்பிடமாகத் தெரிந்துகொண்டு பக்கநாடு, குண்டனூர், புளியம்பட்டி, அக்கரைப்பட்டி, வெங்கிபாளையம் முதலிய ஐந்து கிராமங்களில் ஞானஸ்நான ஆயத்தங்களை ஏற்படுத்தி, சாகுந்தறுவாயிலிருந்த 1280 குழந்தைகளுக்கும், 723 பெரியவர்களுக்கும், பஞ்சத்தில் பிழைத்துக்கொண்ட 121 குழந்தைகளுக்கும் 692 பெரியவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். இவர் பஞ்சத்தினால் அவதியுற்றவர்களின் துயரைத்துடைக்க தன்னிடமிருந்த சொந்தப் பொருள் அனைத்தையும் செலவிட்டார். இவர் 1879 செப்டம்பரில் மிகவும் களைத்துவிட்டதால் சங். தெய்சதெர் (மிக்கேல் நாதர்) அவருடைய வேலையை மேற் கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ரெட்டியூரில் மிகச் சில புதுக் கிறீஸ்துவர்கள் மட்டும் இருந்தனர்.

ஆத்தூர் தாலுக்காவில் சங். காந்தி சுவாமியார் தனது உதவி குருவானவர்கள் சங். பிரிக்கோ, சங். சிஸ்ஸே இவர்களின் துணை கொண்டு, பேளூர், ஒட்டப்பாடி, சொக்கநாதபுரம், மிக்கேல்புதூர், துலுக்கனூர், கல்லனத்தம், தேவியாக் குறிச்சி, மணிவிழுந்தான், ஊணத்தூர், சித்தேரி, காட்டுக்கொட்டாய், அரகாலூர், புங்கவாடி, குடுமலை, நாகையம்பட்டி, மாத்துருட்டு முதலிய சேரிகளையும் ஞானஸ்நான ஆயத்தங்களையும் பழைய விசாரணைகளையும் கவனித்தார். 1500 புதுக் கிறிஸ்துவர்களில் முக்கால் பாகம் விசுவாசத்தில் நிலைத்திருக்கவில்லை.

சங். ரூஸ், சங். மரிப்பிரகாசம் நாமக்கல்லில் சில நூறு பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர்.

### பஞ்சத்தில் பதறினவர்களுக்கு உதவி—
### ஆதரவற்ற அனாதைகளும் ஞானஸ்நான ஆயத்தங்களும்:

1877 ஜனவரியில் வந். ஆண்டவரிடமும் சில மிஷனரிமார்களிடமும் இருந்த பொருள்களில் அநேகமாக யாவுமே பஞ்ச நிவா

ரணைக்காகக் கொடுக்கப்பட்டன. ஐரோப்பாவில் இருந்துவந்த தர்மப்பணம் அவ்வாண்டு ஏப்பிரல் மாதத்தோடு தீர்ந்துவிட்டது. எனவே குழந்தைகளைத் தவிர மற்ற யாவரையும் ஞானஸ்நான ஆயத் தங்களில் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு சுற்றறிக்கை குருமார் களுக்கு விடப்பட்டது. மீண்டும் ஐரோப்பாவிலிருந்துவந்த பண உதவியைக்கொண்டு ஜூன் 1878 வரை சமாளித்தார். கோவிலூ ரில் ஏற்கனவே இருந்த மடத்திலும், சேலத்தில் புதிதாக 1878இல் ஏற்பட்ட மடத்திலும், 1874 இல் அக்கிரகாரத்தில் கட்டப்பட்ட மடத்திலும் அனாதைகள் நிரம்பி இருந்தனர். செவ்வாய்பேட்டை யில் 300 குழந்தைகள் கிறீஸ்துவர்களின் குடும்பங்களிலே விடப் பட்டு வளர்க்கப்பட்டனர்.

ஞானஸ்நான ஆயத்தங்களில் மக்கள் கூட்டமாக உபதேசம் பெற்றனர். மற்றவர்களுக்கு இடம் விடும்படியாக விரைவிலேயே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். சில சமயங் களில் ஒரு கிராம மக்கள் அனைவரும் உபதேசம் பெற்றனர். 1877இல் விதைத்தல் காலத்தில் அரசாங்கம் அல்லது மிஷனரிகள் உழவர்களுக்குக் கடன் கொடுத்தனர். கடன்பட்ட அநேக புதுக் கிறீஸ்துவர்கள் புதிய மதத்திலிருந்து தங்களைப் பிரித்துக்கொள்ள கடன்களை விரைவில் தீர்த்தனர். ஆனால் அநேகருடைய கடன்கள் தீர்க்கப்படாமலேயே இருந்தன. பின்னர் மிஷனரி மார்கள் கடன் பத்திரங்களையும் அடைமானப் பத்திரங்களையும் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டனர்.

பஞ்ச காலத்தில் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானங்களை மற்ற காலங்களில் கொடுக்கப்பட்டவையோடு ஒப்பிட்டுப் பார்க்கலா காது. அநேக உதவி குருமார்களுக்குத் தமிழ் தெரியாது. ஐரோப் பாவிலிருந்துவந்த வாலிப குருமார்களில் அநேகர் இந்தியத்துறை முகங்களில் இறங்கினவுடன் நேராக விசாரணைகளுக்கு உதவி செய்யுமாறு அனுப்பப்பட்டனர். உபதேசிமார்களில் கூட அநே கருக்கு போதிய அனுபவம் கிடையாது.

ஞானஸ்நான ஆயத்தங்களில் செத்தவர்கள், செத்துக் கொண்டிருப்பவர்கள், பசிமிகுதியால் களைத்து அயர்ந்து முடங்கிக்

கிடப்பவர்கள், நோயாளிகள், பசியால் கதறி அழுபவர்கள், ஓடி விளையாடும் பிள்ளைகள் அல்லது அடக்க முடியாத விதமாகக் கதறும் குழந்தைகள், சமையல் செய்வதற்காக இங்குமங்கும் அலைந்து திரிபவர்கள், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள புதிதாக வரும் கூட்டங்கள் முதலிய கோரக் காட்சிகள் குருமார்களின் நெஞ்சங்களைப் பிளந்தன. ஞானஸ்நானம் பெற்று பின்னர் விசுவாசத்தை இழந்தவர்களை விட ஆத்துமங்களை இரட்சித்துக்கொண்டவர்கள் அதிகம் என்று மிஷனரிமார்கள் திண்ணமாக எண்ணினர்.

எதிர்காலத்தில் பஞ்சம் வரும்போது எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்று கோயம்பத்தூர் விக்கார் அப்போஸ்தொலிக்கு அறிவுரை கூறியுள்ளார். முதலில் கிறீஸ்துவமக்களுக்கு உதவி செய்யவேண்டும். பஞ்சத்தின்போது கடன் வாங்கி, பின்னர் அதைத் திரும்பிக்கொடுக்க முடியாமல் நிலங்களை விற்றுவிட நேரிடுவதால், அந்த நெருக்கடியான காலத்தில் பணத்தைக் கடனுக்கு விடாமல் தருமமாகவே கொடுத்துவிடல் மிகமிக நலம். அனுதைகள், குழந்தைகள், இவர்களில் எத்துணைபேர்களுக்கு வேண்டுமானுலும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். ஆனுல் பெரியவர்களுக்கு பஞ்சம் கடந்துபோனபின் நல்ல ஆயத்தம் செய்த பின்னரே, ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்.

பஞ்சம் முடிந்தபின் அநேக மிஷனரிமார்கள் கடின உழைப்பின் காரணமாய் இறந்தனர். அவ்வாறு இறந்தவர்கள்:— சங். மெனுவெல் (30 வயது); சங். சிஸ்ஸே (31); சங். புஆட்ஸியர்(30); சங். பிரிசார்டு—பஞ்சகாலத்தில் (67); சங். ∴போல்தெத்தி. உடல் நலம் குன்றிப்போனவர்கள்: சங். வான்னே சங். ஜீ ஆரே, சங். போத்தே.

## பஞ்சத்திற்குப்பின்: 1880—1900

1868 இல் வந். லவுவென்னுன் ஆண்டவர் சேலத்தை ஒரு விக்காரியேட் ஆகச் செய்ய விரும்பினுர். ஏற்காடில் இருந்த சங். கோடே சுவாமியார் சேலம் மாவட்டத்தை முழுவதும் விசாரித்தார். 1878 இல் சேலத்தில் ஒரு உதவி மேற்றிராணியாரை நியமிக்கத்

திட்ட மிடப்பட்டது. ஆனுல் சேலம் புதுச்சேரி விக்காரியேட்டில் மூன்றில் ஒரு பாகம் இருந்த போதிலும், கிறீஸ்துவமக்கள் தொகையில் பத்தில் ஒரு பாகந்தானிருந்தது. மேலும் மிஷனரி மார்கள் சொற்பம்.

சேலத்தில் புதுக்கிறீஸ்துவர்கள் அதிகமானபின் புதுப் பங்குகள் உண்டாக்கப்பட்டன. நாமக்கல்லுக்கு வடக்கே செட்டிப் பட்டியும் எடப்பாடியும் சேர்ந்து ஒரு பங்கு; கோனேரிப்பட்டியும் கங்கவள்ளியும் சேர்ந்து ஒரு பங்கு; 1895 இல் கடகத்தூரும் எலத்த கிரியும் சேர்ந்து ஒரு பங்கு: 1904 இல் சவேரியார்பாளையம் ஒரு பங்கு. புதுக் கிறீஸ்துவர்கள் மட்டும் இல்லாதிருந்தால் சேலம் மாவட்டம் புதுச்சேரி விக்காரியேட்டிலேயே கிறீஸ்துவ மக்கள் மிகக் குறைவாக இருந்த பாகமாக இருந்திருக்கும். மற்ற இடங்களில் 3500 பேர்களுக்கு ஒரு பங்கு என்றால் சேலத்தில் 2500 பேர் களுக்கு ஒரு பங்கு இருந்தது.


1871 இல் சர்க்கார் கணக்கின்படி சேலத்திலிருந்த கத்தோலிக்கர் 12,255; புரோட்டஸ்டாண்டார்கள் 1078. 1881இல் சர்க்கார் கணக்கின்படி 10940 கத்தோலிக்கர். ஆனுல் வந். லவு வென்ஞன் ஆண்டவரின் கணக்குப்பிரகாரம் 12857 கத்தோலிக்கர் இருந்தனர்.

**881 அரசாங்கக் கணக்கு**

| | |
|---|---|
| ஒசூர் | 1146 |
| கிருஷ்ணகிரி | 582 |
| ஊத்தங்கரை | 627 |
| தர்மபுரி | 2333 |
| சேலம் | 3393 |
| திருச்செங்கோடு | 1167 |
| ஆத்தூர் | 1196 |
| நாமக்கல் | 496 |
| மொத்தம் | 10940 |

**1883 மிஷன் கணக்கு**

| | |
|---|---|
| மத்திகிரி-மதகொண்ட பள்ளி | 1200 |
| எலத்தகிரி—கிருஷ்ணகிரி | 620 |
| பொன்னையாற்றுக்கு வடக்கே | 100 |
| கோவிலூர்—கடகத்தூர்—பள்ளிபட்டி | 3146 |
| சேலம், காக்காவேரி, செட்டிப்பட்டி, எடப்பாடி | 3795 |
| அக்கிரகாரம் | 665 |
| ஏற்காடு | 685 |
| ஆத்தூர், கோனேரிப்பட்டி | 1698 |
| சேந்தமங்கலம், பேட்டைப்பாளையம் | 200 |
| கொசவம்பட்டி | 748 |
| மொத்தம். | 12857 |




வந். லவுவென்னன்.




வந். காந்தி.



வந். போத்தேரோ.



வந். ஷப்புயி.


சேலம் மேற்றிராசனம். 1833-1930.
நிரந்தர வாசம்
விசாரணைகள்
வெளி விசாரணை
பழைய மேற்றிராசனங்களின் எல்லை.
புது மேற்றிராசன எல்லை.
SCALE: 1" = 25 மைல்கள்.
மைசூர்
மதறாஸ்
பாண்டிச்சேரி
கோயமுத்தூர்
கும்பகோணம்

1. **மத்திகிரி** 1700 ? (1859)
எடப்பள்ளி 1799
தெங்கணிகோட்டை 1700
கிறிஸ்துபாளையம் 1670
தாசரிபள்ளி 1670
மதகொண்டபள்ளி 1794
சோளேபுரம்
கோபசமுத்திரம்
கெம்படபள்ளி

2. **எலத்தகிரி** 1800 (1904)
கிருஷ்ணகிரி 1790
கிருஷ்ணன்குப்பம்
கம்மனெல்லூர் 1750

3. **கடகத்தூர்** 1670 (1895-1904)
கொளத்தூர் 1670
கொல்லப்பட்டி
செல்லியம்பட்டி
சாவலூர்
கொத்தாவூர்
சாவுடையூர்
கேத்தம்பட்டி 1845

4. **கோவிலூர்** 1704
தர்மபுரி 1670
ஊத்தமலை
பிலிகுண்டலு
கொங்கரபட்டி 1745
தெங்கரகோட்டை 1840 ?
பி. பள்ளிப்பட்டி
மல்லாபுரம் 1866
மோரூர்
ஊத்தங்கரை 1863

5. **செட்டிபட்டி** 1670 (1883)
புதூர் 1895
நாகமாரை 1876—80

6. **சேலம்** 1623 (1852)
7 சேரிகள்
சூரமங்கலம் 1845

7. **ஏற்காடு** 1862
பால்மடீஸ்

8. **அக்ரகாரம்** 1868

9. **ஆத்தூர்** 1878 (1880)
புங்கவாடி 1870
மிக்கேல்பூர் 1876
எத்தாப்பூர்
புத்திரகவுண்டன்பாளையம்
கோவிந்தபாளையம்
**கங்கவல்லி** 1830

10. **கோனேரிப்பட்டி** 1872
கீழ் மேல் புதூர்
குடமலை 1876-1904
செந்தாரப்பட்டி 1717
முல்லிக்குறிச்சி
திருமனூர் 1843 ?


11. **காக்காவேரி** 1861
நாமகிரிக்பேட்டை 1870
ஒடுவங்குறிச்சி 1870
பட்டணம் 1876
புதுப்பாளையம் 1876
இராசிபுரம்
மதியம்பட்டி 1640
கொசவம்பட்டி 1833
சேர்ந்தமங்கலம் 1627
செல்லியம்பட்டி

12. **இடப்பாடி** 1880-1884
சங்கரிதுர்க்கம் 1825
சடையம்பாளையம் 1845
வெள்ளாளபாளையம் 1900
ரெட்டியூர் 1845
சின்னப்பன்பட்டி

13. **மேட்டூர்** 1876
மாசில்லாபாளையம்
விறலிகாட்டூர்

14. **சவேரியார்பாளையம்** 1904
பூமனூர்
நாயம்பாடி 1876
செட்டிப்பட்டி—காட்டூர்
**கொல்லிமலை**
வளப்பூர் 1850
**தோளூர்பட்டி** 1864
மோஹனூர் 1750
பேட்டைப்பாளையம் 1750
கருப்பன்பட்டி
பவித்திரம்

குறிப்பு:- இப்பெயர் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்கள் பக்கத்திலுள்ள வரைப்படத்தில் உள்ள எண்களையே குறிக்கின்றன. பெரிய எழுத்துக்களில் உள்ள ஊர்களே நிரந்தர வாசஸ்தலங்களாக விளங்கின. கொடுக்கப்பட்டுள்ள வருடங்களோ அந்தந்த ஊர்கள் வேதபோதகத் தளமாக மாறின நாளைக் காட்டுகின்றன. அடைப்புக்குறிகளில் உள்ள வருடங்கள் அந்த ஊர்கள் எப்போது நிரந்தர வாசஸ்தலங்களாக மாறின என்பதை அறிவிக்கின்றன.



வந். புருனியர்.



வந். செல்வநாதர்.

உழைத்தார். அங்கே சிறுவர்களுக்கு பாத்திமா ஆரம்பப் பள்ளியை நிறுவினர். பின்னர் எலத்தகிரியில் 1½ ஆண்டுகள் அரிய பணியாற்றினர். இறுதியாக வியாதி மிகவும் அதிகரிக்கவே, மிக வந். செல்வநாத ஆண்டவர் அவரை சேலத்துக்கு வரவழைத்து, அவரது விருப்பத்திற் கிணங்க, திவ்ய சற்பிரசாதநாதரை எப்பொழுதும் பார்க்கக் கூடிய வசதியுள்ள ஒரு அறையில் இருக்கச் செய்தார்.

அச் சிறிய அறையில் தமது வாழ்வின் எஞ்சிய நாட்களை மிக்க பொறுமையோடும், அதி மிக முக மலர்ச்சியோடும், தமது வியாதி வருத்தங்களையெல்லாம் சேலம் மேற்றிராசனத்தின் முன்னேற்றத்திற்காகப் பலியாக ஒப்புக் கொடுத்து, புன் முறுவல் பூத்த முகத்துடனே புனித மணம் வீசும் மிக வந். புருனியர் ஆண்டவர் **10—3—57** இல் வான் வீடு சேர்ந்து விட்டார். அன்று அவருடைய சடலம் அர்ச். தெரெசம்மாள் அனுதை மடத்து தேவாலயத்திலே வளர்த்தப்பட்டது.

**11—3—57** மாலை அரிசிப்பாளையம் அர்ச். சவேரியார் தேவாலயத்துக்கு அவரது சடலம் கொண்டு வரப்பட்டது. ஒப்பிஸ் பாடினபின் மிக அலங்காரமாகச் சோடிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் ஆண்டவருடைய சடலம் ஊர்வலமாக செவ்வாய்பேட்டை மேற்றிராசன தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**12—3—57** காலை எட்டுமணிக்கு 3 அதி மேற்றிராணிமார்களும் **5** மேற்றிராணிமார்களும் **60** குருக்களும் ஏராளமான கன்னியர்களும் ஆயிரமாயிரம் கிறீஸ்துவர்களும் அவரது அடக்கச் சடங்கில் கலந்து கொண்டனர். மிக வந். செல்வநாத ஆண்டவர் போந்திப்பிக்கல் பாடற் பூசை செய்தார். அதி வந். லெயோனர்டு ஆண்டவர் மரித்த மேற்றிராணியாரின் சிறப்பியல்புகளைப் பற்றி உருக்கமான மறையுரை நிகழ்த்தினர். மிக வந். பியூகா ஆண்டவர் அடக்கச் சடங்கை நிறைவேற்றினர்.

சிலுவையின் துன்பத்தை இன்பமுடன் ஏற்று தியாக மூர்த்தியான மிக வந். சிலுவைநாதர் ஆண்டவருக்கு சிலுவை நாதன் சேசு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாப் பேரின்பத்தையும் கட்டளையிட்டருள்வாராக.

# இரண்டாம் அத்தியாயம்

## மிக வந். வெண்மணி செல்வநாத ஆண்டவர்: முதல் இந்திய மேற்றிராணியார். (1949— )

மிக வந். ஹென்றி புரூனியர் ஆண்டவரவர்கள் தமது அரிய பெரிய சேவைகளுக்கு உயரிய சிகரமாக, பத்தொன்பது ஆண்டு ஆட்சிக்குப் பிறகு, தமக்கு வாரிசாக ஒரு இந்திய மேற்றிராணியாரைப் பெற்று, அவருக்குத் தமது கரங்களாலேயே பட்டாபிஷேகச் சடங்குகளை நிறைவேற்றினர். அப்பொழுது அமல சேசுவைத் தழுவிய புனித சிமியோனைப் போல, "ஆண்டவரே, இப்போது உமது அடிமையைச் சமாதானத்தோடு போக விடும்", என்று அவரது நெஞ்சம் துடித்திருக்கும்.

மிக வந். ஹென்றி புரூனியர் ஆண்டவருக்குப் பின் ஒரு தமிழர் மிக வந். வெண்மணி செல்வநாத ஆண்டவரவர்கள் D. D., D. C. L, தமது 36ஆவது வயதில் இம் மேற்றிராசனத்துக்கு முதல் இந்திய மேற்றிராணியாராக ஆட்சி பீடமேறினர். இவர் சேலத்தில் 1949ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாள் பட்டாபிஷேகம் பெற்றார். இவர் இம் மேற்றிராசன ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது 38,480 கிறீஸ்துவர்கள், 50 குருக்கள், 50 தேவாலயங்கள், 28 பங்குகள், 110 கன்னியர்கள், 58பள்ளிகள் இருந்தன.

இம் மேற்றிராசனத்தில் பாரீஸ் அந்நிய வேதபோதக சபைக் குருமார்கள் 25 பேர்களும், சுதேசக் குருமார்கள் 35 பேர்களும் ஆக 60 குருக்கள் மேற்றிராணியாருக்குப் பக்கபலமாக நின்று உழைக்கின்றனர். வருங்கால கத்தோலிக்கு சமூகத்தின் வளர்ச்சி இக் காலம் குரு குலத்தில் பயின்று வரும் மாணவர்களின் தரத்தைப் பொறுத்தது என்றறிந்த நமது ஆண்டவர் குரு மாணவர்களைத் தம் கண்ணின் கருமணியெனக் காத்து வருகிறார். அச் சிறுவர்களின் வசதிக்கென அழகிய கட்டிடத்தைப் பெரிய செலவில் மிகுந்த பிரயாசையுடன் கட்டி முடித்திருக்கிறார்.

புனித கபிரியேல் சபையைச் சேர்ந்த 30 சந்நியாசிகள் இம் மேற்றிராசனத்தில் கல்விக்குச் சீரிய தொண்டு செய்து வருகின்றனர். அர்ச். மிக்கேல் சபைச்சந்நியாசிகளின் தாழ்ச்சி, சேவை மனப்பான்மை முதலியவற்றை அறிந்த நமதாண்டவர், அச் சபைச் சந்நியாசிகளில் மூவரை இம் மேற்றிராசனத்துக்கு வரவழைத்திருக்கிறார். அம் மூவரும் இங்கு அன்புப் பணியாற்றி வருகின்றனர்.

கன்னியர்களின் பரிவுள்ளத்தை அறிந்த நமது ஆண்டவரவர்கள் பலவித சபைகளைச் சேர்ந்த கன்னியர்களை இம் மேற்றிராசனத்தில் உழைக்க அழைத்திருக்கிறார். அமலோற்பவ மேரி சபை, புனித குளூனி சூசையப்பர் சபை, மாதாவின் பிரான்சீஸ்கு ஊழியர் சபை, அந்நிய மிஷன் சகோதரிகள் சபை முதலிய நான்கு சபைகளைச் சேர்ந்த 48 மேல்நாட்டுக் கன்னியர்கள் இங்கு உழைத்து வருகின்றனர். மாதா இருதய சபை, அர்ச் ஞானப்பிரகாசியார் சபை, வியாகுல மாதா சபை, எர்ணுகுளம் கார்மேல் மாதா சபை முதலிய நான்கு சபைகளைச் சேர்ந்த 150 சுதேசக் கன்னியர்கள் இங்கு பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும் சிறந்த கல்வித் தொண்டும், மருத்துவ சேவையும் செய்து வருகின்றனர். இவர்கள் 65 படுக்கைகள் உள்ள 4 மருத்துவ நிலையங்களையும், 9 மருத்துவச் சாலைகளையும் நிறுவி நடத்தி வருகின்றனர். இவர்கள் நோயாளிகளை ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி, தாய்க்குரிய அன்போடு இலவசமாகச் சிகிச்சை செய்து வருகின்றனர்.

28—1—1956இல் செட்டிப்பட்டியில் புனித பத்தாம் பத்திநாதரின் 80 ஆவது பிறந்த நாளின் ஞாபகார்த்தமாக ஒரு குஷ்டரோக மருத்துவ நிலையம் நிறுவப்பட்டது.

மிக வந். செல்வநாத ஆண்டவரவர்கள் கிறீஸ்துவின் ஒளி சேலம் மாவட்ட முழுதும் வீசும்படியாக அரும்பாடுபட்டு உழைத்து வருகிறார். கிறீஸ்துவ மக்களின் விசுவாசம் உயிர் பெற்று விளங்க மரியாயின் சேனையை நிறுவி, அதன் அங்கத்தினர்களைக் கொண்டு சிறந்த வெற்றி பெற்று வருகின்றார். 27—5—1956 இல் மேற்றிரசானத்தில் இருந்த ஆறு கூரியாக்கள் கொமிஸியமாக இணைக்கப்பட்டன. கத்தோலிக்கு சங்கத்தை நிறுவி அதன் மூலமாக வருங்

கால கத்தோலிக்கு சமுதாயத்துக்குத் தலைவர்களை உருவாக்கிக் கொண்டு வருகிறார். தற்போது இச் சங்கத்தின் உறுப்பினர் 6000. சேலம் மேற்றிராசனத்தில் தற்போது 44904 கிறீஸ்துவர்களும், 32 பங்குகளும், 180 விசாரணைகளும் உள. 21 தேவாலயங்களும், 67 சிறிய கோவில்களும் இங்கு இருக்கின்றன.

நமது ஆண்டவரவர்கள் கல்விக்குச் செய்து வரும் சேவை பெரிதும் போற்றற்குரியது. குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்கள், கத்தோலிக்கு ஆசிரியர்கள், ஆசிரியைகள் முதலானோரின் ஒத்துழைப்பைக் கொண்டு, மாணவர்களுக் கென்று 4 உயர்நிலைப் பள்ளிகளையும், மாணவிகளுக் கென்று 3 உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகிறார். உயர்நிலைப் பள்ளிகளில் 2300 ஆண்களும் 1200 கத்தோலிக்குப் பெண்களும் கல்வி பயிலுகின்றனர். உயர்தர ஆரம்பப் பாடசாலைகள் 21 இல் 2500 மாணவர்களுக்கும், 2000 பெண்களுக்கும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகின்றது. 63 ஆரம்பப் பாடசாலைகளில் 3153 சிறுவர்களும் 2054 சிறுமிகளும் படித்து வருகின்றனர். இவைகளன்றி 2 போதனை முறைப் பள்ளிகளில் 25 ஆடவரும் 89 பெண்டிரும் ஆசிரியப் பயிற்சி பெறுகின்றனர். தொழிற் கல்விச் சாலை ஒன்றில் 45 மாணவர்கள், கைத் தொழில் பயிலுகின்றனர். மேலும் 8 அனாதை விடுதிகளில் 194 சிறுவர்களும் 291 சிறுமிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஆக இம் மேற்றிராசனத்திலுள்ள கல்வி நிலையங்களில் 12,767 மாணவ மாணவிகளுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது. இவைகளில் 265 ஆசிரியர்களும், 165 ஆசிரியைகளும் பணியாற்றி வருகின்றனர். இவர்களன்றி 55 உபதேசிமார்கள் தொண்டு புரிகின்றனர்.

இம் மேற்றிராசனத்திற்கு முன்னேற்றச் சேவைகள் பல புரிந்து வரும் மிக வந். செல்வநாத ஆண்டவரவர்கள் நீடூழி வாழ்க.

**வளர்க சேலம் மேற்றிராசனம்!**

**ஓங்குக கத்தோலிக்குச் சேவை !!**

விலை ரூ. 2-50

இந்நூல் கிடைக்குமிடம் :

வீரமாமுனிவர் புத்தகசாலை,

கத்தீட்ரல்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்—2.

*All Rights Reserved.*

*Copyright by :*

Veeramamuniver Book Depot,

Salem-2.

ஜெயராக்கினி அச்சகம்,
சேலம்—2.